இருட்டில் சூரியன்

எண்டமூரி வீரேந்திரநாத்

இருட்டில் சூரியன்

எண்டமூரி வீரேந்திரநாத்

தமிழில்

கௌரி கிருபாநந்தன்

அல்லயன்ஸ்

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)

உரிமை பதிப்பு
முதற் பதிப்பு 2009

© ஆசிரியருக்கு

விலை : ரூ. 150.00

அல்லயன்ஸ் கம்பெனி
ப.எண். 244, ராமகிருஷ்ணா மடம் சாலை,
தபால்பெட்டி எண்: 617
மயிலாப்பூர், சென்னை - 600 004.
தொலைபேசி : 24641314
இணைய தளம் : www.alliancebook.com
தொலை நகல் : Srinivasan@alliancebook.com

Laser Execution by : Image Dtp, Chennai - 17
Printed at Sekar Graphic Prints, Chennai - 5

இருட்டில் சூரியன்

இரு நூற்று எட்டு வருடங்களுக்கு முன்னால்...

அப்பொழுது விஞ்ஞானம் இன்னும் முன்னேறாத நாட்களில் சூரிய குடும்பத்தைச் சேர்ந்த அண்ட வெளியில் சிறிய விநோதமான நிகழ்வு ஒன்று நடந்தேறியது.

அதி நுட்பத்திலும் நுட்பமான அந்த நிகழ்வை மனித ஜாதியால் கண்டுபிடிக்க முடியாமல் போய்விட்டது.

கண்டுபிடித்திருந்தால் எதிர்காலத்தை நினைத்து பயந்து நடுங்கியிருக்கும்.

நூற்றி நான்கு வருடங்களுக்குப் பிறகு அதே நிகழ்ச்சி மறுபடியும் நடந்தது.

தூங்கிக் கொண்டிருக்கும் ஒரு நபருக்கு எலெக்ட்ரிக் ஷாக் கொடுத்தால் பெரிய குலுக்கலுடன் எப்படி துள்ளிக் குதிப்பானோ, அதேபோல் சூரியன் அரை வினாடி நேரம் தன்னிடமிருந்த சக்தியெல்லாம் யாரோ உறிஞ்சி எடுத்துக் கொண்டாற்போல் துவண்டான். எரியும் கொதிகலனிலிருந்து நெருப்பை எடுத்துவிட்டால் அது ஒளியை எவ்வாறு இழந்துவிடுமோ அதுபோல் சூரியன் சுயஒளியை இழந்து திரும்பவும் பழைய நிலைக்கு வந்தான்.

சூரியனுக்கு சுமார் கோடி மைல்கள் தூரத்திலிருந்து, விண்வெளிப் படகில் வந்த இரு கிரகாந்தரவாசிகள் தம் நவீன சாதனங்களுடன் அந்தச் சூரிய சக்தியை வஸ்து வாக (மெடீரியலாக) மாற்றித் தம்மோடு எடுத்துச் சென்ற தன் மூலம் நிகழ்ந்த மாற்றம் இது.

மனிதனுக்கு அந்த விஷயம் தெரியாது.

ஐம்பத்தி இரண்டு வருடங்களுக்குப் பிறகு திரும்பவும் அதே கிரகத்தைச் சேர்ந்தவர்கள் சூரியனிடம் வந்தார்கள். இம் முறை அவர்கள் கொஞ்சம் அதிக நேரம் பரிசோதனை களைச் செய்தார்கள். சூரிய சக்தியை எரிபொருளாக மாற்றும் அந்த பரிசோதனையில் அவர்கள் வெற்றி யடைந்து, அண்டவெளியில் உள்ள தம் கிரகத்தை நோக்கி விண் வெளிக் கப்பலில் போய் விட்டார்கள். பூமியில் விஞ்ஞானம் அப்பொழுது கொஞ்சம் வளர்ந்திருந்தது. சூரியனில் ஏதோ சலனம் ஏற்பட்டதை மனிதன் உணர்ந்து கொண்டான். ஆனால், அந்தச் சலனத்தற்குக் காரணம் சூரிய ஒளியில் ஏதோ மாறுபாடு என்று நினைத்துக் கொண்டானே தவிர அதற்குமேல் அவனால் ஊகிக்க முடியவில்லை. எங்கேயோ வேறு கிரகத்திலிருந்து வந்த புத்தி ஜீவிகள் சூரியனைக் கொள்யையடித்துக் கொண்டு போவார்கள் என்பது...

மனிதனின் கற்பனைக்கு எட்டாத விஷயம்.

இருட்டில் சூரியன்

முதல் பாகம்

காலை மணி எட்டு. "உதயம்" பத்திரிகைக் காரியாலத்திற்கு முன்னால் வரிசையாக நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. மேலே தோரணங்கள். தொலைவில் சிறிய மேடை. விருந்தினர்கள் ஒவ்வொருவராக வந்து கொண்டிருந்தார்கள்.

பிரமுகர்கள் வந்தபோது அவர்களை வரவேற்று முன் வரிசைக்கு அழைத்துச் சென்று உட்கார வைத்துக் கொண்டிருந்தார்கள் வாலன்டியர்கள்.

சபை தொடங்கப் பத்து நிமிஷம் இருந்தபோது சைக்கிளில் வந்து இறங்கினான் நாராயணமூர்த்தி. அவன் அதே பத்திரிகைக் காரியாலயத்தில் அச்சுக் கோர்ப்பவன். அவன் சைக்கிள் முன்பக்கத்து பாரில் அவன் மகன் உட்கார்ந் திருந்தான். அவனுக்குச் சுமார் எட்டு வயது இருக்கலாம். சைக்கிளை ஸ்டாண்டில் நிறுத்திவிட்டு, வரிசையாக போடப்பட்டிருந்த நாற்காலிகள் ஒன்றில் மகனை உட்கார வைத்துவிட்டு, நண்பர்களுடன் பேசுவதற்குப் போய் விட்டான் நாராயணமூர்த்தி. அன்றைக்குப் புதுப் பத்திரிகை வெளியாகும் நாள்.

நேரமாக ஆக மக்கள் கூட்டம் அதிகரித்தது. அந்தச் சிறுவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. தந்தை எங்கே என்று தெரியவில்லை. தேடப் புறப்பட்டான். அருகிலிருந்த படிகளில் ஏறி விசாலமான ஹாலுக்குள் வந்தான். வெளியே இருந்த சந்தடி அங்கே இல்லை. அந்த ஹாலில் பல்வேறுபட்ட பிரிண்டிங் மிஷின்கள் இருந்தன. அருகில் காகிதங்கள் கட்டுக் கட்டாக விழுந்து கிடந்தன. ஹாலில் கோடி வரையிலும் நடந்து சென்று அங்கிருந்த கதவைத் தள்ளினான். உள்ளே யிருந்த ஏர்கண்டிஷனரில் குளிர்ந்த காற்றுத் திடீரென்று வந்து மோதியது. எதிர்பாராமல் பின்புறக் கதவு திறந்து கொண்ட தால் அந்த அறையில் இருந்தவர்கள் திரும்பிப் பார்த்தார்கள்.

அந்தச் சிறுவன் பயப்படவில்லை.

அந்த அறையில் சேர்மன். மேனேஜிங் டைரக்டர் முகூர்த்த வேளைக்காகக் காத்திருந்தபடி பத்திரிகையைப் பற்றி உரையாடிக் கொண்டிருந்தார்கள். அந்த முன்பின் தெரியாத சிறுவன் யாராக இருக்கும் என்று அறிவதற்காக டைரக்டர் களுள் ஒருவர் எழுந்திருக்க முயன்றபோது, சேர்மன் தடுத்து நிறுத்தி அந்தச் சிறுவனை உள்ளே வரச் சொல்லிச் சைகை காட்டினார். சிறுவன் உள்ளே வந்தான்.

அவன் யாரென்று தெரிந்து கொண்டதும் “உன் பெயர் என்னப்பா?” என்று கேட்டார்.

“ராம் மோகன்.”

உள்ளே இந்த உரையாடல் நடந்துகொண்டிருந்த போது, வெளியே நாராயணமூர்த்தி மகனைக் காணாமல் தேடிக் கொண்டிருந்தான். அதற்குள் யாரோ அந்தச் சிறுவன் சேர்மனின் அறைக்குள் நுழைந்ததாகச் சொன்னார்கள். நாராயணனுக்கு வியர்த்துக் கொட்டியது. ஓட்டமாக ஓடி வந்தான் சேம்பருக்கு

அருகில். அதுவரை வந்து நிற்க முடிந்ததே தவிர உள்ளே எப்படி நுழைவது என்று புரியாமல் நின்று விட்டான்.

அதே சமயத்தில் உள்ளே ஆர்வமிக்க உரையாடல் நடந்து கொண்டிருந்தது. எந்த பயமும் இன்றி சிறுவன் பேசிக் கொண்டிருந்தான்.

"உதயம் என்றால்?"

"சூரியன் கிழக்கிலிருந்து மேலே கிளம்பும் சமயத்தை உதயம் என்பார்கள்.'' சிறுவன் கேட்ட கேள்விக்கு ஒரு டைரக்டர் பதிலளித்தார்.

"சூரியன் நகராது. பூமிதான் சுற்றும்."

அந்தப் பதிலைக் கேட்டு டைரக்டர் கொஞ்சம் தடுமாறினார்.

சேர்மன் முறுவலுடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

"நீ எந்த வகுப்பில் இருக்கிறாய்?"

"மூன்றாம் வகுப்பு."

"பூமி தன்னைத் தானே சுற்றுவதற்கு எவ்வளவு நேர மாகும் என்று உன்னால் சொல்ல முடியுமா?"

"இருபத்தி மூன்று மணி ஐம்பத்தாறு நிமிஷம்."

ஒரு வினாடி அந்த அறையில் நிசப்தம் சூழ்ந்தது. எல்லோர் முகத்திலும் ஆச்சரியம் பிரதிபலித்துக் கொண்டிருந்தது. அவ்வளவு சிறிய பையன் அவ்வாறு பதிலளிப்பான் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை. அதற்குள் நாராயணமூர்த்தி துணிந்து உள்ளே நுழைந்தான். மேலதிகாரிகளைப் பார்த்து சங்கடத்துடன் "மன்னியுங்கள் சார்! என் மகன் தவறுதலாக..." என்று ஏதோ சொல்ல வந்தவன் சேர்மன் கையை நீட்டியதால் நிறுத்திக் கொண்டான்.

"உன் மகன் ரொம்ப கெட்டிக்காரனாக இருக்கிறான்."

"உன் பெயர் என்னவென்று சொன்னாய்? ராம்மோகன் தானே?"

"ஆமாம்."

"இவ்வளவு சரியாகச் சொல்கிறாயே? உனக்கு நட்சத்திரங்களின் பெயர்களும் கிரகங்களின் பெயர்களும் தெரியுமா?"

"ஓ... தெரியும்" என்று அந்தச் சிறுவன் வரிசையாகச் சொல்லத் தொடங்கினான். கேள்விகள்... பதில்கள். கேள்விக்கு மேல் கேள்விகள். எல்லாவற்றுக்கும் பதிலளித்தான். மிகச் சிறிய வயதிலேயே எல்லா விஷயங்களையும் நினைவில் வைத்துக் கொள்ளும் அந்தச் சிறுவனின் ஆற்றலைப் பற்றி அங்கிருந்த டைரக்டர்கள் தமக்குள் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்து நாராயணமூர்த்திக்கு கொஞ்சம் தைரியம் பிறந்தது.

"சார்! இந்த வயதில் இத்தனை ஞாபகசக்தி இருப்பது ரொம்ப அபூர்வம் என்று அவனுடைய பிரின்சிபால் கூட பாராட்டியிருக்கிறார்" என்றான்.

"உண்மைதான். ஆயிரத்தில் ஒருவர்தான் அப்படி இருப்பார்கள். நீ மட்டும் இவனை படிக்க வைக்காமல் இருந்து விடாதே. பெரியவன் ஆனதும் நீ என்னவாக நினைக்கிறாய் தம்பீ?"

"அஸ்ட்ரானாட்!"

அங்கிருந்த யாருமே இந்தப் பதிலை எதிர்பார்க்கவில்லை. முதலில் தேறிக் கொண்டது சேர்மேன்தான். "கண்டிப்பாக ஆவாயப்பா. நன்றாகப் படி" என்றார்.

முகூர்த்த வேளை நெருங்கிவிட்டதால் எல்லோரும் எழுந்து கொண்டார்கள்.

* * *

"அதோ பாருப்பா, அருந்ததி நட்சத்திரம், அம்மா! உனக்கும் தெரிகிறதா?"

ஆள்காட்டி விரலால் வானத்தை நோக்கிக் காட்டினார் புரோகிதர்.

தம்பதியர் இருவரும் நிமிர்ந்து பார்த்தார்கள். கார்த்திகை தீபங்கள் நதியில் மிதப்பதுபோல் வானத்தில் நட்சத்திரங்கள் மினு மினுத்துக் கொண்டிருந்தன. ஆனால் அதில் அருந்ததி எது என்று தெரியவில்லை. ஆனாலும் இருவரும் அதைப் பார்த்தாற்போல் தலையை அசைத்தார்கள். அவர்களைத் திரும்பவும் மணமேடைக்கு அழைத்து வந்தார். மற்ற சடங்குகள் தொடங்கின.

உலகம் மாறிய போதிலும் புதிய தலைமுறை உருவானாலும் சரி, சடங்குகள் மாறவில்லை. மனிதனின் புத்தி மேலும் வளர்ந்தது. சென்டிமென்டுகளும் பெருகின. கால வெள்ளத்தோடு சேர்ந்து வந்த கஷ்டங்கள் எல்லாம் மனிதனுக்கு ஆதாரப்படக் கற்றுக் கொடுத்தன. தெய்வத்தின் மீதும் மூட நம்பிக்கைகள் மீதும் நம்பிக்கை.

மகனையும், புதிதாக வந்த மருமகளையும் பார்த்துக் கொண்டிருந்தார் ராம்மோகன். பெரியவர் என்றழைக்கப்படும் வயதை எட்டிப் பல ஆண்டுகளாகிவிட்டன.

ஐம்பதாண்டுகளுக்கு முன்னால் யாரோ வாழ்த்தியது போல் அவர் வானியல் விஞ்ஞானி ஆகவில்லை. உலகவியல் அவருடைய தலையெழுத்தை மாற்றிவிட்டது.

அங்கு மக்கள் கூட்டம் அதிகமாக இல்லை. இருந்தவர்களின் முகத்தில் அசதி தெரிந்தது. வாழ்க்கையில் போராடிப் போராடித் தோற்றுவிட்ட உணர்வு, பயம், விழியோரத்தில் கலவரம்... இவைதான் தென்பட்டன.

ராம்மோகன் மகனைப் பார்த்தார். மணமகன் தோற்றத்தில் எடுப்பாக இருந்தான். அவன் தாய், அதாவது ராம்மோகனின் மனைவி பத்தாண்டுகளுக்கு முன்பே காலமாகி விட்டாள்.

நாராயணமூர்த்தியின் தலைமுறை முடிந்துவிட்டது. ராம்மோகனின் வாழ்க்கை வயோதிகத்தை நோக்கி அடியெடுத்து வைத்தது.

அடுத்தது மகனின் முறை.

காலின் மீது ஏதோ பட்டாற்போல் இருந்ததால் குனிந்து பார்த்தார். யோசனையில் ஆழ்ந்திருந்த அவர் மணமகனும், மணமகளும் அருகில் வந்ததைக் கவனிக்கவில்லை. சட்டென்று குனிந்து அவர்களை ஆசீர்வதிப்பது போல் தூக்கி நிறுத்தினார். அவர்கள் அடுத்தவர்களை வணங்கப் போனார்கள். திருமணத்திற்கு வந்திருந்தவர்கள் எல்லோரும் ஒவ்வொருவராகப் புறப்படத் தொடங்கினார்கள். விடியற்காலை முகூர்த்தமானதால், அப்பொழுதுதான் கிழக்கே பொழுது விடியத் தொடங்கியது.

அந்த வைகறை உதயத்தைப் பார்க்கும் போதெல்லாம் ராம்மோகனுக்குத் தந்தை நாராயணமூர்த்தியின் நினைவு வரும். என்றோ தன் சின்ன வயதில் தான் அவருடைய ஆபீசுக்குப் போனதும், தன் தந்தை அங்கே அச்சுக் கோர்ப்பவராக வேலை பார்த்ததும் நினைவுக்கு வரும். உதயசூரியனின் சின்னத்துடன் ஆபீசுக்கு முன்னாலிருந்த பெயர்ப் பலகை... நீ

பெரியவன் ஆனதும் என்ன ஆகப் போகிறாய் என்று கேட்ட கேள்விக்கு "அஸ்ட்ரோநாட்" என்று தான் சொன்ன பதில்... இவை யெல்லாம் நினைவுக்கு வரும்.

ஐம்பதாண்டுகளுக்கு முன்னால் நிகழ்ந்த அந்த சம்பவம் இன்றும் நினைவுத் திரையில் அகலாமல் நின்றுவிட்டன.

வீட்டிற்குத் திரும்பியதுமே அவன் தாய் கேட்டாள். "என்னடா? பெரியவன் ஆனதும் என்னவோ ஆவேன்னு சொன்னாயாமே?"

"அஸ்ட்ரநாட் அம்மா."

நாராயணமூர்த்தி மனைவியைப் பார்த்துச் சிரித்து, "அதாவது ராக்கெட்டில் ஏறிக்கொண்டு போகிறவன்" என்றார்.

"அழகாகத்தான் இருக்கு. விமானத்தைக்கூட கிட்டத்தில் இருந்து பார்த்ததில்லை. இந்த லட்சணத்தில் ராக்கெட்டில் போவானாமா?" என்றவள் "ஆனாலும் உயிருக்கே ஆபத்தான இந்த யோசனை எல்லாம் உனக்கு ஏன் கண்ணா?" என்றாள் கவலையுடன்.

நாராயணமூர்த்தி மகனைப் பாசத்தோடு பார்த்து விட்டு, "அவன் பெரியவனாகும் போது எல்லாமே மாறிவிடும்" என்றார்.

ஆம். காலம் மாறித்தான் போயிற்று. மூன்றாவது உலகப் போர் வந்து காலத்தை மாற்றிவிட்டது. அவன் அஸ்ட்ராநாட் ஆகவில்லை. அந்த நாட்களில் அவரை மேதை என்று பலரும் பாராட்டி வந்தார்கள். ஒரு முறை சொன்னால் அப்படியே நினைவு வைத்துக்கொள்ளும் நினைவாற்றல் அவரிடம் இருந்தது. முதல் வகுப்பில் பட்டம் பெற்றார். அதற்குள் இந்தியாவின் ஜனத்தொகை முன்பு இருந்ததைவிட இருமடங்கு

ஆகிவிட்டது. ராணுவத்தில்தான் வேலை கிடைத்தது. வேறு எங்குமே வேலை கிடைக்கவில்லை. யுத்தத்தில் போர்வீரர் களின் அவசியம் அவ்வளவாக இருக்கவில்லை. யுரேனியம், புளூடோனியம் இவைகளே எதிரி நாட்டு வீரர்களை மூட் டைப் பூச்சியைப் போல் நசுக்கிக் கொன்றன. இந்தியா போன்ற பரந்த நாட்டின் மக்கள்கூட அந்த புழுதியலை களுக்குப் பலியானார்கள்.

வானியல் விஞ்ஞானியாக வேண்டுமென்ற ஆவல் இந்த விதமாக சமாதியாகி விட்டது. பிறகு அவர் உதவிக்கும் சூரியனையே பார்த்தபடி உட்கார்ந்திருப்பதை வழக்கமாக கொண்டிருந்தார். இரவு நேரங்களில் திறந்த வெளியில், முக்கிய மாக பட்டாளத்தில் இருந்தபோது டென்ட்டிற்கு வெளியே படுத்துக்கொண்டு வானத்தைப் பார்த்தபடியே யோசனையில் ஆழ்ந்துவிடுவார். துருவ நட்சத்திரமும், அருந்ததி நட்சத்திர மும் அவரைக் கண்சிமிட்டி குசலம் விசாரிக்கும். அந்த நட்சத்திரங்களில் வாழும் பிராணிகள் பெரிய டெலஸ்கோப் வழியாக பூமியிலிருக்கும் மனிதர்களைப் பரிசீலித்துக் கொண்டிருப்பது போல் பிரமை ஏற்படும். அந்த இருட்டில், எல்லையில்லாத அந்த விண்வெளியை நோக்கிப் பறந்து போய் ஏதாவது ஒரு கிரகத்தை அடைந்து அங்கேயே தங்கிவிட வேண்டும் போலிருக்கும். இந்த அவா நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே போயிற்று. அந்த கிரகங்களுக்கு அப்பால் என்ன தான் இருக்கும்? மினுக் மினுக்கென்று கண்சிமிட்டும் அந்த நட்சத்திரங்களைத் தாண்டி மேலும் மேலும் போனால்... அந்தப் பேரமைதியின் இறுதியில் இருக்கும் புதன், சூரியன், செவ்வாய், குரு இதையெல்லாம் தாண்டிப் போனால்... என்ன தான் இருக்கும் அங்கே?

இந்தக் கேள்வியே ஒவ்வொரு வினாடியும் அவரைச்

சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது. வானமண்டலத்தில் அள்ளித் தெளித்தாற்போல் இருக்கும் அந்தக் கோடானுகோடி நட்சத் திரங்களுக்குள் ஏதாவது ஒன்றின் மேல் காலடி வைக்க முடிந் தால்? பூமிக்குப் பல்லாயிரம் மடங்கு பரப்பளவுடன் வியாபித் துச் சலனமில்லாமல் ஒடுங்கி நிற்கும் அந்த எல்லையில்லாத சூனியத்திற்குள் மெல்ல நுழைந்து அந்த விண்வெளி வெள்ளத் திற்குள் அடியெடுத்து வைத்தால்? அதைக் காட்டிலும் வேறு வெற்றி இருக்க முடியுமா?

திடீரென்று மேளச்சத்தம் நின்று விட்டதால் அவர் யோசனையிலிருந்து மீண்டு இவ்வுலகத்திற்குத் திரும்பி வந்தார். திருமண மண்டபத்திலிருந்து தம்பதிகள் உள்ளே போய் விட்டார்கள் போலும். இரண்டு மூன்று சிறுவர்கள் நாற்காலி மீதே படுத்து உறங்கிப் போய் விட்டிருந்தார்கள்.

மணமகன் வேலை பார்க்கும் நிறுவனத்தைச் சேர்ந்த ஊழியர்கள் எல்லோரும் வேனில் ஏறிக் கொண்டிருந்தார்கள். வேனின் மேலிருந்த எழுத்துக்கள் விளக்கு வெளிச்சத்தில் பளிச்சிட்டுக் கொண்டிருந்தன. N.I.S.R. (நேஷனல் இன்ஸ் டிட்யூட் ஆ ஃப் ஸ்பேஸ் ரிசர்ச்) என்று.

மூன்றாம் உலக மகா யுத்தம் மனிதர்களுக்குக் கொஞ்சம் தீங்கு விளைவித்த போதிலும், வேறு விதத்தில் சில நன்மை களையும் செய்தது. மக்கள் தொகை குறைந்து விட்டதால் நாட்டின் தலையாய பிரச்னை தீர்ந்து போயிற்று. யுத்தத்தின் பாதிப்பால் அமெரிக்காவும் ரஷ்யாவும் தலை நிமிர்ந்து நிற்க முடியாதபடி அடிவாங்கியதால் சாதாரணமாக இருந்த நாடுகள் பலம் பெற்றுவிட்டன. அதில் இந்தியாவும் ஒன்று. அத்தகைய திருப்தி இன்னொன்றும் ராம்மோகனுக்கு ஏற்பட்டது. அது என்னவென்றால், தான் வானியல் விஞ்ஞானி யாக ஆக முடியாவிட்டாலும், தன் மகனையாவது குறைந்த

பட்சம் N.I.S.R. ல் இன்ஜினியராக ஆக்க முடிந்ததுதான்.

"காபியைக் குடியுங்கள். ஆறிவிடும்" என்று யாரோ டம்ளரை நீட்டினார்கள்.

யுத்தத்திற்குப் பிறகு அநேக வீடுகள் காலியாகிவிட்டன. விலைவாசிகள் குறைந்துவிட்டன. ஒவ்வொரு வீட்டிற்கு இடையே தூரம் அதிகரித்தது.

காபியைக் குடித்தபடியே நிமிர்ந்து வானத்தைப் பார்த்தார் ராம்மோகன். கிழக்கேயிருந்து சூரியன் அப்பொழு தான் மேலே எழும்பிக் கொண்டிருந்தான்.

சூரியனைப் பார்த்துக் கொண்டிருந்த அவருக்குச் சிறு வயதில் தாய் சொல்லும் கதை நினைவுக்கு வந்தது. சிவந்த சூரியனைப் பார்த்து பழம் என்று எண்ணிக் கொண்டு அனுமான் அதை விழுங்கப் போய், வஜ்ஜிராயுதத்தால் அடி வாங்கி மூர்ச்சையடைந்து விடவே, வாயுதேவன் கோபம் கொள்ள, தேவர்கள் எல்லோருமாக வந்து தலைக்கு ஒரு வர மளித்து விட்டு வாயுவின் கோபத்தைத் தணித்தார்களாம்.

விண்வெளியினூடே பயணிக்க வேண்டுமென்று தனக்கு விருப்பம் தோன்றுவதற்குக் காரணமே சிறு வயதில் கேட்ட இந்தக் கதைதான் போலும்.

அவர் சூரியனையே பொறாமையோடு பார்த்தார்.

சரியாக அதே சமயத்தில் ஒரு விநோதம் நிகழ்ந்தது. யாரோ தன் ஒளியை எல்லாம் ஒரு காந்தத்தின் உருவில் பறித்துக் கொண்டு விட்டாற்போல் இமைக்கும் நேரம் சூரியன் மாய மானான். அதை சூரியன் மறைந்ததாகக்கூட எடுத்துக் கொள்ளக் கூடாது. ஒளி மட்டுமே மறைந்தது. அவ்வளவுதான்! இதெல்லாம் அரை வினாடிக்குள் நடந்தேறி விட்டது.

கேமராகூடப் படம் பிடித்துவிட முடியாத அவ்வளவு துரிதகதியில் நடந்தேறிவிட்ட இந்த நிகழ்ச்சியை அவர் மட்டுமே இல்லை. பூமியில் இருந்த ஒருவராலுமே அறிந்து கொள்ள முடியவில்லை.

பூமிக்கு மூன்றரை லட்சம் மைல்களுக்கு அப்பால் சந்திரனுக்கு அந்தப் பக்கமாக நிர்மாணிக்கப்பட்டிருந்த விண்வெளி நகரத்தில், நிரந்தரமாக சில விஞ்ஞானிகள் வசிக்கத் தொடங்கியிருந்தார்கள். சோலார் எனர்ஜி மூலம் வேலை செய்யும் கருவிகளில் ஏற்பட்ட குறைபாட்டிற்குக் கூடக் காரணம் வேறு ஏதோ என்றுதான் அவர்கள் நினைத்துக் கொண்டார்களே தவிர (சூரியன் ஒளி குன்றுவதென்பது கற்பனைக்கும் எட்டாத விஷயம் என்பதால்) வேறு எந்தக் கோணத்திலிருந்தும் யோசித்துப் பார்க்கவில்லை. அதைப் பொருட்படுத்தவும் இல்லை.

ஆனால் அதன் பாதிப்பு ஐம்பத்தி இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு வெளிப்பட்டது. அப்பொழுது வாயு புத்திரனுக்கு வயது இருபத்தியாறு.

* * *

ராம்மோகன் கண்களைத் திறந்தார். ஆக்ஸிஜன் அவர் மூக்கில் பொருத்தப்பட்டிருந்தது. அவருக்கு இப்பொழுது எண்பத்தைந்து வயது.

அவர் கண் விழித்ததைப் பார்த்து மகன் அருகில் வந்தான். மனைவியைப் பார்த்து, "போய் பேரனை தூக்கிக் கொண்டு வா" என்றான்.

"பிரசவம் ஆகிவிட்டதா?" ராம்மோகன் கேட்டார்.

"நான்கு நாளாகிவிட்டது."

"நான் கோமாவில் விழுந்து?"

"ஒரு வாரம்."

அவர் தன் உடலுடன் இணைக்கப்பட்டிருந்த கருவி களைப் பார்த்தார். தன் காலம் முடிந்து விட்டதென்று புரிந்தது. அதற்குள் மருமகள் பேரனை தூக்கிக்கொண்டு வந்தாள். நான்கு நாட்கள் நிரம்பிய பச்சிளம் குழந்தை. ஆரோக்கியமாக கொழு கொழுவென்றிருந்தான் கொள்ளுப் பேரன்.

"என்ன பெயர் வைக்கப் போறீங்க?"

"நீ சொல்லு தாத்தா! நீ என்ன பெயர் சொன்னாலும் சரி, என் மகனுக்கு அதையே வைக்கிறேன்."

ராம்மோகன் கண்களை மூடிக்கொண்டார். அவர் கண் முன் எழுபத்து ஏழு ஆண்டுகளுக்கு முன்னால் நிகழ்ந்த சம்பவம் நிழலாடியது. தந்தையின் சைக்கிள் முன் பக்கத்து பாரில் உட்கார்ந்து கொண்டு பத்திரிகை ஆபீசுக்குப் போனது... சூரியயோதயம் பற்றிய கேள்வி பதில்... சூரியன் உதவிக்கும் விண்வெளி மண்டலத்தை நோக்கிச் செல்ல வேண்டுமென்ற தன் ஆவல்... தன் ஆவலையும் புகழையும் தடுத்து நிறுத்திய உலக மகாயுத்தம்... நிறைவேறாத தன் எண்ணம்...

"உண்மையாக வைப்பாயா?"

"கட்டாயம் வைக்கிறேன் தாத்தா."

"வைத்தால் மட்டும் போறாது. அவனை வானியல் விஞ்ஞானியாக ஆக்கணும்."

"சரி. பெயரைச் சொல்லுங்கள்."

"வாயுபுத்திரன்."

சுற்றிலுமிருந்தவர்கள் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக்

கொண்டார்கள். ராம்மோகன் கண்களை மூடிக்கொண்டார். அவர் திரும்பவும் கோமாவில் நழுவிக் கொண்டிருக்கும் போது பேரனின் குரல் கேட்டது.

"அப்படியே வைக்கிறேன் தாத்தா. அது மட்டுமே இல்லை. பெரியவன் ஆனதும் அவனை வானியல் விஞ்ஞானி யாக்குகிறேன்."

வாக்கையில் அவர் கேட்ட கடைசி வாக்கியம் அதுதான். ரொம்ப திருப்தியைத் தந்தது. அதற்குப் பிறகு அவருக்கு நினைவு திரும்பவே இல்லை.

* * *

இருபத்து நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு...

அனூஹ்யா அண்ணன் அண்ணி இருவரோடும் சேர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். பானு அனூஹ்யாவின் கழுத் தைச் சுற்றிக் கைகளைப் போட்டுக் கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தாள். அண்ணன் மகள் கேட்கும் கேள்விகளுக் குப் பொறுமையாக பதில் சொல்லிக் கொண்டிருந் தாள் அவள்.

"எங்கள் பாடத்தில் வருகிறது அத்தை! சூரியன் ஒவ்வொரு நாளும் கருகிக் கொண்டே வருகிறதாம். அப்படி என்றால் என்றாவது ஒரு நாள் முழுவதும் கருகிப் போய் விடாதா?"

"கருகித்தான் போய்விடும்."

"அப்படின்னால் எல்லா இடமும் இருட்டாகி விடுமே?"

அவள் அதற்கு பதில் சொல்லவில்லை. வேறு யோசனை யில் ஆழ்ந்துவிட்டாள்.

அனூஹ்யா நகரத்திற்கு அறுபது கிலோ மீட்டர் தொலைவில் இருந்த சயின்ஸ் சிடியில் வேலை பார்த்து

வருகிறாள். பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை வெளியே போய் வருவதற்கு அவளுக்கு அனுமதி கிடைக்கும். அன்றைக்கு எவ்வளவு வேலை இருந்தாலும் சரி. அவளுக்காக சாப்பிடாமல் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருப்பார்கள் அண்ணனும் அண்ணியும்.

முதல் நாள் நடந்த சம்பவத்தை நினைத்துக் கொண்டதும் அவள் கன்னங்கள் சிவந்தன. அத்தனைக்கும் வேதப்பிரியா தான் காரணம். வேதப்பிரியாவும் சயின்ஸ் சிடியில் ஒரு ஆபீசர்.

விண்வெளியில் மாதக்கணக்கில் இருக்க வேண்டியிருக்கும் பொழுது, உபயோகிக்க வேண்டிய மருந்துகளைப் பற்றியும், செயற்கை சீதோஷ்ண நிலையில் பரிசோதனைகளை நிறைவேற்றவும் உருவாக்கப்பட்டது 'தி சயின்ஸ் சிடி'. டாக்டர் அனூஹ்யா பயோ மெடிகல் டிப்ளமா ஹோல்டர். வயது இருபத்தி மூன்று.

வேதப்பிரியா வலுக்கட்டாயமாக கம்ப்யூட்டரிடம் அழைத்துச் சென்றாள்.

எட்டாவது ஜெனரேஷன் கம்ப்யூட்டர் 1C-XV1-TYPE 2.

அனூஹ்யாவுக்கு கணவனாக வரப் போகிறவனைப் பற்றி கம்ப்யூட்டரிடம் கேள்விகளைக் கேட்கத் தொடங்கினாள்.

"சீ... வேண்டாம்" என்றாள் அனூஹ்யா பதற்றத்தோடு.

"ஏன் வேண்டாம்? பின்னே இந்த மாதிரி கம்ப்யூட்டர்களை எதற்குக் கண்டு பிடித்திருக்கிறார்கள்? இவ்வளவு சின்னக் கேள்விக்குக் கூட பதில் சொல்ல முடியாவிட்டால் அப்புறம் நாங்கள் எதற்காக இருக்கிறோம்?" என்று ஃபீட் செய்யத் தொடங்கினாள் வேதப்பிரியா, கம்ப்யூட்டர் இன்ஜினியர்.

ஐந்து நிமிடங்கள் ஃபீட் செய்த பிறகு கம்ப்யூட்டர் திரும்பிக் கேள்வி கேட்கத் தொடங்கியது.

"பெயர்?"

"அனூஹ்யா."

"பெயர் நன்றாக இருக்கிறது."

"பெயரைப் பற்றி உன்னிடம் கேட்கவில்லை. நல்ல வரன் இருந்தால் சொல்லு."

"ஜாதகத்தின் மீது நம்பிக்கை இருக்கா? என்ன நட்சத்திரம்?"

"நம்பிக்கை இல்லை. பையன் எந்த நட்சத்திரமாக இருந்தாலும் பரவாயில்லை."

"டாக்டராக இருக்கணுமா?"

"யாராக இருந்தாலும் சரி. அழகானவனாக இருக்கணும்."

அனூஹ்யா அவள் அழுத்திக் கொண்டிருந்த பட்டன்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"பெண்ணின் உயரம்?

"ஐந்தடி நாலு அங்குலம்."

"சுற்றளவு?"

"வ்வாட்?"

"சுற்றளவு ப்ளீஸ்."

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த அனூஹ்யாவின் முகம் சிவந்துவிட்டது. "போதும் நிறுத்து" என்றாள்.

வேதப்பிரியா காதில் வாங்கிக் கொள்ளாமல் அனூஹ்யா

வின் கழுத்தின் கீழ் ஒரு முறை உற்றுப் பார்த்துவிட்டு "36, 26, 36" என்று டைப் செய்தாள்.

"மச்சங்கள் எங்கெங்கே இருக்கு?"

"அது உனக்குத் தேவையில்லை."

எப்பொழுதும் சீரியஸாக இருக்கும் அனூஹ்யாகூட இந்தக் கம்யூட்டர் உரையாடலைக் கேட்டு சிரிப்பை அடக்கிய படி கேட்டுக் கொண்டிருந்தாள். மனிதனின் மேதாவித் தனத்தை மனதிலேயே பாராட்டினாள். மனிதனின் மூளைக் குள் எவ்வளவு ஞா'கசக்தி அணுக்கள் இருக்குமோ அத்தனை பில்லியன் விஷயங்களையும் ஒரு சென்டிமீட்டர் சிப்பில் பதிப்பித்து மனிதனால் தயாரிக்கப்பட்ட கம்ப்யூட்டர் அது.

"செக்ஸில் ஆர்வம் இருப்பவன் வேண்டுமா?"

"ஆமாம். ரொம்பவே."

அனூஹ்யா கலவரமடைந்தவளாக "என்ன இது?" என்றாள்.

வேதப்பிரியா சிரித்துக்கொண்டே "நீ கொஞ்சம் சும்மா யிரு" என்றாள். அறையில் அந்த இரண்டு பெண்களையும், அந்த மிஷினையும் தவிர வேறு யாருமே இல்லாததால் குறும்புத்தனம் அதிகரித்தது.

"விளையாட்டு வீரன் வேண்டுமா? எந்த விளையாட்டில்?"

"ரொமான்ஸில்."

"சிவப்பாக இருக்கணுமா? கறுப்பாக இருந்தாலும் பரவா யில்லையா?"

"மாநிறமாக இருந்தாலும் பரவாயில்லை."

"சீரியஸாக இருப்பவன் வேண்டுமா? கொஞ்சம் நகைச் சுவை உணர்வோடு இருப்பவன் வேண்டுமா?"

"எல்லோரையும் சிரிக்க வைத்துக் கொண்டிருந்தால் அதில் தனித்தன்மை என்ன இருக்கு? எல்லோரிடமும் சீரியஸாக இருந்து, மனைவியிடம் மட்டும் சிரித்துப் பேசிக் கொண்டு, சில குறிப்பிட்ட நேரங்களில் குறும்பாக நடந்து கொள்பவன் வேண்டும்."

"குறிப்பிட்ட நேரம் என்றால்?"

"மிஷினுக்கு அதெல்லாம் புரியாது."

"என்னை மிஷின் என்று சொன்னால் எனக்குக் கோபம் வரும்."

"சாரி."

"கல்வித் தகுதி?"

"அனுஹ்யா டாக்டர். அதனால் கொஞ்சம் படித்தவனாக இருந்தால் தேவலை."

"படித்தவன், இன்னும் கல்யாணம் ஆகாதவன். செக்ஸில் ஆர்வம் இருப்பவன், மேலுக்கு சீரியஸாகவும் தனிமையில் இருக்கும் போது குறும்புத்தனத்தோடும்..."

"கரெக்ட்."

"இருபத்தி நான்கு வயது."

"சரியாக இருக்கும்."

"அப்படிப்பட்ட ஆள் இருக்கிறான். அனுஹ்யாவுக்கு சரியான ஜோடி."

"பெயர்?"

"வாயுபுத்ரன்."

அனுஹ்யா இடைமறித்து, "போதும் நிறுத்து" என்றாள்.

வேதப்பிரியா விடவில்லை. "அட்ரெஸ் ப்ளீஸ்" என்று கேட்டாள்.

"இங்கேயே இருக்கிறான்."

"எங்கே?"

"எனக்குப் பின்னால்."

இருவரும் குழப்பத்துடன் பார்த்துக் கொண்டிருந்த அதே சமயத்தில் பின்னாலிருந்து ஒரு இளைஞன் வந்தான். அவன் கையில் ரிமோட் கண்ட்ரோல் இருந்தது. கண்களில் சிரிப்பு! தாம் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் கம்ப்யூட்டர் பதில் சொல்லவில்லை என்றும், அவன்தான் இந்தக் குறும்புத் தனத்தை எல்லாம் செய்திருக்கிறான் என்றும் புரிந்துகொள்ள அவர்களுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. தாம் சொன்ன பதில்களையும், கேட்ட கேள்விகளையும் நினைத்தபோது வெட்கத்தால் முகம் சிவந்தது. அங்கிருந்து வேகமாக ஓட்ட மெடுத்தார்கள்.

* * *

"என்ன? பானு கேட்ட கேள்விக்கு பதிலளிக்காமல் ஐந்து நிமிஷமாக அப்படியே யோசனையில் ஆழ்ந்துவிட்டாயே?" என்று அண்ணி கேட்ட பொழுதுதான் சட்டென்று இவ்வுல கிற்கு மீண்டாள் அனுஹ்யா.

"நீ என்னம்மா கேட்டாய்?" என்றாள்.

"சூரியன் கருகிப் போய்விட்டால் நாம் இருட்டில் மூழ்கிப்

போக மாட்டோமா?"

"நாம் உயிரோட இருக்கும் வரையில் அந்த மாதிரி நேராது. போதுமா?"

"பின்னே எப்போ ஆகும்?"

"ஐநூறு கோடி வருடங்களுக்குப் பிறகு" என்றாள் அனூஹ்யா. "உண்மையில் அப்பொழுது மட்டும் அந்த நிலைமை ஏற்பட்டால் அதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்பே பிராணிகளும், தாவரங்களும் கருகிப் போய்விடும். கடலில் இருக்கும் தண்ணீரெல்லாம் ஆவியாகிக் காற்றோடு கலந்து விடும்" என்றாள் தொடர்ந்து.

"என்ன அத்தை? சூரியனே ஒளி குன்றிப் போனால் எல்லாம் குளிர்ந்து விடாதா? பின்னே எப்படி ஆவியாகும் என்கிறாய்?"

அனூஹ்யா கொஞ்சம் தடுமாறினாள். "பெரியவள் ஆனதும் தெரியும் உனக்கு" என்று மேற்கொண்டு கேட்காமல் வாயை அடக்கிவிட்டால், சிறுவர்களின் உள்ளத்தில் அதைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் நசிந்து போய்விடும். அது அவளுக்குத் தெரியும். சிறு வயதிலிருந்தே அவர்களுக்கு தேவையான விஷயங்களைப் பற்றிப் பேசி அவர் களுக்கு ஆர்வத்தை உண்டாக்குவது பெரியவர்களின் பொறுப்பு என்பது அவளுடைய கருத்து.

"சூரியன் என்பது வெறும் காற்றுக்கோளம், அவ்வளவு தான். எரியும் சூரியனின் உஷ்ணம் அதிகரித்துக் கடைசியில் அது வெடித்துச் சிதறிச் சிவந்த ஜெயிண்டாக மாறி விடும். சிவந்த மேகங்களாக மாறி பூமியை நோக்கி. வரத் தொடங்கும். அந்த உஷ்ணத்திற்கு பூமி பக பகவென்று பற்றி எரியும் நெருப்புக் கோளமாகிவிடும். ஆனால் பல கோடி வருடங்

களுக்குப் பிறகு நடக்கப் போகும் விஷயம் இது. அதற்குப் பிறகு எல்லா இடங்களும் இருட்டாக, தீக்குழம்பாக மாறிவிடும். அதைத் தான் பிரளயம் என்பார்கள்."

"அப்போ மனிதர்கள் எல்லோரும் பயப்பட மாட்டாங் களா?"

அனுஹ்யா பானுவின் கன்னத்தில் ஒரு முத்தம் கொடுத்து விட்டு "அதற்குள் மனிதர்கள்" எல்லோரும் ராக்கெட்டில் ஏறி வேறு கிரகங்களுக்கு குடி போய் விடுவார்கள்" என்றாள்.

பானு சமாதானமடைந்தாற்போல் தெரியவில்லை. அங்கிருந்து நகர்ந்தாள். அந்தச் சின்ன வயதிலேயே அந்தக் குழந்தையிடம் வெளிப்பட்ட புத்திசாலித்தனத்தைக் கண்டு அவள் வியப்படையவில்லை. ஜெனடிக் கோட் ரகசியம் கண்டு பிடிக்கப்பட்ட பிறகு பிறந்த குழந்தை பானு. கடந்த பத்தாண்டு களாகப் பிறந்து வந்த குழந்தைகளிடம் சாதாரண மனிதர் களுக்குரிய புத்திசாலித்தனத்தைவிடச் சுமார் நான்கு மடங்கு அதிகமாக இருக்குமாறு கோட் முறையை ஏற்படுத்த முடிந் திருக்கிறது.

அனுஹ்யா வெளியே வந்தாள். இன்ஸ்டிட்யூட்டிற்கு போக வேண்டிய நேரமாகிவிட்டது. அவள் அவசரமாக தன் காரில் ஏறப் போனபொழுது போன் ஒலித்தது. காரை ஸ்டார்ட் செய்துகொண்டே "ஹலோ" என்றாள்.

"நான்தான் வேதப்பிரியா பேசுகிறேன்.' மறுமுனையி லிருந்து கேட்டது.

"சொல்லு."

"உனக்காக டைரக்டர் காத்திருக்கிறார். ஸ்பேஸ் சிடி ஆபீசுக்குப் போ."

அவள் வியப்படைந்து, "எந்த டைரக்டர்?" என்று கேட்டாள்.

"எஸ்.எஸ்.ஆர். டைரக்டர்."

அவள் வியப்பு மேலும் அதிகமாயிற்று. ஸ்ரீஹரிகோட்டாவில் இருக்கும் டைரக்டர் இங்கே வந்து தனக்காக காத்திருப்பதாவது?

அவள் கார் கேட்டுக்கு அருகில் 2 காமா கதிர்களால் முற்றிலும் பரிசோதிக்கப்பட்ட பிறகு உள்ளே போக அனுமதி கொடுக்கப்பட்டது. ஐந்தே நிமிஷத்தில் அவள் டைரக்டரின் அறையில் இருந்தாள்.

அறைக்குள் நுழைந்ததுமே அவருக்கு முன்னால், மேஜையின் மீது இருந்த எலெக்ட்ரானிக் சிப் அவள் கண்ணில் பட்டது. அவளுடைய பர்சனல் ஃபைல் அது. அவளுக்கு உற்சாகம் அதிகரித்தது. அவளைப் பற்றிய எல்லா விவரங்களும் அதில் இருந்தன. அதையே உறுதிப் படுத்துவதுபோல் அவர் கேட்டார்.

"விண்வெளிப் பயணத்தின் மீது உங்களுக்கு ஆர்வம் இருக்கும் விஷயம் இதிலிருந்து புரிகிறது. நீங்க அதில் ஆறு மாதம் பயிற்சிகூடப் பெற்றிருக்கீங்க. அந்த உற்சாகம் இன்னும் இருந்தது என்றால் உங்களை ஒரு முறை ஸ்பேஸ் சிடிக்கு அனுப்பலாம் என்று இருக்கிறோம். உங்க அபிப்பிராயம் என்ன?"

அவள் இதயம் படபடத்தது. விண்வெளிப் பயணம்! சந்திரனுக்கு அந்தப் பக்கம் செயற்கையாக ஏற்படுத்தப்பட்ட நிலத்தில்(?) போய்த் தங்குவது!

"எவ்வளவு நாட்கள் அங்கே இருக்கணும் சார்?"

"பதினைந்து நாட்கள். உங்கள் பரிசோதனை ஒரு நிலைக்கு வராது போனால் மேலும் ஒரு ஐந்து நாள்."

"பரிசோதனையா?"

"ஆமாம். சூனியத்தில் மனிதனிடம் தோன்றும் பாக்டீரியாவைப் பற்றியப் பரிசோதனை கடைசிக் கட்டத்தில் இருப்பதாக ரிப்போர்ட் கொடுத்திருக்கீங்க. அதைப் பரீசிலித்த பிறகு தான் இந்த முறை போகவிருக்கும் நபர்களோடு உங்கள் பெயரையும் சேர்த்துக் கொண்டோம். இருபது நாள் அங்கே தங்கி உங்களுடைய பரிசோதனையை முடித்துக் கொண்டு திரும்பி வாங்க."

அனூஹ்யாவின் மனம் முழுவதும் சந்தோஷத்தாலும், உத்வேகத்தாலும் நிரம்பி வழிந்தது. தன் வேலையை அவர்கள் உன்னிப்பாக கவனித்து வந்திருக்கிறார்கள் என்ற சந்தோஷம் ஒரு புறமும். தினமும் உதயிக்கும் பூமியைப் பார்த்தபடி சூனியத்தில் சில நாட்கள் கழிக்கப் போகிறோம் என்ற துடிப்பு இன்னொரு பக்கமுமாக சேர்ந்து உள்ளத்தை அலைக் கழித்தது. விண்வெளிப் பயணம் சர்வ சாதாரணமாகி விட்டா லும், தன்னைப் போன்ற ஒரு ஆஸ்ட்ரோ ஜியாலிஜிஸ்டிற்கு அத்தகைய வாய்ப்பு அரிது.

"முடிந்தால் நாளையிலிருந்து இரண்டு பேரும் சேர்ந்து போவதாக ரிப்போர்ட் செய்துவிடுங்கள்."

"இன்னொருத்தர் யார் சார்?"

"வாயுபுத்திரன், மற்ற விவரங்களை வேதப்பிரியாவிட மிருந்து பெற்றுக் கொள்ளுங்கள்."

அவள் திடுக்கிட்டாள். வாயுபுத்திரன்!!

அவன் தன்னை அழவைத்தது நினைவுக்கு வந்தது.

ஸ்பேஸ் சிடிக்குப் போகும் பயணத்தில் ராக்கெட்டில் அந்த இரண்டு நாட்களும் தாமிருவரும் மட்டுமே இருந்தாக வேண்டும். அங்கே போய்ச் சேர்ந்த பிறகு மீதி இருபது நாட்களுக்கும் தம்மிருவரையும் ஒரே க்யூவில் இருக்கச் சொல்லி அங்கே இருப்பவர்கள் கேட்டுக் கொள்ளக் கூடும்.

அதைச் சாக்காக வைத்துக் கொண்டு அவன் ஏதாவது சேட்டை பண்ணத் தொடங்கினால் சரியான பதில் கொடுக்க வேண்டும். அவ்வாறு எண்ணிக்கொண்டாளே தவிர மிஷினுக்குப் பின்னாலிருந்து முறுவலித்தபடி வந்த அவன் முகம் அடிக்கடி அவள் முன் தோன்றிக் கொண்டிருந்தது.

* * *

அனூஹ்யாவுக்கு விண்வெளிக் கப்பலுக்குச் செல்ல அனுமதி கிடைத்ததைப் பலரும் பாராட்டினார்கள். அண்ணன், அண்ணி உள்பட. விண்வெளிப் பயணம் எவ்வளவோ செலவுகளை மேற்கொண்டு செய்யும் பயணம். சாதாரணமானவர்களுக்குக் கிடைக்காத வாய்ப்பு.

மறுநாள் அவள் பயிற்சிக் கூடத்திற்குப் போனாள். வாயுபுத்திரனும்கூடப் பயிற்சிக்கு வந்திருந்தான். ஆனால் அவளைப் பார்த்து அவன் கண்கள் எப்போதும் போல் மலரவில்லை. கொஞ்சம் சீரியஸாகத்தான் இருந்தான்.

அனூஹ்யாவுக்கு இந்தத் தந்திரம் தெரியும். முதலில் நெருக்கமாகப் பேசிய ஆண் ஒருவன் திடீரென்று பட்டும் படாமலும் இருந்தால், பெண்களிடையே ஆர்வம் அதிகரிக்கும். தன்னால் தவறு ஏதாவது நேர்ந்துவிட்டதோ என்று ஆணிடம் கேட்க முயற்சி செய்வாள். அந்த முயற்சியால் தானே அவனுக்கு நெருக்கமாவாள். அவனும் சிரித்துவிட்டு பழையபடி ஆகி விடுவான். அதன் மூலம் நட்பானது ஒரு படி அதிகரிக்கும்.

இது தெரிந்துதான் அனூஹ்யா அவனுடைய பட்டும் படாததுமான நடத்தையை உணர்ந்தும் கண்டுகொள்ளாமல் இருந்துவிட்டாள். அவள் எதிர்பார்த்தது போலவே இரண்டு நாட்கள் பார்த்துவிட்டு அவளிடம் எந்த மாறுதலும் தென் படாததால், அவனே சாதாரணமாக பேசத் தொடங்கினான்.

"மேடம்! இந்த உடைக்கு பின்னால் கிளிப்பைப் பொருத்த முடியவில்லை. கொஞ்சம் போட்டு விட முடியுமா?"

ஏதோ முக்கியமான வேலை இருந்ததால் பேசித் தீர வேண்டியிருக்கு என்பதுபோல் முகத்தை வைத்துக் கொண்டு கேட்டுவிட்டு திரும்பி நின்று கொண்டான். பின்னால் கிளிப் போட்டு முடிந்ததும், "தாங்க்ஸ்" என்று சொல்ல வந்தவன் அப்படியே நின்று விட்டான். அந்த வேலையை ரோபோட் டிடம் ஒப்படைத்துவிட்டு. எப்பொழுதோ போய் விட்டிருந் தாள் அவள். அவள் முகத்தில் சிரிப்பு தவழ்ந்ததா இல்லையா என்பதை அவனால் பார்க்க முடியவில்லை.

அவனுக்குக் கோபம் வந்தது. வேகமாக அவள் முன்னால் போய் நின்றான். "உங்களோடு நான் கொஞ்சம் நான் பேசணும்."

"என்ன?" என்றாள் அவள்.

"இங்கே இல்லை."

"நீங்க என்ன பேசப் போறீங்க என்று எனக்குத் தெரியும்."

"நான் என்ன பேசப் போறேன்னு உங்களுக்குத் தெரியும்னு எனக்கும் தெரியும். அதனால்தான் முன்னுரை எதுவும் இல்லாமல் ஏதாவது ஒரு நேரத்தைக் குறிப்பிடுங்கள். எந்த இடம் என்றும் சொல்லுங்கள். எதிர்பார்த்துக் கொண்டிருப் பேன்."

அவள் அப்பொழுதே "நோ" என்று சொல்லிவிடுவோமா என்று நினைத்தாள். ஆனால் பண்பு தடைபோட்டது. ஒரு ஐந்து நிமிடங்கள் அவனுடன் உட்கார்ந்து பேசி, தன் மனதில் உள்ள உணர்வுகளைப் பற்றி, அன்பு இல்லாமையைப் பற்றிச் சொல்லிவிட்டால் நல்லது. விரைவிலேயே இருவரும் ஒரே ராக்கெட்டில் விண்வெளிக் கப்பலுக்குப் போகப் போகிறார்கள். அப்படியிருக்கும்போது இந்த மாதிரித் திரைமறைவில் கண்ணாமூச்சி ஆடுவதைவிட எல்லாவற்றையும் பேசித் தீர்த்துக் கொள்வது நல்லது இல்லையா.

அவள் கேலண்டரைப் பார்த்தாள். நவம்பர் 14 என்று காட்டியது.

அன்று வியாழக் கிழமை.

அவனைப் பார்த்து, "சனிக்கிழமை மாலை" என்றாள். தன்னுடைய டைரியை எடுத்து பதினாறாம் தேதியைத் திருப்பி குறித்துக் கொண்டே "மாலை ஐந்தரை மணிக்கு" என்றாள்.

"என்னைச் சந்திப்பதற்குக்கூட காகிதத்தில் எழுதிக் குறித்துக் கொள்ளும் அளவில் அவ்வளவு சாதாரண விஷயமாக நீங்க பாவிப்பது எனக்கு வருத்தமாக இருக்கிறது" என்றான் போவதற்கு திரும்பிக்கொண்டே. "சரி. சனிக்கிழமை மாலை சரியாக ஐந்தரை மணிக்கு ராஜீவ் பார்க்கில்."

அவன் போன திசையையே பார்த்துக் கொண்டிருந்தாள் அவள். வாயுபுத்திரன்... அழகான சுறுசுறுப்பான இளைஞன். சாதாரணமாக ஐந்து நிமிஷங்கள் பேசினாலே நோ என்று எந்த பெண்ணாலும் மறுக்க முடியாத அளவுக்கு உற்சாகம் நிரம்பிய, மின்னும் கண்களைக்கொண்ட, குறும்புத்தனம் நிறைந்த இளைஞன்.

அவன் பார்க்கில் கேட்கப் போவது என்னவென்று

தெரியும் .“நோ” என்று அவளால் சொல்ல முடியுமா? சொல்லித் தான் ஆகணும்.

அவளுக்கு தன் கணவன் நினைவுக்கு வந்தான்.

* * *

ஆர்க்டிக் பிரதேசம்.

எங்கும் பனி... வெண்ணிறப் பனிப்படலம்.

படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை மூடி வைத்துவிட்டு சோம்பல் முறித்துக் கொண்டான் யஷ்வந்த். கியாஸ் விளக்கு வெளிச்சத்துடன் உஷ்ணத்தையும் பரப்பிக் கொண்டிருந்தது. பக்கத்தில் ஸ்லீப்பிங் பேக்கில் படுத்து உறங்கிக் கொண்டிருந் தான் நிகில். பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம் தெரியாத சமயம் அது.

எழுந்து வெளியே வந்தான் யஷ்வந்த். வெண்ணிறப் போர்வையால் போர்த்தினாற்போல் காட்சியளித்தது பூமி. எந்த நிமிஷத்திலும் பனிப்புயல் வரும்போல் இருந்தது. பல நூற்றுக்கணக்கான மைல்கள் தூரம் வரையிலும் மனித சஞ்சாரமே இல்லாத பிரதேசம் அது. ஒருக்கால் அங்கே இறந்தாலும் பல நூற்றாண்டுகள் வரையிலும் உடலானது கெடாது. அது ஒன்றுதான் அதிர்ஷ்டம். தொலைவில் எஸ்கிமோ வின் குடிசை போன்ற சிறிய குடில் தென்பட்டது.

எங்கும் பனிக்கடல். காலடி எடுத்து வைப்பதில் கவன மாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் எங்கேயாவது பனிக் கட்டி கொஞ்சம் அடர்த்திக் குறைவாக இருந்து விட்டால் போதும். உள்ளே தண்ணீருக்குள் நழுவிவிட்டால் அவ்வளவு தான். விசாலமான கடல் தனக்குள் இழுத்துக் கொண்டுவிடும்.

யஷ்வந்த் வானவியலில் மாஸ்டர் பட்டம் பெற்றவன்.

கடந்த ஐந்தாண்டுகளாகத் துருவ எல்லைகளில் மாறுபாடு அடையும் நட்சத்திர மண்டலத்தின் தன்மைகள் பற்றிய ரகசியத்தைக் கண்டுபிடிப்பதற்காக ஐந்தாவது முறையாக அங்கு வந்திருக்கிறான். கோடைக்காலம் அந்த இடத்தில் நன்றாக இருக்கும்.

பனிக் கடலுக்கு நடுவில் மெல்ல படகைப் போல் ஊர்ந்து செல்லும் பாலின்யாஸ் (கடலின் மீது மிதக்கும் பனித்தீவை பாலின்யாஸ் என்பார்கள்) மீது நின்றிருக்கும் பனிக்கரடி களையும், சீல்களையும் பார்த்துக் கொண்டிருப்பதும், ஒரு பக்கத்தில் சூரியனும் மற்றொரு பக்கத்தில் நட்சத்திரங்களும், ஒரு தடவை உதயித்து ஆறு மாதங்கள் அப்படியே நின்று விடும் சூரிய பிம்பம்... நாணத்திரை விலகியதும் மலர்ந்து தென் படும் தாமரைப் போன்ற முகம்...

அவன் ஜேபியிலிருந்து ஒரு போட்டோவை எடுத்துப் பார்த் தான். ரொம்ப அழகான பெண் ஒருத்தி பெரிய கண் களோடு அவனைப் பார்த்துச் சிரித்தாள். ஈரத்தால் பழு தடைந்து விடாமல் இருப்பதற்காக பிளாஸ்டிக் உறைக்குள் வைத்த போதிலும், பல ஆண்டுகளாக அவன் ஜேபியில் நிரந்தரமாக ஒரு இடத்தைப் பெற்று விட்டதால் நலிந்து போய் தென் பட்டது. ஆனாலும் அந்தப் போடோவிலிருந்த பெண்ணின் அழகு மட்டும் கொஞ்சம்கூட பாழாகவில்லை. அவளுக்குப் பதினாறு பதினேழு வயதிருக்கலாம். ஆனால் ஆறாண்டு களுக்கு முன்னால் எடுத்த புகைப்படம் அது. அவள் அவனு டைய மனைவி.

இருபத்தி இரண்டாவது நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆர்த்தர் பிராஸ் என்பவர் பிறக்கப் போகும் குழந்தையின் ஆரோக்கியத்தையும், புத்திக்கூர்மையையும் அதிகரிக்கச் செய்யும் ஜெனடிக் கோட் கண்டுபிடித்த பிறகு, அந்த

சோதனையை முதல் முதலில் மேற்கொண்ட பொழுது, அது பெண் பெரியவளானதும் ஏற்படும் முதல் பத்து கருமுட்டைகளில்தான் வேலை செய்யும் என்று அறிவித்ததுமே, சரித்திரம் திரும்பிவிட்டது போல் பால்ய விவாகங்கள் திடீரென்று பெருகத் தொடங்கின.

அந்த விதமாக யஷ்வந்த் படித்துக் கொண்டிருந்த நாட்களிலேயே அவனுக்குத் திருமணமாகிவிட்டது. மனைவி இன்னும் சின்னப் பெண்.

மறுபடியும் ஆர்தர் பிராஸே, எந்த வயதில் பெண் கருவுற்றாலும் ஜெனடிக் கோட் மூலமாக பயனடையும் விதமாக தன் பரிசோதனைகளைத் தொடர்ந்து நோபல் பரிசு பெற்றார். அதற்குள் இரண்டு கோடி பால்ய விவாகங்கள் நடந்து முடிந்து விட்டதாக ஒரு கணிப்பு. உலகம் மறுபடியும் பழைய நிலைக்குத் திரும்பியது.

அதற்குள் யஷ்வந்த் மனைவியிடமிருந்து விவாகரத்துப் பெற நேர்ந்தது. காயமடைந்த மனம்தான் அற்புதங்களைப் படைக்கிறது. ஆஸ்ட்ரோ ஃபிசிக்ஸில் அவன் முதல் மாணவனாகத் திகழ்ந்தான். அவன் உள்ளத்தில் மட்டும் அவன் மனைவியின் உருவம் சற்றும் சிதையவே இல்லை. நாளுக்கு நாள் அந்த அன்பு பெருகிக் கொண்டே வந்தது.

புத்திசாலிகள் பெரும்பாலும் இன்டராவர்ட்களாக இருப்பார்கள். அவனும் அந்த பிரிவைச் சேர்ந்தவன்தான். என்றாவது ஒரு நாள் அந்தப் பெண்ணிற்குத் தன்மேல் அன்பு தோன்றுமென்றும், தன்னைப் புரிந்துகொள்வாள் என்றும் காத்திருந்தான். ஆனால், அதற்குள் அவன் அவளை விட்டுப் பிரிந்து கடல்கடந்த பிரதேசத்திற்கு வந்து விட்டான். அவளை அதற்குப் பிறகு சந்திக்க முயற்சி செய்யவில்லை.

பூமியின் ஒரு கோடியில் வடத் துருவ எல்லையில், சாதாரண ஜனங்களை விட்டுப் பல ஆயிரக்கணக்கான மைல் களுக்கு அப்பால் இருந்து கொண்டு தன்னை விட்டுப் பிரிந்த காதலிக்காக பனிக்காற்றின் உறுதுணையோடு தவிக்கும் தவிப்பை அவள் அறியத்தான் முடியுமா? மனிதனுக்குப் படிப்பும், விஞ்ஞான அறிவும் கூட முக்கியமில்லை. அதைக் காட்டிலும் முக்கியமானது காதலிக்கும் உள்ளம். தன்னை ஒருவர் காதலிக்கும் அதிருஷ்டமும் வேண்டும் என்பதை இந்த ஆறாண்டு காலத்தில் உணர்ந்திருப்பாளா?

முதலில் அவனை அவளுக்கு நினைவாவது இருக்குமா? அல்லது நடந்த திருமணத்தை ஒரு கெட்ட கனவாக நினைத்து மறந்து போய் விட்டிருப்பாளா?

அவன் திரும்பவும் போட்டோவைப் பார்த்தான். அந்த மங்கலான வெளிச்சத்திலும் பளபளவென்று மின்னிய அழகான இரு கண்கள்.

* * *

ஆழ்ந்த உறக்கத்திலிருந்து எழுந்துகொண்டான் நிகில். ஸ்லீப்பிங் பேக்கிலிருந்து வெளியே வந்த சோம்பல் முறித்துக் கொண்டான். வெளியே குளிர்ந்த காற்றின் ஓசை ஹோவென்று ஒலித்துக் கொண்டிருந்தது. பக்கத்தில் யஷ்வந்த் இல்லாததால் வெளியே வந்தான். தொலைவில் தென்பட்டான் அவன். நீண்ட யோசனையில் மூழ்கியிருந்தவனைப் போல. அவன் எப்போதுமே அந்த மாதிரிதான் தென்படுவான், எதையோ இழந்து விட்டவன்போல்.

நிகிலுக்கு யஷ்வந்தின் மீது ரொம்ப மதிப்பு. இந்தியாவி லேயே ஆஸ்ட்ரோ ஃபிசிக்ஸில் யஷ்வந்தை மிஞ்சியவர் யாருமே இல்லை என்பதை யாராலும் மறுக்க முடியாது.

ரொம்ப சின்ன வயதிலேயே அவன் அந்த ஸ்தானத்தைப் பெற்றுவிட்டான். ஆனாலும் யஷ்வந்தின் கண்களைக் கூர்ந்து கவனித்தால் புரியும். ஏதோ சோகத்திரை, உரிமை எடுத்துக் கொண்டு கேட்போம் என்று நினைப்பான் நிகில். ஆனால் அந்த மாதிரியான நெருக்கத்தை அவன் அளித்ததில்லை. விஞ்ஞானம் நிரம்பிய அந்தக் கண்களுக்குப் பின்னால் நிழலாடிய சோகத்திரையைப் போக்கடிப்பதற்கு தான் மட்டும் ஒரு பெண்ணாக இருந்தால் உலகமே எதிர்த்தாலும் சரி, இவனைக் காதலித்திருப்பேன் என்று எண்ணிக்கொள்வான் நிகில். தன் யோசனையைக் கண்டு அவனுக்கே சிரிப்பு வந்தது. எப்போதும் மௌனமாக, கம்பீரமாக இருக்கும் யஷ்வந்தைக் கண்டால் அவனுக்கு பக்தியுடன் கலந்த கௌரவம்.

யஷ்வந்தை நெருங்க போனவன் சட்டென்று நின்று விட்டான். அதே சமயம் யஷ்வந்தும் அந்த இடமெல்லாம் திடீரென்று ஒளிமயமானதைப் பார்த்து வானத்தை அண்ணாந்து பார்த்தான்.

வானத்தில் சூரியன் இருந்தான்.

ஆர்க்டிக் பிரதேசத்தில் நவம்பர் மாதத்தில் சூரியனா?

இருவருமே சிலையாக நின்று விட்டார்கள்.

மெல்ல மெல்ல அவர்களுக்குப் புரிந்தது. அது சூரியன் இல்லை என்றும், வேறு ஏதோகிரகமோ அல்லது நட்சத் திரமோ என்றும் புரிந்தது.

ஆனாலும் அது உண்மையா இல்லையா என்று தெரிய வில்லை.

பூமியில் எந்த மாறுபாடும் இல்லாமல் இவ்வளவு வெளிச்சம் சாத்தியமில்லையே?

இருவரும் வேகமாக டெலஸ்கோப் இருந்த இடத்திற்கு ஓடினார்கள். ஒளிக்கூட்டமொன்று மெதுவாக தொலைவில் போய்க் கொண்டிருந்தது. நிகில் மளமளவென்று போட்டோக் களை எடுத்துக் கொண்டான். சரியாக அரைமணிக்குப் பிறகு அது மறைந்தது.

"சார், அது பஸ்ஸராக இருக்குமா?" நிகில் கேட்டான்.

"இல்லை. பஸ்ஸராக இருந்தால் ரேடியேஷன் இருந் திருக்கும். ஒருக்கால் நியூட்ரான் ஸ்டாராக இருக்கலாம். அப்படி யிருந்தால் ரொம்ப ஆபத்து."

(ஒருவகை நட்சத்திரத்தை நியூட்ராகிஸி ஸ்டார் என்பார் கள். 75 கோடி சூரியன்கள் ஒன்றாகச் சேர்ந்து நூற்றைம்பது ஆண்டுகளில் சிந்தும் ஒளியை இவை ஒரு வினாடி நேரத்தில் சிந்தும். அந்தக் கணக்குப்படி ஓரங்குல அளவு துண்டு போது மானது பூமியை முழுவதையும் எரித்துச் சாம்பலாக்கிவிட, ஒரு அங்குலம் நியூட்ரான் ஸ்டார் இருப்பத்தைந்து கோடி லட்சம் டன் எடையிருக்கும் என்று கணிப்பு)

நிகல் சிலையாக வானத்தைப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தான்.

அதற்குள் அந்த வெளிச்சம் கொஞ்சம் கொஞ்சமாக ஒரு பறக்கும் தட்டைப்போல் ஆகி மறைந்துவிட்டது. திரும்பவும் பழைய சூழ்நிலை அங்கு வந்து சூழ்ந்துகொண்டது.

அத்தனை வெளிச்சமும் அவ்வளவு துரித கதியில் மறைந்த தைப் பார்த்தால் அந்தப் பறக்கும் தட்டு, ஒளியைக் காட்டிலும் பலமடங்கு வேகத்தில் பயணித்திருக்கும் என்று அவ்விருவருக் குமே விளங்கியது.

அதற்குள் ரேடியோவில் அவர்களுக்கு ஆணை வந்தது. "ஹலோ யஷ்வந்த்!"

"சொல்லுங்கள் சார்."

"இப்பொழுதுதான் இங்கே..."

"நாங்களும் பார்த்தோம் சார்."

"மற்ற புரோகிராம் எல்லாம் கேன்சல் செய்துவிட்டு இங்கே வந்து சேருங்கள். மற்றவை நேரில் பேசுவோம். அவசிய மானால் நீங்க உடனடியாக ஸ்பேஸ் சிடிக்குப் போக வேண்டி யிருக்கும்."

"யெஸ் சார்."

அரைமணிக்குப் பிறகு அவர்களை அழைத்துச் செல்வதற் காக பனிப் படலத்தைக் கிழித்துக் கொண்டு விமானம் வருவது புலப்பட்டது.

* * *

பதினாறாம் தேதி மாலை நான்கு மணியாயிற்று. அனுஹ்யாவுக்கு அந்தத் தேதி நன்றாக நினைவிருந்தது. வாயுபுத்ரனை அன்றைக்கு சந்திக்க வேண்டுமென்று அடிக்கடி நினைவுக்கு வந்துகொண்டே இருந்தது. அவள் எண்ண மெல்லாம் அவன் மனம் புண்படாமல் இந்த விஷயத்தை எப்படிச் சொல்லுவது என்பதுதான்.

சரியாக ஐந்தேகாலுக்கு அவள் ராஜீவ் பார்க்குக்குக் கிளம்பினாள். அவள் அங்கே போய்ச் சேரும்போது மணி ஐந்து இருபத்தெட்டு ஆகிவிட்டது.

இரண்டு நிமிடங்களுக்கு முன்னால் வந்துவிட்ட அவள் அங்கே அவனைப் பார்த்து வியப்படைந்தாள். அவனும் முன்னாடியே வந்து விட்டதற்காக இல்லை. தலைமுடி கலைந்துபோய், முகம் வாடிப்போய், கண்கள் குழி விழுந்து... அவன் ரொம்ப சோர்வாக தென்பட்டான்.

"என்ன? ஒரு மாதிரியாக இருக்கீங்களே, ஏன்?" தன்னை யும் அறியாமல் கேட்டுவிட்டாள்.

அவன் சிரித்தான். அவளைப் பார்த்த சந்தோஷம் அவன் கண்களில் தெளிவாக தென்பட்டது. "நீங்க இருபத்தி நான்கு மணி நேரம் தாமதமாக வந்திருக்கீங்க" என்றான்.

அவளுக்கு ஷாக் அடித்தாற்போல் இருந்தது. "இருபத்தி... நான்கு மணி...யா?" என்றாள்.

"ஆமாம். சனிக்கிழமை மாலை வருவதாகச் சொல்லி விட்டு ஞாயிற்றுக்கிழமை வந்திருக்கீங்க."

தன் எலெக்ட்ரானிக் கேலண்டரில் தேதிக்கும் கிழமைக் கும் ஏதோ தவறு நேர்ந்திருக்கிறது என்று அவளுக்குப் புரிந்தது. அதை எப்பொழுதாவதுதான் உபயோகிப்பாள். எந்த மாதத்திலோ 31ஆம் தேதியை அட்ஜெஸ்ட் செய்து கொள்வ தில் தவறு நேர்ந்திருக்கிறது. அதைப் பற்றிக்கூட அவள் யோசிக்கவில்லை. ஒரு இரவும், ஒரு பகலும் எலும்பை உருக்கும் குளிரிலும், மண்டையைப் பிளக்கும் வெயிலில் தனக்காக இவன்...

"நீங்க என்ன நினைக்கிறீங்க என்று எனக்குத் தெரியும். இதை ஒரு தந்திரம் என்று நினைக்கிறீங்க இல்லையா? உங்க இரக்கத்தையும் அதிலிருந்து உங்க அன்பையும் பெறுவதற்காக இந்த மாதிரி மணிக்கணக்காக பார்க்கில் இருந்திருப்பேன் என்று நினைக்கிறீங்க. இல்லையா? அன்பிற்கு நம்பிக்கைதான் முக்கியம். என்னை நம்புங்கள். ஏதோ ஒரு ஆசை எனக்கு உயிரூட்டிக்கொண்டு இருந்தது. இதோ... என் கண்களைப் பாருங்கள். அங்கே கூட நேர்மை தென்படவில்லை என்றால் என்னால் ஒன்றும் செய்ய முடியாது."

அவள் காதில் அவை எதுவும் விழவில்லை. இதயத்தின்

அடிவாரத்தில் ஏதோ நெகழ்ச்சி ஏற்பட்டாற்போல் இருந்தது. அவன் சொன்னாற்போல் எந்தத் தந்திரமும் திட்டமும் இல்லை. அவன் நிச்சயமாக அவளுக்காகவே காத்திருந்திருக் கிறான். உண்மையில் அவன் கேட்டுக் கொண்ட அன்றே அவனைச் சந்தித்து இருக்கலாம். ஆனால் ஏதோ வேலை இருந்தாற்போல் இரண்டு நாட்களுக்குப் பிறகு சந்திப்பதாகச் சொன்னாள். அதன் பலன் இவ்வளவு கொடுமையாக இருக்கும் என்று மட்டும் அவள் ஊகித்திருக்கவில்லை.

அவள் அவனைப் பார்த்தாள். அவன் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் அந்தக் கண்களில் அன்பு நிரம்பி யிருப்பது நன்றாகப் புலப்பட்டது. அதிலிருந்த நேர்மையை அவள் அறிவாள். "என் மனம் முழுவதும் நீ மட்டும்தான் நிரம்பியிருக்கிறாய்" என்று கண்களால் மட்டுமே வெளிப் படுத்தக் கூடிய மொழி.

அவ்வளவு அன்பை இதற்கு மற்றொருவரின் கண்களில் கண்டிருக்கிறாள். ஆனால் அப்பொழுது புரிந்துகொள்ளும் வயது இருக்கவில்லை. படிப்புதான் வாழ்க்கையில் எல்லாமே என்று நினைத்துக் கொண்டிருந்தாள். பலன்...

விவாகரத்து.

* * *

அதற்குப் பிறகு அவர்களுக்கு ஒரு மாதம் வரையிலும் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்தப் பயிற்சி காலத்தில் வாயுபுத்ரன் அவளோடு அதிகம் பேசவில்லை. சுருக்கமாக ஓரிரு வார்த்தைகள் பேசுவதுடன் சரி. ஆனால் இந்த முறை தந்திரத்தை உத்தேசித்து இல்லை. பார்க்கில் நடந்த சம்பவத் திற்குப் பிறகு அவள் தனக்கு நெருக்கமாவாள் என்று எதிர் பார்த்தான். அவளிடம் மாறுதல் தோன்றாததைக் கண்டு

அவன் மனம் காயப்பட்டது. அது அவன் முகத்தில் வெளிப் படையாகத் தெரிந்தது.

அனூஹ்யா இதையெல்லாம் பார்த்தும்கூட எந்த முடி விற்கும் வரமுடியாமல் தவித்தாள். வாயுபுத்ரன் வெறும் நட்புக்காக மட்டுமே இதையெல்லாம் பண்ணவில்லை என்றும், தன்னை மணந்து கொள்ள வேண்டும் என்று ஆவ லுடன் இருக்கிறான் என்றும் தெரியும். அது மட்டு மில்லை. N.S.R.I. யில் இருக்கும் பெண்கள், குறிப்பாகத் திருமணமாகாத பெண்கள். அவன் "உம்" என்றால் போதும் அவனை மணந்து கொள்ளத் தயாராக இருக்கிறார்கள் என்றும், மீதி பேரில் பெரும்பாலானவர்கள். மணம் புரிந்து கொள்ளா விட்டாலும் சரி அவனுடன் புனிதமான சிநேகமாவது வைத்துக் கொள்ள ணும் என்று துடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று அவளுக் குத் தெரியும். அவனுடைய தோற்றமும், நடவடிக் கைகளும் அத்தகையவை.

அவன் இல்லாத நேரத்தில் கம்ப்யூட்டரின் மூலம் அவனு டைய பயோடேட்டாவைப் பார்த்தாள். அந்த விவரங்களைப் பார்த்து வியப்படைந்துவிட்டாள். மேலுக்கு வாழ்க்கையை அவ்வளவு எளிதாக எடுத்துக் கொள்பவனைப் போலத் தோற்றமளிக்கும் அந்த இளைஞன் கம்ப்யூட்டர் டெக்னாலஜி யில் இந்தியா பெருமையடையக்கூடிய ஓரிரு நபர்களில் ஒருவனாக இருந்தான். ஆனால் அகில இந்திய விஞ்ஞானிகளின் மாநாடு ஒன்றிற்குப் போகாமல் ஹிமாலயன் மோட்டார் பந்தயத்திற்குப் போனதால் அந்த வருஷம் கடைசித் தருணத் தில் அவனுக்குத் தர வேண்டிய பட்டம் ஒன்று கை நழுவிப் போய்விட்டது. வாழ்க்கையை அவ்வளவு எளிதாக எடுத்துக் கொள்பவன் அவன். தினமும் ஒரு பாட்டில் குடிப்பான். சிகரெட் நான்கு பேக்கெட்டுகள் புகைப்பான். பார்ட்டியில்

சந்திக்க நேர்ந்தால் மிலிட்டரி கமாண்டரின் மனைவியுடன் கூட வம்பு பேசுவான்.

அனூஹ்யாவுக்கு இரவுகளில் உறக்கம் வரமறுத்தது. வாயுபுத்ரனுக்கு ஏதோ ஒன்றைச் சொன்னால் தவிர இனி தன் வேலையில் மனம் செல்லாது. என்னவென்று சொல்வது?

தன் மனதில் இருக்கும் போரட்டத்தை அவள் புரிந்து கொள்வானா? தனக்கே அந்தப் போராட்டம் சரியாக புரிந்தால் தானே? எந்த முடிவுக்கும் வர முடியாதவளாக, இந்தத் துறையில் தேர்ச்சி பெற்ற, அவனுபவமுடைய வேறொருவரின் ஆலோசனை யைப் பெறவேண்டும் என்ற தீர்மானத்திற்கு வந்தாள்.

அவ்விருவரும் சேர்ந்து விண்வெளிப் பட்டணத்திற்குப் பயணமாவதற்கு இன்னும் நான்கு நாட்கள்தான் இருந்தன.

* * *

அந்த அறை துப்புறவாக இருந்தது. துப்புறவு என்பதை விட மனதிற்கு சந்தோஷத்தைத் தரும் வகையில் என்று சொல்லலாம். அறையில் ஒரு மூலையில் இருந்த பசும் செடி அதன் அழகை மேலும் மெருகூட்டியது. நிசப்தம் கூட அந்த அறையின் அழகை கூட்டியது.

அதை பிரபல மனவியல் நிபுணரின் அறை. அவருக்கு அறுபத்தைந்து வயது இருக்கலாம். சுமார் இரண்டு மணிநேரம் அனூஹ்யாவைப் பலவிதக் கேள்விகளால் துளைத்தெடுத்தார். ஸ்கேனிங் செய்தார்.

"எந்த வயதில் உங்களுக்குத் திருமணம் நடந்தது?"

"பதினாறாவது வயதில்."

அவர் ஆழ்ந்த பெருமூச்சு விட்டார். ஆர்தர் பிராஸ் புதிய ஜெனடிக்கைக் கண்டுபிடித்து உலகத்திற்குப் பல நன்மை

களைச் செய்திருக்கக் கூடும்.

ஆனால் அந்தப் பத்தாண்டுகளில் அந்தப் பரிசோதனையில் எத்தனையோ சிறுமிகள் பால்ய விவாகம் என்ற சம்பிரதாயத்தில் தம்மைப் பிணைத்துக் கொள்ள முடியாமல், மனரீதியாக நலிந்துபோய் விவாகரத்து பெற்றுக் கொண்டார்கள்.

"உங்கள் கணவர்?"

"யஷ்வந்த்! தற்சமயம் அவர் எங்கே இருக்கிறார் என்று தெரியாது. அஸ்ட்ரானமியில் போஸ்ட் கிராஜுவேட் ஆகியிருக்கிறார் என்று மட்டும் தெரியும்."

"நீங்கள் இருவரும் ஏதாவது சண்டை சச்சரவு வந்து பிரிந்து விட்டீர்களா?"

"இல்லையில்லை. அவர் ரொம்ப நல்லவர். பொறுமைசாலி. ஆனால்... ஆனால்..." அவளுக்கு எப்படிச் சொல்வதென்று புரியவில்லை. அவள் வேலையைச் சுலபமாக்குவதற்காகத் தானே கேள்விகளைக் கேட்கத் தொடங்கினார் அவர். அவள் சொல்லத் தொடங்கினாள்.

"எனக்கு அப்பொழுது ஒன்றுமே தெரியாது. மிகவும் சிறியவள். நன்றாகப் படிக்க வேண்டும் என்று மட்டும்தான் விருப்பம் இருந்தது. இந்தக் கல்யாணத்தால்தான் படிப்புக் கெட்டுவிட்டதென்று, யார் மீதென்றே தெரியாத கோபம், எல்லாவற்றையும் விட..."

"உம்... எல்லாவற்றையும் விட?"

"யஷ்வந்தைப் பார்க்கும் போதெல்லாம் அன்பிற்குப் பதில் ஒரு விதமான பயத்தோடு கூடிய மதிப்புத்தான் ஏற்படும். வயதில் பெரியவர்களைப் பார்த்தால் ஏற்படும் உணர்வு."

"அண்ணனைப் போல் தென்படுவாரா?"

அவர் கேள்வி அவளுக்குப் புரிந்தது. "இல்லை. அவர் முத்தமிட்டால் நன்றாகத்தான் இருந்தது. தாம்பத்திய உறவி லும் தடை எதுவும் இருக்கவில்லை. ஆனால் மற்ற நேரங்களில் நெருக்கம் தோன்றாது. அவர் ரொம்ப புத்திசாலி. நடமாடும் கம்ப்யூட்டர் போலவே தென்படுவார். எப்பொழுது பார்த்தா லும் புத்தகம் படித்துக் கொண்டே இருப்பார். அதான் சொன்னேனே அவர்பால் நாளுக்கு நாள் மதிப்பு அதிகரித்துக் கொண்டே வந்தது என்று." அவள் குரலில் வேதனை வெளிப் பட்டது. "கணவன் மனைவிக்கு இடையே இருக்க வேண்டியது மதிப்பு இல்லை. ஒருத்தர்மேல் மற்றவருக்கு தீவிர விருப்பம் தான் தேவை. கண்மூடித்தனமாக காதல் வெறி.! எனக் கென்னவோ ரொம்பக் குறும்பு செய்ய வேண்டும்போல் இருக்கும். ஆனால் ஏனோ அவருக்கு மூன்றடி தூரத்தில் இருக்கும்போதே என்னையும் அறியாமல் பயத்தால் குன்றிப் போய் விடுவேன்."

அவர் புரிந்து கொண்டாற்போல் தலையை அசைத்தார். "கணவன் மனைவிக்கு இடையே வயதிலோ மனநிலையிலோ அதிக வித்தியாசம் இருந்தால் ஏற்படும் விளைவு இது. அதனைப் போக்கடிப்பது ரொம்பவும் கஷ்டம்."

அவள் தலை குனிந்தபடி "அவரைப் பார்த்தால்..." என்று நிறுத்தினாள்.

"பார்த்தால்?"

"சர் ஐசக் நியூட்டனையோ ஐன்ஸ்டீனையோ பார்ப்பது போலிருக்கும். அவரும் இளைஞர்தான். ஆனால் ஏனோ எனக்கு அப்படித் தோன்றும். அவரை எனக்கு ரொம்பவும் பிடிக்கும். அந்த விருப்பத்தை எப்படிக் காட்டுவதென்று அந்த வயதில் தெரிந்திருக்கவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக இருவரும் மானசீகமாக விலகிப் போகத் தொடங்கினோம்.

எங்களை ஒன்று சேர்த்து வைக்க யாருமே முயற்சி செய்ய வில்லை. என் உணர்வுகளை நான் வேறு விதமாக காட்டத் தொடங்கினேன். இந்தக் கல்யாணம்தான் என் எதிர் காலத் தையே பாழாக்கிவிட்டது என்பதுபோல் நடந்து கொண்டேன். அதனால்... விவாகரத்து பெற்றுக் கொண்டோம்." தாழ்ந்த குரலில் சொன்னாள்.

"இது நடந்து எவ்வளவு நாளாகிவிட்டது?"

"ஆறு வருடங்கள். பிறகு நான் உண்மையிலேயே படிப்பில் ஆழ்ந்துவிட்டேன். நான் விவாகரத்துப் பெற்றவள் என்று நிறையப் பேருக்குத் தெரியாது. யஷ்வந்தின் நினைவு கூட எப்பொழுதாவதுதான் வரும். மறுமணம், தாம்பத்திய சுகம் போன்ற எண்ணங்கள் கூட இருக்கவில்லை. இப்படிப் போய்க் கொண்டிருந்த என் வாழ்க்கையில் எதிர்பாராமல் நுழைந்திருக்கிறான்."

"யார்?"

"வாயுபுத்ரன் என்று ஒருத்தன். கம்ப்யூட்டர் இன்ஜினியர்." அவள் சொல்லத் தொடங்கினாள் "அவன் எவ்வளவு துடிப் பானவன் என்று வார்த்தைகளில் சொல்ல முடியாது. அவனோடு அறிமுகமான எந்தப் பெண்ணுமே அவனுடைய சிநேகத்தைப் பெறுவதற்கு துடிக்கத்தான் செய்வாள் என்பது என் அபிப்பிராயம். அவனுடைய குறும்புத்தனத்தில்கூட புத்தி சாலித்தனம் மேலோங்கியிருக்கும். அதுதான் அவனுடைய சிறப்பு. முதலில் அவனுடைய சேட்டைகளை நான் பொருட் படுத்தவில்லை. ஆனால் மெல்ல மெல்லமாய் எனக்கு அவன் மேல் விருப்பம் ஏற்படத் தொடங்கியது. அவன் என்னை அபரி மிதமாக காதலிக்கிறான் என்பதில் சந்தேகம் இல்லை. ஒரு வாரத்திற்கு முன்னால்தான் தன்னைக் கல்யாணம் செய்து கொள்ளச் சொல்லி என்னிடம் கேட்டான்."

"பின்னே உங்களுடைய பிரச்னைதான் என்ன?"

அவள் மறுத்துத் தலையசைத்துவிட்டு, "இல்லை டாக்டர்! என்னால் ஏனோ பதில் சொல்ல முடியவில்லை. வாயுபுத்ர னோடு அறிமுகம் ஆன பிறகு யஷ்வந்த் மேலும் நினைவுக்கு வருகிறான். ஒரு விதமான குற்ற உணர்ச்சி என்னுள் பலமாகப் பதிந்துவிட்டது. ஆனாலும் வாயுபுத்ரனை ஒரேயடிகா மறுக்க முடியவில்லை. அந்த நாட்களில் நான் ரொம்ப சின்னவள். அந்த விஷயத்தை உணர்ந்துகொண்டு யஷ்வந்த் என்னுடன் கொஞ்சம் மென்மையாக நடந்து கொண்டிருந்தால் இந்தத் தொல்லை எதுவும் இருந்திருக்காது. நான்தான் தவறு செய்து விட்டேனோ? யஷ்வந்தின் அன்பை சரியாக புரிந்து கொள்ளா மல் போய் விட்டேனோ? ஆனால் இப்போ வாயுபுத்ரனைப் பார்க்கும் போது எனக்கு யஷ்வந்த்தான் நினைவுக்கு வரு கிறான். ஊஹூம்... இல்லை. வாயுபுத்ரனைக் கூட எனக்குப் பிடித்திருக்கிறது. ஐயோ... நான் உங்களிடம் எப்படிச் சொல் வேன்?"

"எனக்குப் புரிந்துவிட்டது" என்றார் அவர்.

அவள் மௌனமாக இருந்தாள்.

"கல்வியறிவு அதிகமாக ஆக மனிதன் மனதளவில் கஷ்டங் களை எதிர்கொள்கிறான். மிஸ் அனூஹ்யா! பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெண்கள் பிற ஆண்களை நிமிர்ந்து பார்ப்பதே அபராதமாக கருதி வந்தார்களாம். இருபதாவது நூற்றாண்டில் தங்களுடைய கடந்த காலக் காதலை ஒரு இனிய நினை வாகவோ, மறந்து போக வேண்டிய அனுபவமாகவோ தங்க வைத்துக் கொண்டு வாழ்க்கையைத் தொடர்ந்து வந்தார் களாம். ஒரு தடவை காதலித்தாலும், பழைய காதலை இதயத்தி லேயே வைத்துக் கொண்டு மறுபடியும் இன்னொரு தூதரைக் காதலிப்பது தவறு இல்லை என்ற எண்ணமும் நாளாக

நாளாக வளர்ந்து வந்தது. வாழ்நாளில் நான்கைந்து பேரை, ஒருவரையடுத்து இன்னொருத்தரை மனப்பூர்வமாக விரும்புவ தும் சர்வ சாதாரணமாகிவிட்டது. இன்னும் கொஞ்சம்நாள் கழித்து ஒரே சமயத்தில் இருவரைக் காதலிக்கும் அனுபவமும் நடைமுறைக்கு வருமோ என்னவோ.

"இதில் சிக்கல் என்னவென்றால் காதலையும் கவர்ச்சியும் எந்த புள்ளியிடம் பிரிக்க வேண்டும் என்பதை இன்னும் எந்த ஐன்ஸ்டீனும் கண்டு பிடிக்காமல் போனதுதான். இனி உங்கள் விஷயத்திற்கு வந்தால் நீங்கள் யஷ்வந்தைக் காதலிக்கவில்லை என்று நான் நினைக்கிறேன். கணவரிடம் காட்ட வேண்டிய அளவுக்கு அன்பை அந்த நாட்களில் காட்டவில்லையே என்று குற்ற உணர்ச்சியால் பாதிக்கப்பட்டிருக்கீங்க. அவ்வளவுதான். கையை விட்டு நழுவிப் போனதெல்லாம் உயர்வாகத்தான் தோன்றும். முடிந்தவரையில் அவனைப் பற்றி யோசிக்காதீங்க. வாழ்க்கையைப் புதிதாக தொடங்குவதில் தவறு எதுவும் இல்லை. யஷ்வந்த் சம்பந்தப்பட்ட பொருட்கள் ஏதாவது உங்களிடம் இருந்தால் அவற்றை தூக்கி எறிந்துவிடுங்கள். விவாகரத்து பெற்றுக் கொள்வது தவறு என்ற குற்ற உணர்வை மனதிலிருந்து நீக்கிவிடுங்கள். எல்லாவற்றையும் விட முக்கிய மாக உங்களுக்கு ஏற்கனவே மணமான விஷயத்தை வாயுபுத் திரனிடம் சொல்லுங்கள்."

"ஏற்கனவே சொல்லிவிட்டேன்."

"சொல்லிவிட்டீங்களா?" வியப்புடன் கேட்டார்.

"அதாவது யஷ்வந்தின் பெயர். மற்ற விவரங்கள் எதுவும் சொல்லவில்லை. வாயுபுத்ரன் மேற்கொண்டு கேள்விகளும் கேட்கவில்லை. எனக்கு வேண்டியது நீ மட்டும்தான் என்றான். அந்த நிமிடத்திலிருந்துதான் அவனிடம் அபிமானம் ஏற்பட்டது."

"குட்!" என்றார் அவர். "கூடிய சீக்கிரத்தில் அவனிடம் உங்களுக்கு இருக்கும் பிரியத்தை வெளிப்படுத்துங்கள். அனாவசியமான யோசனைகளால் மனதைப் பாழாக்கிக் கொள்ள தேவையில்லை. நீங்கள் சொல்வதை வைத்துப் பார்த்தால் யஷ்வந்தின் கம்பீரமும் புத்திசாலித்தனமும்; வாயுபுத்திரனின் சுறுசுறுப்பும் குறும்பும். இந்த இரண்டு எதிர்மறையான குணங்களும் உங்களைக் குழப்பத்தில் ஆழ்த்துகின்றன. உங்களைப் பொறுத்தவரையில் யஷ்வந்த் முடிந்துவிட்ட அத்தியாயம். அவனை நினைவு படுத்தும் எந்த பொருளாக இருந்தாலும் சரி அருகில் வரவிடாதீங்க. உங்களுக்குக் கணவனாக வரப்போகிறவனை அவனுடன் ஒப்பிடாதீங்க. அப்படிப் பட்ட எண்ணம் ஏதாவது வந்தால் ஒன்று மட்டும் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். ஒருக்கால் உங்கள் திருமணம் மறுபடியும் யஷ்வந்துடன் நடந்தால் அப்பொழுது வாயுபுத்ரனின் குணாதிசயமே நன்றாக இருப்பதுபோல் தோன்றும்."

"மைகாட்! ரொம்ப கொடுமை."

"அதனால்தான் முடிந்துபோன கதையை விட்டுவிடச் சொன்னேன். அதிர்ஷ்டம் என்னவென்றால் யஷ்வந்த் எதிர் காலத்தில் உங்களைச் சந்திக்கப்போகும் வாய்ப்பும் இல்லை. அவனும் திருமணம் செய்து கொண்டிருந்தால் பிரச்னையே இல்லை."

சந்தேகங்கள் விலகிவிட்டாற்போல் அனூஹ்யா எழுந்து நின்றாள். "நீங்கள் சொன்னாற்போல் நடந்து கொள்வதற்கு முயற்சி செய்கிறேன்."

"பெஸ்ட் ஆஃப் லக். நான் சொன்னதை மட்டும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். யஷ்வந்தின் எண்ணங்கள் உங்களிடம் இல்லாதவரையிலும் வாயுபுத்ரனுடன் உங்கள்

வாழ்க்கை சந்தோஷமாக இருக்கும். முடிந்தால் நீங்கள் ஹனி மூனில் நிறைய நாட்கள் கழிக்கப் பாருங்கள். அது உங்களுக்கு நன்மை செய்யும்."

அந்த அறைக்குள் நுழைந்த இவ்வளவு நேரத்திற்குப் பிறகு முதல் முறையாக அனுஹ்யா சிரித்தாள். "யாருமே கழித்திராத தேன்நிலவை நாங்கள் கொண்டாடப் போகிறோமோ என்னவோ டாக்டர். பூமிக்கு பல லட்சம் மைல்களுக்கு அப்பால் விண்வெளிப் பட்டணத்திற்குச் செல்லும் ராக்கெட்டில் நாங்கள் இருவரும் போகப் போகி றோம்."

அவரும் சிரித்தார். "வெரிகுட்! ஒளியின் வேகத்திற்குச் சமமாக பயணம் செய்யப் போகிறீர்கள். அதனால் அந்த சமயத்தில் உங்கள் மனதில் அவ்வளவு தொலைவில் யஷ்வந்த் பற்றிய நினைவுகள் வந்து தொல்லை கொடுக்காதுன்னு எதிர்பார்க்கிறேன்." கையை நீட்டினார் அவர்.

கைக் குலுக்கிவிட்டு அவள் வெளியே வந்துவிட்டாள்.

அன்று மாலையே அவள் வாயுபுத்ரனிடம் தன் சம்மதத்தைத் தெரிவித்துவிட எண்ணியிருந்தாள். விண்வெளிப் பயணத்திற்கு இன்னும் இரண்டு நாட்கள்தான் பாக்கியிருந்தன.

தம் விவாகத்தை மறுக்கப் போவது ஒருவருமில்லை என்பதால் அந்த அளவுக்கு டயம் போதும்.

* * *

சுமார் ஒரு வருடத்திற்கு முன்னால்... ஏப்ரல் 12,1961... அமெரிக்க ஜனாதிபதி ஜான் எஃப் கென்னடி தன் அறையில் நடைபயின்று கொண்டிருந்தார். யூரிகாகரின் என்ற ரஷ்ய நாட்டைச் சேர்ந்த பயணி பூமியை விட்டு விண்வெளி சூனியத்தில் வெற்றிகரமாக அடியெடுத்து வைத்து விட்டதாக அப்பொழுதுதான் செய்தி வந்தது.

1961, ஏப்ரல் 14ம் தேதி மாலையில் ஐந்து மணிக்குத் தன் நான்கு அறிவுரையாளர்களுடன் சேர்ந்து விண்வெளியில் ரஷ்யாவின் அதிகாரத்தை எப்படித் தடுத்து நிறுத்துவோம் என்பதைப் பற்றிக் கூட்டம்கூடி ரகசிய பேச்சு வார்த்தை நிகழ்த்தினார் கென்னடி. பலன்? பத்தே ஆண்டுகளுக்குள் சந்திரனின் மீது முதல் முதலாக ஒரு அமெரிக்கனை இறக்க வேண்டும் என்ற திட்டம் உதயமாயிற்று.

அப்பொழுதிலிருந்தே விண்வெளி யுத்தம் தொடங்கி விட்டது. விண்வெளியில் அதிகாரம் செலுத்தும் முயற்சிக்காக.

* * *

எதிர்பார்த்தாற்போலவே ஆர்ம்ஸ்டராங் சந்திரனில் காலடி எடுத்து வைத்தான். பிறகு விண்வெளி ஸ்டேஷன்கள் ஏற்படத் தொடங்கின. பூமியில் இறங்க வேண்டிய தேவையே இல்லாமல் சூனியத்திலேயே நகரங்களை ஏற்படுத்த வேண்டு மென்ற யோசனைக்கு ஒரு உருவம் ஏற்பட்டது. 1971ல் மூன்று பயணிகளுடன் சால்யூட் 1யை ரஷ்யா முதல் முறையாக விண் வெளி ஸ்டேஷனாக அனுப்பி வைத்தது.

துரதிர்ஷ்டவசமாக மூவரும் விண்வெளியிலேயே இறக்க நேர்ந்தது. அதற்குப் பிறகு அமெரிக்கா வேறொரு ஸ்டேஷனை ஸ்கைலாப் என்று பெயரிட்டு அனுப்பி வைத்தது. மனிதன் வெற்றியின் இரண்டாவது படியை அடைந்து விட்டான்.

இது போன்ற ஸ்டேஷன்களில் நிறைய லாபங்கள் இருந்தன. சீதோஷ்ண நிலையில் மாறுபாடு. வரப்போகும் புயல் எல்லாவற்றையும் முன்கூட்டியே தெரிந்துகொள்ளலாம். அது மட்டுமே இல்லை. மருத்துவம், ஜெனடிக்ஸ் போன்ற துறை களில் கூட பரிசோதனைகள் சாத்தியமாயின. அதோடு பூமியி லிருந்து ராக்கெட்டுகளை அனுப்புவதைவிட வெளியேயிருந்து

அனுப்புவது சுலபம். இதற்கு விண்வெளி ஸ்டேஷன்கள் நன்றாகப் பயன்படுகின்றன. எல்லாவற்றையும் விட பூமியைச் சுற்றிலும் சூழ்நிலை நிலவியிருக்கும். எதையும் தெளிவாக பார்க்க முடியாது. பூமிக்கு வெளியே போய்ப் பார்த்தால் கோடானுகோடி மைல்கள் தொலைவிலிருக்கும் நட்சத்திரங்கள் மேலும் நன்றாகத் தெரியும்.

இந்த விதமாக விண்வெளி விஞ்ஞானம் மனிதனுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தும் சாஸ்திரமாகிவிட்டது.

ஆனால் எந்த விஷயத்திற்கும் பூவும் தலையும் இருக்கும்.

1983யில் ரீகன் ஸ்டார் வார்ஸ் புரோகிராமை வெளியிட்டார். வேறு பெயருடன், எதிரி நாடு அனுப்பி வைக்கும் மிஸ்ஸேல்களை எக்ஸ்ரே லேசர் கிரணங்களின் வழியே சூனியத்திலேயே உடைத்தெரியும் முறைதான் அது. அமெரிக்க மக்கள் எல்லோரும் ரீகனை வானளவுக்குப் புகழ்ந்தார்கள். அப்பொழுதிலிருந்து வானியலில் விநாசத்தை ஏற்படுத்தும் இந்த முறை முன்னேறிக் கொண்டிருக்கும் போதே. மனித நாசத்திற்குப் பயன்படும் இன்னொரு டெக்னாலஜி வேறு பக்கத்திலிருந்து முளைத்தது.

எதிரியின் இருப்பிடத்திலிருந்து மிஸ்ஸேல் புறப்படும். இதனை பஸ் என்பார்கள். ஐந்தாவது நிமிஷம் அது லட்சியத்தை நோக்கிப் பயணம் செய்யத் தொடங்கும் போது அதிலிருந்து சின்னச் சின்ன ராக்கெட்டுகள். (இதனை பாசஞ்சர்ஸ் என்பார்கள்) புறப்பட்டு நாசம் விளைவிக்க வேண்டிய நாட்டில் பல பாகங்களுக்கு அடுத்த மூன்றாவது நிமிஷமே போய்ச் சேருகின்றன. இந்த எட்டு நிமிஷங்களில் அதனைப் பிடிக்க முடிந்தால். மாற்றான் நாடு தன் லேவர் கிரணங்களை கண்ணாடியின் மேல் ஊடுருவிப் பாயும்படி செய்யும். அதனால் அந்த பஸ் பயணிகளுடன் சேர்ந்து நாசமாகி

விடும். விண்வெளி யுத்தமானது இந்த முறையில் நடைபெறு கிறது. ஸ்டார் வார்ஸ் என்றால் இதுதான்.

* * *

நமது பால்வீதியில் பத்தாயிரம் கோடி நட்சத்திரங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட நட்சத்திர மண்டலங்கள் மேலும் ஒரு பத்தாயிரம் கோடி இருப்பதாக ஒரு ஊகம். நமக்குத் தெரிந்த ஒரு விண்வெளியைப் பற்றிய சமாசாரம்தான் இது. ஆன்ட்டிமேட்டரைப் பற்றி நமக்கு இன்னும் சரியாகத் தெரியாது. அது போலவே தனித் தனி கிரகங்களில் உள்ள ஜீவராசிகளைப் பற்றியும்கூட எதுவும் தெரியாது. ஒருக்கால் அங்கே ஜீவராசிகள் மனிதன் தோன்றுவதற்கு முன்பே தோன்றியிருந்தால் இந்நேரத்தில் அந்த ஜீவிகள் அபூர்வ விஞ்ஞான அறிவைப் பெற்றிருக்கலாம். நன்மைவிட கரைக் கண்டவர்களாக இருக்கலாம்.

நமக்கு ஐம்பதாயிரம் கோடி கோடிக் கோடி மைல்கள் தூரத்திலிருந்து அவர்கள் ஏதாவது செயற்கை வாகனத்தை அனுப்பினால், அது நம் பூமிக்கு வந்து சேருவதற்கு ஆயிரம் மில்லியம் ஆண்டுகள் பிடிக்கலாம். நம்மிடமிருந்து அப்படிப் பட்டவர்களோடு உறவு கொண்டாடுவதற்காக 1972ல் பயோனீர் 10 கிளம்பியது. இரண்டாண்டுகளில் ஒரு கிரகத் தைத் தாண்டி புளூட்டோவின் எல்லையை துளைத்துக் கொண்டு போயிற்று. நம்மைவிட புத்திசாலிகள் யாராவது அதைப் பார்க்க நேர்ந்தால் அதில் அவர்கள் நம்மைப் பற்றித் தெரிந்து கொள்வதற்காக மனிதனின் விவரங்களை விளக்கும் படங்கள் இருந்தன. நட்புக்கரம் முத்திரையோடு கூடிய அந்த வாழ்த்துத் தட்டு 100 மில்லியன் ஆண்டுகள் வரையிலும் கெடாதவாறு பயணம் செய்யும். எல்லையில்லாத சூனியத்தில் பயனீர் இன்னும் சுற்றிக் கொண்டிருக்கிறது.

வேறு கிரகங்களில் வசிப்பவர்களோடு தொடர்பு கொள்ள வேண்டும் என்ற ஆவல் மனிதனுக்கு என்றுமே உண்டு.

ராக்கெட்டை அனுப்புவதற்குப் பதிலாக சூனிய எல்லையில் குறிப்புகளை அனுப்பி அதன் மூலம் அவர்களோடு தொடர்பு கொள்வது சுலபம் என்ற யோசனை மனிதனுக்கு 1943லேயே ஏற்பட்டது. பூமிக்கு பல கோடிகள் மைல்களுக்கு அப்பால் இருக்கும் எப்பிலன் எரிடா நட்சத்திரத்தைச் சேர்ந்த கிரகத்தில் புத்தி ஜீவிகள் இருக்கலாம் என்பது விஞ்ஞானிகளின் ஊகம். 1960ல் அவர்களோடு தொடர்பு கொள்வதற்காக 21 சென்ட்டி மீட்டர்கள் அலைபரப்பில் 1271 குறிப்புகள் அடங்கிய விவரங்களை ஒலிபரப்பினார்கள். சுமார் ஒரு வார காலம் இது நீடித்தது. இதனை அவர்கள் தெரிந்துகொண்டு திருப்பி நமக்கு பதில் அனுப்பினால் அது பூமியை வந்து சேருவதற்கு இருபதாண்டுகள் பிடிக்கும்.

அதுபோன்ற பதில் எதுவுமே வரவில்லை.

அதற்குள் விஞ்ஞானிகள் தம் தவறைப் புரிந்து கொண்டார்கள். விண்வெளி எல்லையில் ரேடியோ அலைகளில் ஏற்படும் குழப்பத்தால் இந்த அலைப்பரப்பில் கணகண சத்தம் மட்டும்தான் கேட்குமே தவிர வேறு எதுவும் கேட்காது.

இருபத்தொன்றாம் நூற்றாண்டின் முதல் பாதியில் பிரிட்டிஷ் இன்ட்டர் பிளானிடரி சொசைடி ஆயிரக் கணக்கான டாலர்கள் செலவில் ஒரு விண்வெளிக் கப்பலை பெர்னார்ட் நட்சத்திர மண்டபத்திற்கு அனுப்பியது. ஒரு வினாடிக்கு 18,600 மைல்கள் வேகத்தில் இது விண்வெளி எல்லைக்குள் ஊடுருவிக் கொண்டு போயிற்று. குரு கிரகத்தில் இருக்கும் ஹீலியம் துகள்களை இதன் எரிபொருளாக பயன் படுத்தியிருந்தார்கள். இதன் செலவை எல்லா நாடுகளும்

சமமாக ஏற்றுக் கொண்டன.

அதற்குள் அமெரிக்கா சந்திரனின் மீது விலை உயர்ந்த ரிஃப்ளெக்டர்களை நிறுவியது. அதோடு சேர்ந்து நூறு மீட்டர் பரப்பளவு கொண்ட 1500 ஆன்டென்னாக்களையும் பூமியின் மீது வேறு வேறு இடங்களில் நிறுவ ஏற்பாடு செய்தது. இந்த ஆன்டென்னாக்கள் எவ்வளவு சக்தி வாய்ந்தவை என்றால் சில கோடானுகோடி மைல்களுக்கு அப்பாலுள்ள புத்தி ஜீவிகள் தம் வீடுகளில் பார்க்கும் டி.வி. நிகழ்ச்சிகளைக் கூட கிரகத்துக் கொண்டு ஒளிபரப்பவல்லவை. வித்தியாசம் என்னவென்றால் அங்கே தொடங்கும் நிகழ்ச்சி இங்கே ஒளிபரப்பாவதற்கு நூறு ஆண்டுகளுக்கு மேல் பிடிக்கும். அவ்வளவுதான்.

விண்வெளியோடு ஒப்பிட்டால் நம் பூமி ஒரு சிறிய உருண்டை ஆனால் இவ்வளவு சிறிய உருண்டையிலிருந்து விமானத்தில் கிளம்பி இந்தக் கோடியிலிருந்து அந்தக் கோடி வரை செல்வதற்கு 6,69,600.00 (சுமார் ஆறாயிரத்து ஏழு கோடி வருடங்கள்) பிடிக்கும். இதற்கு முன்னால் நூறு வருடங்கள் என்பது ரொம்பச் சின்ன கணக்கு. அப்படிப்பட்ட நிலையில் வெவ்வேறு எல்லைகளில் இருக்கும் கிரகங்களில் இருப்பவர் களுடன் பேச்சு வார்த்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்றால் ஏதாவது அற்புதம் நிகழ வேண்டும்.

அந்த மாதிரி அற்புதம் ஒன்று நிகழ்ந்தது.

* * *

நிகிலும் யஷ்வந்தும் பயணம் செய்த ஹெவிப்ளேன் அரை மணியில் கீழே இறங்கியது. நிகில் கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டு "துருவ எல்லையிலிருந்து இந்தியாவுக்கு வந்து சேர அரைமணி நேரம்... நல்ல வேகம்" என்றான் முறுவலுடன்.

அவர்களுக்காக N.S.R.I. வாகனம் தயாராக இருந்தது.

போய் ஏறிக்கொண்டதும் அது சயின்ஸ் சிடியை நோக்கிக் கிளம்பியது.

"ரொம்ப நாட்களுக்குப் பிறகு நீங்க திரும்பவும் இந்தப் பக்கம் வர்றீங்க இல்லையா யஷ்வந்த்?" நிகில் கேட்டான்.

"ஆமாம். நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு."

கொஞ்ச நேரம் மௌனமாக இருந்துவிட்டுக் கேட்டான் நிகில். "நீங்க ஏனோ ஒரு மாதிரியாக இருக்கீங்க."

யஷ்வந்த் பதிலளிக்கவில்லை. நகரத்தின் தெருக்கள் வழியே வாகனம் சென்று கொண்டிருந்தது.

இதே தெருவில் சில ஆண்டுகளுக்கு முன்னால் தன் மனைவியோடு சுற்றியிருக்கிறான். மனைவி தன்னை விட்டுப் போனதும் இதே தெருவில் தனித்த இரவுகளை ஏகாந்தமான வேதனையில் கழித்தான். மறுபடியும் இவ்வளவு நாட்களுக்குப் பிறகு...

"நிகில்!"

"என்ன சார்?"

"நீ என்றைக்காவது யாரையாவது காதலித்திருக்கிறாயா?"

நிகில் வியப்புடன் அவனைப் பார்த்தான். எப்போதும் சீரியஸாக ஆஸ்ட்ரோ ஃபிசிக்ஸைத் தவிர வேறொன்றையும் யோசிக்காத, பேசாத யஷ்வந்தின் வாயிலிருந்து அந்தக் கேள்வி வந்தது...

"என் கேள்விக்கு நீ இன்னும் பதில் சொல்லவில்லை."

நிகில் கொஞ்சம் வெட்கத்தோடு தலையசைத்தான். அதற்குள் அவர்கள் சயின்ஸ் சிடியை அடைந்து விட்டார்கள். அவர்கள் ஹாலுக்குள் நுழைந்ததும், "நீங்கள்தானா யஷ்வந்த்

என்பவர்?" வேதப்பிரியா கேட்டாள்.

யஷ்வந்த் தலையை அசைத்தான்.

"உங்களை சதீஷ்சந்திரன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்."

அவன் தலையை அசைத்துவிட்டு உள்ளே நுழைந்தான்.

* * *

N.S.R.I. டைரக்டர் சதீஷ்சந்திரன் யஷ்வந்தைப் பார்த்ததும் "ஹலோ யஷ்வந்த்! பேசியிருக்கிறோமே தவிர பார்த்து ரொம்ப நாளாகிவிட்டது" என்றார்.

அவன் முறுவலித்துவிட்டு பேசாமலிருந்தான்.

இருவரும் உட்கார்ந்ததும் சதீஷ்சந்திரன் டிராயரிலிருந்து நீண்ட காகித உருளையை வெளியே எடுத்தார். இதயத் துடிப்பை விளக்கும் காகிதச் சுருள் போல் இருந்தது அது.

அதை வாங்கிக் கொண்டு "என்ன இது?" என்று கேட்டான்.

"5000 A ரிஜனிலிருந்து பிராஜெக்ட் சைக்ளோப்ஸ் சமர்பித்த அலை குறிப்பு. இதனை கம்ப்யூட்டர் காகிதத்தின் மீது இந்த மாதிரி பிரிண்ட் செய்து தந்திருக்கிறது. பிரட்டன் உடனுக்குடன் இதனை எல்லா நாடுகளுக்கும் அனுப்பியிருக்கிறது. விண்வெளி எல்லையிலிருக்கும் புத்தி ஜீவிகளுக்கு நம்மைப் பற்றி எடுத்துச் சொல்வதற்காகச் செய்த முயற்சி பலித்துவிட்டது யஷ்வந்த். தொலைவிலிருந்து யாரோ நமக்குத் திரும்பி குறிப்புக்களை அனுப்பியிருக்காங்க."

யஷ்வந்திற்கு எதுவும் காதில் விழவில்லை. அவன் கைகளுக்கிடையே அந்தக் காகிதம் நடுங்கியது. அந்த

ஆஸ்ட்ரோ ஃபிசிஷியனின் மனம் முழுவதும் உணர்ச்சிப் பெருக்கால் தத்தளித்தது. அந்தக் காகிதத்தில் இருந்தது என்ன வென்று தெரியாது. அது எந்த லிபியில் எழுதப்பட்டது என்றும் தெரியாது. சில அலைகளுக்கு எழுத்துருவம் ஏற்படுத்தி பிரிண்ட் செய்யப்பட்ட காகிதம் அது. அதுகூட முக்கியம் இல்லை. யாரோ எங்கேயோ இருக்கிறார்கள். தாம் அனுப்பிய குறிப்பை ஏற்றுக்கொண்டு பதில் அனுப்பியிருக் கிறார்கள். அது போதும்.

கையிலிருந்த காகிதத்தைத் திரும்பவும் பார்த்தான். சில மில்லியன் ஆண்டுகளுக்குப் பிறகு சில கோடிக்கணக்கான் மைல்களுக்கு அப்பால் உள்ள ஒரு ஜீவி இன்னொரு ஜீவிக்கு எழுதியுள்ள முதல் கடிதம் அது.

அவன் இதழ்களில் புன்முறுவல் படர்ந்தது. கம்யூனி கேஷன் டென்னாலஜியில் இது ஒரு அபூர்வமான வெற்றி.

அந்தக் காகிதத்திலிருந்த குறிப்புக்குப் பொருள் தெரிந் திருந்தால் அவன் இதழ்களில் அந்த முறுவல் மலர்ந்திருக்காது. அவன் இதழ்களில் மட்டுமே இல்லை. உலகத்திலுள்ள எந்த மனிதன் முகத்திலும்.

* * *

"இது நிச்சயமாக மாயாஸ் (கிரகாந்தர வாசிகள்) அனுப்பிய குறிப்புதானா? முதலில் அதைத் தெரிந்து கொள்ள ணும்" என்றார் டைரக்டர்.

"ஒருக்கால் சுற்றுச் சூழலில் ஏதாவது குழப்பம் ஏற்பட்டு. இந்த விதமாக ஒலிகளைப் போட்டோ ஆக்டிவிடியின் மூலம் ஏற்படுத்தியிருக்குமோ? அதுதான் உண்மை என்றால் நாம் பழுதைப் பார்த்துப் பாம்பு என்று நினைக்கிறோம் என்று அர்த்தம்."

"பாம்பு இல்லை. தங்கச் சங்கிலின்னு நினைக்கிறோம் என்று சொல்லுங்கள்."

"பாம்பு பயத்தின் அறிகுறி." சிரித்தான் யஷ்வந்த். "உண்மையில் மாயாஸ் அனுப்பியிருந்தால் இது தங்கத்தைவிட மதிப்பு வாய்ந்தது."

"உலகம் முழுவதும் கணினி நிபுணர்கள் இதை மொழி பெயர்க்க முயன்று கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு ஆண்டுகள் பிடிக்குமோ தெரியாது."

"நீங்க சொன்னதுபோல் இது நம் கற்பனையாக இருந்தால் ஒன்றுமே சொல்ல முடியாது. ஆனால் உண்மையான குறிப்பாக இருக்கும் பட்சத்தில் இந்தக் கிரகவாசிகள் ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பூமியின் மீது வந்து இறங்கியிருப்பார்கள் என்று சொல்லப்படுகிறது. இது எந்த அளவுக்கு உண்மை என்று தெரியாது. சீனாவில் ஹீனாஸ் நாட்டில் ஒரு தீவில் இருக்கும் குன்றின் மீது சில விண்வெளிக் கப்பல்களின் படங்கள் செதுக்கப்பட்டிருந்தன. இவை 47,000 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சித்திரங்கள். இந்தக் கப்பல் படங்களுடன் விண்வெளியில் தரிக்க வேண்டிய உடைகள், சிரசாசனம் போட்டுக்கொண்டிருக்கும் ஜீவிகளின் படங்களும்கூட இருந்தன. இந்த மலைகளின் மீதே பிரமிட்டின் சித்திரங்களும் இருந்தன." யஷ்வந்த் மேலும் சொன்னான். "ஆச்சரியம் என்னவென்றால், இந்த பிரமிட் சித்திரங்களுக்கிடையே உள்ள தூரத்தின் விகிதமானது சூரியனுக்கும் மற்ற கிரகங்களுக்கும் இடையே உள்ள தூரத்திற்கு பொருத்தமாக இருக்கிறது. அதாவது 50,000 ஆண்டுகளுக்கு முன்னாலேயே மனிதனுக்கு இவற்றுக்கு நடுவில் இருக்கும் தூரத்தைப் பற்றித் தெரிந்திருக்க வேண்டும். அல்லது வெளி உலகிலிருந்து யாராவது வந்து இதைத் தீட்டியிருக்க வேண்டும். இந்த சித்திரங்களைக்

கொண்டு பார்த்தால் அவர்கள் கிருத்திகை நட்சத்திர மண்டலத்திலிருந்து வந்தவர்களாக இருக்க வேண்டும். பல நாடுகளில் அநேகம் பேர் பல முறை கிராந்தரவாசிகளின் வாகனங்களைப் பார்த்ததாக சொல்லியருக்கிறார்கள். சிலர் போட்டோவும் எடுத்திருக்கிறார்கள். இவற்றுக்கு பறக்கும் தட்டுகள் (Flying saucers) என்று கூட பெயர் சூட்டியிருக் கிறார்கள். ஆனாலும் இவை எல்லாம் உண்மைதானா? சும்மா விளம்பரப்படுத்திக் கொள்வதற்காக செய்யப்பட்ட தந்திரமா என்று யாருக்கும் தெரியாது."

அவன் வார்த்தைகள் இன்னும் முடியக்கூட இல்லை. அதற்குள் வேதப்பிரியா உள்ளே வந்தாள்.

அவள் கொண்டு தந்த காகிதத்தைப் பார்த்துக் குழம்பினார் டைரக்டர்.

"என்ன நடந்தது?"

"ஸ்பேஸ் சிடியிலிருந்து குறிப்பு வருவது நின்று விட்ட தாம்."

"என்ன?" இருவரும் ஒரே சமயத்தில் கேட்டார்கள்.

"நம் ஆட்கள் இருக்கும் ஸ்பேஸ் சிடியிலிருந்து எந்தக் குறிப்புமே வரவில்லையாம்." பரபரப்புடன் எழுந்துகொண்டு விண்வெளிப் பரிசோதனைக் கூடத்தை நோக்கி ஓட்ட மெடுத் தார் டைரக்டர். யஷ்வந்தும் அவரைப் பின் தொடர்ந் தான்.

சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னால் பூமிக்கு மூன்றரை லட்சம் மைல்களுக்கு அப்பால் வானவெளியில் நிர்மாணிக்கப் பட்டது விண்வெளி நகரம். அங்கே விஞ்ஞானி கள் நிரந்தர மாகத் தங்கிச் சோதனைகள் செய்துகொண்டே இருக்கிறார் கள். விண்வெளிக்கு அனுப்பப்படும் ராக்கெட்டுகள் இங்கிருந்து

தான் புறப்படுகின்றன. 1960 லிருந்து 1995க்கு இடைப்பட்ட காலத்தில் ராக்கெட்டுகளைப் பூமியிலிருந்து தான் அனுப்பு வார்களாம். அதில் எரிபொருள் ரொம்ப செல வாகும். ஸ்பேஸ் சிடி வந்த பிறகு செலவு குறைந்தது. அனுஹ்யாவும் வாயுபுத்ர னும் செல்லவிருந்தது அந்தப் பட்டிணத்திற்குத்தான்.

டைரடக்டர் அந்த கட்டிடத்திற்குள் நுழைந்த பொழுது வாயுபுத்ரன் அங்கே இருந்தான்.

"எவ்வளவு முறை தொடர்புகொண்டும் நம் ஆட்களிட மிருந்து பதிலே வரவில்லை சார். சுமார் அரைமணி நேரமாக முயற்சி செய்து கொண்டிருக்கிறேன்" என்றான் வாயுபுத்ரன். நெற்றியில் படிந்த வியர்வையைத் துடைத்துக்கொண்டே.

டைரக்டருக்குப் பின்னால் நின்றிருந்த யஷ்வந்த் "வேவ் லெங்த்தை மாற்றிப் பாருங்கள்" என்று யோசனை தந்தான்.

யாரோ ஒருவன் தனக்குத் தெரிந்த அரைகுறை ஞானத்தை வைத்துக்கொண்டு எதையோ சொன்னதற்கு வேறு சமயமாக இருந்தால் வாயுபுத்ரன் சூடாக பதில் கொடுத்திருப்பான். ஆனால் எதிரே டைரக்டர் இருந்ததால் கட்டுப்படுத்திக் கொண்டான். "விண்வெளிக்குள் எந்த அலைவரிசையில் அனுப்பினாலும் ஒன்றுதான்" என்றான். இவ்வளவு சிறிய விஷயம்கூட தெரியாத நீங்கள் முதலில் இந்த விண்வெளிப் பரிசோதனைக் கூடத்திற்குள் எப்படித்தான் நுழைந்தீங்களோ என்ற தொனியில்.

யஷ்வந்த் மட்டும் இயல்பான கம்பீரத்துடன் "ஐசோடோப் 5 மூலமாக இருந்தால் அதற்கும் சாதாரண அலைவரிசைக்கும் வித்தியாசம் இருக்கும் இல்லையா?" என்றான்.

வாயுபுத்ரன் அதிர்ச்சியடைந்தான்.

பத்து நாட்களுக்கு முன்னர்தான் கண்டுபிடிக்கப் பட்டிருந்த புதிய டெக்னாலஜி அது. பிரபல விஞ்ஞானிகளில் பலருக்கு இன்னும் அதன் விவரங்கள் போய்ச் சேரவில்லை. அதற்குள் எப்படி இவனுக்கு இந்த விஷயம் தெரியவந்தது என்று வியப்படைந்தான்.

அதற்குள் டைரக்டர் "ஓ... உங்கள் இருவரையும் அறிமுகம் செய்து வைக்க மறந்துவிட்டேன். இவர் யஷ்வந்த்... ஆஸ்ட்ரோ ஃபிசிஷியன்" என்று வாயுபுத்ரனிடம் சொன்னார். வாயுபுத்ரன் திகைத்துப் போனவனாய் அவனைப் பார்த்தான்.

இந்தியாவின் தலை சிறந்த விஞ்ஞானி ஒருவர் இதுபோல் தன் அறைக்குள் வந்து பேசுவார் என்று கனவிலும் அவன் ஊகித்திருக்கவில்லை. தான் பேசியதற்கு வெட்கமடைந்த வனாக "ஐயாம் சாரி... யாரோன்னு நினைத்துக் கொண்டேன்" என்றான்.

"அதனால் என்ன? வெளியாட்களுக்கு நீங்க இந்த மாதிரி பதில் சொல்ல வேண்டிய தேவைகூட இல்லை. சரி... ஐசோ டோப் 5யை சோதித்தீங்காள?" யஷ்வந்த் சிரித்தான்.

வாயுபுத்ரன் மளமளவென்று அந்த வழியில் முயற்சி செய்தான். இருபது நிமிஷங்களுக்குப் பிறகும் அந்தப் பக்கத்திலிருந்து பதில் எதுவும் வராததால் இயலாமையுடன் அவர்களைப் பார்த்தான்.

அதற்குள் ஹாட்லைனின் அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், ஜப்பான் நாடுகளுக்குக்கூட இந்த விஷயம் தெரிந்துவிட்டது . எல்லா நாட்டினரும் கலவரமடைந்தார்கள். அனுப்பப்பட்ட செய்தி வழியில் எங்கேயாவது தடங்கல் ஏற்பட்டு வந்த சேராமல் போயிருக்குமோ என்று எண்ணினார்கள்.

"இந்த மாதிரி குறை ஒன்று சில ஆண்டுகளுக்கு முன்னால்

கூட நடந்ததே. தெரியும் இல்லையா?"

"அந்த மாதிரி எதுவும் இல்லையே?" என்றார் டைரக்டர்.

யஷ்வந்த் அவரைப் பார்த்து "ஒரு முறை நம் பழைய ரிக்கார்டுகளை எடுத்துப் பார்ப்போமா?" என்றான்.

மூவரும் திரும்பவும் அலுவலகத்தை நோக்கி வந்தார்கள். எல்லா பிரிவுகளும் ஒரே கட்டிடத்திற்குள் தான் இருந்தன. நடந்து கொண்டிருந்த போது வாயுபுத்ரன் "உங்களைச் சந்திக்க நேர்ந்ததற்கு ரொம்பவும் சந்தோஷமாக இருக்கு. எதிர் பார்க்கவேயில்லை" என்றான்.

யஷ்வந்த் முறுவலித்துவிட்டு பேசாமல் இருந்தான்.

வாயுபுத்ரன் சொன்னான். "இன்னும் இரண்டு நாளில் நாங்க அந்த விண்வெளிப் பட்டணத்திற்குப் பயணமாக இருக்கிறோம். இந்த சமயம் பார்த்தா இப்படி நடக்கணும்?"

"நாங்கள் என்றால்?"

"நானும் இன்னொரு பெண்ணும்."

பெண்ணும் என்று சொல்லும்போது அவன் கண்களில் தென்பட்ட ஒளியை யஷ்வந்தின் கூரிய பார்வை கவனிக்கத் தவறவில்லை. அதனால் அதைப்பற்றி மேலும் கேட்டு அவனைத் தொந்தரவு செய்யக் கூடாது என்றெண்ணி "நீங்கள் கட்டாயம் போகவும். உங்கள் பயணம் எந்தத் தடங்கலும் இல்லாமல் நிறைவேறவும் முயற்சி செய்வோம். போதுமா?" என்றான்.

"தாங்க்ஸ்" வாயுபுத்ரன் யஷ்வந்தின் கையைப் பிடித்துக் கொண்டான். சட்டென்று தேறியபடி "சாரி" என்றான் அளவுக்கு அதிகமாக உரிமை எடுத்துக் கொண்டதற்கு.

"நம் அறிமுகம் ஏற்பட்ட இந்த ஐந்து நிமிஷங்களில் நீங்க இரண்டு முறை சாரி சொல்லிவிட்டீங்க. அடிக்கடி சாரி சொல்வது அவ்வளவு நல்ல பழக்கம் இல்லை" என்றான் யஷ்வந்த் சிரித்துக்கொண்டே.

வாயுபுத்ரனும் சிரித்துவிட்டான். தன்னோடு விண்வெளிப் பட்டிணத்திற்கு வரப் போகும் பெண் ஒரு காலத்தில் யஷ்வந்தின் மனைவி என்று தெரிந்தால், அவன் எவ்வளவு பெரிய 'சாரி' சொல்லப் போகிறானோ காலம்தான் நிர்ணயிக்க வேண்டும்.

* * *

மூவரும் அலுவலகத்திற்குப் போய்ச் சேர்ந்தார்கள். ஐந்தே நிமிடத்தில் தனக்குத் தேவையான விவரங்களைத் தேடி எடுத்துவிட்டான் யஷ்வந்த்.

சரியாக ஐம்பத்திரெண்டு வருடங்களுக்கு முன்னால் அரை வினாடி நேரம் இதுபோல் ஒரு தடவை குறிப்புகள் வந்து சேருவது தடைப்பட்டதாக ரிக்கார்டில் இருந்தது.

வாயுபுத்ரன் யஷ்வந்தை பக்தியோடு பார்த்தான். இப்படிப் பட்ட நினைவாற்றல் இருப்பது அபூர்வம் இல்லையா?

"விண்வெளிப் பட்டணத்திலிருந்து நம் ஆட்கள் தொடர்ந்து அனுப்பிக் கொண்டே வந்த குறிப்புகள் அரை வினாடி நேரம் ஏன் நின்று விட்டன என்று இந்த ஐம்பத்திரெண்டு ஆண்டுகளில் யாருமே கண்டு பிடிக்கவில்லை. அவ்வாறு நின்றது அரை வினாடி நேரம்தான் என்பதால் ஒருவருமே அதை அவ்வளவாக பொருட்படுத்தவில்லை. ஆனால் நான் நினைக்கிறேன். இந்த இரண்டிற்கும் சம்பந்தம் இருக்கும் என்று" என்றான் யஷ்வந்த்.

அதற்குள் டி.வி.யில் நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. குறிப்பிட்ட சானலை பார்க்கச் சொல்லி டைரக்டருக்கு தகவல் வந்தது. உடனே டி.வி.யில் அந்த சானலை பார்க்கத் தொடங்கினார்கள்.

உலக விண்வெளிச் சங்கத்தின் தலைவர் திரையில் தோன்றினார். அவர் முகத்தில் வேதனை நிரம்பியிருந்தது.

"உங்கள் எல்லோருக்கும் மிகவும் துரதிர்ஷ்டகரமான விஷயம் ஒன்றைச்சொல்ல நேர்ந்ததற்கு வருந்துகிறேன். பூலோகவாசிகளுக்குப் பெருமையைச் சேர்க்கும் விண்வெளி நகரம் முழுவதும் சர்வநாசமாகிவிட்டது. அதற்கான காரணத்தை நம் விஞ்ஞானிகள் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள். விரைவில் அதைப் பற்றிய விவரங்களைத் தெரிவிக்க முயற்சி செய்கிறோம்."

பிறகு விண்வெளி நகரத்தைப் பற்றிய காட்சிகள் டி.வி.யில் வரத் தொடங்கின. இதயத்தை உருக்கும்படியாக இருந்தன அந்தக் காட்சிகள். வாயுபுத்ரனுக்கு வயிற்றில் சங்கடம் தோன்றியது.

சிலரின் உடல்கள் எரிந்து சாம்பலாகிவிட்டிருந்தன. சிலரின் அவயவங்கள் கருகிப் போயிருந்தன. பொருட்கள் தாறுமாறாகக் கிடந்தன. மிஷின்கள் மட்டும் வேலை செய்யவில்லை. எந்த அசைவும் இல்லாமல் சித்திரம் போல் இருந்தன. எவ்வளவோ ஆண்டுகளாக மனிதன் பாடுபட்டு உழைத்து பூமிக்கு லட்சம் மைல்களுக்கு அப்பால் நிர்மாணத்திருந்த சொத்தை, யாரோ எதிரிகள் கைப்பற்றிக்கொண்டு நாசம் செய்து விட்டாற்போல் அங்கே மயான அமைதி தாண்டவ மாடிக் கொண்டிருந்தது. எல்லோரும் வேதனையுடன் அந்தக் காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். குண்டு எதுவும் வெடிக்கவில்லை. எதிரி யாரும் வந்து நாசம் செய்த அறிகுறிகளும் தென்படவில்லை.

எங்கேயோ எப்போதோ குறை ஏற்பட்டு மேல் பாகத்தைப் பிளந்துகொண்டு ரேடியோ ஆக்டிவ் கதிர்கள் அந்த நகரத்து மனிதர்களைப் பொசுக்கிவிட்டாற்போல் இருந்தது. சுமார் நூற்றைம்பது விஞ்ஞானிகள் இருந்த இடத்திலேயே துடி துடித்து இறந்து போயிருக்கிறார்கள் என்பது அந்த உடல் களைப் பார்த்த பொழுது தெரிந்தது.

டி.வி.யில் நிகழ்ச்சி முடிந்துவிட்டது. யாருமே பேச வில்லை. அந்தக் காட்சிகளின் பாதிப்பிலிருந்து இன்னும் மீள முடியாதவர்களாக மௌனமாக இருந்தார்கள்.

யஷ்வந்தின் யோசனைகள் வேறு விதமாக இருந்தன. துருவ எல்லையில் சூரியனுக்கு அண்மையில் பார்த்த இன்னொரு வெளிச்சமே இந்த விண்வெளி நகரின் அழிவிற்குக் காரணமாக இருக்கலாமோ என்ற குழப்பத்தில் இருந்தான் அவன். உலகத்தில் வேறு யாருக்குமே அது தென்பட்டிருக் காது. துருவ எல்லையில் இருந்ததால் அது தனக்கு மட்டும் தென்பட்டிருக் கிறது. அதிலிருந்து வெளியான ரேடியோ கதிர் கள் இந்த விஞ்ஞானிகளைக் கொன்று விட்டிருக்குமோ?

ஏனோ அது பொருத்தமான யோசனையாகத் தோன்ற வில்லை. மனிதர்கள் இறந்துவிட்ட மாத்திரத்தில் அங்கிருந்து வர வேண்டிய குறிப்புகள் நிற்க வேண்டிய காரணம் இல்லை. மனிதனைக் காட்டிலும் சக்தி வாய்ந்த கம்ப்யூட்டர்கள் தம் வேலையை செய்து கொண்டே இருக்கும்.

யஷ்வந்தின் எண்ணங்களைச் சிதறடித்தவாறு ஹாட் லைனில் கேட்கத் தொடங்கியது.

"இப்பொழுது கிடைத்திருக்கும் செய்தியின்படி விண் வெளி நகரத்தில் விஞ்ஞானிகளின் மரணத்திற்குக் காரணம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது."

மூவரும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள். இவ்வளவு சீக்கிரத்தில் இந்த ரகசியம் வெளிப் படும் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை. ஹாட்வேவ் ரகசியம் வெளிப் படும் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை. ஹாட்வேவ் ரேடியோ பல்வேறு நாடுகளின் தொழில்நுட்ப விஞ்ஞானிகளுக்கு இடையே தகவல்களை பரிமாறிக் கொள் வதற்காக செயல்படுகிறது.

"சோலார் எனர்ஜி சரியாக வந்து சேராததால், விண்வெளி நகரம் எரிந்துவிட்டது. உலகத்தில் பல்வேறு இடங்களிலிருந்து கிடைத்த செய்திகளைக் கொண்டு பார்த்தால் ஒரு மணி நேரத்திற்கு முன்னால் ஒரு ஐந்து நிமிஷங்கள் வரையில் சூரியனின் சக்தியெல்லாம் கண்ணுக்குப் புலப்படாத ரீதியில் ஷீணித்துவிட்டது. சூரியசக்தியை ஆதாரமாகக் கொண்டு இயங்கும் இந்த விண்வெளி நகரம். அந்த சக்தி சரியான அளவு வந்து சேராமல் போனதால் தொழில்நுட்ப ரீதியாக குறைபாடு ஏற்பட்டுவிட்டது. ரேடியோ ஆக்டிவிடியிலிருந்து விண்வெளி நகரத்தைக் காக்கும் கருவிகள் இவ்விதமாக வேலை செய்யாமல் போயிருக்கலாம் என்று விஞ்ஞானிகள் ஊகிக்கிறார்கள்." ரேடியோவில் ஒலிபரப்பு தொடர்ந்து கொண்டிருந்தது.

வாயுபுத்ரன் சிலையாகிவிட்டான். இதே விபத்து இன்னும் சில நாட்களுக்குப் பிறகு நேர்ந்திருந்தால் தானும் அனுஹ்யாவும் அந்தக் கண்ணுக்குப் புலப்படாத சக்திக்கு பலியாகியிருப்போம். அதை நினைத்துப் பார்த்தபோது அவன் உடல் நடுங்கியது.

யஷ்வந்த் அதைப்பற்றி யோசிக்கவில்லை. அவன் கண் முன்னால் இன்னும் அந்த உருவமே மிதந்து கொண்டிருந்தது. சூரியனிடமிருக்கும் சக்தியை தொலைவிலிருந்தே யாரோ பிடுங்கிக் கொண்டாற்போல் துல்லியமாக தான் பார்த்த உருவம்!

இதற்கும் விண்வெளியிலிருந்து வந்த குறிப்புகளுக்கும் ஏதேனும் சம்பந்தம் இருக்குமோ?

இதற்கும் ஐம்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் அந்த ஒரு வினாடி நேரம் சூரிய ஒளி நின்றுவிட்டதற்கும் சம்பந்தம் இருக்குமோ? மற்ற இரண்டு பேரும் அந்த ரேடியோ செய்தி யைக் கேட்டுக் கொண்டிருக்கும் போது, யோசனையில் மூழ்கிய படி அவன் வாயுபுத்ரனுக்கு அருகில் இருந்த காகிதத்தை எடுத்துப் பார்த்தான். கம்ப்யூட்டர் பிரிண்ட் செய்திருந்த அந்தக் காகிதத்தின் மீது தாறுமாறாக கோடுகள் தென் பட்டன.

இவ்வாறு இருந்தன அவை. இந்த கோடுகளுக்கு அர்த்தம் என்ன?

உண்மையிலேயே யாராவது அனுப்பிய செய்திதானா? அல்லது விண்வெளியில் ஏற்பட்ட மாற்றத்தால் உருவான தாறுமாறான கோடுகளா இவை?

ரேடியோவில் அறிவிப்பு முடிந்துவிட்டது. டைரக்டர் யஷ்வந்த் பக்கம் திரும்பி என்ன செய்யலாம் என்பதுபோல் பார்த்தார்.

அனுஷ்யாவுடன் சேர்ந்து விண்வெளி நகருக்குப் போவது இனி முடிந்துவிட்டாற்போல்தான். அதனால் வாயுபுத்ரன் கவலையுடன் இருந்தான்.

யஷ்வந்த் அவனைப் பார்த்து, "நம்மிடம் எந்த ஜென ரேஷன் கம்ப்யூட்டர் இருக்கு?" என்று கேட்டான்.

"மிகவும் நவீனமான 260 ஜெனரேஷன்."

"இந்தக் கோடுகளை நம் மொழியில் மாற்ற முடியாதா?"

"ரொம்ப முயன்றோம். முதலில் ஏதாவது பேஸ் தெரிந்தால் தானே நாம் ஃபீட் பண்ணவே வாய்ப்பு கிடைக்கும்? அது முடியாததால் இது என்ன மொழி என்று கண்டுபிடிக்க யாரா லும் முடியாது."

"மனிதனால் முடியாதது எதுவும் இல்லை என்று நம்மைப் பற்றி நாமே பெருமைப் பட்டுக் கொண்டிருக்கிறோம்." சிரித்தான் யஷ்வந்த். இருவரும் அந்த அறைக்குள் நுழைந் தார்கள். அறையின்நடுவில் உயரமான கம்ப்யூட்டர் ஒன்று இருந்தது.

"நீங்க இதை ஒரு சவாலாக எடுத்துக்கொண்டு வேலை செய்ய வேண்டியிருக்கும். இருபத்தி நான்கு மணி நேரத் திற்குள் இதை டீகோட் செய்யணும்."

வாயுபுத்ரன் அலுத்துக்கொண்டே "கொஞ்ச நேரத்திற்கு முன்பு வரை நாங்க அதைத்தான் செய்து கொண்டிருந்தோம். விடைதான் கிடைக்கவில்லை" என்றான்.

"ரொம்ப நாட்களுக்கு முன்னால் செங்கிஜ்கான் என்று ஒருத்தன் இருந்தானாம். என்னால் பண்ண முடியாது என்ற வார்த்தை காதில் விழுந்தால் போதும். உடனே அப்படிச் சொன்ன ஆளின் தலையை கத்தியால் சீவித் தள்ளி விடு வானாம்" என்றான் யஷ்வந்த் சிரித்துக்கொண்டே.

வாயுபுத்ரன் சிரிக்கவில்லை.

"நான் சும்ம உதாரணத்திற்காகச் சொன்னேன். அவ்வளவு தான். நீங்க வருத்தப் படவேண்டாம். நாட்டிலேயே சிறந்த கம்ப்யூட்டர் விஞ்ஞானி நீங்க. நீங்க முயற்சி செய்தால் முடியாதது இருக்க முடியுமா?" என்று அவன் பதிலை எதிர்

பார்க்காமல் அங்கிருந்து வெளியே வந்துவிட்டான். கீழே இறங்குவதற்காக லிஃப்டிற்கு அருகில் வந்து நின்றான்.

அருகிலிருந்த இன்னொரு லிஃப்ட் மேலே வந்து கொண்டிருந்தது. அதற்குள் முதல் லிஃப்ட் வந்து நின்றது. அதற்குள் நுழைந்து கீழே இறங்கத் தொடங்கினான். மேலே வந்து கொண்டிருந்த லிஃப்ட்லிருந்த அனூஹ்யா அந்த மாடிக்கு வந்தாள். அவள் ரொம்ப குழப்பத்தில் இருந்தாள். விண்வெளி நகரத்திற்குப் போகவிருந்த தம் பயணம் ரத்தாகி விட்ட செய்தி அப்பொழுதுதான் அவளுக்குத் தெரியவந்தது.

மனவியல் நிபுணர் கொடுத்த அறிவுரையின்படி அவள் தன் கணவனின் நினைவுகளை ஒதுக்கிவிட்டு, திரும்பவும் சாதாரண வாழ்க்கையுடன் ஒன்ற வேண்டுமென்ற முயற்சியின் முதல் படியாக வாயுபுத்ரனிடம் அவன் சிநேகம் தனக்கு விருப்பம்தான் என்று சொல்லிவிட எண்ணியிருந்தாள். எப்படி யும் விண்வெளிப் பயணத்தை தாம் இருவரும் மட்டுமே மேற்கொள்ளப் போவதால் அதற்கு முன்பே திருமணத்தைப் பற்றி முடிவு செய்வது நல்லது என்று பட்டது. அப்படி நினைத் தாளே தவிர அந்தத் தீர்மானம் அவளுக்கு முழுவதுமாக சந்தோஷத்தைத் தரவில்லை. ஆனால் இதுபோல் நிரந்தரக் குமுறலுடன் வாழ்வதைவிட அந்தத் தீர்மானத்தை எடுத்துக் கொள்வதே நல்லது என்று தோன்றியது. எப்படியோ மனதைச் சமாதானப்படுத்தினாள். அதற்குப் பிறகு இப்போ இந்த புரோகிராம் கான்சலாகிவிட்டது. அதனால் அவனுக்குச் சாதாரணமாக தன் முடிவைத் தெரிவிக்க நினைத்திருந்தாள்.

லிஃப்டில் மேலே வந்து கொண்டிருந்த பொழுது அவள் மனம் முழுவதும் உத்வேகம் நிரம்பியிருந்தது. அவளுக்கு ஏனோ அடிக்கடி யஷ்வந்தின் நினைவு வந்து கொண்டிருந்தது.

அரும்பாடுபட்டு அந்த யோசனைகளை உதறிவிட்டு

கம்ப்யூட்டர் அறையை நோக்கி வந்து கொண்டிருந்தாள் அவள். யாருடைய நினைவுகளிலிருந்து தான் விலகவேண்டும் என்று எண்ணியிருந்தாளோ அவன் தனக்குச் சரியாக இரண்டடி இடைவெளியில் வேறொரு லிஃப்டில் கீழே போய்க் கொண்டிருந்தான் என்று அவளுக்குத் தெரியாது.

அதே சமயம் லிஃப்டில் கீழே போய் இறங்கிய யஷ்வதுக்கு ஒரு வினாடி என்ன செய்வதென்றே புரியவில்லை. அந்தக் காகிதத்தில் என்ன இருக்கிறது என்று தெரிந்தால் தவிர ஒன்றுமே செய்ய முடியாது. ஒரு தடவை ஸ்டாஃப் டிபார்ட் மெண்டிற்குப் போய் அனூஹ்யாவைப் பற்றி விசாரிப்போமா என்றெண்ணினான். ஆனால் கடல் போன்ற இவ்வளவு பெரிய நிறுவனத்தில் அவளைப் பற்றிச் சொல்ல யார் இருக்கிறார் கள்? அதோடு அவள் இந்த ஊரில்தான் இருக்கிறாளோ இல்லையோ?

ஒரு முறை அவளைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் ஏற்பட்டது. காற்றில் படபடக்கும் புத்தகத்தின் பக்கங்களைப் போல் பழைய நினைவுகள் இதயத்தில் படபடத்தன. "ஐ லவ் யூ... ஐ லவ் யூ அனூஹ்யா" என்று பதில் சொல்லக்கூடும். தான் இவ்வளவு தூரம் யோசிக்கும் அந்தப் பெண் சுவருக்கு அந்தப் பக்கத்தில் இருப்பது தெரிந்தால் என்ன செய்திருப் பானோ?

சரியாய் அதே சமயத்தில் வாயுபுத்ரன் கம்ப்யூட்டரை இயக்கத் தொடங்கினான். அவன் உரையாடல்கள் எப்பொழு துமே வேடிக்கையாகவும், குறும்பாகவும்தான் தொடங்கும்.

"ஹலோ. மிஷின்?" என்றான்.

"ஹலோ மேன்" பதிலளித்தது கம்ப்யூட்டர். "என்ன இன்றைக்கு ரொம்ப உற்சாகமாக இருக்கிறாய்?"

"என்ன உற்சாகமோ பாழாய்ப்போன உற்சாகம். அந்தக் காகிதத்தை டிகோட் செய்து, அதில் என்ன எழுதியிருக்குன்னு கண்டுபிடிக்கச் சொல்லி உயிரை எடுக்கிறார்கள்."

"நேற்று முழுவதும் என் உயிரை எடுத்தது போதாதா? ஏதாவது விமான ஓசையாகவோ, பறவையின் இறகுகள் பட படத்த சப்தமாகவோ இருக்கலாம். அதைப் பிடித்துக் கொண்டு உங்க ஆட்கள் வேண்டாத ரகளை செய்கிறார்கள்."

"இல்லை இல்லை. சோலார் எனர்ஜி விஷயத்தில்கூட ஏதோ கோளாறு ஏற்பட்டிருக்கிறது. நாம் அதை டீகோட் செய்தாகணும். வேறு வழியில்லை."

"நான் ரெடி."

இந்த உரையாடல் இவ்வாறு நடந்துகொண்டிருந்த போது, கீழே யஷ்வந்த் கட்டிடத்திற்கு வெளியே நடந்து போய்க் கொண்டிருந்தான். அப்பொழுதுதான் அவனுக்கு அந்த யோசனை வந்தது. சட்டென்று நின்றான். மேற்கொண்டு தாமதிக்காமல் திரும்பி வந்தான். அவன் மனதிலிருந்த பரபரப்பு நடையின் வேகத்தில் தெரிந்தது.

மேல் அறையில் வாயுபுத்ரன் அந்தக் காகிதத்தில் இருந்ததை மறுபடியும் கம்ப்யூட்டரில் ஃபீட் செய்து கொண்டிருந்தான்.

"எவ்வளவு முறைதான் ஃபீட் செய்வாய்? இனி தொடங்கு உன் மேதாவித்தனத்தை" என்றது கம்ப்யூட்டர்.

வாயுபுத்ரன் முயற்சியைத் தொடங்கப் போனான். சரியாய் அதே நேரத்தில் அனூஹ்யா அந்த அறைக்குள் நுழைந்தாள். அந்த நேரத்தில் அவள் அங்கு வந்தது அவனுக்கு வியப்பாக இருந்தது. தன் காதல் விஷயம் அவளுக்குத் தெரிந்திருந்தும்,

எந்த முடிவுமே அவள் தெரிவிக்காததால், அவனே அவளோடு நெருக்கத்தைத் தவிர்த்துக் கொண்டிருந்தான். ஆனால் கண்களில் மட்டும் காதல் உணர்வு அப்படியே இருந்தது.

எப்படியோ அறைக்குள் வந்துவிட்டாளே தவிர இந்த விஷயத்தை எப்படி ஆரம்பிப்பது என்றுதான் அவளுக்குப் புரியவில்லை. பெண்களிடமிருந்து நாணத்தை இன்னும் பறித்துக்கொண்டு விடாமலிருப்பது, ஆண்களுக்கு கடவுள் தந்த வரம்.

"நான்... நா...ன்" என்று பாதியிலேயே நிறுத்திவிட்டாள்.

அவன் அவளைப் பார்த்தான். செம்மை எறிய அவள் முகத்தைப் பார்க்கும் போதே அவனுக்கு விஷயம் புரிந்து விட்டது. ஆனாலும் புரியாதவனைப்போல் அருகில் வந்து "நீங்க... நீங்க?" என்றான். அவளுக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை.

"பல் வலியால் அவதிப் படறீங்களா?"

அவள் புரியாமல் நிமிர்ந்தாள். அவன் கண்களில் தெரிந்த சிரிப்பைப் பார்த்ததும் அவளுக்குக் கோபம் வந்துவிட்டது.

அதைப் பார்த்ததும், "சாரி, நீங்க ஏதோ சொல்ல வந்தீங்க. சொல்லுங்க" என்றான்.

"ஒன்றுமில்லை" அவள் வேகமாக வெளியே போகத் திரும்பினாள்.

"காதலைப் பற்றிச் சொல்ல வந்தீங்க இல்லையா."

கதவைத் தாண்டப் போனபொழுது பின்னாலிருந்து கேட்ட குரலுக்கு நின்றுவிட்டாள். மெல்லத் திரும்பிப் பார்த் தாள். ஆனால் பதில் பேசவில்லை. வாயுபுத்ரன் சிரித்தான்.

"நீங்க வாய்விட்டு சொல்வதற்கு சங்கடப் படுறீங்க போலிருக்கு. இதோ, இந்த கம்ப்யூட்டரில் நீங்க சொல்ல நினைத்ததை டைப் செய்யுங்கள். நான் கண்களை மூடிக் கொள்கிறேன்" என்றான். மூடியிருந்த கண்களுக்குப் பின்னால் இருந்த குறுப்பை அவள் கவனிக்கவில்லை. இவ்வளவாவது தனக்கு சலுகை தந்தானே என்று மனதிற்குள் அவனுக்கு நன்றி சொல்லிக்கொண்டே டைப் செய்ய ஆரம்பித்தாள்... ஆங்கிலத்தில்.

"ரொம்ப நாட்களுக்கு முன்னாடியே உங்களுக்கு என் கடந்த காலத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன். கொஞ்சம் கொஞ்சமாக அதை மறந்துவிட முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். உங்களை எனக்குப் பிடித் திருக்கிறது. அது நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே போகிறது. நாம் திருமணம் செய்துகொள்வோம். ஒரு முறை திருமணமாகிவிட்டால் என் மனதில் இருக்கும் போராட்டம் குறைந்துவிடும் என்று நினைக்கிறேன். இல்லாவிட்டால், நானே முற்றிலும் மாறி உங்களிடம் வரவேண்டும் என்றால், மேலும் சில நாட்கள் காத்திருக்க வேண்டியிருக்கும். என்னைப் புரிந்து கொள்வீர்கள் இல்லையா? எப்படியும் நம் பயணம் இல்லை என்றாகிவிட்டது. அதனால் கொஞ்சநாள் பொறுப்பது நல்லதுதானே? என்னால் எந்த முடிவுக்கும் வர முடியவில்லை.

உங்கள் அனூஹ்யா

டைப் செய்து முடித்ததும் அவள் ஃபைனல் டிஸ்கார்டு பட்டனை அழுத்தினாள். உள்ளேயிருந்து பிரிண்ட் செய்யப் பட்ட பேப்பர் வெளியே வந்ததும், அப்பொழுதுதான் கண் களைத் திறந்து அதைப் படித்த வாயுபுத்திரன் "யாஹூ" என்று கத்தியதும் ஒரே சமயத்தில் நடந்துவிட்டன. அவன் அந்த

இடத்திலேயே டான்ஸ் ஆடத் தொடங்கிவிட்டான். அதில் அப்படி டான்ஸ் ஆடும் அளவுக்கு என்ன இருக்கிறது என்று புரியாமல் பேப்பரைப் பார்த்தாள். அவன் என்ன ட்ரிக் செய் தானோ தெரியாது. அவள் டைப் செய்தது வராமல் வேறு விதமாக பிரிண்ட் ஆகியிருந்தது.

I Love You Vayuputra, I love you, I want to kiss you.

-Yours Anoohya

என்று இருந்தது. ரோஷத்தால் இதழ்கள் துடிக்க, "நான் டைப் செய்தது இது இல்லை" என்று சொல்லப் போனாள். அதற்குள் அவன் சந்தோஷம் தாங்க முடியாமல் இதயத்தைப் பிடித்துக் கொண்டே தரையில் சாய்ந்தான். மற்றொரு முறை ஏமாந்த அனூஹ்யா கலவரமடைந்தவளாய் அவனை நோக்கிக் குனிந்தாள். இமைக்கும் நேரத்தில் அவன் கைகள் மிஷினைக் காட்டிலும் வேகமாய் அவள் தோள்களைச் சுற்றிப் பிணைத்து அருகில் இழுத்து முத்தமிட்டதும் நிகழ்ந்து முடிந்து விட்டன. அவள் திமிறியபோது அந்தப் பிடி மேலும் இறுகியது.

"நான் அது இல்லை" என்று சொல்லப் போனாள்.

அவள் காதருகில் குனிந்து அவன் மெல்லிய குரலில் சொன்னான். "காதலை வெளிப்படுத்த மொழி தேவையில்லை அனுஹ்யா, கண்பார்வையே போதும். சொல்லு, என்னைக் கண்டால் பிடிக்கும் என்றுதானே எழுதியிருந்தாய்."

அவள் பதில் சொல்லவில்லை. அவள் மௌனத்தைச் சம்மதமாக எடுத்துக்கொண்டு, அவன் அவள் கன்னத்தில் படிந்திருந்த கேசக்குழல்களை மெல்ல ஒதுக்கப் போன பொழுது, கதவின் மீது டக் டக் என்று தட்டிய சத்தமும், தொடர்ந்து "எக்ஸ்க்யூஸ் மீ" என்ற குரலும் கேட்டது. அவன் சட்டென்று அவளை விட்டு விலகினான்.

திறந்திருந்த கதவையோ, அங்கு நின்றிருந்த ஆளையோ பார்க்காமல் அனுஹ்யா காற்றைக் காட்டிலும் வேகமாக கம்ப்யூட்டருக்குப் பின்னால் ஓட்டமெடுத்தாள். அவள் முகம் வெட்கத்தாலும், அவமானத்தாலும் சிவந்திருந்தது. "சீ... என்ன இது? ஏன் இப்படி நடந்தது?" என்று நினைத்துக்கொண்டாள். அவன் மீது அளவுக் கடந்த கோபம் வந்தது. நடந்ததை நினைத்தபோது கண்களில் நீர் வழிந்தது.

வாசலில் நின்று கொண்டிருந்த யஷ்வந்த், உள்ளே வராமலேயே "எனக்கு ஒரு யோசனை வந்திருக்கு" என்றான். அதற்குள் நெஞ்சுவலி என்ற சாக்கில் தரையில் படுத்திருந்த வாயுபுத்ரன் எழுந்துகொண்டான்.

"அவள் என்னுடைய ஃபியான்சி... என் வருங்கால மனைவி" என்று கம்ப்யூட்டர் பக்கமாக சுட்டிக் காட்டினான். யஷ்வந்த் அந்தப் பக்கம் பார்க்காமலேயே "நீங்க டீகோட் செய்ய வேண்டிய குறிப்பில் சோலார் எனர்ஜி, குண்டு வெடித்தல், எலீன்ஸ் போன்ற வார்த்தைகள் இருக்குமோ என்று நான் சந்தேகப்படுகிறேன். டீகோட் செய்வதற்கு ஏதாவது க்ளூ தேவைன்னு சொன்னீங்க இல்லையா? இது பயன்படுமோ என்னவோ? முயன்று பாருங்கள். இது என்னுடைய யோசனை மட்டும்தான்'' என்று சொல்லிவிட்டு திரும்பியவன். கதவுக்கு அருகில் இன்னொரு தடவை நின்று "அவள் உங்களுடைய கர்ள் ஃபிரண்டாக இருக்கலாம். ஃபியான்சியாக இருக்கலாம். அல்லது சொந்த மனைவியாகவே இருக்கலாம். ஆனால் உலகம் முழுவதும் நீங்க பண்ணப் போகும் டீகோட்டை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. சம்பளம் வாங்கற நேரத்தை ரொமான்சுக்கு செலவிடுவது நியாயத்துக்கு விரோதமானது. நீங்க யாருக்குமே பதில் சொல்ல வேண்டிய தேவையில்லாமல் இருக்கலாம். ஆனால் மனதிற்கு மட்டும் பதில் சொல்லாமல் இருக்க முடியாது" என்று சொல்லி

விட்டு, அங்கிருந்து போய்விட்டான்.

அவன் அவளைப் பின் தொடர்ந்தபடி "ஐ யார் சாரி அனூஹ்யா. இந்த மாதிரி நடக்கும் என்று நான் எதிர்பார்க்க வில்லை. அவன் உன்னைப் பார்க்கவில்லை. பார்த்தாலும் தவறென்ன? நாம்தான் விரைவிலேயே கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போறோமே?" என்றான்.

"முதலில் உங்களிடம் ஒப்படைத்திருக்கும் வேலையைப் பாருங்கள். அந்த ஆள் சொன்னாற்போல் நம் மனசுக்கு நாம் பதில் சொல்லியாக வேண்டும்'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து போய்விட்டாள். வாயுபுத்ரன் உள்ளங்கையை மடக்கி ஓங்கிக் குத்திக் கொண்டான்.

சரியாக ஐந்து நிமிஷத்தில் அவன் உண்மையான சயின்டிஸ்டாக மாறிவிட்டான். வெளி உலகத்தையே மறந்து விட்டான்.

"இது நமக்கு ஒரு சவால். இதை நாம் எப்படியாவது சாதிக்கணும்." என்றான் கம்ப்யூட்டரிடம்.

"கண்டிப்பாக. உன்னுடையதுதான் தாமதம். தொடங்கு." பதிலளித்தது கம்ப்யூட்டர்.

வெள்ளை சானலின் மூலம் முயற்சி செய்யத் தொடங் கினான். யஷ்வந்தின் மேல் கோபம் வந்தாலும் அவன் சொன்னதை மறக்கவில்லை. ஏதாவது ஸ்ட்ரோக்கிற்கு ஒத்திருக் கிறதா என்று பார்த்தான். இரண்டு நிமிஷங்களில் அந்த குறிப்பை டீகோட் செய்தது.

வாயுபுத்ரனுக்கு மூளை குழம்பியது. நீல சானலைப் பயன்படுத்தினான். சுமார் நான்கு மணிநேரம் முயன்றும் எந்த பலனும் இல்லை. பிறகு பச்சையை முயன்றான். உடனே பதில்

வந்தது. ஆனால் அது குழப்பத்தை மேலும் அதிகரித்தது. கம்ப்யூட்டரைத் திட்டித் தீர்த்தான்.

"எனக்குத் தெரியாத மொழியைக் கொடுத்து தொல்லை செய்தால் நான் என்ன செய்வேன்?" என்றது கம்ப்யூட்டர்.

இனி இந்த வழி பயன்படாது என்று கருப்பு சானலைப் பயன்படுத்தினான். ரொம்ப நேரம் முயன்றான். டீகோட் ஆக வில்லை. நேரத்தைப் பார்த்தான். கைகடியாரம் பத்தரை என்று காட்டியது. திடுக்கிட்டான்.

கடியாரம் பின்னோக்கி ஓடிக்கொண்டிருந்தது. பதினோரு மணிக்கு வேலையைத் தொடங்கினால் பத்தரை எப்படி இருக்க முடியும் என்று நினைத்து, ஜன்னல் வழியாக வெளியே எட்டிப் பார்த்த அவனை இருட்டானது பழித்தது. அதாவது இரவு பத்தரை!

மொத்தம் பன்னிரெண்டு மணி நேரமாக முயன்று கொண்டிருக்கிறான். அவன் அதைப் பொருட்படுத்தாமல் மறுபடியும் வேலையில் மூழ்கிவிட்டான்.

பசி, தூக்கம் எதுவும் தெரியவில்லை. யஷ்வந்தின் வார்த் தைகளே திரும்பத் திரும்ப நினைவுக்கு வந்தன. உண்டு இல்லை என்று தெரிந்து கொண்டுவிட வேண்டும் என்ற வேகம் பிறந்தது.

சரியாக மூன்றரை மணிக்கு அவன் அதைச்சாதித்து விட்டான். முதலில் 'கங்கிராஜுலேஷன்ஸ்' என்ற எழுத்துக் கள் வந்தன. பிறகு அண்டவெளியிலிருந்து வந்த அந்தக் குறிப்பின் உண்மையான பொருளை மானுட மொழியில் மொழி பெயர்த்துச் சொல்லியது.

கங்கிராஜுலேஷன்ஸ் என்று தென்பட்டதுமே உலகத்தில்

யாருமே சாதித்திராத ஒன்றைச் சாதித்துவிட்டதற்கு அவன் சின்ன பையனைப் போல் குதித்துக் கும்மாளமிட்டான். பிறகு தொடர்ந்து வந்த ஒவ்வொரு வாக்கியத்தையும் படித்து முடித்த தும், அவன் இதழ்களிலிருந்த சிரிப்பு மாயமாயிற்று.

தன் கண்களையே நம்ப முடியாதவனாக அந்த காகிதத் தைப் பார்த்தான். கம்ப்யூட்டரிலிருந்து அந்தக் காகிதத்தைப் பெற்றுக்கொண்ட அவன் கைகள் முதல் முறையாக நடுங்கின.

4

நிகில் காதலித்த பெண்ணின் டெயர் ஸ்ரீஜா. அவன் துருவ எல்லைக்குப் போவதற்கு முன்னால் சுவிட்சர்லாந்தில் ஒருவார காலம் இருந்தான். அவனுடைய மாமா சுவிட்சர் லாந்த் பாங்கில் ஃபைனான்ஸ் மேனேஜர். ஸ்ரீஜா அவருடைய மகள்.

ரத்த சம்பந்தமுள்ள நெருங்கியவர்கள் மணந்து கொள்வ தால் ஏற்படும் தீய விளைவுகளைப் பற்றி எல்லோருக்குமே தெரியும். நவீன விஞ்ஞானமானது இவ்வளவு முன்னேற்ற மடைந்துள்ள இந்தக் காலத்தில் மாமன் மகளைப் பண்ணிக் கொள்வதாக யாராவது சொன்னால்கூடச் சிரிப்பார்கள். ஆனால் விஞ்ஞானத்தைக் காட்டிலும், வேதாந்தத்தைக் காட்டி லும், காதல் உயர்ந்தது. அதற்கு முன்னால் எந்த தர்க்கமும் செல்லாது.

பலன்?

அவ்விருவரும் தம்மை மறந்த காதலில் திளைத்தார்கள். காலமானது காத்துக் கிடப்பவர்களுக்கு மெள்ளமாக நகருவது போல் தோன்றும். சந்தோஷமாக இருப்பவர்களுக்கு வேகமாக போகும். பயந்தவர்களுக்கு நின்றுவிடும்.

காதலில் விழுந்தவர்கள் தம்மையே மறந்து விடுவார்கள்.

ஒரு வாரம் ஓடி மறைந்ததே தெரியவில்லை.

"திரும்பி வந்ததுமே நம் திருமணத்தைப் பற்றிப் பெரியவர் களுடன் பேசுகிறேன்" என்றான் நிகில், அவளை அருகில் இழுத்து அணைத்துக் கொண்டு.

ஸ்ரீஜாவின் விழிகளில் நீர் நிறைந்தது. அவள் துளசி மாடத்தைச் சுற்றும் பெண் இல்லையென்றாலும், வழிவழியாக வந்த இந்து தர்மத்தை நம்புகிறவள். கொஞ்சம் பயந்த சுபாவம். "நெருங்கிய உறவில் மாப்பிள்ளை என்றால் அப்பா என்ன சொல்லுவாரோ?" என்றாள்.

நிகில் சிரித்தான். "நம் பேச்சை யாராவது கேட்டால் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இருக்க வேண்டிய ஆள் என்று கேலி செய்வார்கள் ஸ்ரீஜா... நடந்து முடிந்து போனதை நம்மால் எதுவும் செய்ய முடியாது. நான் துருவ எல்லையி லிருந்து திரும்பி வந்ததுமே நாம் திருமணம் செய்து கொள் வோம். இதற்கு முன்னால் அறிமுகம்கூட இல்லாத நாம் இப்பொழுது இவ்வளவு நெருக்கமாகி விட்டோம் என்றால், எனக்குத் தோன்றுகிறது. காதல் என்பது ஒரு விபத்து இல்லை. அது ஒரு சம்பவம். நம் திருமணத்தை யாருமே தடுத்து நிறுத்தி விட முடியாது."

அவள் கண்ணீருடன் பிரியாவிடை கொடுத்தாள். தன் கையால் வரைந்த சிறிய ஓவியத்தை தன் நினைவாக பரிசளித் தாள்.

"மலைச் சிகரத்தில் சூரியனின் கிரணங்கள் பிரதிபலிக்கும் பொழுது" என்று தொடங்கும் சுவிட்சர்லாந்து நாட்டுத் தேசிய கீதம். சுமார் ஐநூறு ஆண்டுகளாய் எந்த யுத்தத்தாலும் பாதிக்கப்படாத அதிர்ஷ்ட தேசம் அது. அதனால் மேற்கில்

உள்ள பிரான்ஸ். தெற்கே உள்ள இத்தாலி, இவ்விரண்டின் கலாச்சாரமும் இந்நாட்டில் வெள்ளமாக பெருக்கெடுத்து ஆல்ப்ஸ் மலைத் தொடரில் உதிக்கும் சூரிய ஒளியோடு போட்டியிட்டன.

அப்படிப்பட்ட சூழ்நிலையில் வளர்ந்தும் அந்தப் பெண் அதற்கு அடிமையாகவில்லை என்றால், அதற்கு ரிஷிகள் பிறந்த நாட்டின் ரத்தம் தான் காரணமாக இருக்கலாம். அல்லது தாய் தந்தையர் வளர்த்த விதமாவது காரணமாக இருக்கலாம். அப்படிப்பட்ட பண்பு இருப்பதால்தான் அது விண்வெளி வீரனையும் நெகிழ்த்தியிருக்கிறது.

துருவ எல்லையிலிருந்து திரும்பி வந்ததும், அவள் பெற்றோருடன் பேசி, அவளை மணந்துகொள்ள எண்ணி யிருந்தான் நிகில். அதற்குள் அவசரமாக வரச் சொன்தால் சயின்ஸ் சிடிக்கு வர வேண்டியிருந்தது. இது நடந்து இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன.

* * *

யஷ்வந்துடன் சயின்ஸ் சிடிக்கு வந்த பிறகு நிகிலுக்கு வேலை எதுவும் இல்லாமல் போய்விட்டது. விண்வெளியி லிருந்து வந்த குறிப்பு சம்பந்தமாக எந்த ஆர்வமும் அவனுக்கு இல்லை. அது அவன் சம்பந்தப்பட்ட பிரிவு இல்லை. அந்த குறிப்புகளை கம்ப்யூட்டர் சார்ந்த விஞ்ஞானிகள் மொழி பெயர்ப்பதில் ஆழ்ந்திருக்கிறார்கள் என்று மட்டும் தெரியும். யஷ்வந்துக்கு அங்கே வேலை முடிந்ததுமே, லீவு எடுத்துக் கொண்டு சுவிட்சர்லாந்துக்குப் போக வேண்டுமென்ற துடிப்பில் இருந்தான் அவன்.

பிரதம அதிகாரியுடன் யஷ்வந்த் பேசிக்கொண்டு இருக்கும் போது நிகில் ஏரோநாட்டிக் பிரிவை நோக்கிச்

சென்றான். அங்கிருந்த எல்லோரையுமே அவனுக்குத் தெரியும்.

யார்டிற்குள் நுழைந்த அவனைப் பார்த்து, அங்கிருந் தவன் வணக்கம் தெரிவித்தான். அவன் பெயர் ராய்.

"வர்றீங்களா சார்?"

"எங்கே?"

"புது எஸ்.பி.எஸ். வந்திருக்கிறது. பரிசோதனைக்காகப் போய்க் கொண்டிருக்கிறோம்."

நிகில் உற்சாகத்துடன் தலையை அசைத்தான். இன்னொரு பைலட்டுடன் சேர்ந்து அவர்கள் அந்த இடத்திற்குப் போனார் கள். பெரிய கழுகின் உருவத்தில் இருந்தது எஸ்.பி.எஸ். அதன் மேல் 'ஜெய் பாரத்' என்ற எழுத்துக்கள் மின்னின. விண்வெளி யில் ஒரு கிரகத்தைப் போல் சுற்றி வரு வதற்குத் தயாராக நின்றிருந்தது அது.

"திரும்பி வருவதற்கு எவ்வளவு நேரமாகும்?"

"ஒரு மணி... இரண்டு மணி நேரம்."

யஷ்வந்திற்கு அதைப் பற்றித் தகவல் சொல்லிவிட்டு, அவன் அவர்களோடு சேர்ந்து அதற்குள் நுழைந்தான். அதற் குள் ராய் மற்ற ஃபார்மாலிடீஸை முடித்தான்.

சோலார் பவர் சேட்டிலைட் (எஸ்.பி.எஸ்.)

நிகில் ஏறிய சேட்டிலைட்டானது ஒரு கிகாவாட் (ஒரு கிகாவாட் என்பது ஒரு பில்லியன் வாட் கரெண்ட் ஆகும்) சக்தி கொண்டது. பூமியிலிருந்து புறப்பட்ட இரண்டே வினாடிகளில் அது மேங்களைத் தாண்டி மேலே கிளம்பியது.

"இன்னும் கொஞ்ச நாளில், சர்வ சாதாரணமாக, நான் வியாழன் கிரகத்துக்குப் போகிறேன், வரீங்களா? என்று

கேட்கும் நாள் வந்தாலும் வரலாம்"என்றான் நிகில்.

"அவ்வளவு சீக்கிரமாக வரும் என்று நான் நினைக்க வில்லை."

"நூறு ஆண்டுகளுக்கு முன்னால் ராக்கெட்டில் மனிதனை அனுப்பணும் என்றால் ரொம்ப முன் ஏற்பாடுகள் எல்லாம் இருக்குமாம். News - Ship (*Natural Environment Within Ship*) வந்த பிறகு, நாம் எல்லோரும் ஐந்தே நிமிஷங்களில் தயாராகிக் கிளம்புகிறோம் இல்லையா? அதுபோல்தான் இன்னும் கொஞ்ச நாள் ஆனதும், புதன், வியாழன் கிரகங்களுக்கு போய் வருவார்கள்."

"என்ன இருக்கு அங்கே, சாம்பலைத் தவிர" என்றான் ராய்.

சாம்பல் இல்லை, ஹைட்ரஜனைத் தவிர வேறு என்ன இருக்கு என்று சொல்லணும்" என்றான் நிகில்.

அவர்கள் பயணிக்கும் வாகனம் வானியல் சீதோஷ்ண மண்டலத்தைத் தாண்டி மேலே போய்க் கொண்டிருந்தது. மெல்ல மெல்ல அவர்களுடைய உடல்கள் தம் எடையை இழக்கத் தொடங்கின.

இரண்டே நிமிடங்களில் அவர்களின் வாகனம் முற்றிலும் எடை குறைந்து இலேசாகிவிட்டது. ராய் News- s என்ற பட்டனை அழுத்தினான். வாகனத்திற்குள் சாதாரணச் சூழ்நிலை சூழ்ந்துகொண்டது. இனி ஆக்ஸிஜன் மாஸ்க்கூட அவசியம் இல்லை. வாகனம் இலேசாகிவிட்டதுபோதிலும் உள்ளே இருப்பவர்களின் உடல் சாதாரண நிலையிலேயே இருந்தது. இந்தச் சாதாரணச் சூழ்நிலையைத்தான் News-s என்பார்கள்.

எஸ்.பி.எஸ். மேலும் வேகத்தை மேற்கொண்டது. ராய் கண்ட்ரோல் ரூமுக்கு "எல்லாம் சரியாக இருக்கிறது" என்று தகவல் சொல்லிக் கொண்டிருந்தான்.

நிகில் இருக்கையில் பின்னால் சாய்ந்துகொண்டு செவிகளில் போனை இணைத்துக்கொண்டு, வாத்திய இசையைக் கேட்டுக் கொண்டிருந்தான். தொலைவிலிருந்து பூமி ஆரஞ்சுப்பழ வர்ணத்தில் தென்பட்டுக் கொண்டிருந்தது. ஒரு பக்கத்தில் சூரியனும் மறுபக்கத்தில் சந்திரனும் ஒரே கோட்டில் தென்பட்டுக் கொண்டிருந்தன. ஆனால் அழகான ஓவியத்தின் மீது அங்காங்கே மசிக்கறை பட்டாற்போல் அங்கும் இங்கும் சில பொருட்கள் சுற்றிக் கொண்டிருந்தன.

பூமியின் சுற்றுச் சூழ்நிலையைப் பாழடித்தாற்போல் பூமியைச் சுற்றிலுமிருந்த சூனிய வெளியைக்கூட மனிதர்கள் பாழடிக்கத் தொடங்கிவிட்டார்கள். தெருக்களில் குப்பை கூளங்கள் இருப்பது போலவே விண்வெளி எல்லையிலும் பல்வேறுபட்ட பொருட்கள் சுற்றிக்கொண்டிருந்தன. அலுமினியம், ஸ்டீல் துண்டுகள், வயதாகிவிட்ட சேட்டிலைட் உபகரணங்கள் எல்லாம் பூமியைச் சுற்றிப் பிரதட்சணம் வந்து கொண்டிருந்தன.

அவற்றைத் துளைத்துக்கொண்டு அவர்களின் வாகனம் போய்க் கொண்டிருந்தது. அது சென்று கொண்டிருக்கும் வேகத்திற்கு வழியில் ஏதேனும் தடங்கல் ஏற்பட்டாலும் வெடித்து விடக்கூடும்தான். ஆனால் அதற்காக தனிப்பட்ட பாதுகாப்பு அளிக்கப்பட்டிருந்ததால் அதைப்பற்றிய கவலை இல்லாமல் இருந்தது.

அப்பொழுது தொலைவில் பறவையின் உருவத்தில் ஏதோ பொருள் தென்பட்டது. சற்று அருகில் வந்தபோது முறுக்கிக் கொண்டு படுத்திருக்கும் ஒரு சிசுவின் உருவத்தில்

இருந்தது. அது என்னவென்று முதலில் புரியவில்லை அவனுக்கு.

அவர்கள் சென்று கொண்டிருந்த எஸ்.பி.எஸ். மணிக்கு சுமார் முப்பதாயிரம் மைல் வேகத்தில் சென்று கொண்டிருந்தது. ஒரு நிமிஷத்திற்கு பிறகு அந்த உருவம் கவிழ்ந்த ஒரு தட்டு போல் தென்பட்டது. மேலும் அரை நிமிஷத்திற்குப் பிறகு மேலும் துல்லியமாக...

நிகிலின் மேனி சிலிர்த்தது. கண்களை அகல விரித்து அதையே பார்த்துக் கொண்டிருந்தான்.

யு.எஸ்.ஓ.!

ப்ளையிங் சாசர்!

பறக்கும் தட்டு!

அதுவரை புத்தகங்களில் மட்டுமே படித்திருக்கிறான். இப்பொழுது கண்கூடாகப் பார்க்கிறான். யோசனையில் ஆழ்ந்தபடியே உணர்ச்சி வசப்பட்டுத் திரும்பிப் பார்த்தான். இரு பைலட்டுகளையும் காணவில்லை. உள்ளே போய் விட்டார்கள் போலும்.

அவன் காதுகளில் மாட்டியிருந்த கருவியை எடுக்க வேண்டும் என்ற எண்ணம் கூடத் தோன்றாமல் அந்தப் பொருள் தமக்கு எவ்வளவு தொலைவில் இருக்கிறது என்று கணக்கிடத் தொடங்கினான்.

பூமியிலிருந்து ஒரு நட்சத்திரம் எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்று கணக்கிட ஒரு முறை உண்டு. சுழலும் பூமியையும் மாறபடுகிற கோணத்தையும் பொறுத்து அந்த நட்சத்திரம் எவ்வளவு தூரத்தில் இருக்கிறதென்று தெரிந்து கொள்ளலாம். அதேபோல்தான் இருக்கும் வாகனத்தின்

சுழற்சியை ஆதாரமாக வைத்துக்கொண்டு, அந்தப் பொருள் சம்பந்தப்பட்ட கோணத்தை வைத்து (அந்தப் பொருள் சுழலாமல் நிலைத்து நின்றிருக்கும் என்ற பட்சத்தில்) ஊகித்துக் கணக்கிட்டான். அந்த தூரம் சுமார் இருபது முப்பதாயிரம் மைல்கள் இருக்கலாம் என்று தெரிய வந்தது. இடையே காற்றோ தூசியோ இல்லாததால் ரொம்பத் தெளிவாக கண்ணுக்குத் தென்பட்டது.

அதை நோக்கிப் பயணம் செய்துகொண்டு போய்ச் சேரணும் என்றால் ஒரு மணி நேரம் பிடிக்கும். ஆனால் அங்கிருந்து திரும்பிப் பூமியை நோக்கிப் போவதற்கு போதுமான மின் சக்தி இல்லை. ஒரு பக்கம் இயலாமையும், இன்னொரு பக்கம் பரபரப்பும் அவனை அலைக்கழித்துக் கொண்டிருந்தன. கிரகாந்தர வாசிகளின் வாகனத்தைப் பார்த்த முதல் மனிதன் அவன்.

அது இப்பொழுது ரொம்பத் தெளிவாகத் தென்படத் தொடங்கியது. அதனை நெருங்க முடிந்தால்? இன்னும் அருகில் சென்று புகைப்படம் எடுக்க முடிந்தால்? அதில் ஒருக்கால் கிரகாந்தரவாசிகள் யாராவது இருந்தால், அவர்களோடு பேசி தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள முடிந்தால்?

அவன் தன்னையே கடிந்துகொண்டான். மின்சக்தி இல்லாத ஒரே காரணத்தால் மனித சமுதாயத்திற்குப் பயன் படக்கூடிய காரியத்தை அவனால் செய்ய முடியவில்லை.

சரி, இவர்கள் எங்கே போய் விட்டார்கள்? இந்த அதிசயக் காட்சியைக் காணாமல் உள்ளே போய் என்னதான் செய்கிறார்கள்?

அவன் இண்டர்காமில் அவர்களை அழைக்க முயன்றான். அரை நிமிஷமாகியும் அவர்களிடமிருந்து எந்தப் பதிலும்

வரவில்லை. அவன் ககாவாட் இன்டிகேடரை நோக்கினான். இன்னும் அரை நிமிஷத்திற்கு மேல் தாமதிக்க முடியாது. எரி பொருள் கரைந்துகொண்டே வருகிறது.

இனி அந்தப் பறக்கும் தட்டை மறந்துவிட வேண்டியது தான் என்று நினைத்தவனாக அவன் உள்ளே போய் பூமி யோடு தொடர்பு கொள்ள முயற்சி செய்தான். குறைந்த பட்சம் டெலிவிஷன் மூலமாவது பூமியில் அந்தப் படத்தை அனுப்பினால்தான் அவன் வார்த்தைகளை நம்புவார்கள். இல்லாவிட்டால் அவன் வார்த்தையை ஒருவரும் நம்பப் போவ தில்லை.

அவன் செவிகளில் பொருத்தியிருந்த போனை எடுத்து விட்டுப் பூமிக்குச்செய்தியை ஒலிபரப்பும் சாதனத்தை எடுத்துச் செவிகளில் பொருத்திக் கொண்டான். இதை மாற்றி அதைப் பொருத்திக்கொண்ட அந்த இடைவெளி நேரத்தில் தலை சுற்றுவது போலிருந்தது. அதைப் பற்றி அவன் அவ்வளவாக பொருட்படுத்தவில்லை.

ஸ்விட்சைப் போட்டுவிட்டு, "ஹலோ... எஸ்.பி.எஸ். 4 ஸ்பீக்கிங். நிகில் ஹியர், ஹலோ..." என்றான்.

பூமியிலிருந்து எந்த பதிலும் வரவில்லை. அவன் சோர்ந்து போனான்.

"ஹலோ... நிகில் ஹியர்... காண்டாக்ட்... எர்த்... இந்தியா... சயின்ஸ் சிடி."

பதில் இல்லை. எங்கேயோ குறை ஏற்பட்டிருக்கிறது.

மேலும் டிவிக்காக முயற்சி செய்வதை விட்டுவிட்டு தானே சுயமாக போட்டோக்களை எடுக்கத் தொடங்கினான்.

ககாவாட் இன்டிகேட்டரை நோக்கித் திரும்பினான்.

இன்னும் மூன்று நிமிடங்களில் வாகனம் பூமியின் எல்லைக்குள் சேராவிட்டால் அவ்வளவுதான். இந்த வாகனத்துடன் தாமும் பூமியைச் சுற்றி பிரதட்சணம் வந்து கொண்டிருக்க வேண்டியதுதான்.

அவன் தாமதம் செய்ய விரும்பவில்லை. காதுகளில் பொருத்திக் கொண்டிருந்த கருவியை எடுத்துவிட்டு கேமிரா வழியாகப் பார்த்தான். பறந்துகொண்டிருந்த அந்தத் தட்டு மேலும் நெருங்கி வந்தாற்போல் இருந்தது.

ஆனால் அதற்குள் மறுபடியும் தலைசுற்றுவது போலிருந்தது அவனுக்கு. தன் உயிரைத் தான் காப்பாற்றிக் கொள்ளும் வழி அந்தச் சமயத்தில் சட்டென்று தோன்றியது. ஒருக்கால் இதைத்தான் "இம்பல்ஸ்" என்பார்கள் போலும். அவன் தன்னை அறியாமல் காதுகளில் போனை பொருத்திக் கொண்டான்.

ககாவாட் மீட்டரானது இன்னும் இரண்டு நிமிஷங்கள் இருப்பதாக எச்சரித்தது.

அவன் கேமிராவை கிளிக் பண்ணப் போனான்.

"என்ன இது? பூமியைப் போட்டோ எடுக்கிறீங்களே?" என்ற குரல் பின்னாலிருந்து கேட்டது. பின்னால் ராய் நின்று கொண்டிருந்தான்.

நிகில் குழப்பத்துடன் அவனைப் பார்த்தான். "பூமியா? அது ஃபிளயிங் சாசர் ராய்! ரொம்ப நேரமாக உங்களுக்காக காத்துக் கொண்டிருந்தேன். உள்ளே என்ன செய்துகிட்டு இருந்தீங்க? அதோ, அதைப் பாருங்கள்... பறக்கும் தட்டு! க்விக்... போட்டோ எடுங்கள்" என்றான் பரபரப்புடன்.

அதற்குள் பின்னாலிருந்து அடுத்த பைலட்டும் வந்தான். அவன் விண்வெளி சூட் அணிந்திருந்தான்.

"என்ன சார்? நாம் இன்னும் இங்கேயே சுற்றிக் கொண்டிருக்கிறோம். மை காட்! இன்னும் இரண்டு நிமிடம் தாமதித்தாலும் ஆபத்து" என்று தன் இருக்கையில் உட்கார்ந்து கொண்டு எஸ்.பி.எஸ்.ஸின் வேகத்தை அதிகரித்தான். ஆனால் அது பூமியை நோக்கி அல்லாமல் அந்தப் பறக்கும் தட்டை நோக்கிச் செல்லத் தொடங்கியது.

நிகில் கலவரத்துடன் "ஸ்டாப்... ஸ்டாப்'' என்று கத்தினான்.

ககாவாட் இன்னும் ஒரு நிமிஷத்தில் பூமியின் எல்லைக் குள் நுழையாவிட்டால் எரிபொருள் தீர்ந்துவிடும் என்று எச்சரித்துக் கொண்டிருந்தது.

ராய் அவனைப் பார்த்து "என்ன ஆகிவிட்டது?'' என்றான்.

"நாம் போக வேண்டியது அந்தப் பக்கம் இல்லை. இந்தப் பக்கம்" என்றான்.

ராய் அந்த கோளத்தைப் பார்த்துவிட்டு "என்ன சார் இது? சூரியனை நோக்கிப் போகணும் என்று சொல்றீங்களே? உங்களுக்கு புத்தி ஏதாவது பிசகிவிட்டதா?" என்றான்.

அவ்விருவரின் நடவடிக்கைகளை பார்த்தபோது நிகிலுக்கு உண்மையிலேயே மூளை குழம்புவது போல் இருந்தது. எஸ்.பி.எஸ். மட்டும் அந்தப் பறக்கும் தட்டை நோக்கி வேகமாக பூமியைவிட்டு தொலை தூரத்திற்குப் போய்க் கொண்டிருந்தது.

ககாவாட் இன்டிகேடர் இன்னும் நாற்பத்தைந்து வினாடி கள் மட்டுமே இருப்பதாக காட்டியது. சிவப்பு விளக்கு எரிந்து எரிந்து அணைந்து கொண்டிருந்தது. நிகிலுக்கு என்ன செய்வ

தென்று புரியவில்லை.

அவன் சரேலென்று முன்னுக்குப் போய் ராய் பக்கத்தி லிருந்து கையை நீட்டி வாகனத்தின் திசையை திருப்பப் போனான்.

ராய் கோபமாக "என்ன செய்யறீங்கன்னு புரிந்துதான் செய்யறீங்களா?" என்றான் நிகிலின் கையைத் தள்ள முயன்ற படி.

"புரியவேண்டியது எனக்கில்லை. உங்களுக்குத்தான். எந்தப் பக்கம் அழைத்துப் போறீங்கன்னு உங்களுக்குத் தெரியுமா?" அந்த வாகனத்தின் சுவர்கள் எதிரொலிக்குமாறு கத்தினான் நிகில்.

அவர்கள் அவன் வார்த்தையைப் பொருட்படுத்தவில்லை. அவன் அவர்களை வெறித்துப் பார்த்தான். தான்தான் பிரமை யில் இருக்கிறானா அல்லது அவர்கள்தான் பிரமையில் இருக் கிறார்களா என்று புரியவில்லை.

விண்வெளியில் சுற்றுவதற்குப் போதிய எரி பொரு ளானது இருபது வினாடிகளுக்கு மட்டுமே இருப்பது புரிந்தது. இன்னும் இருபது வினாடிகளில் திசையை மாற்றவில்லை என்றால், பிறகு பூமி எல்லைக்குள் நுழைந்தாலும், பூமியின் மீது இறங்குவதற்குப் போதிய மின்சக்தி இல்லாமல் போய் விடும். காற்றில் வெடித்துவிடும். ஏனெனில் பூமியில் எல்லைக் குள் நுழைந்த பிறகு சுமார் அரைமணி நேரம் பிரதட்சணம் செய்த பிறகுதான் இறங்க முடியும். ஒருக்கால் பறக்கும் தட்டை நோக்கிச் சென்றாலும் அரைமணிக்குள் இந்த வாகனம் அதைப் போய்ச் சேர முடியாது. இடையிலேயே நின்று போய் ஒரு உபகிரகத்தைப் போல் சுற்றத் தொடங்கி விடும்.

இரண்டில் எது நிகழ்ந்தாலும் உயிர் போவது உறுதி.

இன்னும் பத்தே வினாடிகள் பாக்கியிருந்தன.

ஐந்து... நான்கு... மூன்று... ...

5

ஆபத்து சூழ்ந்து கொள்ளும்போது மனிதன் தன்னையறியாமலேயே சில காரியங்களைச் செய்கிறான். அதேபோல்தான் நிகிலும் ஒரு முடிவுக்கு வந்தான். இரண்டாவது பைலட்டின் கழுத்தில் கையை மடக்கி ஒரு வெட்டு வெட்டினான். வலியால் முணுமுணுத்துக் கொண்டே அவன் சரிந்ததை பார்த்துவிட்டு ராய் கத்தினான். "உங்களுக்கு புத்தி பிசகிவிட்டதா?"

நிகில் அதைக் காதில் போட்டுக்கொள்ளவில்லை. வேறு விதமாக சொல்லணும் என்றால் அவனுக்குக் காது கேட்கவில்லை. ராய் விண்வெளி உடையில் இருந்தான். உள்ளேயிருந்து கத்திக் கொண்டிருந்தான். அதற்குள் நிகில் லேசர் துப்பாக்கியை எடுத்து ராயை நோக்கிக் குறிவைத்தான்.

"என்ன இது? உனக்கு மூளை கலங்கிவிட்டதா? யூ ஃபூல்!" ராய் கத்தினான்.

நிகில் துப்பாக்கியைக் குறி வைத்தபடியே அவனை அறைக்குள் தள்ளிக்கொண்டு போனான். ராய் திட்டிக் கொண்டே இருந்தான்.

"உன்னை அதிதியாக எங்களோடு அழைத்து வந்ததற்கு, எங்களுக்கே துரோகம் செய்கிறாயா? பூமியை நோக்கிப் போகவிடாமல் இந்த வாகனத்தை வேறு திசைக்குத் திருப்பு கிறாயா? நீ யாருடைய ஏஜெண்ட்? இந்த மாதிரி எங்கள் உயிரை எடுப்பது அநியாயம். துரோகி! N.S.R.I. உன்னைச் சும்மா விடாது."

நிகில் அவனை வாக்குவம் சேம்பருக்குள் தள்ளிவிட்டுக் கதவைச் சாத்திவிட்டு திரும்பி முன் அறைக்கு வந்தான். சமயம் அதிகம் இல்லை. அதற்குள் ஆபத்துநிலை தாண்டி மேலும் பத்து வினாடிகள் தாண்டிவிட்டன. நிகில் பரபரப்புடன் வாகனத்தின் திசையை மாற்றினான். பூமியில் எல்லைக்குள் நுழைவதற்காக வேகத்தை அதிகரித்தான். அவ்வளவு வேகமாக பூமியின் எல்லைக்குள் நுழைவது ஆபத்தானது. விண்வெளி சூழ்நிலைக்கு வாகனம் பற்றி எரிந்துவிடலாம். ஆனால் பூமிக்குள் நுழையா விட்டாலும் முதலுக்கே மோசமாகிவிடும். பக்கத்தில் விழுந்துகிடந்த பைலட்டிற்கு இன்னும் நினைவு திரும்பவில்லை. நிகில் இன்னொரு முறை பூமியுடன் தொடர்பு கொள்ள முயன்றான். கிடைக்கவில்லை.

தொலைவில் ஆரஞ்சு பழ வர்ணத்தில் பூமி தென்பட்டுக் கொண்டிருந்தது. அது பூமியில்லை என்று அவர்கள் எதற்காக சொன்னார்கள் என்று அவனுக்குப் புரியவில்லை. வாகனம் எந்த ஆபத்திலும் சிக்கிக்கொள்ளவில்லை என்றால் தான் பிழைக்கப் போகிறான். இல்லாவிட்டால் இல்லை.

அந்த நிசப்தத்தைத் தாங்க முடியாமல் கம்ப்யூட்டரை ஆன் செய்தான்.

"ஹலோ..."

"ஹலோ..."

"ஹௌ ஆர் யூ நிகில்?"

"ஒன்றுமே சரியாக இல்லை."

"ஏன் எல்லாம் ஒழுங்காகத்தானே இருக்கு?"

"உண்மையிலேயே பூமியை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறோமா?"

"பூமியை நோக்கியா? இல்லையே?"

நிகில் அதிர்ச்சியடைந்தான். அந்த நிலையிலும் அவனுக்கு வியர்த்துக் கொட்டியது. கால்கள் நடுங்க கம்ப்யூட்டரிடம் கேட்டான். "என்ன... என்ன சொல்கிறாய் நீ? எந்தப் பக்கமாகப் போய்க் கொண்டிருக்கிறோம்?"

"சூரியனை நோக்கி, நீயாகத்தானே வாகனத்தை திசை திருப்பினாய்?"

"நோ... நோ... நோ..." உரத்தக் குரலில் கத்தினான்.

கம்ப்யூட்டர் சொல்வது உண்மையாக இருந்தால், தான் தான் ஏதோ பிரமையில் ஆழ்ந்திருக்கிறான். மற்ற இருவரை யும் தவறாகப் புரிந்துகொண்டு, ஒருவனை நினைவு தப்பச் செய்து, இன்னொருவனை வாக்குவம் சேம்பருக்குள் தள்ளி விட்டு. வாகனத்தைத் தீக்கிரையாக்குவதற்கு தானே சுயமாக வழி வகுத்திருக்கிறான். தனக்கு மூளை பிசகிவிட்டது. தான் என்ன செய்கிறோம் என்று தனக்கே தெரியவில்லை. ஆரஞ்சுப் பழ வண்ணத்தில் தென்படுவது சூரியன்தானா? தன் கண்கள் தன்னை ஏமாற்றுகின்றன்வா?

அவன் மறுபடியும் கம்ப்யூட்டரிடம் கேட்கப் போன போது ரிலீஸ் பட்டன் அருகில் சிவப்பு விளக்கு எரிந்தது. வாகனத்தின் கதவு திறந்து கொ...ண்...டி...ரு...த...து. என்ன இது? என்ன நடக்கப் போகிறது?

யாரோ வாக்குவம் சேம்பரின் கதவைத் திறந்து கொண்டிருக்கிறார்கள். யார்?

நிகிலுக்கு பைத்தியம் பிடித்துவிடும் போல் இருந்தது. நாலாப் பக்கத்திலிருந்து வந்த பிரஷரை அவனால் சமாளிக்க முடியவில்லை. யஷ்வந்த் வேறு. அவன் எந்த சூழ்நிலையிலும்

தடுமாற மாட்டான். ஆனால் நிகிலுக்கு அத்தனை உறுதி இல்லை. முக்கியமாக தன்னுடைய தவறால் மற்றவர்களைப் பலி வாங்குகிறோமே என்ற வருத்தம்தான் மேலோங்கியிருந்தது. ஒருக்கால் தவறு தன்னுடையதாக இருந்தால் வாகனத்தின் கண்ட்ரோலைத் திரும்பி ராய்க்கு ஒப்படைத்து விடுவோம் என்ற உத்தேசத்துடன் அவன் வாக்குவம் சேம்பரை நோக்கித் திரும்பினான். சிறிய சத்தத்துடன் அது மூடிக் கொண்டு விட்டது.

நிகில் சிலையாக நின்றுவிட்டான். அந்த அறையின் கதவு மூடிக் கொண்டு விட்டதென்றால் யாரோ வாகனத்தை விட்டு வெளியேற முயற்சி செய்கிறார்கள். வெளியே சூனியம் சலன மில்லாமல் இருந்தது. மணிக்கு பல லட்சம் மைல்கள் வேகத் தில் வாகனம் சென்று கொண்டிருந்தது.

"ராய்...ராய்..." நிகில் குரல் தழுதழுத்தது. "நான் தவறு செய்துவிட்டேன் ராய். போகாதே. கதவை மூடிவிடு. வேண்டாம் ராய். நீ ஒரு துணைகோளாக மாறிவிடுவாய். வாகனத்திலிருந்து வெளியே போகாதே. நீ பூமியை அடைய ணும்" எவ்வளவு கத்தினாலும் அவனுக்குக் கேட்காது என்று தெரிந்தாலும், நிகில் கத்திக் கொண்டிருந்தான்.

அதற்குள்...

விளக்கு அணைந்துவிட்டது. ராய் வாகனத்தை விட்டு வெளியே சூனியத்திற்குள் அடியெடுத்து வைத்தான். கடலில் நீந்துபவனைப்போல் அவன் சூனியத்திற்குள் சென்று விட்டான். வாகனத்திலிருந்து விடுபட்டதுமே அவனும் அந்த வேகத்திற்கு அத்துடன்கூட கொஞ்ச தூரம் பயணம் செய்து, சூழ்நிலையில் ஏற்பட்ட மாறுபாட்டினால் தொலைவில் போய் மறைந்தான்.

நியூட்டனின் தத்துவத்தை அனுசரித்து, எந்த விதமான ஃபிக்ஷன் இல்லாததால், அவன் அந்த சூனிய வெளியில் சுற்றிக்கொண்டே இருப்பான். ஏதேனும் காந்தசக்தி எல்லைக் குள் நுழையும் வரையிலும் அதுபோல் சுற்றிக்கொண்டே இருந்து பிறகு சாம்பலாகி விடுவான். அதற்குள் ஆக்ஸிஜன் தீர்ந்துவிட்டால் அதற்கும் முன்பே இறந்துவிடுவான்.

அவன் ஏன் அவ்வாறு செய்தான் என்று நிகில் யோசிக்க வில்லை. உயிர் எப்படியும் போகப் போவதால் வேக்குவம் சேம்பருக்குள் கைகால் முடங்கிப் போய் உயிரை விடுவதைவிட வெளியே போய் சாவைத் தேடிக் கொள்வதே மேல் என்று எண்ணியிருக்கக் கூடும்.

கலங்கிய கண்களுடன் அவன் டி.வி.யைப் பார்த்தான். வெண்ணிற காகிதத்தில் சிறிய புள்ளியைப் போல் தென் பட்டான் ராய். தூரம் அதிகமாக ஆக மேலும் சிறிய புள்ளியாக தென்பட்டான். மெல்ல மெல்லத் திரையில் அவன் உருவம் மறைந்துவிட்டது. நிகில் தலையில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்துவிட்டான்.

அனாவசியமாக அவர்களுடைய வாகனத்தில் தான் ஒரு எதிர்பாராத அதிதியாக வந்து சேர்ந்தான். இருவர் சாவுக்கு அவன் காரணமாகிவிட்டான். நாட்டிற்குப் பல கோடி ரூபாய் கள் நஷ்டத்தை ஏற்படுத்திவிட்டான்.

அவனுக்கு ஸ்ரீஜா நினைவுக்கு வந்தாள். தான் செய்த தவறு அவளுக்குத் தெரியாது. அவளுக்கு மட்டுமே இல்லை. உலகத்திற்கே தெரியாது. சூனியத்திற்கு நுழைந்த விண்வெளி வாகனம் ஏதோ விபத்து நேர்ந்து சூரியனை நோக்கிப் போய் விட்டதென்று பூலோகவாசிகள் நினைத்துக்கொள்வார்கள்.

அவன் சாவை எதிர்நோக்கியபடி நேரத்தைக் கணக்

கிட்டுக்கொண்டு உட்கார்ந்துவிட்டான். அருகில் இருந்த பைலட்டிற்கு இன்னும் நினைவு திரும்பவில்லை. அவனை நினைவுக்கு கொண்டு வர நிகில் எந்த முயற்சியும் செய்ய வில்லை. எப்படியும் சாவு நிச்சயம் என்று தெரிந்த பிறகு நினைவு இல்லாமல் இருக்கும்போதே உயிர் போய்விடுவது மேல்.

எரிபொருள் தீர்ந்து கொண்டிருப்பதை இன்டிகேட்டர் காட்டிக் கொண்டிருந்தது. எதிரே தென்பட்டுக் கொண்டிருந்த ஆரஞ்சு வர்ண உருவத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். அது இப்பொழுது கால்பந்தைப் போல் தென்பட்டது. ராய் சொன்னதுபோல் அது சூரியனாக இருக்க வாய்ப்பு இல்லை.

அதற்கு சுய ஒளியில்லை. மேலும் இவ்வளவு அருகில் போகவும் முடியாது. எரிந்து சாம்பலாகிவிட்டிருக்க வேண்டும். பீமிங் சத்தம் லேசாக கேட்டது.

"ஹலோ... ஹலோ..." என்று கத்தினான்.

"ரிசீவிங் எர்த்... ரிசீவிங். எங்கே போனீங்க இவ்வளவு நேரம்? தொடர்பு அறுந்துவிட்டதா? ஆர் யு ஆல் ரைட்?"

திடீரென்று பூமி எல்லைக்குள் வாகனம் நுழைந்து விட்டதை கம்ப்யூட்டர் தெரிவித்தது. அதுவரையிலும் சலன மற்று இருந்த சூழ்நிலையில் திடீரென்று சலசலப்பு தோன்றியது.

தன் கண்களையே நம்ப முடியாதவன்போல் தலையைச் சிலிர்த்துக் கொண்டான் நிகில். எதிரே தெரிந்தது சூரியன் இல்லை, பூமி... அதாவது, தன் வாதம்தான் சரியானது. அவர் கள் இருவரும் ஏதோ பிரமையில் ஆழ்ந்துவிட்டிருக்கிறார்கள். அதே பிரமையில் வாகனத்தை விட்டு வெளியேறிய ராயின் ஆத்ம சாந்திக்காக ஒரு நிமிஷம் கண்களை மூடி பிரார்த்தனை

செய்தான். பிறகு தன் வேலையில் ஆழ்ந்தான். அடுத்த இரண்டாவது நிமிஷம் பூமியின் எல்லைக்குள் நுழைந்தது. ஒரு முறை பூமியைச் சுற்றிலும் பிரதட்சணம் செய்து விட்டு ராஸை (RAS) நோக்கி இறங்கத் தொடங்கியது. ராக்கெட் இறங்க வேண்டிய ஸ்டேஷனின் கண்ட்ரோலுக்குப் போய்ச் சேர்ந்த பிறகு, இனி செய்ய வேண்டியது எதுவும் இல்லை. நிகில் போய் கம்ப்யூட்டருக்கு முன்னால் உட்கார்ந்துகொண்டான்.

"சொல்லு. எதற்காக என்னைத் தவறான வழிக்கு அழைத் துச் செல்ல முயன்றாய்?"

"தவறான வழியா? நிகில்! நீ என்ன சொல்கிறாய்?"

"பூமியை நோக்கிச் சீராக போய்க் கொண்டிருந்த வாகனம் தவறான வழியில் போகிறதென்று ஏன் சொன்னாய்?"

"நான் சொன்னேனா?"

"நிச்சியமாக நீ தான்."

"சரிதான். நீ சரியாக காதில் வாங்கியிருக்க மாட்டாய்."

"டாமிட்!" கத்தினான்.

கம்ப்யூட்டர் மௌனம் வகித்தது. அடுத்த பத்தாவது நிமிஷத்தில் விண்வெளி வாகனம் பூமியில் இறங்கியது. RAS அதிகாரிகள் கலவரத்தோடு சுற்றிலும் சூழ்ந்து கொண்டார் கள். நிகில் கீழே இறங்கியதுமே, "எல்லாம் சரியாகத்தானே இருந்தது?" என்று கேட்டார்கள். அவன் முகத்தில் களைப்பு வெளிப்படையாகத் தெரிந்தது. ஆழமாக மூச்சுவிட்டபடி "ராயை இழந்துவிட்டோம்" என்றான்.

அவன் சொன்னது அவர்களுக்குப் புரியவில்லை. நடந்த தைச் சுருக்கமாகச் சொன்னான். எல்லோர் முகமும் வாடி விட்டது.

சரியாக அரைமணி நேரம் கழித்து முக்கியமான மீட்டிங் நடைபெற்றது. யஷ்வந்த் கேள்விகள் கேட்கத் தொடங்கினான். நிகில் எல்லாவற்றுக்கும்வரிசையாக பதிலளித்தான். தன்னை அவர்கள் வரச் சொன்னது, அனுமதி பெற்று தான் அவர்களுடன் சென்றது, எரிபொருள் தீரும் நிலையில் தனக்கும் ராய்க்கும் கருத்து வேற்றுமை வந்தது. ராய் வாகனத்தை விட்டு விட்டு உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக சூனியத்திற்குள் சென்றுவிட்டது.. எல்லோரும் யோசனையில் ஆழ்ந்து விட்டார்கள். யாராலுமே நம்ப முடியாத கதை. ராயின் மரணம் எல்லோரையும் வேதனையில் ஆழ்த்தியது.

"அந்த இரண்டாவது பைலட்டுக்கு நினைவு திரும்பி விட்டதா?"

"இப்பொழுதுதான் நினைவு வந்தது."

"என்ன சொல்கிறான்?"

"யாராவது அருகில் போனாலே பயந்து கத்துகிறான். நம் உலகத்தில் இருப்பதாகத் தோன்றவில்லை. டாக்டர்கள் முயற்சி செய்கிறார்கள்."

யஷ்வந்த் ஏதோ யோசனையுடன் நிகிலைப் பார்த்து "அந்தப் பறக்கும் தட்டு எப்படி தென்பட்டது என்று விவரமாக சொல்லு நிகில்?" என்றான்.

நிகில் சொன்னான்.

"அதற்கு எவ்வளவு அருகில் உங்கள் வாகனம் போயிருக்கும்?"

"சுமார் முப்பதாயிரம் மைல்கள்."

"அப்பொழுது நீ என்ன செய்து கொண்டிருந்தாய்?

"அந்தச் சமயத்தில் நான் எந்த ஆபத்தையும் எதிர்பார்க்க வில்லை. ஓய்வாக உட்கார்ந்து பாட்டு கேட்டுக் கொண்டிருந் தேன்."

யஷ்வந்த் நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்தான். சட்டென்று எழுந்திருந்து, "நாம் அந்த பைலட்டிடம் போகணும்'' என்று மற்றவர்களுக்காக காத்திருக்காமல் அறையை விட்டு வெளியே போனான். நிகில் அவனைத் தொடர்ந்தான். அவர்கள் போனபொழுது நோயாளியின் நிலைமை மோசமாக இருந்தது. வெறிநாய் கடித்து ஹைட்ரோ ஃபோபியா வந்தவன் போல் நடுங்கிக் கொண்டிருந்தான். மனிதர்களைப் பார்த்தால் பயந்து ஒடுங்கினான்.

"என்ன நேர்ந்தது?" டாக்டரிடம் கேட்டான்.

"அதுதான் தெரியவில்லை. ஸ்கேனிங் செய்தால்தான் சொல்ல முடியும்" என்றார் டாக்டர்.

"அல்ட்ராசோனிக் சப்தத்தை ஒலிபரப்பி ஷாக் ட்ரீட் மென்ட் கொடுத்தால் நோயாளிக்கு ஏதாவது ஆபத்து ஏற்படுமா?"

"அதென்ன ட்ரீட்மென்ட்?"

"எனக்கு ஏனோ அந்த மாதிரி செய்தால் அவன் நார்மல் நிலைக்கு வருவான் என்று தோன்றுகிறது. ஆபத்து இல்லை என்று நீங்க உத்தரவாதம் தந்தால் அப்படியே செய்து பார்க்கலாம்."

டாக்டர் அரை மனதுடனேயே அதற்கு ஒப்புக் கொண்டார்.

நோயாளிக்கு ஷாக் ட்ரீட்மென்ட் கொடுக்கப்பட்டது. ஐந்து நிமிஷங்களுக்குப் பிறகு அந்த பைலட் கண்களைத்

திறந்து பலவீனமான குரலில், "நான் எங்கே இருக்கிறேன்?" என்று கேட்டான்.

சுற்றிலும் இருந்தவர்களின் முகம் மலர்ந்தது. டாக்டர் யஷ்வந்திடம் வந்து "கங்கிராஜுலேஷன்ஸ்! இந்த யோசனை உங்களுக்கு எப்படி வந்தது?" என்றார்.

யஷ்வந்த் பதில் சொல்லாமல் நிகிலுடன் சேர்ந்து வெளியே வந்தான். டாக்டர்கள் மற்ற பரிசோதனைகளுக்காக அந்தப் பைலட்டைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டார்கள்.

நிகிலும் யஷ்வந்தும் N.S.R.I. யை நோக்கி நடந்தார்கள். மாலை ஆறு மணியாகிவிட்டது.

வாயுபுத்ரன் உள்ளே டீகோட் செய்வதில் ஆழ்ந் திருந்தான்.

"நீ அந்த சமயத்தில் பாடிக் கொண்டிருந்ததால்தான் நீயும் விண்வெளி வாகனமும் காப்பாற்ற பட்டிருக்கீங்க நிகில்" என்றான் யஷ்வந்த்.

நிகில் அவனை வியப்புடன் பார்த்தான். யஷ்வந்த் சொல்லத் தொடங்கினான்.

"அந்தப் பறக்கும் தட்டிலிருந்து மாயாஸ், மனிதர்களை விட பன்மடங்கு புத்திசாலிகள். ரொம்ப முன்னேற்றம் அடைந்தவர்களாக இருக்க வேண்டும். அந்தக் கிரகவாசிகள் உங்களை வாகனத்தோடு சேர்த்து தம் உலகத்திற்கு அழைத்துச் சொல்வதற்கோ அல்லது அழித்து விடுவதற்கோ முயற்சி செய்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தம் சக்தியைப் பயன் படுத்தாமல் டெலிபதி மூலமாக உங்களை கண்ட்ரோல் செய்திருக்கிறார்கள்."

"டெலிபதியா?"

"ஆமாம். அதைக் காட்டிலும் வேறு வார்த்தை எனக்குத் தோன்றவில்லை."

"ஆனால் கம்ப்யூட்டர்கூடத் தவறாகச் சொல்லியிருக்கிறது."

"அதனால்தான் அதைவிட பெரிய வார்த்தை கிடைக்கவில்லை என்று சொன்னேன். நமக்குத் தெரிந்த விஞ்ஞானம் ரொம்பக் குறைவு நிகில். அவர்களுடைய ஒலியலைகளை விட சத்தமாக நீ பாட்டை கேட்டுக் கொண்டிருந்தாய். அதுதான் உன்னை பிரமையில் ஆழ்ந்துவிடாமல் காப்பாற்றியிருக்கிறது. இதெல்லாம் என் ஊகம்தான். என் தர்க்கம் தவறாகவும் இருக்கலாம். ஆனால் அந்த பைலட் அல்ட்ராஸோனிக் அலைகளால் பழைய நிலைக்குத் திரும்பியதால் எனக்கு அப்படித் தோன்றியது. அந்தக் கிரகவாசிகள் உங்களை எவ்வளவு மாயையில் ஆழ்த்தியிருக்கிறார்கள் என்றால், உங்களுக்கு பூமி சூரியனைப் போலவும், அவர்களுடைய வாகனம் பூமியைப் போலவும் தெரிந்திருக்கிறது. நீ முரட்டுத்தனமாக சூரியனை நோக்கிப் போகிறாய் என்ற பிரமையில ராய் உங்களை விட்டு விட்டுச் சூனியத்தை நோக்கிப் போயிருக்கிறான்."

"ஆனால் கம்ப்யூட்டர்..." தன் சந்தேகத்தை வெளியிட்டான்.

"நூறு வருடங்களுக்கு முன்னால் மனிதன் டெலிபதியைக் கூட நம்பமாட்டான். விஞ்ஞானம் வளர வளர ஒலியலைகள் மனிதனின் மீது எப்படிப்பட்ட பாதிப்பைக் காட்டும் என்று நாம் தெரிந்துகொண்டோம். எதிராளியை தன் கட்டுப்பாடுக்குள் எடுத்துக்கொள்ளும் டெலிபதி இன்னும் நமக்குப் புரியாத ஒன்று. ஆனால் அந்த மாயாஸ் நம்மை விடவும் முன்னேறி நம் கம்ப்யூட்டரைக்கூட தம் கட்டுக்குள் இழுத்துக் கொண்டு விட்டார்கள். அப்படிப்பட்டவர்களுடன் நாம் கூடிய

சீக்கிரத்திலேயே போரிடப் போகிறோம்."

"போரா?"

"அவர்கள் விரும்பினால் உங்களுடன் சிநேகம் ஏற்படுத்திக் கொண்டிருக்கலாம். நீங்கள் விண்வெளியில் சுற்றிக் கொண்டிருப்பது அவர்களுக்குத் தெரியும். என் ஊகம் சரியாக இருக்கும் பட்சத்தில் உங்களுடைய பெயர், பேசும் மொழி இதெல்லாம் கூட அவர்களுக்கு இந்நேரம் நன்றாகத் தெரிந்திருக்கணும். ஆனாலும் எதுக்காக உங்களை ஏமாற்றினார்கள்? விஞ்ஞானத்தில் அவ்வளவு முன்னேறி இருப்பவர்கள், வேண்டுமானால் தம் வாகனத்தை உங்களுக்கு அருகில் கொண்டு வந்து தொடர்பு கொண்டிருக்கலாமே? ஏன் அப்படி செய்யவில்லை? எனக்கு ஏனோ அந்த மாயாஸ் ரொம்ப ஆபத்தானவர்களாகத் தோன்றுகிறது."

அவன் வார்த்தையை முடிக்கக்கூட இல்லை. கதவு தடாலென்று திறந்துகொண்டது. வாயுபுத்ரன் கதவு அருகில் நின்று கொண்டிருந்தான். அவன் கையில் கம்ப்யூட்டர் பிரிண்ட் அவுட் இருந்தது. ஆனால் அவன் முகத்தில் டீகோட் செய்த மகிழ்ச்சி தென்படவில்லை. பயம்தான் தெரிந்தது.

6

வாயுபுத்ரன் தந்த காகிதத்தைப் பெற்றுக்கொண்ட யஷ்வந்தின் கை நடுங்கியது. அந்தச் செய்தியில் கொஞ்சமாவது உண்மை இருக்குமானால், பூலோகத்திலுள்ள சகல சராசரங்களும் கலவரப் படவேண்டிய செய்தி அது.

"ஆல்ஃபா கிரகவாசிகள் தமக்குத் தேவையான சக்தியை சூரியனிடமிருந்து பெற விரும்பி, அந்த விஷயமாக இன்டர் பிளானடரி சொஸைட்டிக்கு மனு அனுப்பியிருக்கிறார்கள்.

பீடா கேலக்ஸியிலுள்ள இந்தச் சூரியன் மீது ஆதாரப் பட்டிருக்கும் ஜீவராசிகள் எதுவுமே இல்லை என்பது இந்த மனுவின் சாராம்சம். இந்த நடவடிக்கை எந்த விதத்திலாவது யாருக்காவது எந்த நஷ்டத்தையாவது ஏற்படுத்துமென்றால் அந்த விஷயத்தை பிளானடரி சொஸைட்டிக்குத் தெரியப் படுத்த வேண்டும்."

யஷ்வந்த் அந்தக் காகிதத்தையே பார்த்தபடியே இருந்தான். பக்கத்தில் இருந்த டைரக்டர் அவன் கையிலிருந்த காகிதத்தை வாங்கி தானும் படித்தார்.

வினாடி நேரத்தில் அந்தச்செய்தி எல்லா நாடுகளுக்கும் பரவிவிட்டது. எல்லா நாடுகளிலும் விஞ்ஞானிகள் இந்தச் செய்தியின் உண்மையையும், வாயுபுத்ரன் மொழிபெயர்த்த விதத்தையும் பரிசோதிக்கத் தொடங்கினார்கள்.

யஷ்வந்த் அதைப் பெரிதாக பொருட்படுத்தவில்லை. வாயுபுத்ரன் மொழிபெயர்த்திருக்கும் செய்தி சரியானதுதான் என்று அவன் நம்பினான். நிகிலுக்குத் தென்பட்டது பறக்கும் தட்டுதானா என்பது அவன் சந்தேகம். ஒருக்கால் பறக்கும் தட்டாக இருந்தால் அது ஆல்ஃபா கிரகத்தைச் சேர்ந்தது தானா என்பதைப் பற்றியும் யோசித்து பார்த்தான். அவர்கள் டெலிபதி மூலமாக மனிதர்களின் மூளையைக் கட்டுப்படுத்தக் கூடியவர்கள் என்று வைத்துக் கொண்டால்...

1. அவர்களுக்கு பூமியின் மீது ஜீவராசிகள் இருப்பது தெரிந்திருக்கிறது.

2. அந்த ஜீவராசிகளில் மனிதர்கள் என்ற பிராணி கள் பேசும் மொழிகூட தெரிந்திருக்கிறது. இந்த உயிர்கள் எல்லாம் சூரியனையே ஆதாரமாக கொண்டுள்ளன என்பதும் அவர்களுக்குத்

தெரியும். அப்படியும் அர்கள் சூரியனையே தேர்ந் தெடுத்திருக்கிறார்கள். இந்த விண்வெளியில் பல கோடிக்கணக்கான நட்சத்திரங்கள் இருக் கின்றன.ஆனாலும் அவற்றை எல்லாம் விட்டு விட்டு சூரியனுக்காகவே அவர்கள் வந்திருக் கிறார் கள்.

3. சூரியனுக்குச் சமீபத்தில் எந்த ஜீவராசியும் கிடையாது என்பதை விண்வெளிக் கிரகவாசிகளின் சங்கம் நம்பிக் கொண்டிருக்கிறது. ஆல்ஃபா கிரகத் தில் இருப்பது போலவே மேலும் பல கிரகங் களில் உயிரினங்கள் இருக்கின்றன. அங்கிருக் கும் கிரகவாசிகள் (மாயாஸ்) நம்மைக் காட்டி லும் பல நூறு மடங்கு புத்திசாலிகள். நமக்குச் சிறிய நாடுகளும், அவைகள் எல்லா வற்றுக்கும் சேர்ந்து ஐக்கிய நாட்டுச் சங்கமும் இருப்பது போலவே, அங்கே வெவ்வேறு கிரகத் தைச் சேர்ந்தவர்களுக்காக ஒரு இன்டர் பிளானடரி சொஸைட்டி இருக்கிறது. விண் வெளியில் மற்ற கேலக்சியிலுள்ள உயிரினங்களுக்கும் இந்த சொஸைட்டிக்கும் தொடர்பு இருக்கலாம். நாம் விமானத்தில் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்குப் பயணம் செய்வது போல் ஒரு கிரகத்திலிருந்து மற்றொரு கிரகத்திற்குப் போகிற வர்களாக இருக்க வேண்டும். இவர்களுக்குள் ஆல்ஃபா கிரகத்திலுள்ள ஜீவராசிகள் தமக்குச் சக்தி தேவையாக இருக்கும்போது கேலக்ஸியில் ஒரு மூலையில் உள்ள சூரியனைத் தேர்ந் தெடுத்து, அதிலிருந்து நவீன சாதனங்கள் மூல மாக உறிஞ்சி எடுத்துக் கொள்கிறார்கள்.

இதுவரையில் நன்றாகத்தான் இருக்கிறது. இதில் புரியாதவை சில இருந்தன. அவை:

1. சூரியனின் சக்தியையே சில விநாடிகளில் உறிஞ்சி எடுத்துக் கொண்டு விடக்கூடிய நவீன உப கரணங்களைக் கொண்ட ஆல்ஃபா கிரக வாசிகள், வேறு நட்சத்திரத்தையோ அல்லது கிரகத்தையோ தேர்ந்தெடுக்காமல் சூரியனையே ஏன் தேர்ந்தெடுத்தார்கள்? நாம் வீதியில் நடந்து போகும் போது எறும்பு முதலிய எவ்வளவோ சிறிய சிறிய உயிர்கள் காலுக்கடியில் மிதிபட்டு இறந்து போனாலும், நாம் அதைப் பொருட் படுத்த மாட்டோம். அதுபோல்தான் அந்தக் கிரக வாசிகள் பார்வையில் நாம் அற்பமான வர்களா?

2. ராயையும் இன்னொரு பைலட்டையும் டெலிபதி யின் மூலம் பிரமையில் ஆழ்த்தியது பறக்கும் தட்டில் இருக்கும் கிரகவாசிகள்தானா? அது உண்மையாக இருக்கும் பட்சத்தில் அவர்கள் ஏன் அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும்? தங்களுடைய சந்தோஷத்திற்காகவா அல்லது பூலோகவாசிகளுடன் போர் புரியும் நோக்கமா?

3. சூரியனின் சக்தியை இவர்கள் இப்படி உறிஞ்சி எடுத்துக் கொண்டே இருந்தால் சூரியனின் சக்தி இன்னும் எவ்வளவு நாட்களுக்குத்தான் மிஞ்சும்? தற்போது சூரியனில் உள்ள ஹைட்ரோஜன் இன்னும் ஐநூறு கோடி வருடங்களுக்குப் போது மானது. ஆனால்சூரியனின் நடுபாகத்தில் இருக்கும் ஹைட்ரோஜன் குறைந்து விட்டால்

சக்தி உற்பத்தி ஸ்தான மானது மெல்ல மெல்ல மேல்பாகத்திற்குப் பரவி, ஆகாசத்தில் பிரவத் தொடங்கிப் புதன், சுக்கிர கிரகங்களை விழுங்கி விட்டு பூமியை நெருங்கத் தொடங்கும். சில கோடி ஆண்டுகளுக்குப் பிறகு தான் இது நடக்கும் என்றாலும், இந்த மாயாஸ் பயன்படுத்தும் நவீன கருவிகளால் சூரியனானது நிலையில்லாத நட்சத்திரமாக மாறக்கூடிய ஆபத்து சீக்கிரத்தில் நேர வழியுண்டா? சூப்பர் நோவாவை போல் மாறி வெடித்துச் சிதறி விடுமா? அவ்வாறு வெடிக்காத பட்சத்தில் சகல ஜீவிகளுக்கும் இந்த எச்சரிக்கை எதற்கு?

4. பரிசோதனைக்காகப் போன நிகில் முதலியவர் களுக்குத் தென்பட்டது உண்மையிலேயே பறக் கும் தட்டுத்தானா? அது ஆல்ஃபா கிரவாசி களுடையதுதானா? அவ்வளவு தூரத்திலிருந்து கம்ப்யூட்டரையும் சேர்த்து மாயையில் ஆழ்த்த அவர்களால் எப்படி முடிந்தது?

இன்டர் பிளானடெரி சொஸைட்டிக்கு எந்த விதத்தில் தம்மைப் பற்றித் தெரிவித்துக் கொள்வது? ஆல்ஃபா கிரகவாசி களின் மனதில் (இதை மனம் என்று குறிப்பிடுவது சரிதானா?) என்ன இருக்கிறது என்பதை எப்படித் தெரிந்துகொள்வது?

வாயுபுத்ரன் இந்தச் செய்தியைக் கண்டு பிடித்த இரண்டு மணி நேரத்தில் பல்வேறு நாடுகளின் விஞ்ஞானிகள் ஹாட் லைன் சானலில் கூட்டம் கூடினார்கள். சுமார் அறுபது பேர் இந்தக் கூட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டார்கள்.

மாயாஸ் எனப்படும் அந்த விண்வெளிக் கிரகவாசிகள் சூரிய சக்தியை பயன்படுத்தி வருகிறார்கள். இந்த விஷயம்

விண்வெளி நகரத்து விஞ்ஞானிகள் மூலமாய்ப் புரிய வந்தது. விண்வெளி நகரம் சூரியனுடன் சேர்ந்தே சுற்றி வருவதால், சூரிய சக்தியைச் சேர்த்து வைத்துக்கொள்ள வேறு ஏற்பாடுகள் எதுவுமே செய்துகொள்ளவில்லை. சூரியசக்தி தடைப்படக் கூடிய ஆபத்தை யாருமே எதிர்பார்க்கவில்லை.

ஆல்ஃபா கிரகவாசிகள் இதையெல்லாம் தெரிந்தே செய்கிறார்களா அல்லது தெரியாமல்தான் செய்கிறார்களா என்று புரியவில்லை. விஞ்ஞானிகளுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்திய மற்றொரு விஷயம்... நிகில் பார்த்தது உண்மையிலேயே பறக்கும் தட்டுத்தானா என்பதுதானா என்பது! நிகில் அந்த விஷயத்தில் உறுதியாக இருந்தான். இன்னொரு பைலட்டால் எதுவுமே சொல்ல முடியவில்லை.

இறுதியில் விஞ்ஞானிகள் ஒரு முடிவுக்கு வந்தார்கள். அந்த பறக்கும் தட்டு முகாமிட்டிருந்த திசையை நோக்கி ஒரு வாகனத்தை அனுப்பி, அதன் இருப்பிடத்தைப் பற்றித் தெளிவாய் அறிந்துகொள்ள வேண்டும். முடிந்தால் உள்ளே நுழைந்து மாயாஸுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அவர்களுக்கு பூமியைப் பற்றிச் சொல்லி, சூரியனை விட்டு அவர்களை விலகிப் போகச் சொல்ல வேண்டும். இதுதான் அந்த முடிவு.

யஷ்வந்திற்கு இந்த யோசனை பிடிக்கவில்லை.

மாயாஸ்களுக்கு பூமியைப் பற்றியும் அதிலுள்ள உயிரினங்களைப் பற்றியும் நன்றாகத் தெரியும் என்று அவன் நம்பினான். அவர்களைக் கெஞ்சுவதோ, வேண்டிக் கொள்வதோ அனாவசியம். ஏதாவது செய்யக் கூடுமானால் இண்டர் பிளானெட்டரி சொஸைட்டிக்கு புகாரிடுவதுதான் மேல். ஆனால் பல கோடிக்கணக்கான மைல்கள் தொலைவில் இருக்கும் அந்த சொஸைட்டிக்கு எப்படித் தங்களுடைய

நிலைமையை எடுத்துச் சொல்ல முடியும்? தாம் அனுப்பும் அலைகள் எந்த விதத்தில் அவர்களைப் போய்ச் சேரும்? அவர்கள் எந்த விதமாக இதை எடுத்துக் கொள்வார்கள்?

அவன் தன் உணர்வுகளை வெளியே சொல்லவில்லை. இருபத்தி நான்கு மணி நேரத்திற்குள் பூமியிலிருந்து ஒரு விண்வெளிப் படகானது விண்வெளிப்பட்டணத்தை நோக்கிப் போக வேண்டும். அங்கு நடந்த வித்வம்சத்தை பரிசோதித்து விட்டு, அங்கிருந்தே பறக்கும் தட்டிலிருந்த மாயாஸூடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள முயற்சிக்க வேண்டும். அவ்வாறு முடியாத பட்சத்தில் நேராக அந்த பறக்கும் தட்டை நோக்கிப் போக வேண்டும்.

இந்த விண்வெளிப்படகில் மூன்று பேர் போகிறார்கள். அதில் யஷ்வந்த் ஒருவன். போய்விட்டுத் திரும்பி வருவதற்கு மொத்தம் பதினைந்து நாட்களாகும்.

இவ்விதமாக தீர்மானம் செய்யப் பட்டதும், மளமளவென்று ஏற்பாடுகள் தொடங்கப்பட்டன.

அதற்கு மறுநாள் எதிர்பார்த்த மாதிரியே விண்வெளிப் படகானது விண்வெளி நகரத்தை நோக்கிப் புறப்பட்டது.

யஷ்வந்துடன் மேலும் இருவர் புறப்பட்டார்கள்.

அனூஹ்யாவின் மனநிலை அல்லகல்லோலமாய் இருந்தது. ஒரு பக்கம் வாயபுத்ரன் கண்டுபிடித்த விஷயத்தையும் அதை டீகோட் பண்ணியதில் அவன் காட்டிய புத்திசாலித்தனத்தையும் பத்திரிகைகள் வானளாவ புகழ்ந்து கொண்டிருந்தன. வரப் போகும் ஆபத்தைப் பற்றிச் சாமானிய ஜனங்கள் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை. அதைவிட விண்வெளிக் கிரகங்களில் உயிரினம் இருக்கிறது என்ற விஷயத்திற்கும் பறக்கும் தட்டு தென்பட்டது என்ற விஷயத்திற்கும்

அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

கொஞ்சம் விஞ்ஞான அறிவு இருந்தவர்கள் கூட சூரிய சக்தியானது கொள்ளையடிக்கப்படும் விஷயத்திற்கு அதிக முக்கியத்துவம் தரவில்லை. ஐநூறு கோடி வருடங்களுக்குப் போதுமான சக்தி சூரியனிடம் இருக்கிறது. அதில் கொஞ்சம் யாரோ எடுத்துக் கொண்டு போனால் என்ன நஷ்டம் வந்து விடப் போகிறது? இந்த விதமாக இருந்தன அவர்களின் எண்ணங்கள். மேல்மத்திலிருந்த ஒரு சிலருக்கு மட்டுந்தான் ஏதோ ஆபத்து மறைந்திருப்பதாக சந்தேகம் ஏற்பட்டது.

அன்று வாயுபுத்ரனுக்காக பாராட்டுக் கூட்டம் ஒன்று நடந்தது. அனூஹ்யா முன் வரிசையில் உட்கார்ந்திருந்தாள். யாரும் பார்க்காத நேரத்தில் அவளைப் பார்த்து கண்ணடித்து விட்டு சொற்பொழிவைத் தொடங்கினான் அவன். மிக அற்புத மான சொற்பொழிவு அது. அனூஹ்யா தலையைச் சாய்த்தபடி சிரத்தையாக கேட்கத் தொடங்கினாள். அவளுக்கு ஆச்சரிய மாக இருந்தது. தன்னிடம் அவ்வளவு குறும்பாக நடந்து கொள்ளும் இவனா இவ்வளவு சிறப்பாக சொற் பொழிவாற்று கிறான்? எப்படிப்பட்ட குறிப்புகளையும் கணித சாஸ்திரத்தில் எப்படி மாற்றிக் கொள்ள முடியும் என்பதைப் பற்றி அவன் சொல்லிக் கொண்டிருந்தான்.

"ஐஸோடோ 5 மூலமாக வந்த விஷயத்தைக் கண்டு பிடிக்க லாம் என்ற ஐடியாவை எனக்குச் சொன்ன நபர் ஒருவர் இருக் கிறார். அவர் பெயர்... யஷ்வந்த்."

கேட்டுக் கொண்டிருந்த அனுஹ்யா திடுக்கிட்டாள்.

யஷ்வந்த்... யஷ்வந்த்... யஷ்வந்த்...

வாயுபுத்ரன் சொல்லக்கொண்டே போனான். "யஷ்வந்த் என்ற அந்த வானியல் அறிஞன் மட்டும் எனக்கு அந்த

யோசனையைத் தந்திருக்காவிட்டால் நான் என்றுமே இந்த விஷயத்தைக் கண்டுபிடித்திருக்க முடியாது. சூரியசக்தி, மாயாஸ் என்ற வார்த்தைகளை அந்த குறிப்புக ளோடு ஒன்றிணைக்கும் படி சொன்னதுகூட அவர்தான். இந்த புகழ் எல்லாம் அவரையே சேரும். இப்பொழுது அவர் இங்கே இல்லை. மாயாஸ் விஷயத்தைக் கண்டுபிடிப்பதற்காக நமக்குப் பல லட்சம் மைல்களுக்குத் தொலைவில் விண்வெளி நகரத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்."

அவள் காதுகளில் அவை விழவில்லை. நிர்மலமான கடலில் புயல் உருவானதுபோல் அவள் மனம் அல்லகல் லோலப் பட்டது. யஷ்வந்த் இங்கே வந்திக்கிறான்! வாயுபுத்ர னுடன் பேசியிருக்கிறான்!

நான்கு நாட்களுக்கு முன்னால் நிகழ்ந்த சம்பவம் அவள் மனக்கண்ணிற்கு முன்னால் காட்சியாக விரிந்தது. வாயுபுத்ரன் நெஞ்சுவலி என்று துடித்து கீழே விழுந்த போது, தான் அவனை நோக்கி குனிந்தாள். அப்பொழுது ஓர் ஆள் வாசலுக் கருகில் வந்து நிற்கவே, தான் கம்ப்யூட்டரை நோக்கி ஓட்ட மெடுத்தாள். அந்த நபர் வாயுபுத்ரனை மென்மையாகக் கண்டித் தான்.

அந்தக் குரல்...

யஷ்வந்தின் குரல்!!

ஆம். இப்பொழுது நன்றாக நினைவுக்கு வந்துவிட்டது. அது யஷ்வந்தின் குரல்தான்.

அவன் தன்னைப் பார்த்திருப்பானா?

அவள் மனம் உடைந்துவிட்டது. யாரை மறக்க வேண்டு மென்று அவள் பாடுபட்டு வந்தாளோ, யாரைச் சந்திக்கக்

கூடாது என்று ஒருபுறமும், சந்திக்க வேண்டுமென்று இன்னொரு புறமுமாக மனம் அலைக்கழிக்க, அந்த பரஸ்பர எதிர்மறையான உணர்வுகளுக்கிடையே அலைக்கழிக்கப்பட்டு இத்தனை நாளும் திக்குமுக்காடி வந்தாளோ, அவன் அவள் இருக்குமிடத்திற்கு வந்திருக்கிறான். வந்துவிட்டுப் போயிருக் கிறான்.

கொஞ்சம் கொஞ்சமாக ஒட்ட வைத்துக் கொண்டிருந்த மனம் தடாலென்று உடைந்து விட்டாற்போல் இருந்தது.

அவளால் வாயுபுத்ரனை நேருக்கு நேர் பார்க்க முடிய வில்லை. அவளுக்கு மனவியல் நிபுணர் சொன்னது நினைவுக்கு வந்தது. தன்னையே தான் தேற்றிக் கொள்ள வேண்டும். வாயு புத்ரனிடம் தன் மனதிலிருப்பதைச் சொல்லிவிட வேண்டும் என்று நினைத்திருந்தவள், யஷ்வந்தைப் பற்றிய பேச்சு இந்த விதமாக வந்ததால் கொஞ்சம் தயங்கினாள். அங்கிருந்து எழுந்து போய்விட்டாள்.

உற்சாகத்துடன் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்த வாயுபுத்ரன். அவள் அவ்வாறு எழுந்த போனதைப் பார்த்து ஆச்சரியத்துடன் அப்படியே நின்று விட்டான். அவள் நடவடிக்கை அவனுக்குப் புரிபடவில்லை. கொஞ்ச நேரம் சொற்பொழிவை நிறுத்தியவன் மீண்டும் தொடர்ந்தான்.

இது இங்கே நடந்து கொண்டிருந்த அதே சமயத்தில், அங்கே கீழ்த் தளத்தில் விஞ்ஞானிகள் கலவரத்தோடு அங்கும் இங்கும் சுற்றிக் கொண்டிருந்தார்கள். விண்வெளி நகரத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்த வாகனம் யாரோ பழி வாங்கியது போல் விபத்தில் சிக்கிக் கொண்டுவிட்டது. அந்த வாகனத்தில் இருந்த யஷ்வந்த் மெயின் கண்ட்ரோலரிடம் இருந்தான். அவனுடன் பயணம் செய்து கொண்டிருந்த மற்ற இருவரும் வெவ்வேறு கம்ப்யூட்டர்களுக்கு அருகில் இருந்

தார்கள்.

திடீரென்று அந்த வாகனம் அப்படியும் இப்படியும் ஆடத் தொடங்கியது. அதை எதிர்பார்க்காத இரு வானியல் விஞ்ஞானிகளும் தாம் இருந்த இடத்திலிருந்து தூக்கி எறியப் பட்டார்கள். வாகனத்தில் இருந்த செயற்கை புவியீர்ப்பு சக்தி போய் விட்டது. புயலில் சிக்குண்ட படகைப்போல் வாகனம் ஆடத் தொடங்கியது. அதிர்ஷ்டவசமாக யஷ்வந்த் அந்த சமயத் தில் நாற்காலியில் உட்கார்ந்திருந்தான். மற்ற இருவரும் வாகனத் தின் சுவரின் மீது அப்படியும் இப்படியுமாக மோதிக் கொண்டார்கள். கண்ணீர் நிரம்பிய கண்களுடன் யஷ்வந்த் தன்னோடு துணையாக வந்த அவ்விருவரின் மரணத்தை பார்த்துக் கொண்டிருந்தான். எல்லாம் ஒரு நிமிடத்தில் நடந்து முடிந்துவிட்டது.

அதற்குள் கம்ப்யூட்டரின் எச்சரிக்கை காதில் விழுந்தது. "ஐந்து நிமிஷத்தில் ராக்கெட் வெடித்துவிடும். வெகேட்... வெகேட்..." சிவப்பு விளக்கு எரிந்தது.

யஷ்வந்திற்கு மூளை குழம்பியது. விண்வெளியில் இடத்தை காலி செய்யச் சொன்னால் எங்கே போவது? என்ன தான் நடந்தது? புவிஈர்ப்பு சக்தியிலிருந்து விடுபட்ட உடல்கள் அவ்வளவு வேகமாக அப்படியும் இப்படியுமாக எவ்வாறு போக முடிந்தது. வாகனத்தின் அடிபாகத்தில் இருக்கும் செயற்கை ஈர்ப்பு சக்தி மேல் பாகத்திற்கும், சுவர்களுக்கும் அவ்வளவு வேகமாக எப்படி பரவியது? யோசிக்க நேரமில்லை. ராக்கெட்டிலிருந்து வெளியேற வேண்டும். எப்படி? அவனுக்கு ராய் நினைவுக்கு வந்தான். அவனைப் போலவே சூனியத்தில் கொஞ்ச நாட்கள் சுற்றிக் கொண்டிருந்து விட்டு விண்வெளி யோடு கலந்துவிட வேண்டியதுதானோ? இதைத் தவிர வேறு வழியில்லை. ராக்கெட்டோடு சேர்ந்து எரிந்து விடுவது

நல்லதா? விண்வெளியில் சுற்றிக் கொண்டு பூமியையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும் பார்த்துக் கொண்டே மெல்ல உயிரை விடுவது நல்லதா? ஏதோ ஒன்றைத் தேர்ந் தெடுத்துக் கொள்ள வேண்டும்.

இரண்டாவதே மேல் என்ற முடிவுக்கு வந்தான் அவன்.

கிரௌண்ட் கண்ட்ரோலுக்குப் போன் செய்து "ராக்கெட்டை விட்டுவிடப் போகிறேன்" என்றான்.

பூமியிலிருந்த இன்ஜினியரின் குரல் பாரமாக ஒலித்தது. "வி ஆர் சாரி."

"இட்ஸ் ஆல் ரைட்."

கம்ப்யூட்டரில் சிவப்பு எழுத்துக்கள் வெக்கேட்... வெக்கேட்... வெக்கேட்...

அவன் ஏர் லாக்கை ரிலீஸ் செய்தான். பூமியிலுள்ள கோடானுகோடி மக்களும் டி.வி.யில். தன் மரணத்தைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள் என்று தெரியும் அவனுக்கு.

அனுஹ்யா கூட பார்த்துக் கொண்டிருப்பாளோ?

மரணத்தை முன் கூட்டியே தெரிந்து கொண்டிருப்பவர் கள் சிலர் உண்டு. அவர்கள் முற்றும் துறந்த முனிவர்களாக யிருக்கலாம். தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளாக இருக்கலாம். இப்பொழுது அந்த லிஸ்டில் விண்வெளிப் பயணி களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்காவது கடைசி நிமிடத்தில் ஜனாதிபதி கருணை கிடைக்கலாமோ என்னவோ. ஆனால் பூமிக்குப் பல லட்சம் மைல்களுக்கு அப்பாலிருக்கும் ராக்கெட் வெடித்து விட்டால், எந்த சக்தியால்தான் காப்பாற்ற முடியும்? கம்ப்யூட்ட ரின் கௌண்ட் டவுன் தொடங்கிவிட்டது. 275 வினாடிகள்.

சுமார் நாலரை நிமிஷங்கள்.

அவனுக்கு பயம் ஏற்படவில்லை. ஒருவிதமான சலன மில்லாத தன்மை வந்து சூழ்ந்து கொண்டது. எப்படியும் சாவு உறுதி என்று தெரிந்துவிட்டால் பயம் தோன்றாது. அதை விட அதீதமான உணர்வு தோன்றும்.

அதற்குள் லாஞ்ச் கண்ட்ரோலரின் குரல் கேட்டது.

"ஹலோ... ஹலோ..."

யஷ்வந்த் "ஹலோ" என்று குரல் கொடுத்தான். ராக்கெட் வெடிக்க இன்னும் 240 வினாடிகள் இருந்தன.

"சாரி யஷ்வந்த்."

"அதையே ஒரு நிமிஷத்திற்கு முன்னாடி கூட சொனன் தாக நினைவு."

"நாங்கள் ...ஐ மீன்... உங்களுக்கு ஏதாவது வேண்டு மானால்..."

யஷ்வந்த் சிரித்துவிட்டு "தூக்கில் போடும் முன்னால்கூட இதேபோல் இறுதி விருப்பம் கேட்பார்கள்" என்றான்.

"ஏளனம் வேண்டாம் மிஸ்டர் யஷ்வந்த்."

"எனக்கு ஒரே ஒரு விருப்பம்தான்."

"என்ன?"

"திடீரென்று இந்த விண்வெளிக் கப்பல் ஏன் இந்த மாதிரி ஆகிவிட்டது? அந்த ஒரு விஷயத்தை மட்டும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்."

"சாரி யஷ்வந்த்.... நாங்கள் இன்னும் அதற்கான காரணத் தைத் தேடிக் கொண்டு இருக்கிறோம். கிடைக்கவில்லை"

என்று ஒரு நிமிடம் நிறுத்திவிட்டு "நீ யாருடனாவது பேச விரும்பினால் கனெக்ஷன் தருகிறேன்" என்றார்.

"என் கடைசி தருணத்தில் அந்த மாதிரி கடைசியாக பேசணும்னு நினைக்கிறாப் போல் ஒருத்தருமே கிடையாது என் வாழ்க்கையில்," மனதில் நினைத்துக் கொண்டான்.

ஆனால் அதற்குள் மனதில் சட்டென்று ஒரு யோசனை குபுக்கென்று வெளியே வந்தது.

அனூஹ்யா! ஒரு காலத்தில் தன் மனைவி. இன்னும் தன் எண்ணங்களில் நிலைத்துப் போய்விட்ட பிம்பம்! கடைசித் தருணத்தில் அவனோடு பேச முடிந்தால்...

அவன் அதற்குமேல் யோசிக்கவில்லை. யோசிப்பதற்கு நேரமும் இல்லை. எண்ணிக்கை 200 விநாடிகளைக் காட்டியது.

"அனூஹ்யான்னு ஒரு பயோகெமிஸ்ட் இருப்பாள். அவள் எங்கே இருக்கிறாள் என்று எனக்குத் தெரியாது. முடிந்தால்... அவளுடன் பேச முடிந்தால்..." பாதியிலேயே நிறுத்திக் கொண்டான். ஆனந்தமாகச் சாகிறேன் என்று முடிக்காமல்...

"சயின்ஸ் சிடியில் அவள் இருந்தாளானால் உன் விருப்பம் நிறைவேறும் வாய்ப்பு இருக்கிறது யஷ்வந்த்."

கன்ட்ரோலரின் கைகள் வேகமாக டெர்மினல்களைத் தேடின. இரண்டு நிமிஷத்தில் அனூஹ்யா பயோ கெமிஸ்ட் என்ற வார்த்தைகள் திரையில் பளிச்சிட்டன. டெலிவிஷன் திரையில் யஷ்வந்த் போனில் பேசுவது தெரியத் தொடங்கியது.

அனூஹ்யா போனை எடுத்து "ஹலோ..." என்றாள். மறுமுனையில் லாஞ்ச் கண்ட்ரோலரின் குரல் கேட்டது. நேரத்தை வீணடிக்காமல் சுருக்கமாக, "மிஸ் அனூஹ்யா! விண்

வெளிக் கப்பலிலிருந்து யஷ்வந்த் என்ற பயணி உங்களுடன் பேச விரும்புகிறார். க்விக்..." என்று சொல்லிவிட்டு இறுதியில், "இரண்டு வினாடிக்குரிய தூரத்தை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்" என்று முடித்தார்.

(பூமியிலிருந்து புறப்பட்ட ஒலியலை விண்வெளிக் கப்பலைப் போய்ச் சேருவதற்கு இரண்டு வினாடி நேரம் ஆகும். அதனால் இங்கிருந்து யாராவது விண்வெளியி லிருப்பவர்களுடன் பேச வேண்டுமென்றால் அந்த இடை வெளியை கவனத்தில் கொண்டு பேச வேண்டும்.)

தான் கேட்டதை அனுஹ்யாவிற்கு ஒரு வினாடி ஒன்றும் புரியவில்லை. யஷ்வந்தின் பெயரைக் கேட்டதும் அவள் மனம் பனியில் மூழ்கியது போல் திக்குமுக்காடியது. அப்பொழுது தான் அவள் வாயுபுத்ரனின் சொற்பொழிவைக் கேட்டுவிட்டு, அதில் யஷ்வந்த் பற்றிய பேச்சு வந்ததால் மனம் சிதறி அங்கிருந்து எழுந்து வந்து விட்டிருந்தாள். மீட்டிங் நடந்து கொண்டிருந்த ஹாலை விட்டு வெளியே வந்ததுமே இந்தச் செய்தி!

அவள் போனைக் கையில் எடுத்துக்கொள்ளப் போன பொழுது அருகிலிருந்த வேதபிரியா "விண்வெளிக்குப் புறப் பட்ட கப்பல் விபத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறது. ஜெட்டி ஸன் நடந்து கொண்டிருக்கிறது" என்று சொன்னாள். விண் வெளிக் கப்பலுடன் தாமும் வெடித்துச் சிதறிப் போவதை விரும்பாமல், அதில் பயணம் செய்பவர்கள் விண்வெளியில் இறங்கி அங்கேயே இறப்பதை ஜெட்டிஸன் என்பார்கள். அவளுக்கு இரக்கம் ஏற்பட்டது. அதே சமயத்தில் இந்தச் செய்தி வந்து சேர்ந்திருக்கிறது. யஷ்வந்த்தான் அந்தப் பயணி என்ற அதிர்ச்சி.

ஒரே சமயத்தில் இரண்டு அதிர்ச்சிகள்...

இத்தனை நாட்களுக்குப் பிறகு அவன் குரல்...

அதைக் கேட்ட அதிர்ச்சியிலிருந்து மீளுவதற்கு முன்பே அந்தக் குரலுக்கு உரியவன் இன்னும் மூன்று நிமிஷங்களில் இறந்துவிடப் போகிறான் என்ற உண்மை...

அவள் திக்குமுக்காடினாள். ஆனால் அந்த உணர்வில் முற்றிலும் ஆழ்ந்திருக்க முடியாதவாறு பரபரப்பு. நேரமும் இருக்கவில்லை.

"ஹலோ" என்றாள் நடுங்கும் குரலில்.

அத்தனை நாட்களுக்கு பிறகு கேட்ட அவள் குரல் அவனை மகிழ்ச்சியில் திளைக்கச் செய்தது. "அனூஹ்யா..." என்றான். "எனக்கு இன்னும் கொஞ்சமாவது அதிர்ஷ்டம் ஒட்டிக் கொண்டிருக்கிறது என்று தோன்றுகிறது. இல்லா விட்டால் இந்தக் கடைசிச் சமயத்தில் நீ கிடைப்பாயா சொல்லு? இவ்வளவு ஆண்டுகளாய்த் தேடியும் கிடைக்காத நீ..." என்ற அவன் குரலில் மாறுபாடு தோன்றியது. "அனூஹ்யா! என்னை உனக்கு ஞாபகமாவது இருக்கா?"

அவள் தொண்டையை ஏதோ அடைத்தாற் போலிருந்தது. "ய... யஷ்வந்த்" என்றாள் குரல் கம்ம. அந்த ஒரு வார்த்தை போதும். அவனுக்குப் புரிந்துவிட்டது. லேசாக பெருமூச்சு விட்டான்.

"நாம் பிரிந்து போனபோது நீ சின்னப்பெண். இப்போது எப்படி இருக்கிறாய் அனூஹ்யா? என் மேலிருந்த பயம் போய் விட்டதா?"

"..."

"பேசு அனூஹ்யா! நான் சாவின் வாயிலில் அடியெடுத்து வைப்பதற்கு இன்னும் இரண்டே நிமிஷங்கள்தான் பாக்கி

யிருக்கு. ஒரே ஒரு கேள்வி பிறகு. இத்தனை வருடங்களில் ஒரு தடவையாவது என்னைப் பற்றிய ஞாபகம் வந்ததா?"

"ஐயோ... உங்களுக்கு எப்படிச் சொல்லி நம்ப வைப்பது? உங்களைப் பற்றிய யோசனைகளைத் துறக்க முடியாதவளாய், கடைசியில் சைக்ரியாடிஸ்டைக் கூப் போய்ச் சந்தித்தேன் என்று எப்படிச் சொல்லுவேன்? இந்தக் கடைசி சமயத்தில் இதையெல்லாம் என்னால் எப்படி விளக்கிச் சொல்ல முடியும்? மனதிற்குள் எண்ணிய அவள். துக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு சொன்னாள்.

"யஷ்வந்த்! நீங்க பிழைத்துக் கொள்வீங்க யஷ்வந்த்! எனக்கு ஏனோ நம்பிக்கை இருக்கிறது. என் மனம் சொல் கிறது யஷ்வந்த்..."

மறுமுனையிலிருந்து சிரிப்புச் சத்தம் கேட்டது. 'உனக்கு இன்னும் சிறு பெண்ணின் குணம் மாறவில்லை அனூஹ்யா' என்பது போல்.

கம்ப்யூட்டர் 100 வினாடிகளைச் சுட்டிக்காட்டியது. கப்பலை விட்டு வெளியேறுவதற்கு இன்னும் முழுதாக இரண்டு நிமிடங்கள் கூட பாக்கியில்லை.

"இத்தனை வருடங்களாக நான் உன்னைப் பற்றியேதான் நினைத்துக் கொண்டிருந்தேன் அனூஹ்யா. இதைச் சொல்லத் தான் இந்தக் கடைசி சமயத்தில் உன்னோடு பேசுவதற்கு முயற்சி செய்தேன். அதிர்ஷ்டவசமாக நீ கிடைத்துவிட்டாய். கடவுளுக்கு மிக அண்மையில் விண்வெளி எல்லையில் இருக் கிறேன். விண்வெளியிலேயே இறக்கப் போகிறேன். நாளைக்குக் கடவுளிடம் போனதும் ஒரே ஒரு வரம்தான் கேட்கப் போகிறேன். அடுத்த ஜென்மத்தில் நம் இருவருக்கு மிடையே வயது இடைவெளியைக் கொஞ்சம் குறைக்கச் சொல்லி. அவர்

மட்டும் ஒப்புக்கொண்டுவிட்டால்... அனூஹ்யா... கேன் யூ லவ் மீ?"

கேன் யூ லவ் மீ?

கேன் யூ லவ் மீ?

லட்சக் கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்து தன் முன்னால் கணவன் கேட்கிறான்... நீ என்னைக் காதலிப்பாயா என்று. சாவின் கடைவாயிலில் இருக்கும் அவன் அவளைக் கேட்கிறான், நான் உனக்கு ஒரு தடவையாவது ஞாபகம் வந்தேனா என்று? இங்கே தான் இருக்கும் நிலைமை அவளுக்கு முக்கியம் இல்லை. அவன் கேள்வி கேட்ட சூழ்நிலைதான் முக்கியம். அவள் மேற்கொண்டு தாமதிக்கவில்லை. வாயுபுத்ர னைப் பற்றியோ, மனவியல் நிபுணர் சொன்னதையோ கூட நினைத்துப் பார்க்கவில்லை. உண்மையைக் காட்டிலும் உணர்வு பெரியது.

அவள் கையிலிருந்த போன் நடுங்கியது. கண்ணீரால் அவள் கன்னங்கள் நனைந்தன. "ஐ லவ் யூ யஷ்வந்த்!" என்றாள் நடுங்கும் குரலில் ஆவேசத்தோடு. "அது மட்டுமில்லை!" என்றாள் நடுங்கும் குரலில் ஆவேசத்தோடு. "அது மட்டு மில்லை யஷ்வந்த்! நாம் பிரிந்துபோன நாளிலிருந்து உங்களைப் பற்றி நினைக்காத நாளே கிடையாது. இது சத்தியம்" என்றாள்.

அந்த வார்த்தையால் அவன் மனம் இலேசாகிவிட்டது. மகிழ்ச்சியில் மிதந்து கொண்டிருந்தவன் "தாங்க்யூ அனூஹ்யா... தாங்..." என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே போன் கட் ஆகிவிட்டது. தன் கடைசி மகிழ்ச்சியைக் கூட இறுதி வரையிலும் வெளிப்படுத்திக்கொள்ள முடியாதபடி இடையி லேயே தடை செய்ததற்கு அவர்கள்பால் கோபம் வந்தது அவனுக்கு. கோபமாக ஏதோ சொல்ல வந்தபோது லாஞ்ச்

கன்ட்ரோலர் லைனுக்கு வந்து, "யஷ்வந்த்! உன்னோடு வாயுபுத்ரன் பேசணுமாம்" என்றார்.

யஷ்வந்த் கம்ப்யூட்டரைப் பார்த்தான்.

50 வினாடிகள் இருந்தன.

மரணத்திற்கு ஐம்பது வினாடிகளுக்கு முன்னால் அவன் தன்னோடு பேசுவதற்கு என்ன இருக்கிறது? இவ்வளவு நாட்களுக்குப் பிறகு மனதிற்கு நிம்மதியைத் தரக்கூடிய இந்தக் கடைசி நிமிஷத்துச் சந்தோஷத்தை அவன் ஏன் பாழடிக் கிறான்?

அதற்குள் மறுமுனையிலிருந்து கேட்டது. "வாயுபுத்ரன் ஹியர். எனக்கு ஒரு யோசனை வந்திருக்கிறது."

"என்ன?"

"உங்கள் விண்வெளி உடையோடு டென் எம் ரேடியோ வைப் பொருத்திக் கொள்ளுங்கள். நாங்கள் ராடார் மூலமாக ட்ராக் செய்து பிடித்துவிடுகிறோம்."

அவ்வளவு பதற்றத்திலும் யஷ்வந்திற்கு சிரிப்பு வந்தது. "இருபத்தொன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆர்தர் கிளார்க் கின் கதை எதையாவது படித்தீங்களா?" என்றான்.

வாயுபுத்ரன் அதைப் பொருட்படுத்தவில்லை. நேரம் இன்னும் 36 வினாடிகளே இருந்தன. மளமளவென்று பேசத் தொடங்கினான். "சரியாக அரைமணி நேரம் கழித்து நாங்கள் புறப்படுகிறோம். நீங்க செய்ய வேண்டியதெல்லாம் ஒன்று தான். விண்வெளிக் கப்பலைவிட்டு வெளியே சூனியத்திற்கு வரும்போது எவ்வளவு முடியுமோ அவ்வளவு பலமாக அதை தள்ளவேண்டியது மட்டும்தான்."

"என்ன?"

"சந்திரனின் மேல் விழுந்துவிடாமல் எவ்வளவு நேரம் முடியுமோ அவ்வளவு நேரம் வெளியிலேயே சுற்றுவதற்கு முயற்சி செய்யுங்கள்."

ஒரு விமானத்திலிருந்து பந்தை வீசி எறிந்தால் அது பூமியின் மேல் வந்து விழும். அதற்குள் இன்னொரு விமானத்தில் கிளம்பி அந்தப் பந்து தரையில் வந்து விழுவதற்குள் அதை இடையிலேயே காற்று மண்டலத்தில் பிடித்துவிடணும். இந்த யோசனைதான் வாயுபுத்ரன் சொன்னான்.

"உங்களுக்கு புத்தி பிசகிவிட்டது" என்றான் யஷ்வந்த். எண்ணிக்கை 26 வினாடியை காட்டியது.

"ஒன்றுமே செய்யாமல் இருப்பதைவிட எதையாவது ஒன்றைச் செய்வது நல்லது."

"தாங்க்ஸ்."

"நான் சொன்னாற்போல் செய்வீங்கள்தானே?"

"நான் தாங்க்ஸ் சொன்னது அதற்காக இல்லை."

"பின்னே?"

"இறந்து போகும் முன் கடைசி நிமிடத்தில்கூட கொஞ்சம் ஆசையைத் துளிர்க்கச் செய்ததற்கு."

"நாங்கள் புறப்படுகிறோம். நீங்க சொன்னதுபோல் செய்யறீங்க. அவ்வளவுதான்." போன்கட் ஆகிவிட்டது.

கம்ப்யூட்டர் இருபது வினாடிகளைக் காட்டியது. யஷ்வந்த் பின் பக்கத்து டெஸ்க்லிருந்து ஸ்பேஸ் குட்டை கையில் எடுத்தான். அத்துடன் டென் எம் ரேடியோவையும் பொருத்திக் கொண்டான். அதன் மூலம் பத்து மைல் எல்லைக் குள் எங்கே இருந்தாலும் சரி. ராடார் அதனைக் கண்டு பிடிக்கும்.

இதையெல்லாம் பண்ணிக்கொண்டிருந்தானே தவிர அவனுக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. கணக்குப் போட்டுப் பார்த்தான். தன் முதுகில் பொருத்தியிருந்த ஆக்சிஜன் பிரச்னை யில்லை. விண்வெளிக் கப்பலிலிருந்து வெளியேறும் சமயத்தில் எவ்வளவு வேகமாக வெளியே வர முடிந்தால் அத்தனை சுற்று கள் சந்திரனை சுற்றி வர முடியும். (ஒரு பலம் வாய்ந்த காந்தத் துடன் கயிற்றினைக் கட்டி, அதன் ஒரு முனையோடு ஒரு ஆணியைக் கட்டி, பலமாக சுழற்றினால், விஷ்ணுச் சக்கிரம் சுழலுவது போல் அந்த ஆணி அதைச் சுற்றிச் சிலமுறை சுழலும். ஆனால் மெல்ல மெல்ல அதன் வேகம் குறைந்து, அந்த காந்தத்தை நோக்கிப் போகத் தொடங்கும். எவ்வளவு அதிகம் தடவை சுற்றும் என்பது எவ்வளவு பலமாக அந்த ஆணியைச் சுழற்றுகிறோம் என்பதைப் பொறுத்து இருக்கும். இந்த தியரிதான் இங்கேதான் பொருந்தும்.)

ஆனால் மெள்ள மெள்ளமாக சந்திரனை நோக்கி நழுவிக் கொண்டே போய்விடுவான். உடல் சிதைந்துவிடும். அவ்வாறு நிகழ்வதற்கு இரண்டு மணி நேரத்திற்கு மேல் ஆகாது. ஏன் என்றால் எத்தனை ரவுண்டுகள் சுற்றினாலும் சூனியத்தில் இரண்டு மணி நேரங்களுக்கு மேல் தாக்கு பிடிக்க முடியாது. சந்திரனின் ஈர்ப்பு சக்தியால் கவர்ந்திழுக்கப் பட்டுவிடுவான். அதற்குள் பூமியிலிருந்து அவர்கள் புறப்பட்டு விடுவார்கள். ஆனால் எப்படிப்பட்ட துரிதகதியில் காரியங் களை முடித்துக் கொண்டு புறப்பட்டாலும் சந்திரனைப் போய்ச் சேர அவர்களுக்கு நான்கு மணி நேரமாவது ஆகும். அதோடு இங்கே வந்த பிறகு ரேடாரின் உதவியால் தன்னைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். இவ்வளவு பரந்த சூனிய வெளியில் தன் பிணத்தைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு பல நாட்கள் ஆகிவிடும்.

சந்திரனின் மீது இறந்து போனவனின் பிணத்தை எடுத்துச் செல்வதற்காக இவ்வளவு செலவுடன் ஒரு விண் வெளிக் கப்பல் புறப்பட்டு வருவது... வரலாற்றிலேயே இது தான் முதல் முறை!

இன்னும் ஏழுவினாடிகள் பாக்கியிருந்தன.

இறுதி முறையாக அவன் அவ்வறையைப் பார்த்துவிட்டு ஏர் லாக்கை நெருங்கினான். மெல்ல அதைத் திறந்தான்.

பரந்த சூனியவெளி. எண்ணில்லாத நட்சத்திரங்கள், அவனை வரவேற்றபடி.

அவன் பெருமூச்செறிந்தான்.

எதிரேயிருந்த சூனியவெளி எப்படிப்பட்டவரையும் கதிகலங்க வைத்துவிடும். விமானத்திலிருந்து பாராசூட்டை அணிந்துக் காற்றுவெளியில் குதிப்பதுபோல் குதிக்கத் தயாரானான். அந்த நேரத்தில் அவனுடைய பயங்களும். திகிலும் அடங்கிப் போய்விட்டன. தலைக்கு மேல் போய்விட்ட பிறகு ஜான் போனால் என்ன முழம் போனால்தான் என்ன என்றாகிவிட்டது.

எதிரே சந்திரன் சாதாரண கால் பந்தைவிட நூறுமடங்கு பெரிய அளவில் தென்பட்டான். இன்னொரு பக்கத்தில் சூரியன் பூமியின் பின்னால் கருங்கிக் கொண்டிருந்தான். பகலையும் இரவையும் பிரித்துக் கொண்டிருந்த ரேகை அருமை யான காட்சியாகத் தெரிந்தது. இன்னும் முற்றிலும் இருட்ட வில்லை. ஆனால் பூமிக்கு பின் பக்கமாக சூரியன் முற்றிலும் போய்விட்டதால் புராண படங்களில் தெய்வத்தின் தலைக்குப் பின்னாலிருந்து ஒளிக் கதிர்கள் வெளிவருவது போல் சூரியன் தென்படாமல் ஒளியானது கற்றையாய் வெளிவந்து கொண்டிருந்தது. அந்த ஒளியில் சந்திரனில் இருக்கும் மலைத்

தொடர்கள் மங்கலாக தென்பட்டுக் கொண்டிருந்தன. அவை அவன் மரணத்தை வரவேற்பது போல தோன்றியது. அவன் குதிக்க வேண்டிய தருணம் நெருங்கிவிட்டது.

அவன் தன் கால்களை விண்வெளிக் கப்பலின் சுவரில் அழுத்தமாக ஊன்றினான். அவன் முகம் நட்சத்திரங்களை நோக்கி இருந்தது. பலத்தையெல்லாம் கால்களில் திரட்டிக் கொண்டு சூனியத்தை நோக்கிக் குதித்தான்.

விண்வெளிக் கப்பலை அவன் விட்டு நீங்கியதுமே, அவனுக்கும் அந்தக் கப்பலுக்கும் இடைப்பட்ட தூரம் கண் மூடித் திறப்பதற்குள் ரொம்ப தொலைவுக்குப் போய்விட்டது. தான் எவ்வளவு வேகமாக பயணம் செய்கிறோம் என்று அவனுக்கு அப்பொழுதுதான் புரிந்தது. மெல்ல மெல்ல சிறிய தாக புலப்படத் தொடங்கிய அக்கப்பல் திடீரென்று வெடித்துச் சிதறியது தெளிவாகத் தெரிந்தது. அவனுக்கு அந்த ஓசை கேட்க வில்லை. சூனியத்தில் இருந்ததால், ஆனால் கண்ணைப் பறிக் கும் வெளிச்சம் மட்டும் நன்றாகத் தென் பட்டது. வெடித்துச் சிதறிய கப்பல் துண்டுகளும் தன்னுடன் சேர்ந்து சூனியத்தில் சுற்றிச் சுற்றி வந்து கடைசியில் சந்திரனில் போய் விழுந்து விடும் என்று அவனுக்குத் தெரியும். அந்தத் துண்டுகள் அவன் மேல் வந்து மோதிக் கொள்ள நேர்ந்தாலும் நேரலாம்.

சந்திரனினிலிருந்து இரண்டாயிரம் மைல்களுக்கப்பால் சூனிய வெளியில் தன்னந்தனியாய் இருந்தான் அவன். "நான் வாழ்க்கையில் தனியன். இப்பொழுது மரணத்திலும் தன்னந் தனியனாகி விட்டேன்" என்றெண்ணிக் கொண்டான் விரக்தி யுடன், சுமார் இரண்டரை லட்சம் மைல்களுக்கப்பால் இருந்த பூமியைப் பார்த்து. அந்தக் கோளத்தைப் பார்க்கும்போது அவனுக்கு ஆச்சரியமும் வியப்பும் தோன்றியது. ஐநூறு கோடி மக்களுக்கு அது ஒரு புகலிடம். சிலர் உறங்கிக் கொண்டும்,

சிலர் வேலை பண்ணிக் கொண்டும் மேலும் சிலர் விளையாடிக் கொண்டும்... அவரவர்கள் வேலையில் அவரவர்கள்...

விண்வெளிக் கப்பலிலிருந்து எவ்வளவு வேகமாக அவன் குதித்திருப்பான்? மணிக்கு ஐந்து மைல் வேகத்தில் இருக்குமா? அந்த வேகம் அவனை எவ்வளவு நேரம் சூனியத்தில் நிறுத்தி வைக்க வல்லது?

தான் வேகமாக சந்திரனுக்கு மறுபக்கமாக போய்க் கொண்டிருந்ததை கவனித்தான் அவன். அப்பொழுதுதான் ஒரு சுற்று சுற்றி முடித்திருப்பான். சூரியன் முற்றிலும் மறைந்ததுமே பூமி மேலும் பிரகாசமாக தெரிந்தது. அந்த வெளிச்சம் அவன் உடுத்திக் கொண்டிருந்த சூட் மேலும் பட்டு மின்னியது.

அவன் தன்னைத்தானே சுற்றிக்கொண்டே சந்திரனைச் சுற்றி வரலானான். ஒரு முறை தன்னையே தான் சுற்றி முடிக்க பத்து வினாடிகள் பிடித்தன அவனுக்கு. அதைக் குறைக்கவோ அதிகமாக்கவோ அவனால் எதுவுமே முடியவில்லை. தன் கையில் எதுவும் இல்லை என்று புரிந்தது. அந்தப் பக்கமாக திரும்பியபொழுது சந்திரனும், இந்த பக்கமாக திரும்பிய பொழுது நட்சத்திரங்களும் அவனைப் பார்த்துப் பழித்தாற் போலிருந்தன.

எடையில்லாத அந்த நிலையில் பத்து வினாடிகளுக்கு ஒரு முறை அவ்வாறு கிர்ரென்று சூழன்று கொண்டிருந்த போதிலும் வயிற்றுப் பிறட்டல். தலை சுற்றல் இல்லாததை உணர்ந்து வியப்படைந்தான். அவனுக்கு ஆச்சரியத்தை உண்டாக்கிய இன்னொரு விஷயம் என்னவென்றால் அதற் குள் அவன் விண்வெளிக் கப்பலை விட்டு ஒரு மணி நேரம் ஆகியிருந்தது.

கீழே சந்திரன் இன்னும் பிரகாசமாக தென்பட்டுக்

கொண்டிருந்தான். மலைகள், பள்ளத்தாக்குகள்... சந்திரனை நெருங்க நெருங்க தன்னுடைய மரணமும் நெருங்கிக் கொண்டிருப்பதை அறிவான் அவன். அதிகமாகப் போனால் ஒரு மணி அல்லது இரண்டு மணி நேரம். அவ்வளவுதான். சொன்னது போல் வாயுபுத்ரன் புறப்பட்டிருந்தால் இந்நேரம் பாதி தூரம் வந்திருப்பான்.

சந்திரனுக்கு மறுபக்கமாக...

அந்தச் சூனியமே தாலாட்டுப் பாடிக் கொண்டிருக்க அவன் மெல்ல உறக்கத்தில் ஆழ்ந்தான்.

அவனுக்குத் திரும்பவும் விழிப்பு வந்தபோது, பூமி சந்திரனின் விளிம்பை விட்டு கீழே போயிருந்ததை உணர்ந்தான். இப்பொழுது அவன் சந்திரனுக்கு அண்மையில் வந்து விட்டிருந்தான். வேகமாகச் சந்திரனை நோக்கிப் போய்க் கொண்டேயிருந்தான். ஆசை தீர ஒருமுறை பூமியைப் பார்த்துக் கொண்டான். அதுதான் அவன் கடைசி முறையாய் பூமியைப் பார்ப்பது.

சூரியனும் பூமியும் மறைந்துவிட்டதால் அவனைக் காரிருள் வந்து சூழ்ந்தது. இனி ராடாரின் உதவியால் தன்னைக் கண்டு பிடித்தாலும் அந்த வாகனத்தால் அவனைப் பிடிக்க முடியாது.

மணிக்கு நாலாயிரம் மைல் வேகத்தில் அவன் சந்திரனை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான். இப்பொழுது சந்திரனின் மேலிருந்து மலைகள்கூட அவனுக்குத் தென்படவில்லை. ஏதோ ஒரு மலை சிகரம் தன் சரீரத்தைக் கபளீகரம் பண்ணுவதற்காகக் காத்துக் கொண்டிருப்பது மட்டும் தெரியும். இந்த சிகரத்தைத்தான் 1959ல் ரஷ்யன் லூனிக் சந்திரனின் மறு முனைக்கு வந்து போட்டோ எடுத்தது.

சந்திரனுக்கு இருபது மைல் தொலைவில் வந்து சேர்ந்து விட்டான் அவன். அவனுக்கு அனூஹ்யாவைப் பற்றிய நினைவு வந்தது அவளோடு இன்னும் கொஞ்ச நேரம் பேசவிடாமல் செய்துவிட்ட வாயுபுத்ரனின் மீது கோபம் வந்தது.

தொலைவில் உயரமான மலைச் சிகரம் தென்பட்டுக் கொண்டிருந்தது. தான் சென்று கொண்டிருந்த வேகத்தையும், நழுவிக் கொண்டிருந்த நேரம், இவற்றைப் பார்த்த போது அவன் மரணம் அந்த மலையை மோதிக் கொள்வதால் நிகழப் போகிறதென்பது உறுதியாகிவிட்டது. அவன் கணக்குப் போட்டுப் பார்த்துக் கொண்டான்.

இருபது மைல்கள் கீழே, ஐம்பது மைல்கள் தூரத்தில் இருந்தது அது. அவன் இன்னும் பத்து வினாடிகளுக்கொரு முறை தன்னையேதான் சுற்றிக்கொண்டே அதை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான். ஒவ்வொரு சுழற்சி முடியும் போதும் அவனுக்கும் மலைக்கும் இடைவெளி தூரம் பத்து மைல்கள் குறைந்து கொண்டே வந்தது அதாவது இன்னும் ஒரு நான்கு தடவை ஆகாயத்தையும் நான்கு தடவை சந்திரனையும் பார்க்க முடியும்.

அவன் கணக்கிடத் தொடங்கினான். முதலில் முது கெலும்பு முறியுமா அல்லது தலை போய் அதில் மோதிக் கொள்ளுமா? எதுவுமே அவன் கையில் இல்லை. தரையில் விழுந்த டென்னிஸ் பந்து மேலே எம்புவது போல் இந்தச் சந்திர மண்டலத்தில் தன் உடல் நாலைந்து முறை எம்பி விழாமல் ஒரேயடியாய் உயிர் போய்விட்டால் நல்லது.

இன்னொரு முறை சுற்றி முடித்தான்.

மேலே சுழலும் போது ஆகாயம். கீழே சுழலும்போது சந்திரன். தண்ணீரில் மூழ்கும் காகிதத்தைப் போல் அவன் கீழே

இறங்கிக் கொண்டிருந்தான்.

பூமியிலிருந்து அவனுக்காக புறப்பட்ட வாகனம், இன்னும் ஐம்பதாயிரம் மைல்கள் தூரத்தில் இருந்தது. அது சந்திரனை வந்து சேருவதற்குக் குறைந்த பட்சம் அரை மணி நேரம் பிடிக்கும்.

மேலும் ஒரு சுழற்சி முடிந்தது. கடைசியாக ஒரே ஒரு சுற்றுத்தான் பாக்கியிருந்தது. பத்து மைல் தொலைவில் கீழே பள்ளத்தாக்கும், குட்டைகளும் இருந்தன. நடுவில் உயரமான மலைச் சிகரம். அதுவே பூமியாக இருந்தால் அவன் சரே லென்று கீழே விழுந்துவிட்டிருப்பான். சந்திரனின் ஈர்ப்பு சக்தி பூமியைவிட குறைவு என்பதால் சாவானது அவனை மெது வாக இழுத்துக் கொண்டிருந்தது.

அவன் அந்த மலை மீது போய் மோதிக் கொள்வதற்கு நான்கு வினாடிகள் இருக்கும் போது பிரம்மாண்டமான ஒரு வெடிப்பு நிகழ்ந்தது. அவ்விடத்தில் ஒரு தூசிப் படலம் மேலுக்கு எழும்பியது. எரிமலை வெடித்த பொழுது எழும்பும் லாவாக் குழம்பைப் போல் அது உருவெடுத்தது. சந்திரனில் அந்த மாதிரி வெடிப்புகள் சர்வசாதாரணம் இல்லலா விட்டா லும், அரிது ஒன்றுமில்லை.

ஆட்டம்பாம் வெடித்தாற்போல் வெடித்துச் சிதறிய அவ்விடத்தைப் பார்த்து யஷ்வந்த் மனதிற்குள் மகிழ்ச்சியடைந் தான். மலையில் மோதி சாவதைவிட இவ்விதமாக எரிமலை யில் வெந்து சாவது அவ்வளவு துன்பமாக இருக்காது.

அவன் கடைசி சுழற்சியும் முடிவடைந்தது. மேலே எழும்பிய தூசிப்படலமானது வினாடிக்கு ஒரு மைல் வேகத்தில் அவனை நோக்கி வந்து கொண்டிருந்தது. அவன் கண்களை அழுத்தமாக மூடிக்கொண்டான்.

தான் பயணம் செய்துகொண்டிருந்த திசையில் எதிர்த்தாற்போல் ஏதோ ஒரு அலை வந்து மோதித் தன்னைப் பின்னுக்குத் தள்ளிவிட்டது போல் உணர்ந்தான் யஷ்வந்த். அதுவரையிலும் உயிர்மேலிருந்த ஆசையைக்கூட விட்டுவிட்டு கண்களை மூடிக் கொண்டிருந்தவன் இந்த திடீர் விளைவிற்கு அதிர்ச்சியடைந்தவனாகக் கண்களைத் திறந்தான்.

அந்தக் காட்சியைப் பார்த்துத் தலையைச் சுற்றியது அவனுக்கு. சந்திரனை விட்டுத் தொலைவாக போய்க் கொண்டிருந்தான் அவன்...

மறுபடியும் சூனியவெளியை நோக்கி.

சந்திரனிலிருந்து கிளம்பிய புழுதிப் படலத்தைச் சேர்ந்த மண் அவன் விண்வெளி ஆடையில் படிந்து கொண்டிருந்தது. ஆனால் அது அவ்வளவு ஆபத்தானதில்லை. அதே வேகத்தில் அவன் தொலை தூரத்திற்குப் போய்க் கொண்டிருந்ததால். அவன் ஒரு விஞ்ஞானி. நடந்ததை ஊகித்துக் கொண்டான்.

தான் பயணம் செய்த விண்வெளிக் கப்பலின் கெனெடிக் எனர்ஜி நிமிஷத்திற்கு அறுபது மைல் வேகத்தில் தன்னோடு கூடவே பயணம் செய்து, தன்னையும் முந்திக் கொண்டு ஒரு புல்டோசரைப் போல் சந்திரனில் போய் மோதிக் கொண்டிருக் கிறது. அதுதான் இந்த வெடிப்புக்குக் காரணம். அதுதான் அவனைக் காப்பாற்றியிருக்கிறது.

(விண்வெளிக் கப்பலின் எனர்ஜி சூனியத்தில் பயணம் செய்து வெடிக்கக் கூடும் என்ற ஐடியாவைத் தெரிவித்தவர் ஆர்தர் கிளார்க். அதைத்தான் இந்தக் கதையிலும் பயன் படுத்தப் பட்டிருக்கிறது.)

யஷ்வந்த் திரும்பவும் சந்திரனைச் சுற்றி வரத் தொடங்கிய சமயத்தில் வாயுபுத்ரன் மிக வேகமாக அந்த திசையை நோக்கி

வந்து கொண்டிருந்தான். யஷ்வந்திடம் இருந்த ரேடியோ பத்து மைல்கள் சுற்றளவிற்கு சிக்னலை தந்து கொண்டிருந்தது. வாயு புத்ரனிடமிருந்த விண்வெளி ராடார் அதை சீக்கிர மாகவே பிடித்துவிட்டது.

நான்கு நிமிடங்கள் கழிந்த பிறகு வாயுபுத்ரனால் யஷ்வந் தைப் பார்க்க முடிந்தது. அவனுக்கு முதல் முதலாக ஏற்பட்ட உணர்வு இரக்கம். சூனியத்தில் எந்த ஆதாரமும் இல்லாமல் சில மணி நேரங்களாக ஒரு பொருளாக சுற்றிக் கொண்டிருந்த யஷ்வந்தைப் பார்த்ததும் அவனுக்கு இரக்கம்தான் ஏற்பட்டது. பிறகு சந்தோஷம்.

தன் வாகனத்தின் வேகத்தைக் குறைத்துக் கொண்டே யஷ்வந்தின் வேகத்திற்குச் சமமாக கொண்டுவந்தான். யஷ்வந்திடமிருந்து அவனால் ஒன்றும் எதிர்பார்க்க முடியாது. ஒரு பலமான ஆட்டக்காரன் வேகமாக வீசிய பந்தைப் போல் யஷ்வந்த் போய்க் கொண்டிருந்தான். வாயுபுத்ரன் தன் வாகனத்திலிருந்த வலையை வீசி அவனைப் பிடித்துக் கொண்டான். ஏர் லாக்கை தளர்த்தி மெதுவாக அவனைத் தன் வாகனத்திற்குள் இழுத்துக் கொண்டான். அடுத்த நிமிஷம் யஷ்வந்த் அந்த வாகனத்தில் நிற்கக் கூடிய நிலைக்கு வந்தான். இதுவரையிலும் இருந்த சூழ்நிலை மாறி வேறிடத்திற்கு வந்து சேர்ந்ததும் அவன் தேகம் அந்தப் புதிய சூழ்நிலைக்குப் பழக்கப்பட கொஞ்ச நேரம் பிடித்தது. அந்த நிலைக்கு வந்ததும் அவன் தன் விண்வெளி ஆடையைக் கழற்றிவிட்டு, வாயு புத்ரனை முறுவலுடன் பார்த்துக் கையை நீட்டிக்கொண்டே "தாங்க்ஸ்" என்றான்.

வாயுபுத்ரன் அதை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியவில்லை. மேலுக்கு குறும்புக்காரனாக தென்பட்டாலும் அவன் மனம் முழுவதும் சென்டிமென்ட் நிரம்பியிருந்தது.

கண்களில் நீரை அரும்பாடுபட்டு அடக்கிக் கொண்டான். அவன் கைகளைத் தன் கையில் ஏந்திக்கொண்டு ரொம்ப நேரம் அப்படியே இருந்துவிட்டான். மரணத்தின் வாயிலிருந்து மீண்டிருந்தும் யஷ்வந்தால் இவ்வளவு அழுத்தமாக எப்படி இருக்க முடிகிறது என்றுதான் புரியவில்லை வாயுபுத்ரனுக்கு.

யஷ்வந்த் நடந்ததையெல்லாம் விவரித்தான்.

ஒரு அதிசயத்தைக் கேட்பதுபோல் அவற்றைக் கேட்டுக் கொண்டிருந்தான் வாயுபுத்ரன். பூமியைப் போய் அடைந்ததும் இந்தச் செய்தியைச் சொல்லிவிட்டால் போதும். பரபரப்பு ஏற்பட்டுவிடும். கெனெடிக் எனர்ஜியின் சக்தி இவ்வளவு பலம் வாய்ந்தது என்பதை இன்னொரு முறை இந்த விதமாக நிரூபிக்கப்பட்டு விட்டது. ஆனால் இந்த முறை கண்கூடாக...

"இதைப் பார்த்தால் நமக்கு என்ன புரிகிறது தெரியுமா?" யஷ்வந்த் கேட்டான்.

"என்ன?"

"முயற்சியை இறுதி வரையிலும் விடவே கூடாது என்று."

"அதென்னது?"

"நான் விண்வெளிக் கப்பலிலிருந்து வெளியே குதிக்கும் சமயத்தில் எனக்கு எந்த ஆசையுமே இல்லை. நீங்கள் யாரா வது பூமியிலிருந்து புறப்பட்டு இந்த இடம் வரையிலும் வந்து என்னை இந்த சூனியவெளியில் தேடிப் பிடிக்கும் வரையிலும் நான் சந்திரனின் மீது விழுந்து விடாமல் தடுக்க எந்தச் சூழ் நிலையிலும் சாத்தியமில்லை என்று புறப்பட்ட உங்களுக்கும் சரி, குதித்த எனக்கும் சரி தெரிந்ததுதான். அப்படி யிருக்கும் போது, நாம் கடைசி வரையிலும் நம் முயற்சியை விட்டு விடாமல் இருப்பதன் மூலம்தான் இது சாத்தியமாயிற்று. இல்லையென்று மறுக்க முடியுமா உங்களால்?"

வாயுபுத்ரன் தலையை அசைத்தான்.

அவர்களின் வாகனம் திரும்பவும் பூமியை நோக்கிச் சொல்ல ஆயத்தமாயிற்று. சந்திரனை ஒரு முறை சுற்றிவிட்டு அதன் எல்லையை விட்டு வெளியேறத் தயாராக இருந்தது.

அந்தக் காட்சி ரொம்ப மனோகரமாக இருந்தது.

சந்திரனின் ஒரு பக்கமானது எப்பொழுதும் பூலோகவாசிகளுக்குத் தென்பட்டுக் கொண்டே இருக்கும். இவர்களின் வாகனமானது சந்திரனின் மறுபக்கத்திற்குப் போனதால் அங்கிருந்து சந்திரனின் வளைவு வழியாக இந்தப் பக்கத்தில் பூமி... அந்தப் பக்கத்தில் சூரியன் ஒரே சமயத்தில் தென்பட்டன. சூரியனின் ஒளியில் பூமியானது ஒரு பெரிய கால் பந்தைப் போல்... ஊஹூம். அதைவிட பத்து மடங்காக. மூன்று கோளங்களும் ஒரே நேர் கோட்டில்...

"கீழே இருப்பவர்களுக்கு இன்றைக்குச்சந்திர கிரகணம் போலிருக்கிறது."

"இல்லை, சூரிய கிரகணம்" என்றான் யஷ்வந்த். "நாம் சந்திரனுக்கு நடுவில் இருக்கிறோம் மறந்துவிட்டாயா?"

"இல்லை, சந்திரனும், பூமியும், சூரியனும் ஒரே வரிசையில். அதான் இன்றைக்கு சந்திர கிரகணம் என்கிறேன். புறப்படும் போது எனக்குத் தெரியும் இல்லையா இன்றைய சங்கதி?"

"இல்லை, சூரியன், சந்திரன், பூமி..." என்று ஏதோ சொல்ல வந்தவன், சட்டடென்று மூளையில் ஏதோ பளிச்சிட்டாற் போலிருக்கவே, "மைகாட்! நாம் பூமின்னு நினைத்துக் கொண்டிருக்கிற இந்தக் கோளம் பூமியில்லை" கத்தினான் யஷ்வந்த்.

அந்த வார்த்தையை உறுதிப் படுத்துவதுபோல்

அவ்வுருவம் மேலும் நெருங்கியது.

ஒரு பெரிய கிரேனேட் தோற்றத்தில் சுருப்பாக உருண்டை யாக இருந்தது. தன்னையே தான் சுற்றிக்கொண்டே அவர் களைத் தாண்டிக்கொண்டு அபரிமிதமான வேகத்துடன் சூனியத்தை நோக்கிப் போய்விட்டது.

"ஃப்ளையிங் சாசர்... பறக்கும் தட்டு" கத்தினான் வாயு புத்ரன்.

வேகத்தைக் கூட்டு. அதைத் தொடர்ந்து போ" யஷ்வந்த் ஆணையிட்டான்.

"உங்களுக்கு புத்தி ஏதாவது பிசகிவிட்டதா?" என்பது போல் பார்த்தான் வாயுபுத்ரன். "அவர்கள் முதலிலிருந்தே நம் மேல் விரோதம் பாராட்டுகிறார்கள். நிகிலின் சகாக்களை டெலிபதியின் மூலம் வசப்படுத்திக் கொண்டதும், உங்கள் விண்வெளிக் கப்பலை நாசம் பண்ணியதும்கூட அவர்கள் தான்" என்றான்.

வாயுபுத்ரனின் வார்த்தைகளை யஷ்வந்த் பொருட்படுத்த வில்லை. வாகனத்தைத் தன் கண்ட்ரோலில் எடுத்துக் கொண்டு, வேகத்தை அதிகரித்து அது போகும் திசையிலேயே போகச் செய்தான். இனி அதைச் சமீபித்து விடலாம் என்ற நம்பிக்கை வந்ததும், வாயுபுத்ரனிடம் சொன்னான்.

"நீ சொன்னதும் உண்மைதான். ஆனால் நான் புறப் பட்டதுகூட அவர்களைச் சந்திக்க வேண்டும் என்றுதானே. அப்பொழுது இந்தத் தடை எதுவும் இல்லையே? நான் எதற்காகப் புறப்பட்டேனோ அந்த வேலை, அதிர்ஷ்டவசமாக நாம் அவ்வளவு தூரம் போக வேண்டிய அவசியமில்லாம லேயே முடிவடையப் போகிறது. இந்த மாதிரி சமயத்தில் இப்படிப்பட்ட வாய்ப்பை நழுவவிடுவது விவேகமில்லை"

என்று நிறுத்திவிட்டு, "நீ ஏதாவது பயப்படுகிறாயா" என்று கேட்டான்.

வாயுபுத்ரனின் முகம் சிவந்துவிட்டது. "உயிரின் மேல் ஆசையிருப்பவன் எவனுமே இப்படி விண்வெளியில் தேடிக் கொண்டு வர மாட்டான் என்று நினைக்கிறேன்" என்றான் பழிப்பதுபோல்.

"இவ்வளவு கோபப்படணுமா அதுக்கு? உன்னுடையது சின்னப் பையனின் சுபாவம். சும்மாவே உணர்ச்சி வசப்படு கிறாய். சட்டென்று கோபத்தில் கொந்தளிக்கிறாய். நான் என்ன சொல்கிறேன் என்றால், பூமியிலிருந்து பயணத்தைத் தொடங்கிய சமயத்தில் நாம் வேறு வேறு வேலையாகக் கிளம்பினோம். மாயாஸைச் சந்திப்பது என் வேலை. அதில் தோல்வியடைந்து நான் விண்வெளியில் நழுவி விழத் தொடங்கிய போது என்னைக் காப்பாற்ற நீ வந்தாய். அதனால் அந்தப் பறக்கும் தட்டைப் பிடிக்க வேண்டிய பொறுப்பு உனக்கு இல்லை. அந்தப் பொறுப்பு என்னை மட்டும்தான் சேர்ந்தது. அதனால்தான் கேட்கிறேன்."

வாயுபுத்ரன் மௌனம் வகித்தான்.

"என்ன, போவோமா? இந்தக் கப்பலுக்குக் கேப்டன் நீ. போகலாம் என்று நீ சொன்னால்தான் போக முடியும்."

"சரி!"

விண்வெளிக் கப்பல் மேலும் வேகத்தை மேற்கொண்டது. வாயுபுத்ரனின் மனம் பரபரப்பில் ஆழ்ந்திருந்தது.

முதல் முதலாக ஒரு பறக்கும் தட்டை வெகு அண்மையில் பார்க்கிறான் அவன். பறக்கும் தட்டிற்குள் அடியெடுத்து வைக்கப் போகிற முதல் மனிதர்கள் அவர்கள்தான்.

எல்லாவற்றையும் விட முக்கியமாக...

வெகு தூரத்துக் கிரகத்தில் வசிக்கும் பிராணிகளை முதல் முதலாகச் சந்திக்கப் போகும் நபர்களும் அவர்களேதான்.

அவனுள் உத்வேகம் பெருக்கெடுத்தது. எங்கோ... பூமியி லிருந்து பல கோடிக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கும் இன்னொரு ஜீவன்... அவர்களின் உருவம் எப்படி யிருக்கும் என்று தெரியாது. அவர்களுடைய பேச்சு எப்படி இருக்குமென்றும் தெரியாது. அப்படிப்பட்டவர்களை முதல் தடவையாக அவர்கள் பார்க்கப் போகிறார்கள். பூமியைவிட்டு வெகு தூரத்தில், முற்றிலும் வேறுபட்ட சூழ் நிலையில் வசிக்கும் உயிரினத்தைச் சந்திக்கப் போகிறார்கள்.

ஏதோ விவரிக்க முடியாத உணர்வு!!

தம்மைக் காட்டிலும் எவ்வளவோ மடங்கு முன்னேறி யிருப்பவர்கள் அவர்கள். அதில் சந்தேகம் இல்லை. அவர்கள் அறிவைத் தமக்குப் பங்கிட்டுத் தருவார்களா? தம் கிரகத் திற்குப் பூலோகவாசிகளை வரவேற்று அழைத்துச் செல்வார் களா? இண்டர் பிளானடரி பீஸ் சொஸைட்டியில் பூலோக வாசிகள் கூட அங்கத்தினராகும் நாள் வெகு அண்மையி லேயே இருக்கிறதா?

அவர்கள் எப்படி இருப்பார்கள்? தம்மை எப்படி வரவேற்பார்கள்?

கடந்த சில நாட்களாக நிகழ்ந்ததை எண்ணிப் பார்த்த போது அவனுக்கு பயமாகக்கூட இருந்தது. தாம் இருப்பது அவர்களுக்குத் தெரியும். ராயின் மூளை கலங்கிப் போகும்படி செய்திருக்கிறார்கள். யஷ்வந்தின் ராக்கெட்டை எரித்திருக் கிறார்கள்.

ஆனாலும் யஷ்வந்த் அந்தப் பக்கமாகவே பயணம் செய்து கொண்டிருக்கிறான்.

அவன் வாதம் சரியானதே.

திரும்பவும் இப்படிப்பட்ட வாய்ப்பு கிடைக்காமல் போகலாம். இன்னொரு கிரகத்தைச் சேர்ந்தவர்களை நேருக்கு நேராகச் சந்திக்கும் வாய்ப்பு.

ஆனால் வாயுபுத்ரனுக்கு ஒரு சந்தேகம்கூட ஏற்பட்டது. அவ்வளவு கிட்டத்தில் தம்மைப் பார்த்துவிட்டுக்கூட. அவர்கள் ஏன் வெறுமே போய்விட்டார்கள்? விரோதமோ நட்போ எதுவாக இருந்தாலும் தம்மை நெருங்கியிருப்பார்கள் இல்லையா? அவ்வாறு செய்யாமல் ஏன் போய் விட்டார்கள்?

யஷ்வந்த் அதைப்பற்றிப் பெரிதாக எண்ணிக் குழம்ப வில்லை. அவன் தன் வாகனத்தை அந்த வாகனத்திற்கு அருகில் கொண்டு போவதில் கவனமாக இருந்தான். மிக வேகமாகப் போய்க் கொண்டிருந்தது அந்த விண்வெளிக்கப்பல். அதைப் பிடிப்பது சாத்தியப்படவில்லை. ஆனாலும் எப்படியோ ஒருவாறு சாதித்துவிட்டார்கள்.

இப்பொழுது இரண்டு வாகனங்களும் ஏறக்குறைய சமமாகப் போய்க் கொண்டிருந்தன. யஷ்வந்த் விண்வெளி உடையை அணிந்துகொண்டான். முதுகில் சிறிய மினி ராக்கெட்டைப் பொருத்திக் கொண்டான்.

அதற்குள் வாயுபுத்ரன் இந்தச் செய்தியை பூமிக்கு அனுப்பினான். நொடிப் பொழுதில் இச்செய்தி உலகத்தி லிருந்த எல்லா நாடுகளுக்கும் பரவிவிட்டது. பூமியில் சஞ்சலனம் ஏற்பட்டது.

ஆனால் இதில் புரிபடாத விஷயம் ஒன்று இருந்தது. பறக்கும் தட்டில் இருக்கும் மாயாஸ் ஏன் மௌனமாக

இருக்கிறார்கள்? ஒருக்கால் அவர்கள் அனுப்பும் குறிப்புக்கள் தான் சரியாக வந்து சேரவில்லையா? எதுவும் இன்னும் கொஞ்ச நேரத்தில் தெரிந்துவிடும்.

பூமியிலிருந்து கிரீன் சிக்னல் வந்து சேர்ந்துவிட்டது. யஷ்வந்த் ஏர் லாக்கைத் திறந்து, வாயுபுத்ரனைப் பார்த்து கட்டை விரலை உயர்த்தி, தான் கிளம்புவது போல் சைகை காட்டிவிட்டு, சூனியவெளியில் அடியெடுத்து வைத்தான்.

அவன் பறக்கும் தட்டை நோக்கிச் சென்றது டி.வி.யில் துல்லியமாக தெரிந்தது.

வாயுபுத்ரன் பரபரப்போடு பார்த்துக் கொண்டிருந்தான். பூமியிலிருந்த மொத்த ஜனத்தொகையில் பாதிக்கும் மேல் ஆர்வத்தோடு, துடிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அந்த ஒரு அரிய சந்திப்பிற்காக....

இரண்டு வேறுபட்ட கிரகங்களைச் சேர்ந்தவர்கள் ஒன்று கூடுவதற்காக...

அவ்வாறு பார்த்துக் கொண்டிருந்தவர்களில் அனூஹ்யாவும் ஒருத்தி. அவள் மனம் ஏனோ தீங்கை எடை போட்டது.

கைவிரல்கள் நடுங்க, மனம் முழுவதும் உத்வேகத்தில் ஆழ்ந்திருக்க அவள் கண்ணிமைக்காமல் டி.வி. யையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுக்கும் அவனுக்கும் எந்த உறவும் இல்லை. அவனுடைய முன்னாள் மனைவி அவள். தற்சமயம் அதைக் காட்டிலும் வேறெதுவும் இல்லை அவர்களுக்குள். அவன் கொஞ்ச நேரத்திற்கு முன்னால் சொன்ன வார்த்தைகளே அவள் மனதில் திரும்பத் திரும்பச் சுழன்று கொண்டிருந்தன. இந்த உலகத்தில் எல்லோரையும் விட அதிகமாக அவன் நலனை வேண்டுகிறாள் அவள். கணவனின்

நலனை வேண்டும் மனைவியைக் காட்டிலும் அதிகப்படியான பந்தமும், பாசமும் அதற்குப் பின்னால் இருந்தன.

அதற்குள் யஷ்வந்த் அந்த உருண்டை வடிவத்தில் இருக்கும் பறக்கும் தட்டைப் பிடித்துவிட்டான். மணிக்கு சில ஆயிரம் மைல்கள் வேகத்துடன் அந்தப் பறக்கும் தட்டும், யஷ்வந்தும், பூமியிலிருந்து வந்த ராக்கெட்டும் சமமாக சூனிய வெளியில் போய்க் கொண்டேயிருந்தன. ஆனால் மூன்றுமே அதே வேகத்தில் போய்க் கொண்டிருந்தாலும், சுற்றிலும் சூனிய வெளி என்பதால் அந்த வேகம் தெரியவில்லை.

சுவரோடு கட்டியிருக்கும் கயிற்றின் மேல் படருகிற சிலந்தியைப் போல் யஷ்வந்த் அந்தப் பக்கத்திற்குச் சுற்றி வந்தான். பின் பக்கத்தில் இருந்த வாசல் திறந்து கொண்டது. அவன் ஆச்சரியமடைந்தவனாய் அதற்குள் நுழைந்தான்.

உள்ளே நுழைந்ததுமே அவன் உடல் மெல்ல மெல்லக் கனமாவதை உணர்ந்தான். அந்த விண்வெளிக் கப்பலில் கூட இயற்கையான சூழ்நிலை (NEWS - Natural Environment within Ship) இருப்பதை அறிந்தான். அதற்குள் நுழைந்ததுமே அவன் பரிசீலித்தது, அந்தக் கப்பலுக்குள் வெளிச்சம் எப்படி வருகிறது என்பதைத்தான். வெளிச்சம் வந்து கொண்டிருந்த இடங்கள் சின்னச் சின்னக் கற்களைப் போல் ஒளிவீசிக் கொண்டிருந்ததைக் கவனித்தான் அவன். அது போலவே, பூமியிலிருக்கும் எந்த உலோகத்தாலும் அந்தக் கப்பல் தயாரிக்கப்படவில்லை என்பதும் புரிந்தது. மனிதர்கள் கண்டறிந்திராத ஏதோ புதிய உலோகம் ஒன்றினால் அது தயாரிக்கப்பட்டிருந்தது.

அவனை மிகவும் வியப்புக்கு ஆளாக்கிய விஷயம் என்னவென்றால், அதற்குள் எந்த சந்தடியுமே இல்லாமலிருந்ததுதான். விண்வெளிக் கப்பலைப் பார்த்தபோது, அவர்கள் விட்டுவிட்டுப் போன கப்பலா இது என்ற சந்தேகமும்

ஏற்பட்டது. வினாடி நேரத்தில் அது உறுதியாயிற்று. ஆம், இல்லாவிடடால் சூரியனுக்கு அண்மையிலிருந்து இது பூமிக்கு வெகு அருகில் ஏன் வருகிறது?

அவனைத் திடீரென்று ஏமாற்றம் சூழ்ந்துகொண்டது. அவர்கள் விரோதிகளாகவே இருக்கட்டும். அல்லது நண்பர் களாகவே இருக்கட்டும். யாராக இருந்தாலும் சரி, அந்த கிரகாந்தர வாசிகளை ஒரு முறை கண்ணால் பார்த்து அவர் களோடு தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும என்ற ஆர்வத்தில் இருந்தான் அவன். அது இப்பொழுது பலிக்கும் என்று தோன்றவில்லை, அவனுக்கு இன்னொரு சந்தேகமும் வந்தது.

பூமியில் பிராணிகள் திட உருவத்தில்தான் இருப்பார்கள். ஆனால் ஒற்றைச் செல் உயிர்களான புரொட்டேஜோனா அமீபாக்கள் திரவங்களில் கூட ஒன்றாக கலந்து விடக் கூடியவை. இந்த வேற்றுக் கிரகத்தை சேர்ந்தவர்கள் வாயு உருவில்கூட மாறிவிடவல்லவர்களாக இருக்கலாமோ என்ற சந்தேகம் ஏற்பட்டது அவனுக்கு.

ஆனால் அந்த யோசனை அவனுக்கே சரியென்று தோன்றவில்லை. அதற்குள் இயர் ஃபோனில் வாயுபுத்ரனின் குரல் கேட்டது. "யஷ்வந்த்! நீங்க க்ஷேமமாக இருக்கீங்களா?"

தான் இந்தப் பறக்கும் தட்டிற்குள் வந்து சேர்ந்ததுமே இங்கேயிருக்கும் சூழ்நிலையைப் பற்றி விண்வெளிக் கப்பலுக்கு விவரித்துச் சொல்ல மறந்து விட்டதற்கு மன்னிப்பு கேட்டு விட்டு. "இங்கே எந்த உயிரினமும் இருப்பதாக தோன்றவில்லை. இது காலி செய்யப்பட்ட ஒரு வாகனமாகத்தான் தென் படுகிறது" என்றான்.

"ஒருக்கால் வாயு உருவில் இருக்கிறார்களோ என்னவோ?"

"அந்த எண்ணம் எனக்கும் வந்தது. ஆனால் அதெல்லாம் தர்க்கத்திற்கு எட்டாத எண்ணங்கள். திரும்பவும் இரண்டு நிமிடங்கள் கழித்து உன்னோடு பேசுகிறேன்." தொடர்பை துண்டித்துவிட்டு யஷ்வந்த் சுற்றும்முற்றும் பார்த்தான்.

நாற்காலிகளோ வேறு எந்த உபகரணங்களையோ காண வில்லை. அதாவது அந்த உயிர்களுக்கு முதுகெலும்பு இல்லாமல் இருக்கலாம். உட்காரும் வழக்கம் இல்லாமல் இருக்கலாம். எந்த விதமான கம்ப்யூட்டர்களோ, தொழில் நுட்ப சாதனங்களோ இருக்கவில்லை. இந்தக் கப்பலை சூனிய வெளியில் விட்டுவிட்டுப் போன சமயத்தில் அவற்றைத் தம்மோடு கூடவே எடுத்துக் கொண்டு போயிருக்கலாம். அல்லது அப்படி சாதனங்கள் எல்லாமே அவர்களுடைய மூளையாகவே இருக்கக் கூடும்.

கம்ப்யூட்டரையே டெலிபதி மூலம் கன்ட்ரோல் பண்ண முடிந்தவர்களின் மூளைக்கு வேறு கருவிகளும் வேண்டுமா என்ன?

ஒரு மூலையில் சிறிய சிறிய பிளேட்டுக்களைப் போல் இருந்தன. யஷ்வந்த் குனிந்து அவற்றிற்குக் கீழே பார்த்தான். அங்கே பட்டன்களைப் போல் தென்பட்டன. ஆனால் அவற்றிற்கு ஒயர்களோ கனெக்ஷனோ எதுவும் இல்லை. எலெக்ரானிக்ஸை விட நவீனமான சாதனங்கள் அந்தக் கிரக வாசிகளுக்குத் தெரிந்திருக்கலாம். பிளேட்டிற்கு அடியில் பட்டன்கள் இருந்ததால், மனிதர்களைப் போல் உயரமாக அல்லாமல் அவர்கள் தரையோடு தரையாக, அகலவாக்கில் இருப்பவர்களாக இருக்கலாம் என்று ஊகித்துக் கொண்டான். மற்றொரு அறையிலிருந்த படுக்கையைப் போன்ற பொருளைப் பார்த்ததும் தான் ஊகித்தது சரிதான் என்று உறுதியாக நம்பினான். தான் பார்த்ததை வைத்துக்கொண்டு அவர்கள்

எப்படி இருப்பார்கள் என்று கற்பனை செய்து பார்த்தான்.

பூமியில் எல்லோருக்கும் தான் சொல்லப் போகும் தகவலுக்காக ஆவலுடன் காத்திருப்பார்கள் என்பதை அவன் அறிவான். அதுவரை பார்த்தவற்றை ரன்னிங் கமெண்டரியைப் போல் தெரிவிக்கத் தொடங்கினான்.

"அந்தக் கிரகவாசிகளின் அடையாளம் ஒன்று கூடவா தென்படவில்லை?"

"ஒன்றுமே இல்லை. கப்பலை காலி செய்துவிட்டுப் போயிருப்பார்கள் என்று தோன்றுகிறது." பூமியிலிருந்து வந்த கேள்விக்கு பதிலளித்தான்.

"நமக்கு உதவக் கூடிய சமாசாரம் வேறு ஏதாவது இருக்கிறதா?"

"இன்னும் தேடிக் கொண்டுதான் இருக்கிறேன். ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு உங்களுடன் தொடர்பு கொள்கிறேன்."

அவன் திரும்பும் பரிசோதனையைத் தொடர்ந்தான். மேலும் நான்கு நிமிடங்கள் கழிந்துவிட்டன. அவனுக்கு எந்த முடிவும் தோன்றியபாடில்லை. அவனுக்குத் தான் நினைத்ததே உண்மை என்று பட்டது. எலெக்ரானிக்கைக் காட்டிலும் நவீனமான ரிமோட் கண்ட்ரோல் மூலம் இந்த விண்வெளி வாகனத்தில் எல்லா வேலைகளும் நடந்து வந்து கொண்டிருக்கலாம்.

இறுதியாய் அவன் மெஷின் ரூமுக்குள் நுழைந்தான். அங்கு தென்பட்ட காட்சி அவனை வியப்படையச் செய்தது. சாதாரண சூழ்நிலையில் அதை மிஷின் ரூம் என்றால் யாருமே நம்ப முடியாது. ஆனால் அந்த விண்வெளிக் கப்பலுக்குள் வந்ததிலிருந்தே ஒவ்வொரு அறையாய் பார்த்துக் கொண்டே வந்திருப்பதால் அவனால் நம்ப முடிந்தது. கம்ப்யூட்டர்களோ,

ஒயர்களோ, சக்தியைத் தரும் இயந்திரங்கள், இண்டிகேட்டர்கள் எதுவுமே இல்லை. ஒரு செல்வந்தனின் படுக்கையறையைப் போல் இருந்தது அது.

அவன் வியப்பு எல்லை கடந்தது. தான் பார்த்ததும், ஊகித்துக் கொண்டிருப்பதும் உண்மை என்றால், அந்தக் கிரக வாசிகள் மேதாவிகளாகவும், அபாரமான அறிவு படைத்தவர்களாகவும் இருக்கவேண்டும். அல்லது அவர்களின் கெனெடிக் எனர்ஜி மிக சக்தி வாய்ந்ததாக இருக்க வேண்டும்.

அவர்களின் உடலில்தான் அந்த சக்தி இருக்கிறது என்று வைத்துக் கொண்டாலும், அவர்கள் விட்டுவிட்டுப் போயிருக்கும் இந்த கப்பலில் அந்த சக்தி எப்படி வந்திருக்கக் கூடும்? இன்னும் இந்த விளக்குகள் எப்படி எரிந்து கொண்டிருக்கின்றன? எப்படியாவது பரிசோதித்துத் தெரிந்து கொள்ளாமல் அந்தக் கப்பலை விட்டு வெளியேற அவன் விரும்பவில்லை. சக்தியின் மூலாதாரத்தை பரிசோதிக்க அவன் விண்வெளிக் கப்பலில் வெளிச்சத்தைத் தரும் விளக்கைத் தேர்ந்தெடுத்தான்.

சாதாரண பல்பைப் போல் தான் இருந்தது அது. ஆனால் கண்ணாடி லேயர் எதுவும் இல்லை. பழங்காலத்தில் ராஜாக்களின் கிரீடங்களில் மின்னியப் பிரகாசத்தைத் தரும் வைரம் போல் இருந்தது. அதற்கு எதனுடனாவது கனெக்ஷன் இருக்கிறதோ பார்ப்போம் என்று சோதிக்க நினைத்தான். அவன் கை அதைத் தொட இன்னும் ஓரடி தூரம் இருக்கும் போதே ஷாக் அடித்தாற்போலிருந்தது.

பின்னால் தூக்கி எறியப்பட்டான்.

அவனுக்கு விழிப்பு வந்து கண்களைத் திறந்தபோது எதிரே வாயுபுத்ரன் கலவரத்தோடு தன்னையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தது தெரிந்தது.

"எவ்வளவு நேரமாச்சு நான் இந்த மாதிரி விழுந்து?" என்று கேட்டான்.

"அரைமணி நேரம்."

அப்பொழுதுதான் கவனித்தான் அவன். தான் பறக்கும் தட்டில் இல்லை என்பதையும், விண்வெளிக் கப்பலிலேயே இருப்பதையும் உணர்ந்தான். அவன் சந்தேகத்தை உணர்ந்து விட்டவன் போல் வாயுபுத்ரன், "பத்து நிமிஷமாக தொடர்பு கொள்ள முயற்சி செய்தேன். உங்களிடமிருந்து பதில் வராத தால், அந்த மாயாஸ் உங்களை ஏதாவது செய்து விட்டார் களோ என்னவோ என்று பயந்தேன். உடனே நானும் அந்த வாகனத்திற்குள் நுழைந்தேன். நீங்கள் நினைவிழந்து கிடந் தீர்கள். முதலில் அங்கே இருந்து உங்களை வெளியே கொண்டு வருவது முக்கியம் என்று தோன்றியது. கொண்டு வந்தேன்" என்றான் முறுவலுடன்.

"அதற்காக நம் ஆட்களிடமிருந்து அனுமதி வாங்கி விட்டீர்களா?"

"இந்த மாதிரி துணிச்சலான காரியங்களுக்கு நம் ஆட்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். உங்களுக்குத்தான் தெரியுமே."

யஷ்வந்த் வாயுபுத்ரனை நன்றியுடன் பார்த்தான். அவன் சொன்னது உண்மைதான். "பறக்கும் தட்டிற்குள் நுழைந்த நபர் வெளியே வரவில்லை. என்னை என்ன செய்யச் சொல்றீங்க?" என்று வாயுபுத்ரன் பூமியில் இருப்பவர்களை யோசனை கேட்டிருந்தால் "அவனை விட்டுவிட்டு நீ திரும்பி வந்து சேரு" என்றுதான் அவர்கள் யோசனை சொல்லி யிருப்பார்கள். இன்னொரு உயிரையும் கண்ணெதிரே பலி கொடுக்க யாருமே ஒப்புக்கொள்ள மாட்டார்கள். தனக்கு ஏற்பட்டது சிறிய ஷாக்காக இருந்தாலும், அந்த பறக்கும்

தட்டுடன் தானும் சேர்ந்து அண்டவெளியில் எல்லையில்லாத சூனியத்தை நோக்கிப் பயணம் பண்ணிக் கொண்டே இருக்க வேண்டியதுதான்.

"என்னதான் நடந்தது?" வாயுபுத்ரன் கேட்டான். யஷ்வந்த் நடந்ததைச் சொன்னான். எல்லாவற்றையும் சொல்லி முடித்து விட்டு, "வாயுபுத்ரன்! நாம் அந்த வாகனத்தை நம்மோடு கூடப் பூமிக்கு எடுத்துச் சொல்லணும்" என்றான்.

"அதற்கு நம் ஆட்கள் ஒப்புக்கொள்வார்களோ மாட்டார் களோ?"

வாயுபுத்ரனுக்கு அந்தச் சந்தேகம் ஏன் வந்தது என்று யஷ்வந்த் அறிவான். மற்ற கிரகங்களிலிருந்து வந்தாலோ அல்லது சந்திரனுக்குள் காலடி எடுத்து வைத்துவிட்டுத் திரும்பினாலோ அத்தகைய விண்வெளிப் பயணிகளை உடனேயே ஜனங்களோடு சேர விடமாட்டார்கள். ராக்கெட்டி லிருந்து ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்று துப்புறவாக பரிசோதித்துவிட்டுத்தான் வெளியே அனுப்புவார்கள். சந்திரனில் காலடி எடுத்து வைத்த நீல் ஆம்ஸ்ட்ராங்கிலிருந்து இது தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. உபகிரகங் களிலோ அல்லது கிரகங்களிலோ மனிதனுக்குத் தெரியாத வைரஸ் கிருமிகள் ஏதாவது இருந்து, அங்கு போய் விட்டுத் திரும்பிய ஆஸ்ட்ரோநாட்ஸுடன் அவை பூமிக்கு வந்து சேர்ந்துவிட்டால், இங்கே இருக்கும் கேன்சர், எயிட்ஸ் போன்ற நோய்கள் போதாது என்று அந்த வைரஸால் பரவக் கூடிய வேறு பல நோய்களும் பூமிக்கு வந்து விடலாம் என்று பூலோக வாசிகளுக்கு பயம்.

அப்படிப்பட்ட சூழ்நிலையில் வெகு தொலைவில் இருக்கும் கிரகத்திலிருந்து வந்திருக்கும் பறக்கும் தட்டை விஞ்ஞானிகள் பூமியில் இறங்குவதற்கு சம்மதிக்கவே மாட்டார்

கள். அதுவும் அந்த பறக்கும் தட்டில் அதற்கு முன்னால் சில உயிரினங்கள் இருந்திருக்கின்றன. அவை எப்படிப்பட்டவை என்பது தெரியாது. அவற்றுக்கு வரும் தொற்று நோய்கள் என்னவென்பதைப் பற்றியும் தெரியாது. பூமியிலிருக்கும் ஆக்சிஜன், கார்பன் டையாக்ஸைட், நைட்ரஜன் முதலிய கலவைகள் மூலம் அந்த வைரஸ் பயங்கரமாக பரவிவிட்டால், மனித ஜாதி முழுவதுமே பூண்டோடு அழிந்து விடக்கூடும்.

"பின்னே என்னதான் செய்வது?" கேட்டான் யஷ்வந்த்.

"நீங்க இதை ஏன் நம்மோடு எடுத்துக் கொண்டு போகணும் என்று நினைக்கிறீங்க?"

"இந்த வாகனத்தின் உட்பகுதி ரொம்ப வித்தியாசமாக இருக்கிறது. முக்கியமாக சக்தி எதன் மூலம் வருகிறது என்று புரியவேயில்லை. இதற்கு இவ்வளவு சக்தி எப்படி வந்தது என்று தெரிந்துகொண்டால் நமக்கு எதிர்காலத்தில் பெட்ரோல், கெரசின், மின்சாரம்... இவற்றின் தேவை இருக்காது."

அவர்கள் இவ்வாறு பேசிக் கொண்டிருக்கும் போது பூமியிலிருந்து செய்தி வந்து சேர்ந்தது. அங்கே என்ன நடந்து கொண்டிருக்கிறது என்ற கேள்வியுடன்.

தான் நினைவிழந்து விழுந்தது. வாயுபுத்ரன் வந்து காப்பாற்றியது இவ்விரண்டையும் தவிர மீது எல்லா விஷயங்களையும் விவரித்தான் யஷ்வந்த். எல்லாவற்றையும் சொல்லி முடித்துவிட்டு, "நாங்கள் எங்களுடன் அந்தப் பறக்கும் தட்டையும் பூமிக்கு எடுத்து வரலாம் என்று நினைக்கிறோம்" என்று முடித்தான்.

அதற்கு பூமியிலிருந்து உடனே பதில் வரவில்லை. "எங்களுடைய முடிவுக்காக கொஞ்ச நேரம் காத்திருங்கள்"

என்ற தகவலுடன் ரேடியோ நின்று விட்டது. இந்த விஷய மாக பூமியில் பரபரப்புத் தோன்றியிருக்கும் என்பதை அவர் களால் ஊகிக்க முடிந்தது.

அதற்குள் வாயுபுத்ரன் யஷ்வந்திடம் "அந்தப் பறக்கும் தட்டில் உயிர்வாழினங்கள் எதுவுமே இல்லைன்னு நம்புறீங் களா நீங்கள்?" என்று கேட்டான்.

"ஆமாம். அது பிளானாடரி ப்ரொப் மட்டும்தான்" என்றான் யஷ்வந்த் சுருக்கமாக.

(உயிரினங்கள் இல்லாமலோ அல்லது உயிரினங்கள் காலி செய்துவிட்டு நீங்கியிருந்தாலோ அந்த விண்வெளிக் கப்பலை பிளானடரி ப்ரோப் என்பார்கள். அவற்றில் இரண்டு வகை உண்டு. ஒரு வினாடிக்கு ஏழு மைல்களுக்கும் மேற்பட்ட வேகத் தில் செல்வது முதலாம் வகை. அதைவிடக் குறைந்த வேகத்தில் செல்வது இரண்டாம் வகை. இந்த முதல்வகை விண்வெளிக் கப்பல்கள், பூமியின் புவியீர்ப்பு எல்லையையும் தாண்டி, சூரியனைச் சுற்றி சுழன்று வந்து கொண்டிருக்கும். சூனிய வெளியில் இவைகள் எங்கே இருக்கும் என்று கண்டுபிடிப்பது கஷ்டம். எந்தக் கிரகம் தென்பட்டாலும் அந்த கிரகத்தின் ஈர்ப்பு சக்திக்கு உட்பட்டு பயணம் செய்து கொண்டிருக்கும். இரண்டாவது வகைக் கப்பல்கள் குறைந்த வேகத்துடன் செல்பவை. இவை பூமிக்கே திரும்பி வந்து கொண்டிருக்கும். மாரினர்ஸ் முதல் ரகத்தைச் சேர்ந்தது. ஸ்கைலாப் இரண்டாம் பிரிவைச் சேர்ந்தது.)

"அப்படி என்றால் அந்தக் கிரகவாசிகள் தம் தேவை தீர்ந்ததுமே இந்த கப்பலை சூனியவெளி என்ற குப்பைத் தொட்டியில் வீசியெறிந்து விட்டுப் போயிருப்பார்கள் என்கிறீர்களா?"

"ஆமாம். இல்லாவிட்டால் எங்கேயோ சூரியனுக்கு அருகில் இருக்க வேண்டிய இந்தப் பறக்கும் தட்டு. இந்தப் பக்கமாய் ஏன் வரணும்?" யஷ்வந்த் கேட்டான்.

"அந்தக் கிரகவாசிகளே கொண்டு வந்திருக்கலாம் இல்லையா?"

"அவர்களுக்கு அந்தத் தேவையில்லை. அவர்கள் வர எண்ணியிருந்தால் சாதாரணமாகவே வருவார்கள். நாம் இப்பொழுது எவ்வளவு வேகத்தில் பயணம் செய்து கொண்டிருக் கிறோம்?"

"வினாடிக்குப் பத்து மைல்கள். மணிக்கு முப்பத்தாறாயிரம் மைல்கள்."

"அதே வேகத்தில்தான் அந்த விண்வெளிக் கப்பலும் போகிறது. அதாவது பூமியின் ஈர்ப்புச் சக்திக்குள் வருவதற்கு அதற்கு விருப்பம் இல்லை என்று அர்த்தம். அதன் வழியில் அது சூனியத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கு. அந்த கப்பலில் யாருமில்லை என்று இதிலிருந்தே புரியவில்லையா?"

வாயுபுத்ரன் ரேடியோ கனெக்ஷனை எடுத்துவிட்டான்.

யஷ்வந்த் அதிர்ச்சியடைந்தவனாக "ஏன்?'' என்று கேட்டான்.

"பூமியிலிருந்து தொடர்பை தற்காலிகமாக எடுத்து விட்டேன். அவர்கள் அகில உலக சர்ச்சைகளைப் பண்ணி முடித்து, இந்தக் கப்பல் வரணுமா வேண்டாமா என்று முடிவெடுத்து நமக்கு அதைத் தெரியப்படுத்துவதற்குள் இந்த கப்பல் நம்மைவிட்டு வெகு தூரத்திற்குப் போய்விடும். அதனால்தான் நாம் நம்மோடு கூட இதை எடுத்துச் செல் கிறோம். இந்த விஷயத்தை நாம் பூமியின் ஈர்ப்பு எல்லைக்குள்

போனதும், அப்பொழுதுதான் ரேடியோ சரியானது போல் நடித்து, அவர்களுக்குச் சொல்லிவிடலாம்'' என்றான் வாயுபுத்ரன்.

"மை காட்! இது சாகசம் இல்லையா?"

யஷ்வந்த் சொல்லி முடிப்பதற்குள் வாயுபுத்ரன் சிரித்து விட்டு "அந்தச் சாகசம் மட்டும் இல்லாவிட்டால், இப்பொழுது நாமிருவரும் இப்படிச் சந்தித்துப் பேசிக் கொண்டு இருந்திருக்க மாட்டோம் இல்லையா?" என்றான்.

இருவரும் மளமளவென்று இரண்டு வாகனங்களையும் இணைத்தார்கள். இரு வாகனங்களும் ஒரே வேகத்துடன் போய்க் கொண்டிருந்தன. அதனால் எந்தக் கஷ்டமும் இருக்க வில்லை. இரண்டும் எடையில்லாத நிலையில் இருந்ததால் திசை மாறிய போதும் கூட எந்த இடைஞ்சலும் ஏற்பட வில்லை.

மேலும் இரண்டு மணி நேரமான பிறகு...

முதல் முறையாக...

வேற்றுக் கிரகவாசிகள் பயன்படுத்திய ஒரு விண்வெளிக் கப்பலானது...

புவிஈர்ப்பு சக்தி எல்லைக்குள் நுழைந்து பூமியை நோக்கி இறங்கத் தொடங்கியது. அந்தக் கப்பல் தன்னுடன் பிரளயத் தைத்தான் கூட்டிக்கொண்டு வருமோ, வேறு எதைத்தான் கொண்டு வரப் போகிறதோ என்பது மனிதர்கள் அறிய முடியாத ஒன்று. அதைக் காலம்தான் முடிவு செய்ய வேண்டும்.

வாயுபுத்ரன் அப்பொழுதுதான் ரேடியோ சரியானது போல் தொடர்புகொண்டு, அந்த விண்வெளிக் கப்பலை தங்களுடன் கொண்டு வருவதாகவும், அதற்குத் தகுந்த

ஜாக்கிரதைகளை எடுத்துக் கொள்ளும்படியும் பூமிக்கு தகவல் அனுப்பினான். புவியீர்ப்பு எல்லைக்குள் வந்துவிட்ட பிறகு விஞ்ஞானிகள் அதனை வரவேற்றுத் தீருவார்கள் என்றும், வேறெதுவும் அவர்களால் செய்ய முடியாதென்றும் அவனுக்குத் தெரிந்ததுதான்.

ஆனாலும் யஷ்வந்த் குற்றவாளியைப் போல் உணர்ந்தான். அவனுக்கு இந்த மாதிரி சாகசமெல்லாம் பிடிக்காதுதான். இதுபோன்ற சாகசங்கள் சில சமயம் உலகத்திற்கே ஆபத்தை விளைவிக்கலாம்.

மேலும் இரண்டு மணி நேரம் கழித்து அவ்விருவரும் பயணம் செய்து வந்த வாகனமும், பறக்கும் தட்டும் சேர்ந்து கடலில் இறங்கத் தொடங்கின. பல ஆயிரக்கணக்கான கேமிராக்கள் அந்தக் காட்சியைப் படம் பிடித்தன. அந்நிய கிரகத்திலிருந்து வந்திருக்கும் அந்தப் பறக்கும் தட்டைப் பார்ப்பதற்காக மக்கள் கும்பலாக கூடிவிட்டார்கள்.

ஒரு கப்பல் மூலமாக அந்தப் பறக்கும் தட்டு கரைக்குக் கொண்டு வரப்பட்டது. பலவிதப் பாதுகாப்புக் கவசங்களுடன் விஞ்ஞானிகள் பலர் அதற்குள் நுழைந்தார்கள். யஷ்வந்தின் மீது அந்த வாகனத்தின் பாதிப்பு ஏதாவது இருக்குமோ என்று தெரிந்துகொள்வதற்காக அவனைச் சோதனைச் சாலைக்கு அனுப்பினார்கள்.

தானும் அந்த வாகனத்திற்குள் நுழைந்ததாக வாயுபுத்ரன் யாரிடமும் சொல்லவேயில்லை.

மறுநாள் உலகத்திலுள்ள எல்லா பத்திரிகைகளிலும் இந்தப் பறக்கும் தட்டைப் பற்றிய செய்திகளும் போட்டோக்களும் வெளிவந்தன.

பலவிதமான ஊகங்களும் கற்பனைகளும் பரவின.

மாயாஸ் இதனை வேண்டுமென்றே பூமிக்காக விட்டுவிட்டுப் போயிருக்கிறார்கள் என்று சில பத்திரிகைகள் எழுதின. வேறு சில பத்திரிகைகளோ இதை யஷ்வந்த், வாயுபுத்ரன் இருவரின் சாகஸச் செயலாகப் புகழ்ந்து தள்ளியிருந்தன.

அதைத் தொடர்ந்து பதினெட்டு மணி நேரம் கழித்து உலகத்தையே திக்பிரமையில் ஆழ்த்தும்படியான செய்தியானது அந்தப் பறக்கும் தட்டு மூலம் வெளிவந்தது.

N.S.R.I. மீட்டிங் ஹாலில் பிரமுகர்கள் கூடினார்கள். வெளியே பத்திரிகையாளர்களின் கேமிரா, டெலிபோன் என்று ஒரே சந்தடியாக இருந்தது. அந்தச் சந்தடிக்குக் காரணம், வாயு புத்ரனும் யஷ்வந்தும் சேர்ந்து விண்வெளியிலிருந்து கொண்டு வந்த பறக்கும் தட்டு சம்பந்தப்பட்ட விவரங்கள் அன்றுதான் வெளிப்படுத்தப் போவதாக அறிவித்ததுதான்.

வேறு கிரகத்தைச் சேர்ந்த மாயாஸ் என்ன உலோகத்தைப் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள் என்பதிலிருந்து, எந்த ரிமோட் கண்ட்ரோல் மூலமாக அவர்களின் வாகனத்தில் எல்லா வேலைகளும் நிகழ்ந்து வந்திருக்கின்றன என்பதுவரை— சிக்கலான விஷயங்களைப் பற்றியெல்லாம் வெளிப்படுத்தப் போகிறார்கள்.

வெளியேயிருந்த இந்தப் பரபரப்பிற்குச் சற்றும் மாறுபட்ட விதத்தில் உள்ளே அந்தந்தத் துறைகளில் நிபுணர் கள் கூடி, தாம் பரிசோதித்த விஷயங்களை மற்றொரு முறை படித்துப் பார்த்துக் கொண்டார்கள்.

அவர்களுள் யஷ்வந்தும் இருந்தான். அவன் மனம் இப்பொழுது அனூஹ்யாவைப் பற்றி யோசிக்கவில்லை. உயிர் போகப் போவது நிச்சயம் என்றெண்ணி விண்வெளிக் கப்பலி லிருந்து சூனியத்தை நோக்கிக் குதித்துவிட்டு, சந்திரனை

நோக்கிப் போய்க் கொண்டிருந்த அந்தச் சமயத்தில், தேக மானது இருட்டிற்கும் வெளிச்சத்திற்கும் இடையே ஊசலாடிக் கொண்டிருந்தபோது, ஆசைக்கும் நிராசைக்கும் இடையே மனம் தவித்துக் கொண்டிருந்த அந்தச் சமயத்தில் அவன் அவளைப் பற்றி நினைத்தான். அப்பொழுது அதைத்தவிர பண்ணுவதற்கு வேறு வேலை எதுவும் இல்லாததால் அவ்வாறு நினைக்க நேர்ந்தது.

வாயுபுத்ரனால் உயிர் காப்பாற்றப்பட்டு எதிர்பாராத விதத்தில் அந்த மாயாஸ் பயன்படுத்திய வாகனத்தை எட்டிப் பிடித்து, அதற்குள் நுழைந்த அடுத்த நிமிஷமே அவன் அவளைப் பற்றி மறந்துவிட்டான்.

அந்த வாகனத்தைப் பற்றி ரகசியங்களைக் கண்டுபிடிக்க முடியாமல், அதனைத் தம்மோடு எடுத்து வந்து கொண்டிருக் கும் போது திரும்பவும் அவளைப் பற்றிய நினைவு வந்தது. ஆனால் இப்பொழுது அந்த நினைப்பு இருக்கவில்லை.

வேலை இருக்கும்போது அந்த வேலையிலேயே முற்றிலும் மூழ்கிவிடுவதும், இரு வேலைகளுக்கிடையே உற்சாகம் தரும் எண்ணங்களால் மனதிற்குத் தேவையான சக்தியை உண்டாக் கிக் கொள்வதும் மிகப் பெரிய விஷயம்தான். காதலில் மூழ்கி இருபத்தி நான்கு மணி நேரமும் அந்த நபரைப் பற்றியே யோசித்துக் கொண்டிருப்பது ஒரு வகை. அந்த நபரை ஞாபகப் படுத்திக் கொண்டே பண்ணிக் கொண்டிருக்கும் வேலையில் நிறைவு பெறுவது இன்னொரு வகை. இந்த இரண்டாவதைச் சேர்ந்த ஒருவர் மெடீரியலிஸ்டாக மற்றவர் கண்களுக்கு தென்படுவார். அவரைப் புரிந்துகொள்வது ரொம்பக் கடினம். அதனால்தான் சிறுவயதில் அனுஹ்யாகூட அவனைப் புரிந்து கொள்ள முடியாமல் போனாள். அவன் தன் மனதில் இருப்பதை என்றுமே வெளியில் சொல்ல மாட்டான்.

மற்றவர்கள்தான் தன்னைப் புரிந்துகொள்ள வேண்டுமென்று நினைப்பான். இவ்விதமாக அவர்கள் பிரிந்து போனார்கள்.

தன்னை அவன் எப்படி எதிர்பார்த்துக் கொண்டிருக் கிறான் என்றும், தன்னைக் கண்டதும் அவன் கண்கள் எவ்வாறு மின்னுகின்றனவென்றும் ஒவ்வொரு பெண்ணுமே துடிதுடிப்பது சகஜம்தான். ஆனால் சலனமில்லாத அந்தக் கண்களின் அடிவாரத்திலிருந்து அவன் மனம் பிரதிபலிப்பதை விட்டொழிந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன என்பதை அவள் அறியவில்லை. அன்பு இருப்பது வேறு. அதனை வெளிப் படுத்திக் கொள்வது வேறு.

எங்கோ அண்டவெளியிலிருந்து அவன் சாகப் போவ தற்கு கொஞ்ச நேரத்திற்கு முன்னால் அவளோடு பேச வேண்டு மென்று விரும்பினான் அவன். அவ்வாறு பேசிய அந்த இரண்டு வார்த்தைகளும் அவள் நெஞ்சைத் தொட்டு விட்டன. அதைத் தொடர்ந்து அவன் க்ஷேமமாக பூமிக்கு வந்து சேர்ந்தான் என்று தெரியும் வரையிலும் அவள் டி.வி.க்கு முன்னாலேயே உட்கார்ந் திருந்தாள். முதலில் டி.வி.யில் வாயுபுத்ரன் தென்பட்டதும் அவள் அதிர்ச்சியடைந்தாள்.

யஷ்வந்தைக் காப்பாற்றுவதற்காக புறப்பட்ட வாகனத் தில் வாயுபுத்ரன் தென்பட்டதும், சில நாட்களுக்கு முன்னால் ஏற்பட்ட அனுபவங்கள் நினைவுத் திரையில் தோன்றி மனதை உலுக்கியெடுத்தன. அது தற்செயல்தான் என்றாலும் தன் வாழ்க்கையில் சம்பந்தப்பட்ட இரு நபர்கள் பூமிக்கு அவ்வளவு தூரத்திலிருந்து ஜனங்களை நோக்கி கைகளை ஆட்டிய போது, தன்னை நோக்கிக் கைகளை ஆட்டியது போலவே உணர்ந்தாள்.

விண்வெளியிலிருந்து வந்த இரு வாகனங்களும் கடலில் இறங்கிய சில மணி நேரம் கழித்து, முதல் பரிசோதனைகள்

முடிவடைந்து யஷ்வந்தும் வாயுபுத்ரனும் வெளியுலகத்திற்கு வந்தார்கள்.

அவள் இப்பொழுது எங்கேயிருக்கிறாள் என்று அவனுக்குத் தெரியும். அதனால் வெளியே வந்ததுமே அவன் தன்னைச் சந்திக்க வருவான் என்றெண்ணினாள் அவள்.

ஆனால் அவன் வரவில்லை. பறக்கும் தட்டைப் பற்றிய ரிப்போர்ட்களைப் படிப்பதற்குப் போய்விட்டான். அவள் மனம் துணுக்குற்றது.

திருமணமான புதிதில் இத்தகைய சம்பவம் நடந்தால் அவள் தலையணையில் முகத்தைப் பொத்திக்கொண்டு அழுது கொண்டிருப்பாள். இப்பொழுது மனம் திடப்பட்டு விட்டது. அதனால் மனமானது வருத்தத்தை கண்வரைக்கும் வரவிடவில்லை.

சோதனைச் சாலையிலிருந்து வெளியே வந்ததுமே வாயுபுத்ரன் அவளுக்குப் போன் செய்தான். இரண்டு நிமிஷம் கழித்துப் போனை வைக்கும் முன்னால் அவன் சொன்னான். "விண்வெளியில் நாங்கள் செய்த இந்தச் செயல் ரொம்ப அருமையானது. மனித இனம் முழுவதுமே பெருமைப்பட வேண்டிய விஷயம் அனூஹ்யா! சூனியவெளியில் மீன் போல் நீந்திக்கொண்டே போய்க் கொண்டிருக்கும் ஒருவனை, வெறும் 10 M ரேடியோவின் உதவியால் மீட்ட என்னை ஏறக்குறைய உலகத்திலிருக்கும் ஒவ்வொரு நபருமே புகழ்ந்தார்கள். ஆனால் நான் நேசிக்கும் பெண் மட்டும்... பூமிக்குத் திரும்பியதுமே போன் செய்தால் சர்வசாதாரணமாகப் பேசுகிறாள். என்மேல் எனக்கே இரக்கமாக இருக்கிறது" என்று போனை வைத்து விட்டான்.

அவள் ரொம்ப நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

அவளுக்கு சைக்ரியாட்ரிஸ்ட் சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வந்தன.

"நான் என்ன செய்வேன்? என்னதான் செய்வேன் நான்?" என்று தனக்குள் பலமுறை நினைத்துக்கொண்டாள். "சீக்கிரமாக தான் ஒரு முடிவுக்கு வந்து விடவேண்டும். அப்பொழுதாவது கொஞ்சம் நிம்மதி கிடைக்குமோ என்னவோ? நிமிஷத்திற்கு நிமிஷம் மனரீதியான இந்த வேதனையை அனுபவிப்பதைவிட அதே மேல். இந்த நிலைமையை என்னால் தாங்க முடியவில்லையே..." அவள் தலையைச் சிலிர்த்துக் கொண்டாள்.

வாழ்நாளெல்லாம் இருவரோடும் சேர்ந்திருக்க வேண்டிய நிலைமை வரப்போவதை அவள் அந்த நேரத்தில் அறிந்திருக்கவில்லை.

* * *

"அந்தப் பறக்கும் தட்டு ஒருவிதமான தாது கலவையினால் தயாரிக்கப்பட்டுள்ளது. இரும்பும் அலுமினியமும் கொஞ்சம் கலந்திருக்கின்றன. இது என்ன உலோகம் என்று கண்டுபிடிக்க முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன" என்று பரிசோதனையைப் பற்றி எடுத்துச் சொன்னார் ஒரு நிபுணர்.

அந்த விஷயத்தில் தனக்கு ஆர்வமில்லாததைப் போல் யஷ்வந்த் தலை அசைத்துவிட்டு "சக்தி எங்கேயிருந்து வருகிறது என்று சொல்லுங்கள். முக்கியமாக நான் பல்பு என்று நினைத்துத் தொடப்போன பொருளைப் பற்றி."

"அதைப் பற்றித்தான் சொல்லப் போகிறேன். மிகவும் ஆச்சரியத்தைத் தரும் விஷயம்... அது பல்பு இல்லை. அதற்கு ஒயர்களோ சுவிட்சுகளோ இல்லை. அது ஒரு விதமான க்வாட்ஸ்."

"க்வாட்ஸா?" வியப்புடன் கேட்டான்.

"ஆமாம். ஆனால் நம் பூமியில் கிடைக்கும் க்வாட்ஸைப் போன்றதல்ல. ஒரு லட்சம் கடியாரங்களைப் பத்து வருஷங்கள் வரையிலும் ஓடவைக்க வல்ல சக்தியுடைய க்வாட்ஸ். அதன் கனம் எவ்வளவு இருக்கும் என்று உங்களால் ஊகித்துப் பார்க்க முடியுமா யஷ்வந்த்?"

"எவ்வளவு?"

"ஆயிரத்து ஐநூறு கிலோக்கள்."

யஷ்வந்த் திகைப்புடன் நோக்கினான். ஆயிரத்து ஐநூறு கிலோக்கள்! சிறிய கோலி உருவத்தில் தென்பட்ட அந்தப் பொருளின் எடை அவ்வளவு இருந்தது என்றால், அது நிச்சயமாக நியூட்ரான் ஸ்டாருக்கு சம்பந்தப்பட்டதாகத்தான் இருக்கும். இன்னும் சொல்லப்போனால் நியூட்ரான் ஸ்டார் என்று ஒன்று உண்டா இல்லையா என்றுகூடத் தெரியாது நம் பூலோகவாசிகளுக்கு. அப்படியிருக்கும் போது, அந்த மாயாஸ் அதைக்கூட தம் எனர்ஜி சோர்ஸாக மாற்றிக்கொண்டார்கள் என்றால்... அவர்களின் விஞ்ஞான வளர்ச்சிக்கு அது ஒரு எடுத்துக் காட்டு.

அந்த விஞ்ஞானி தான் கண்டுபிடித்ததை மேலும் சொன்னார். "அந்த மாயாஸ் விட்டுவிட்டுப் போன கப்பலில் ஒரு தகடு கிடைத்தது யஷ்வந்த். அதன்மேல் சூரியனும், மற்ற கிரகங்களும் சுற்றும் பாதை பற்றிய ஒரு வரைபடம் கூட இருந்தது. பூமியைச் சுற்றிலும் ஒரு கோடு வரையப் பட்டிருந்தது. அதேபோல் செவ்வாய்க் கிரகத்தைச் சுற்றிலும் கூட வரையப்பட்டிருந்தது. ஒருக்கால் இவ்விரண்டு கிரகங்களிலும் உயிரினங்கள் இருப்பதை அவர்கள் ஊகித்துக் கொண்டிருப்பார்கள்."

யஷ்வந்த் தலையை அசைத்தான்.

"எல்லாவற்றைக் காட்டிலும் முக்கியமான விஷயம் என்ன வென்றால், அந்த வாகனத்தில் மூலையிலிருந்த குப்பைத் தொட்டியில் நம் ராயுடைய உடைகள் கிடைத்தன."

யஷ்வந்த் அதிர்ச்சி அடைந்தான்.

"ஆமாம் யஷ்வந்த்! ஸ்பேஸ் சூட் நம்பரைக் கூட பரிசோதித்துப் பார்த்து விட்டோம். அவை ராய் அணிந்திருந்த உடைகள்தான்."

யஷ்வந்த் காதில் எதுவும் விழவில்லை. தான் கப்பலி லிருந்து விடுபட்டுச் சந்திரனின் மேல் விழப்போனபோது வாயு புத்ரன் வந்து எந்த விதமாக தன்னைக் காப்பாற்றி னானோ, அதே விதமாக நிகிலோடு சேர்ந்து பயணம் செய்து கொண்டிருந்த போது கப்பலை விட்டு வெளியே குதித்து விட்ட ராயை அந்த மாயாஸ் வலை வீசிப் பிடித்துத் தம்மோடு அழைத்துக் கொண்டு போயிருப்பார்களோ?

அல்லது அவனைக் கொன்னு விட்டிருப்பார்களோ? யஷ்வந்தின் முதுகுத்தண்டு சிலிர்த்தது.

அதற்குள் மணி அடித்தது. தம் தம் துறைகளில் மேதாவி களாக இருந்த அவர்கள் எல்லோரும் தங்களுடைய பரிசோத னைக் குறிப்புகள் அடங்கிய பேப்பர்களை எடுத்துக் கொண்டு, மெயின் ஹாலுக்குள் நுழைந்தார்கள்.

எல்லோரும் சேர்ந்து ஒரு தீர்மானத்திற்கு வரவேண்டும். அந்த தீர்மானத்தின் மேல்தான் பூலோகவாசிகளின் உயிர்கள் ஆதாரப்பட்டு இருக்கிறது.

யஷ்வந்த் தன் பிரசங்கத்தைத் தொடர்ந்தான். "டியர் பிரண்ட்ஸ்! இன்று நாம் இங்கே இரண்டு முக்கியமான

விஷயங்களைப் பற்றிப் பேசுவதற்காக கூடியிருக்கிறோம். முதலாவது, இண்டர் பிளானெடரி சொஸைட்டிக்காரர்கள் நமக்கு ஒரு தகவலை அனுப்பியிருக்கிறார்கள். அண்டவெளியில் வெவ்வேறு கிரகங்களில் உள்ள ஜீவராசிகளில் யாருக்காவது, சூரியனிடமிருந்து சக்தியைப் பறித்துக் கொண்டால், அதற்கு ஆட்சேபணையிருக்கிறதா என்று கேட்டிருக்கிறார்கள். இது ஒரு விஷயம். இந்த குறிப்பை வாயுபுத்ரன்தான் டீகோட் செய்திருக்கிறார். நமக்குத் தெரியாத ஒரு பாஷையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட இந்த சமாச்சாரத்தில் உண்மைக்குப் புறம்பாக எதுவும் இல்லை என்றும், சரியாகத்தான் மொழி பெயர்த்திருக்கிறார் என்றும், இப்பொழுது நமக்கு நிரூபிக்கப்பட்டுள்ளது."

"எந்த விதமாக?" யாரோ கேட்டார்கள்.

"அந்த மாயாஸ் சூரியனுக்கு அண்மையில் கொஞ்ச காலம் முகாமிட்டுவிட்டுச் சென்றிருக்கிறார்கள் என்பது. அவர்கள் விட்டுவிட்டுப் போன பறக்கும் தட்டின் மூலம் உறுதியாகி விட்டதால்" என்று பதிலளித்தான் யஷ்வந்த். தொடர்ந்து "அதைவிட மற்றொரு முக்கியமான ஆதாரம், அவர்கள் விட்டு விட்டுப் போன பறக்கும் தட்டில் கிடைத்திருக்கும் பல்பானது உண்மையில் பல்ப் இல்லை என்றும், அது ஒரு உள்ளடங்கியிருக்கும் சக்தி என்று நம் விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளார்கள். இந்த உள்ளடங்கிய சக்தியைப் பற்றி நான் என் அபிப்பிராயத்தைச் சொல்லும் முன் விஞ்ஞானம் சம்பந்தப்பட்ட சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். மேதாவிகள் பலர் நிறைந்திருக்கும் இந்தச் சபையில் இவ்வளவு அற்பமான விஷயத்தைப் பற்றி பேசுவது அர்த்தமற்றதாக இருந்தாலும், இங்கிருப்பவர்கள் வெவ்வேறு துறைகளில் திறமை வாய்ந்தவர்கள் என்பதால் இந்த விஷயத்தைச் சொல்ல

வேண்டியது என் கடமை என்று தோன்றுகிறது" என்று மேலும் தொடர்ந்தான்.

"நூறு வருடங்களுக்கு முன்பே மனிதன் ஆட்டம்பாமை தயாரித்துவிட்டான். ஆட்டம்பாம் மூலம் பொருட்கள் எரிந்து சக்தியாய் மாறும் என்று உங்கள் எல்லோருக்கும் தெரியும். ஒரு கால்பந்து அளவு பாம் சக்தியாய்ப் பிரிந்து போய் சில ஆயிரக்கணக்கான மைல்கள் வரையில் எரித்து சாம்பலாக்கி விட வல்லது. ஒரு பொருளை இவ்வாறு சக்தியாய் மாற்றவல்ல உபகரணத்தை மனிதன் சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்பே கண்டுபிடித்துவிட்டான். ஆனால் சக்தியைப் பொருளாக மாற்றவல்ல கருவியை ஏன் கண்டு பிடிக்கவில்லை? உண்மை யில் அது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை. When matter can be converted into energy, energy can also be converted into matter. ஆனால் இதன் காரணமாக ஒரு கேள்வியானது மனிதனைக் குடைந்து கொண்டேயிருந்தது. சிறிய கோழி முட்டையளவு பொருளைத் தயாரிப்பதற்கே எவ்வளவோ கோடிக்கணக்கான சக்தி வேண்டும். அவ்வாறு இருக்கும் போது இவ்வளவு பிரம்மாண்டமான அண்டவெளி யும், பூமியும், சந்திரனும், கிரகங்களும், நட்சத்திரங்களும் எங்கிருந்து தயாராயிற்று? இவ்வளவு சக்தியும் சூனியத்தி லிருந்து எவ்வாறு உற்பவித்தது? விஞ்ஞானிகள் இன்னும் ஆராய்ந்து கொண்டு தான் இருக்கிறார்கள். ஆராய்ச்சிகளின் மேல் நம்பிக்கை யில்லாதவர்கள் அந்தச் சக்திக்கு ஒரு பெயரை சூட்டினார்கள் "கடவுள்" என்று.

இப்பொழுது என் பேச்சு கடவுள் சம்பந்தப்பட்டது அல்ல. மற்ற கிரகங்களில் வசிக்கும் உயிர்களைப் பற்றியது. சக்தியின் மூலமாக பொருளைச் சுலபமாக தயாரிப்பது எப்படி என்பதை மனிதனால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால்

என் சந்தேகம் என்னவென்றால் அந்தக் கிரகவாசிகள் இந்த டெக்னிக்கைக் கண்டு பிடித்திருக்கிறார்கள் என்பதுதான்."

இந்தக் கடைசி வார்த்தையைக் கேட்டதும் சபையில் சலசலப்புத் தோன்றியது. எல்லோரும் கசமுசவென்று பேசிக் கொண்டார்கள். யஷ்வந்த் அவற்றைப் பொருட்படுத்தவில்லை. மேலும் தன் பேச்சைத் தொடர்ந்தான்.

"மனிதன் பேட்டரியைக் கண்டுபிடித்தான். டார்ச் விளக்குகள் எரியத் தொடங்கின. கார்கள் ஓடத் தொடங்கின. அணு சக்தியைக் கண்டு பிடித்தான். தர்மல் ஸ்டேஷன்கள் உருவாயின. ஆனால் இவையெல்லாம் விலை உயர்ந்த கண்டு பிடிப்புகள். பொருளிலிருந்து சக்தியை உருவாக்குவது. அவ்வாறு இல்லாமல் ஒன்பதுபோடி எர்க் சக்தியைப் பயன்படுத்தி, கோலி உருண்டையளவு பொருளைத் தயாரித்து, திரும்பவும் அதிலிருந்து சக்தியைப் பெறுவதை மனிதன் கண்டுபிடித்து விட்டான் என்று வைத்து கொள்ளுங்கள். அப்பொழுது இந்தியாவிலிருந்து அமெரிக்கா போவதற்கு ஆயிரம் ரூபாய் மட்டுமே செலவாகும். நாம் பூலோகம் என்ற சுவர்க்கத்தில் வசித்துக் கொண்டிருக்கிறோம். ஏனென்றால் இந்த பரந்த அண்டவெளியில் நமக்கு அபாரமாக, எந்த செலவும் இல்லாமல் சக்தி கிடைத்துக் கொண்டிருக்கிறது."

"எங்கிருந்து கிடைக்கிறது?" யாரோ கேட்டார்கள்.

"கிரகங்களிலிருந்தும், நட்சத்திரங்களிலிருந்தும்" பதிலளித்தான் யஷ்வந்த். "ஒரு தடவை எரிபொருளானது நமக்குக் கிடைக்கத் தொடங்கிவிட்டால் பிறகு கஷ்டமே இல்லை. பக்கத்து வீட்டுக்குப் போய் காபி சாப்பிடுவதுபோல் சனி அல்லது புதன் கிரகத்திற்கோ போய் வேண்டிய சக்தியை நம்மோடு எடுத்து வந்துவிடலாம். டியர் பிரண்ட்ஸ்! முதலில்

உலகத்தைப் பற்றிக் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். பதினைந்தே நாட்களில் கங்கையையும் காவேரியையும்கூட ஒன்று சேர்த்துவிடலாம். வெள்ளம் இருக்காது. ஆறே மாதங்களில் ஒவ்வொரு நபருக்கும் வீடும், ஒரு ஆண்டு முடிவதற்குள் வேண்டாமென்றாலும் போதுமான ஆகாரம், ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு ஏ.சி.யும், காரும்..."

"அதற்குள் புதன் கொஞ்சம் பலவீனமடைந்துவிடும்" என்றார் ஒருத்தர்.

"புதன் சக்தியை இழந்துவிட்டால் அதன் ஈர்ப்பு சக்தியில் ஏற்படும் மாறுபாட்டிற்கு மற்ற கிரகங்கள் பாதிக்கப்பட்டு பிரளயம் ஏற்பட்டு விடும்" என்றார் இன்னொருத்தர்.

யஷ்வந்த் எல்லோர் பேச்சையும் பொறுமையாகக் கேட்டு முடித்துவிட்டு, இறுதியில் சுருக்கமாக சொன்னான். "நீங்க சொன்னதெல்லாம் உண்மைதான். நம் விண்வெளி மண்டலத்தில் இருக்கும் நட்சத்திரமோ அல்லது கிரகமோ இந்த மாதிரி சக்தியை இழக்க நேர்ந்தால் நீங்கள் சொன்ன ஆபத்து ஏற்படலாம். ஆனால் அதுவே மற்றொரு விண்வெளி மண்டலத் தைச் சேர்ந்த ஏதாவது நட்சத்திரத்திலிருந்து சக்தியைப் பெற்றுக் கொண்டால் பரவாயில்லை இல்லையா?"

"ஆமாம். பரவாயில்லைதான்."

"அதனால்தான் மாயாஸ் நம்முடைய விண்வெளி எல்லையில் உள்ள சூரியனைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்." சொல்லி முடித்தான் யஷ்வந்த்.

அந்த ஹாலில் ஊசி விழுந்தாலும் கேட்கும்படியான நிசப்தம்!

பேச்சு எந்தப் பக்கமாகவோ போய்க் கொண்டிருந்த

சமயத்தில், இந்த உண்மையை வந்து தொட்டுவிடவே, அவன் சொல்ல நினைத்தது புரியத் தொடங்கி, எல்லோருடைய மேனியும் தன்மையறியாமலேயே சிலிர்த்தன. அந்த நிசப்தத்தைத் திரும்பவும் சிதறடித்தான் யஷ்வந்த்.

"இதெல்லாம் என் கற்பனைதான். நமக்குக் கிடைத்த சாட்சியங்களை ஆதாரமாக வைத்துக் கொண்டு நான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறேன். என் கற்பனை முழுவதுமே தவறாக இருக்கலாம். ஆனால் அது மட்டும் உண்மையாக இருக்கும் பட்சத்தில், இதன் மூலம் ஏற்படப் போகும் விளைவுகளை நான் இந்த விதமாக ஊகிக்கிறேன்" என்று மேலும் சொல்லத் தொடங்கினான்.

"சூரியனிடமிருந்து சக்தியை எடுத்துக்கொள்ளும் காரியத்தில் அந்த மாயாஸ் பயன்படுத்தும் கருவிகள் என்னவென்று நமக்குத் தெரியாது. சூரியனை வழக்கத்தைக் காட்டிலும் சீக்கிரமாக ரெட் ஜெயிண்டாக மாற்றவல்ல செயல்களைப் பற்றி இப்பொழுதுதான் பரிசோதனை ரிபோர்ட்டுகள் கொடுத்திருக்கிறார்கள். அதனால் அதைப்பற்றி நான் இங்கே அதிகமாக சொல்ல விரும்பவில்லை. நான் ஊகிக்கின்ற இரண்டாவது ஆபத்து சோலார் ஃப்ளேம்ஸ்! காஸ்மிக் கிரணங்கள். அங்கு மிங்கும் நிரந்தரமாக பயணம் செய்து கொண்டே இருக்கும் என்றும், அதில் சில கிரணங்கள் பூமியில் வந்து மோதிக் கொண்டேயிருக்கும் என்றும் நமக்குத் தெரியும். ஒரு மனிதனை முற்றிலும் கொன்றுவிட ஒரு சிறிய காஸ்மிக் கிரணம் போதுமானது. அதிர்ஷ்டவசமாக பூமியைச் சுற்றிலும் இருக்கும் சூழ்நிலை ஒரு கவசத்தைப் போல் இந்த காஸ்மிக் கிரணங்களின் தொல்லையிலிருந்து மனிதனைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது. இந்தக் கிரணங்களிலிருந்து நம்மை நாம் காப்பாற்றிக் கொள்ளும் கவசங்கள் இதுவரையிலும் கண்டு பிடிக்கப்படவில்லை."

"பூமியைச் சுற்றிலும் இருக்கும் சூழ்நிலைதான் மனிதனை இந்த காஸ்மிக் கிரணங்களிடமிருந்து காப்பாற்றும் பட்சத்தில், ராக்கெட்டில் அந்தத் திரையைத் தாண்டிக்கொண்டு வெளியே போய் சந்திரனில் காலடி எடுத்து வைத்தவர்களை எந்தக் கவசம் காப்பாற்றுகிறது?'' விஞ்ஞானி ஒருவர் கேட்டார்.

"நல்ல கேள்வி. விண்வெளிக்குச்சென்ற நம்மவர்கள் விண்வெளியில் இருக்கும்போது சூரியனின் மீது நெருப்பு ஜுவாலை எழும்பக் கூடாது என்றும், காஸ்மிக் கிரணங்கள் தோன்றக் கூடாது என்றும் பிரார்த்தித்துக் கொள்வதைத் தவிர வேறெதுவும் செய்ய முடிவதில்லை. இதுவரை அந்த மாதிரி சம்பவம் எதுவும் ஏற்பட்டதில்லை என்பதால் நம் விண்வெளி வீரர்கள் யாவரும் நலமாகத் திரும்பி வந்தார்கள். 1980ல் மட்டும் எகோ 1 என்ற சாட்டிலைட் இந்த ஜுவாலையால் பாதிக்கப்பட்டது. இந்த காஸ்மிக் கிரணங்களின் பிடியிலிருந்து மனிதனைக் காப்பாற்றக் கூடிய கவசத்தைக் கண்டுபிடித்த பிறகுதான் விண்வெளி நகரமானது நிர்மாணிக்கப்பட்டது. சரி, விஷயத்திற்கு வருகிறேன்."

ஹாலில் இருந்த அனைவரும் அவன் என்ன சொல்லப் போகிறானோ என்று ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

யஷ்வந்தின் குரல் கம்பீரமாக ஒலித்தது. "அந்தக் கிரகவாசிகள் சூரியசக்தியைப் பறிக்கும் முயற்சியில், சூரியனின் ஜுவாலைகள் மேலே எழும்பும் பட்சத்தில் அந்த காஸ்மிக் கிரணங்களின் தாக்குதலில் பூமியிலிருக்கும் எல்லா உயிர்களும் நசிந்து விடும். சூனியவெளியில் நமக்குக் காத்துக் கொண்டிருக்கும் ஆபத்து அதுதான். இந்தத் தாக்குதலை சூழ்நிலையால் தடுத்து விடமுடியாது. உலகத்தில் மனித இனம் முழுவதும் கலவரப்

படவேண்டிய விஷயம் இது. நாம் அனைவரும் ஏதாவது ஒரு நடவடிக்கையை மேற்கொள்வதைப் பற்றி உடனே முடிவெடுக்காவிட்டால், சாவு அதிக தூரத்தில் இல்லை என்று நான் நினைக்கிறேன். நான் சொல்ல விரும்பு வது இவ்வளவு தான்."

அவன் மேடையைவிட்டு இறங்கிவிட்டான்.

* * *

இது நடந்த இரண்டு நாட்களுக்குப் பிறகு அவனுக்குச் செய்தி வந்தது.

இந்த முறை மிகக் குறைந்தவர்களே கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். அவர்கள் விஞ்ஞானிகள் இல்லை. நாட்டின் தலைவர்கள்.

யஷ்வந்த் அந்த ஹாலுக்குள் நுழைந்ததுமே முதல் முதலில் கவனித்த விஷயம் என்னவென்றால், விண்வெளிப் பரிசோதனை டைரக்டர் அந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகித்ததுதான். நாட்டின் தலைவர்கள் அவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்தார்கள்.

இரண்டு நாட்களுக்கு முன்னால் தங்களுக்குள் நிகழ்ந்த கூட்டத்தில் வெவ்வேறு துறைகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் வெளியிட்ட கருத்துக்களும், எச்சரிக்கைகளும் ஒரு கட்டுரை உருவில் ஹைகமாண்டருக்கு வழங்கப்பட்டது என்றும், அகில உலக ரீதியில் அந்தக் கட்டுரையின்மீது சர்ச்சைகள் நிகழ்ந்த தென்றும் அவனுக்குத் தெரியும். ஆனால் இரண்டே நாட் களில் இந்த மீட்டிங் மறுபடியும் கூடுவதுதான் அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

அவன் தன் சீட்டில் வந்து உட்கார்ந்த ஐந்து நிமிஷங்

களில் மீட்டிங் தொடங்கியது. டைரக்டர் பீடிகை எதுவும் இல்லாமல் நேராக விஷயத்திற்கு வந்து விட்டார்.

* * *

"இல்லை டாக்டர்!'' மறுத்து தலையசைத்தாள் அனூஹ்யா. "நான் யஷ்வந்துடன் மறுபடியும் அறிமுகம் வளர்த்துக்கொள்ளும் பேச்சே இல்லை. வாழ்க்கையின் கடைசிக் கட்டத்தில், மனைவியாக இருந்த என்னை நினைத்துக் கொண்டிருக்கிறார். அவ்வளவுதான்."

சைக்ரியாட்ரிஸ்ட் புரிந்து கொண்டதுபோல் தலையை அசைத்தார். எப்போதோ கடந்த காலத்தில் நமக்கு யாராவது அறிமுகமாகியிருப்பார்கள். மிக நெருக்கமாகிவிட்டவர்களைப் போலத் தோன்றுவார்கள். ஓரிரு சிறிய அனுபவங்களை நம்முடன் பகிர்ந்து கொள்வார்கள். பிறகு காலம் இருவரையும் பிரித்துவிடும். திடீரென்று அவர்களை சந்திப்பதோ, அவர் களைப் பற்றிய ஏதாவது சமாச்சாரமோ நிகழக்கூடும். அதன் மூலம் பழைய நினைவுகள் மேலெழும்பும். என்றோ நிகழ்ந்தது மிக அருமையாய்த் தோன்றும். அவர்களைச் சந்திக்க வேண்டு மென்று மனம் தவிக்கும். ஆனால் அது தற்காலிகமானதுதான். அந்த வேகம் உடனே தணிந்துவிடும்.

இப்பொழுது இந்த சைக்ரியாட்ரிஸ்ட் கூட இந்த மாஜி தம்பதிகளைப் பற்றி அவ்வாறுதான் எண்ணிக்கொண்டார். பழைய உத்வேகமானது மேலெழும்பியிருப்பதாக நினைத்தார். உணர்ச்சித் துடிப்பால் இந்தப் பெண் கலவரமடைந்திருக் கிறாள் என்ற முடிவுக்கு வந்தார். அதனால் அவளுக்கு யோசனை வழங்க முற்பட்டார்.

"நீங்கள் நினைப்பது சரிதான் அனூஹ்யா! இதெல்லாம் எதிர்பாராமல் அவரைச் சந்தித்ததால் ஏற்பட்ட உத்வேகம்

தான். நான் முன்பே சொன்னேன். வாயுபுத்ரனுடன் சேர்ந்து சில நாட்கள் எங்கேயாவது தொலை தூரத்திற்குப் போகும் படி."

"நானும் அப்படித்தான் எண்ணியிருந்தேன் டாக்டர்! ஆனால் விண்வெளி நகரம் எரிந்துவிட்டதால் எங்கள் பயணம் நின்றுவிட்டது."

"இப்பொழுது யஷ்வந்த் இங்கேதான் இருக்கிறார் என்று சொன்னீங்க இல்லையா?"

"ஆமாம்."

டாக்டர் நாற்காலியில் பின்னால் சாய்ந்துகொண்டே "ஒரே இடத்தில் இருந்துகொண்டு நீங்கள் இருவரும் சந்திக்காமல் இருக்க முடியாது. ஒவ்வொரு வினாடியும் அந்த நேரம் எப்பொழுது வருமோ என்று நீங்கள் பயந்துகொண்டே இருந்தால், வாயுபுத்ரனோடு உங்கள் சிநேகத்தைத் தொடர முடியாது. நீங்கள் மற்ற பெண்களைப் போன்றவர் இல்லை. இவ்வாறு தட்டுத் தடுமாறிக் கொண்டே காலத்தைக் கழிப்பதைவிட நீங்களாகவே போய் யஷ்வந்தைச் சந்தித்து விட்டால், உங்கள் எதிர்காலத்தைப் பற்றி உங்களிடம் படிந்திருக்கும் பயம் போய்விடும். ஆபத்தை ஊகித்துக் கொண்டிருப்பதைவிட அதற்கு எதிரில் போய் நிற்பதே மேல். ஒரு முறை யஷ்வந்திடம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டால் உங்கள் மனம் தெளிவாகிவிடும். நீங்களும் வாயுபுத்ரனும் சந்தோஷமாக இருக்கலாம்."

அனுஹ்யா தலை குனிந்தபடி உட்கார்ந்திருந்தாள். 'என்னால் சொல்ல முடியுமா?' என்று மனதில் சங்கடத்துடன் எண்ணிக் கொண்டாள். புரிந்து கொள்ள முடியாதவர்களுக்குத் தன் பிரச்னை மிகச் சிறியது. நுட்பமான உணர்வுகள்,

சென்டிமென்ட், தர்மசங்கடம் போன்ற வார்த்தைகளை மெடீரியலிஸ்டிக் தராசில் வைத்து அளக்க முடியாது. அதிர்ஷ்டவசமாக டாக்டர் மட்டும் அவள் சங்கடத்தைப் புரிந்து கொண்டுவிட்டார். அவளுக்குள் பெருக்கெடுத்துக் கொண்டிருந்த இந்திய இரத்தத்திற்கும் மாறுபடுகின்ற நவீன கலாச்சாரத்திற்கும் இடையே நிகழும் போராட்டம்தான் அவள் பிரச்னை. அந்தப் போராட்டத்திற்கு அவள்தான் பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டுமேயொழிய வேறு யாரா லும் எதுவும் செய்ய முடியாது. அனூஹ்யா எழுந்து நின்று "நீங்கள் சொன்னதுபோல் செய்ய முயற்சிக்கிறேன் டாக்டர். ஒருக்கால் சந்தித்துச் சொல்ல முடியாமல் போனால் கடிதம் மூலமாக தெரிவித்துவிட முயற்சிக்கிறேன்."

டாக்டர் திருப்தியடைந்தவராக "குட்" என்றார். "இது எல்லாவற்றையும்விட உத்தமமான வழி. கடிதம் மூலமாக தெரிவித்துவிட்டால் அவரை நீங்கள் இன்னொரு முறை சந்திக்க வேண்டிய அவசியம்கூட இருக்காது. நான் சொல்வ தெல்லாம் ஒன்றே ஒன்றுதான். மின்சார வளையத்தில் காந்த மானது கவரப்படுவதுபோல் உங்கள் மாஜி கணவரின் எண்ணங்கள் உங்கள் மனக் குமுறல்களுக்குக் காரணமாக இருக்கின்றன. நீங்களும் வாயுபுத்ரனும் நெருங்க வேண்டும் என்றால், நீங்கள் யஷ்வந்தைத் தொலைவில் நிறுத்தி வைப்பது ஒன்றுதான் வழி."

* * *

ஒரு மணி நேரமாக நிகிலுடன் போன் மூலமாக தொடர்பு கொள்வதற்காக முயன்று கொண்டேயிருந்தாள் ஸ்ரீஜா. நிகில் கிடைத்தபாடில்லை. இரண்டு நாட்களுக்கு முன்னால் பரிசோதனைக் குழுவினர் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தான் என்ற விஷயம் மட்டும் தெரிந்தது.

அதற்குப் பிறகு என்னவானான் என்று யாருமே சொல்ல வில்லை. அவசரமாக அவனிடம் பேச வேண்டி யிருந்தது. அதனால்தான் ஒரு மணி நேரமாக போனில் முயற்சி பண்ணிக் கொண்டேயிருந்தாள். சுவிட்சர்லாந்தி லிருந்து இந்தியாவிற்கு நேரடியான போன் தொடர்பு இருந்ததால், ஓரிடத்தில் கிடைக்காத போது வேறு நம்பர்களைச் சுழற்றிக் கொண்டிருந் தாள். சயின்ஸ் சிடியில் எங்கேயிருந்தாலும் சரி, அவனைப் பிடித்து அந்தச் செய்தியை அவனுக்குச் சொல்லி விட வேண்டும். தான் கர்ப்பமாக இருக்கும் விஷயத்தை...

* * *

மீட்டிங் ஹாலில் ஊசி விழுந்தாலும் கேட்கும்படியான நிசப்தம் தவழ்ந்து கொண்டிருந்தது. அந்த நிசப்தத்தைப் பிளந்து கொண்டு டைரக்டரின் குரல் ஒலித்தது. "விண்வெளி யில் வசிப்பவர்கள் நமக்கு அனுப்பிய செய்தி எந்த கோடில் இருக்கிறதோ, அதே கோடிலேயே பூமியிலிருந்து நாமும் பதிலை அனுப்ப வேண்டும். நாம் செய்ய வேண்டிய காரியங் களில் இதுதான் முதலாவது. ஆனால் இந்த முறையில் நாம் நினைத்ததை சாதிப்போம் என்று தோன்றவில்லை. காரணங் கள் உங்களுக்குத் தெரிந்ததுதான்."

கேட்டுக் கொண்டிருந்த யஷ்வந்த் "ஆம், அது உண்மை தான்" என்றெண்ணிக் கொண்டான். அவ்வளவு பலமாகச் சூனியவெளிக்கு அனுப்பக்கூடிய அலைகள் இதுவரையிலும் மனிதனால் கண்டுபிடிக்கப்படவில்லை. இன்னொரு விதமாக சொல்லப்போனால் ஒருக்கால் அந்தத் தேவை இதுவரையிலும் வராததால்தான் கண்டுபிடிக்கவில்லையோ என்னவோ.

டைரக்டர் மேலும் சொன்னார். "இடைவிடாமல் பூமியின் வெவ்வேறு நாடுகளிலிருந்து சுமார் ஒரு வருடத்திற்கு இந்த தகவலை தொடர்ந்து அனுப்பிக் கொண்டே இருக்க வேண்டும்.

இனி இரண்டாவது நடவடிக்கையை பற்றிச் சொல்கிறேன். இதுவும் முக்கியமானதுதான். நேற்றிரவு வரையிலும் விவாதிக்கப்பட்டு, பிறகு ஒரு முடிவுக்கு வந்திருக்கும் விஷயம்."

அவர் என்ன சொல்லப் போகிறாரோ என்று எல்லோரும் ஆர்வத்தோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"டியர் சர்ஸ்! பூமி என்று ஒன்று உள்ளதென்றும், அதன் மேல் உயிர்கள் வாழுகின்றவென்றும், சூரியன் இல்லா விட்டால் அந்த உயிரினங்கள் பிழைக்க முடியாதென்றும், இண்டர் பிளானடெரி சொஸைட்டிக்கு நாம் தெரியப்படுத்த வேண்டும். அதற்காக ஒரு குழுவை விண்வெளிக்கு அனுப்ப வேண்டும். இதுதான் நேற்றிரவு நாங்கள் எடுத்துக் கொண்ட தீர்மானங்களின் முக்கியமானது."

அவர் சொல்லி முடிந்ததுதான் தாமதம், மீட்டிங் திடீரென்று சலசலப்பு ஏற்பட்டது. அங்கிருந்தவர்கள் எல்லோருமே மேதாவிகள். விரிவான விளக்கம் அவர்களுக்குத் தேவையில்லை. டைரக்டர் பேசிய கடைசி வாக்கியம் சபையில் சலசலப்பை ஏற்படுத்தியது.

விண்வெளிக்கு ஒரு குழுவை அனுப்புவதாவது?

எவ்வளவு தூரத்திற்கு?

எவ்வளவு வருடங்களுக்கு?

எவ்வளவு பேரை?

எவ்வளவு நாட்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் அவ்வாறு பயணம் செய்து கொண்டே இருப்பார்கள்? எந்த கேலக்ஸியில் இருக்கிறார்கள் என்றே தெரியாத அந்த வேறு கிரகத்தைச் சேர்ந்தவர்களைச் சந்தித்து, அவர்களோடு தொடர்பு ஏற்படுத்திக்கொண்டு நம் பிரச்னையை அவர் களுக்கு எடுத்துச்

சொல்லிவிட்டு, எப்பொழுது திரும்பி வருவார்கள் அவர்கள்?

தி...ரு...ம்...பி... வ...ரு...வ...து!

நடக்கும் காரியம்தானா அது?

எல்லோருடைய மனதிலும் ஒரே கேள்விதான் குடைந்து கொண்டிருந்தது.

தம் உயிரையே தாரை வார்த்துக் கொள்ளப் போகிற அந்த நபர்கள் யார்? திரும்பி வரமுடியாத இடத்திற்கு செல்ல விருக்கும் அந்த நபர்கள் யார்?

மீட்டிங் ஹாலில் இன்னும் எல்லோரும் தங்களுக்குள் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குக் கொஞ்சம் நேரம் கொடுப்பதற்காகத் தானோ என்னவோ டைரக்டர் சில நிமிஷங்கள் பேசாமலிருந்து விட்டுத் திரும்பவும் தொடர்ந்தார்.

"இந்த விஷயமாக எல்லோருமாகச் சேர்ந்து ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. ஆனால் இப்படிப்பட்ட சூழ் நிலையில் இந்த விதமான முயற்சியை யாராவது ஒருவராவது மேற்கொள்ளாவிட்டால் மனித சமுதாயமே வருந்த நேரிடலாம் என்று எண்ணி முடிவில் ஒப்புக்கொண்டார்கள்."

அவர் பேசி முடித்ததும் ஹாலில் நிசப்தம் ஏற்பட்டது. அதற்குப் பிறகு டைரக்டர் மற்ற அம்சங்களைப் பற்றிப் பேசினார். அவருடைய ஊகத்தின்படி இந்தப் பிரயாணம் பத்து வருடங்களுக்கு நீடிக்கலாம். விண்வெளிக் கப்பலில் அவ்வாறு முடிவில்லாமல் பயணம் செய்துகொண்டே சூனியத்திற்கு அலைகளை அனுப்பிக் கொண்டே இருக்க வேண்டும். அதை இண்டர் பிளானடெரி சொஸைட்டிக்காரர்கள் கண்டு பிடித் துப் பதில் அனுப்பிவிட்டால் சரி. இல்லாவிட்டால் மேலும் சில ஆண்டுகள் பயணத்தைத் தொடர வேண்டியிருக்கும்.

அந்த அறையிலிருந்த எல்லோருக்குமே மேலும் சில ஆண்டுகள் என்றால் எவ்வளவு என்று தெரியும். ராக்கெட்டில் பயணம் செய்பவர்கள் சாகும் வரையிலும் அந்தப் பயணம் தொடர்ந்து கொண்டேயிருக்கும். திரும்பி வருவது என்ற கேள்விக்கே இடமில்லை. இன்னும் சொல்லப் போனால் டைரக்டரின் பேச்சிலேயே அந்த நம்பிக்கை தெரியவில்லை. யஷ்வந்திற்கும் அது தெரிந்ததுதான். ஆனால் அவனுக்கு அது சரியாகத்தான் பட்டது. ஒன்றுமே செய்யாமல் இருப்பதைவிட ஏதாவது ஒன்றைச் செய்வது நல்லது. லட்சக்கணக்கில் பணம் செலவழித்தாலும் சரி. பத்துப் பேர் உயிர் இழக்க நேர்ந்தாலும் சரி. அப்படிப் பார்த்தால் எத்தனையோ உயிர்கள் வீணாகப் போவதில்லையா? எவ்வளவு பணம் வியர்த்தமாக செல வழிப்பது இல்லையா?

ஆனாலும் இந்தப் பிரயாணம் எதிர்பார்த்த அளவிற்குச் சுலபமாக நடக்காது என்று அவன் அறிவான். அவன் ஒரு ஆஸ்ட்ரோ ஃபிசிஷியன். மேலுக்குத் தென்படும் பிரச்னை களைவிட உள்ளுர இருக்கும் பிரச்னைகள் ஏராளம். எல்லா வற்றையும் விட முக்கியமானது, வாகனத்திற்குத் தேவையான எரிபொருளை எப்படி ஈடுகட்டுவது? பத்து வருடங்கள் வரை வாகனத்தை இயக்கிக் கொண்டிருக்கக் கூடிய எரிபொருள்...

புவியூர்ப்புச் சக்தியிலிருந்து வெளியேறச் சக்தி வேண்டும். பிறகு சூனியவெளியில் நுழைந்ததுமே அந்தச் சக்தி தேவை யில்லை. நியூட்டனின் இரண்டாவது தியரியின் படி அவ்வாறு வாகனம் போய்க் கொண்டே இருக்கும். ஆனால் சந்திரன், செவ்வாய், அதையடுத்து குரு, சனி... இவ்வாறு அத்தனையை யும் தாண்டிக் கொண்டே போக வேண்டும். இவற்றின் ஈர்ப்புச் சக்திக்கு உட்பட்டிருந்தாலும் அதிலிருந்து வெளியேற சக்தி வேண்டும். இவ்வளவு சக்தியும் எங்கேயிருந்து வரும்? இவ்வளவு எரிபொருளை சுமந்துகொண்டு வாகனம் எப்படிப்

போகும்? இவ்விதமாக யோசித்துக் கொண்டிருந்தபோதே டைரக்டரின் பிரசங்கம் முடிவடைந்தது. ரிபோர்ட்டர்கள் வேகமாக வெளியேறினார்கள். அங்கிருந்தவர்கள் கும்பல் கும்பலாகக் கூடிப் பேசிக் கொண்டிருந்தார்கள். தொலைவி லிருந்தே நிகிலைப் பார்த்துவிட்டு யஷ்வந்த் அவனிடம் வந்தான்.

"நீ எப்போ வந்தாய்?"

"மீட்டிங் தொடங்குவதற்கு முன்னால் அவசரமாக வரச் சொல்லிச் செய்தி வந்தது."

"நீ என்ன நினைக்கிறாய் நிகில்?"

"எதைப்பற்றி?"

"இந்த மாதிரி ஒரு குழுவை சூனிய வெளியில் தூது அனுப்புவதைப் பற்றி" என்று சிரித்தான் யஷ்வந்த்.

"இதைவிட அர்த்தமற்ற, முட்டாள் தனமான செயல் வேறு ஏதும் இல்லை என்று நினைக்கிறேன்."

யஷ்வந்த் வியப்படைந்தான். நிகில் இவ்வளவு தூரம் கருத்து மாறுபட்டிருப்பான் என்று நினைக்கவில்லை. தன் வியப்பை வெளியில் காட்டிக் கொள்ளாமல் "ஏன் அவ்வாறு நினைக்கிறாய்?" என்று கேட்டான்.

அவ்விருவரும் மீட்டிங் ஹாலின் வராண்டாவில் நடந்து கொண்டிருந்தார்கள். வராண்டாவில் விசிட்டர்களுக்காகச் சுவரில் போட்டோக்கள் மாட்டப் பட்டிருந்தன. நிகில் ஒரு போட்டோவுக்கு முன்னால் நின்றான். விண்வெளியைப் பற்றியும், விண்வெளி பரிசோதனையில் இந்தியா சாதித்த வெற்றிகளைப் பற்றியும் விவரிக்கும் போட்டோ அது.

நிகில் பார்த்த அந்தப் படம் நம் கேலக்ஸிக்கு சம்பந்தப் பட்டது.

"இதோ இந்தப் போட்டோவை பாருங்க. சூரியன் வினாடிக்கு 250 கிலோ மீட்டர் வேகத்தோடு இந்த கேலக்ஸி யைச் சுற்றிக் கொண்டிருப்பதால், மொத்த மண்டலத்தையும் ஒரு முறை சுற்றி வருவதற்கு 250 மில்லியன் ஆண்டுகள் பிடிக்கும். அப்படி இருக்கும் போது நாம் இந்த கேலக்ஸியில் எந்த நட்சத்திரம் என்று தேடுவோம்? எவ்வளவு தூரம் ஆழமாக போக முடியும்?"

யஷ்வந்த் சிரித்தான். "நீ இந்த ஒரு கேலக்ஸியைப் பற்றி மட்டுமே யோசித்துப் பார்க்கிறாய். அந்த மாயாஸ் வேறு விண் வெளி மண்டலத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தால் நம் நிலைமை மேலும் கஷ்டமாகிவிடும். அதைப் பற்றியும் யோசித் துப் பார்" என்றான்.

நிகில் தேறிக்கொண்டு "மைகாட்! அதைப் பற்றியே நான் யோசிக்கவில்லை. ஒருக்கால் அந்த மாயாஸ் வேறு விண்வெளி மண்டலத்தைச் சேர்ந்தவனாக இருந்தால், பாவம், இவ்வாறு அந்த மண்டலத்தை நோக்கிப் போகும் நம் விண்வெளிக் கப்பல் எவ்வளவு தூரம் போனாலும் எதுவுமே தென்படாது. இன்னொரு விதமாக சொல்லணும் என்றால் ராக்கெட்டி லேயே உயிரை விட வேண்டியிருக்கும்."

"வேறு ஏதோ ஒரு விண்வெளி மண்டலத்திலிருந்து யாரோ வந்து நம் சூரியனைக் கொள்ளையடிக்கிற அளவுக்கு கஷ்டப்பட மாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். அவ்வளவு தூரம் பிரயாணம் செய்து எதுக்காக வரப் போகிறார்கள்? அவர்கள் நம் விண்வெளி மண்டலத்தைச் சேர்ந்தவர்களாகத்தான் இருப்பார்கள். கடைசியில் இருப்ப தால் சூரியனைத் தேர்ந்தெடுத்திருப்பார்கள்'' என்றான் யஷ்வந்த்.

"அப்படியென்றால் நாம் ஒரு காரியம் செய்யணும்."

"என்ன?"

"விண்வெளி மண்டலம் லட்சம் மில்லியன் மைல்கள் தூரம் வரை வியாபித்திருக்கிறது. ஒரே ராக்கெட் என்று இல்லாமல் நூறு அல்லது ஆயிரம் ராக்கெட்டுகளை விண் வெளியில் அனுப்பி, அந்த இண்டர் பிளானடெரி சொஸைட்டி எங்கே இருக்கு என்று கண்டுபிடிக்கணும்."

யஷ்வந்த் சிரித்துவிட்டு "நீ இந்தத் திட்டத்திற்கு ரொம்ப எதிராக இருக்கிறாய் போலிருக்கே?" என்றான்.

"ரொம்ப."

"சுற்றிலும் இருக்கும் இருட்டைத் திட்டிக் கொண்டே இருப்பதைவிட, சின்ன விளக்கு ஒன்றை ஏற்றி வைக்க முயற்சிப்பது நல்லதுன்னு சின்ன வயதில் படித்திருக்கிறோம். மறந்துவிட்டாயா நிகில்?"

நிகில் பதில் பேசவில்லை. யஷ்வந்த் கூட மேலும் வாதாடினானேயன்றி தன் வாதத்தில் அவ்வளவாய் பலம் இல்லை என்று அறிவான். "போகட்டும். எதையோ ஒன்றைப் பண்ணித்தானே ஆகணும். நீயாக இருந்தால் என்ன செய்திருப்பாய் சொல்லு" என்றான்.

நிகில் கொஞ்சம் யோசித்துவிட்டு "அந்த மாயாஸ் மறுபடி யும் சூரியனுக்கு அண்மையில் வருவார்கள். பூமியில் ஜீவராசி கள் இருப்பது அவர்களுக்குத் தெரியும். நம் உணர்வுகளைக் கண்டுபிடிக்க எப்படியும் முயற்சி செய்வார்கள். அவர்கள் அந்த முயற்சி செய்து கொண்டிருக்கும் போதே, நாம் ராடார் மூலம் அந்தப் பறக்கும் தட்டைப் பிடித்து விடுவது நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது. குறைந்தபட்சம் அவர்கள் எந்த

விண்வெளி மண்டலத்திலிருந்து வந்திருக்கிறார்கள் என்று தெரிந்துவிடும். சூரியன் நமக்கு எவ்வளவு முக்கியமானது என்று அவர்களுக்கு நயமாகச் சொல்லலாம். அவர்கள் கேட்டுக் கொள்ளாவிட்டால் இண்டர் பிளானடெரி சொஸைட்டிக்கு நாம் புகார் செய்யலாம். அனால் அந்த சொஸைட்டி எங்கே இருக்கிறது என்று தெரிந்துகொள்ளணும் என்றால் அதுக்கு அந்த கிரகவாசிகளைத்தான் ஆதாரப் பட்டிருக்கிறோம். முதலில் நல்லவிதமாக கேட்டுப் பார்ப் போம். இல்லையென்றால் பயமுறுத்தி பணிய வைப்போம். அந்தப் பறக்கும் தட்டில் அதிகமாகப் போனால் நாலைந்து பேர் இருக்கலாம். அவர்களை வழிக்குக் கொண்டு வருவது அவ்வளவு கஷ்டம் ஒன்றும் இல்லை" என்றான் ஆவேசமாக.

"நீ சொன்னது நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் ஒரு முக்கியமான விஷயத்தை மறந்துவிட்டாய். அவர்களுக்கு டெலிபதி தெரியும். நம் யோசனைகளை நம்மைவிட வேகமாக கண்டுபிடித்து விடுவார்கள். அதோடு நம்மைவிட பல மடங்கு முன்னேறியிருப்பவர்கள். அவர்களை வழிக்குக் கொண்டுவரு வது கஷ்டம். சரி போகட்டும். அவர்களிடம் நயமாக சொல்லாம் என்கிறாயா? அதுவும் நடக்காத காரியம். அவர் களுக்கு நாம் இருக்கும் இடம் தெரியும் என்பதை நீ மறந்து விடக்கூடாது. சூரியன் இல்லாவிட்டால் நமக்கு ஏற்படும் ஆபத்தைப் பற்றித் தெரிந்தும், தம் வேலையைத் தொடர்ந் திருக்கிறார்கள் என்றால், நம்மை அவர்கள் பொருட்படுத்த வில்லை. நாம் நாசமானாலும் பரவாயில்லை என்ற உத்தேசத் தில் இருக்கிறார்கள் என்று புரிகிறது. நம்மைப் பற்றி அவர் களுக்கு எல்லாமே தெரியும் என்கிற கருத்தோடு பார்த்தால், நாம் சூனியவெளியில் மேற்கொள்ளப் போகும் சாகஸ யாத்திரையைப் பற்றிக்கூட அவர்களுக்குத் தெரிந்ததே இருக்கும். நாம் அனுப்புகிற அலைகள் இண்டர் பிளானடெரி சொஸைட்டி

வரைக்கும் போகாமல் எப்படி தடுத்தார்களோ, அதே விதமாக பூமியிலிருந்து கிளம்பப் போகும் வாகனத்தையும் தடுப்பார்கள். அதாவது அவர்கள் இன்னும் அங்கேயே இருந்தால்... ஆனால் இருக்க மாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். ராயை தங்களுடன் அழைத்துக் கொண்டு போயிருக்கிறார்கள். இனி நீ சொன்ன இரண்டாவது விஷயம். அவர்கள் பூலோகத்து விண்வெளிக் கப்பலை வசப்படுத்திக் கொண்டால் என்ன செய்வது என்பது, வசப்படுத்திக் கொள்ளட்டும். குறைந்த பட்சம் அவர்களோடு நாம் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள வழி கிடைக்கும் இல்லையா?"

"அந்த முயற்சியில் உயிர் போனால்?"

அதைக் கேட்டுச் சிரித்தான் யஷ்வந்த். "சகல ஜனங்களுக் காவும் அந்த அளவுக்காவது உயிரையும் இழப்பதற்குத் தயாராக நம்மிடையே ஐம்பது சதவீதம் பேராவது இருப்பார் கள் என்று நினைக்கிறேன். அந்த தேசபக்தர்களை... சாரி, அவர்களை வேறு எப்படி குறிப்பிடுவது? நாட்டுக்கும் மேலாக உலகத்துக் காக தியாகம் பண்ணுகிறவர்களை இந்த பரிசோதனைக்காக அனுப்புவதில் தவறென்ன இருக்கிறது?

அவர்கள் உரையாடல் முடிவடைவதற்குள்ளாகவே வெள்ளை உடை அணிந்த வேலையாள் ஒருவன் யஷ்வந்திடம் வந்து "உங்களை டைரக்டர் சார் அழைக்கிறார்" என்றான்.

யஷ்வந்த் அறைக்குள் நுழைந்தபோது டைரக்டர் மட்டுமே இருந்தார். அவர் முகத்தில் களைப்புத் தெரிந்தது. அதைக் காட்டிக் கொள்ளாமல் சிரித்துவிட்டு "எப்படி இருக் கிறாய் யஷ்வந்த்?" என்று கேட்டார்.

"நன்றாகத்தான் இருக்கிறேன் சார்."

"மீட்டிங்கில் சொன்னதைப்பற்றி உன் அபிப்பிராயம் என்ன?"

"எந்த விஷயத்தில்?"

"விண்வெளிக்கு குழுவை அனுப்புவதைப் பற்றி."

"இந்தச் சூழ்நிலையில் அதைக் காட்டிலும் வேறு வழி யில்லைன்னு தோன்றுகிறது சார். ஆனால் என்னோடு நிறைய பேர் ஒத்துப் போகாமல் இருக்கலாம்."

"அப்படி ஒத்துப்போகாமல் இருப்பவர்களில் நானும் ஒருவன். ஆனால் மெஜாரிடி அபிப்பிராயம் அது."

யஷ்வந்த் பதில் பேசவில்லை.

நிசப்தத்தைப் பிளந்து கொண்டு டைரக்டர் சொன்னார். "இண்டர் பிளானடரி சொஸைடி எங்கே இருக்கிறது என்று தேடிப் போக வேண்டிய குழுவில் நீயும் ஒருவன் யஷ்வந்த். அதைச் சொல்லத்தான் உன்னைக் கூப்பிட்டேன். கமிட்டியின் முடிவு இது. அது மட்டுமில்லை. அந்த குழுக்குக் கமாண்டர் கூட நீதான்."

சாதாரணமாகப் பேசிக் கொண்டிருந்த யஷ்வந்த் திடுக் கிட்டான். டைரக்டர் சொன்னது ஒரு வினாடி புரிய வில்லை பத்து... இருபது... முப்பது வருடங்கள் விண்வெளியில்... ஒரு குழுவை அழைத்துக்கொண்டு... அதற்குத் தான் கமாண்டர். இது கனவா... நிஜமா? எவ்வளவு காலம் அவ்வாறு சுற்றிக் கொண்டிருக்க வேண்டுமோ தெரியாது. எங்கே போய்ச் சேருவோமா தெரியாது. திரும்பி வருவோம் என்ற பேச்சுக்கே இடமில்லை. திரும்பி வருவது என்ற யோசனைக்கே சிரிப்பு வந்தது. சூனியவெளியில் பயணம் செய்துகொண்டே எவ்வளவு நவீன கருவிகள் மூலமாக தகவல்களை அனுப்பினாலும்,

யாரோ ஒருவர் அதை வாங்கிக்கொண்டு, தமக்கு வழிகாட்டி, அந்த இண்டர் பிளானடெரி சொஸைட்டிக்குக் கூட்டிச் செல்வதற்கு பத்திலிருந்து முப்பது ஆண்டுகளுக்கு மேலாக எவ்வளவு காலம் வேண்டுமானாலும் பிடிக்கும். திரும்பி வர முப்பதாண்டுகள், ஆனாலும் முப்பது என்பது எதிர்பார்ப்பைத் தரக்கூடிய கால அளவு. அதிர்ஷ்டம் கூடிவராவிட்டால் நட்சத்திரங் களுக்கிடையே கலந்து போக வேண்டியதுதான். யுத்தத்தில் இறந்தாலோ, மலையுச்சியில் தனிமையில் உயிரை விட்டாலும் கூட உடல் பூமியோடு கலந்துவிடும். இங்கேயோ நிலைமை வேறு. எங்கேயோ தெரியாத இடத்தில் உடல் சிதில மடைந்து சாம்பலாகி விடவேண்டியதுதான். இது எல்லா வற்றையும் விட முக்கியமானது வேறு ஒன்று இருக்கிறது. பிரயாணத்தைத் தொடங்கிய நிமிஷத்திலிருந்து கடைசி வரையிலும் ஒரே ஒரு சிறிய ஹாலைப் போன்ற அறையில் பல ஆண்டுகள் கழிக்க வேண்டும். பயணம்... பயணம்... பயணம் தான். வேறு எதுவும் இருக்காது.

யஷ்வந்த் தலையைச் சிலிர்த்துக் கொண்டான். அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. அவன் ஏன் இவ்வாறு யோசிக்கத் தொடங்கிவிட்டான்? இவ்வளவு நாளாக பூமியிலிருந்து விண் வெளிக்கு ஒரு குழு போவது நல்லது என்று வாதாடிக் கொண்டிருந்தவன், இப்பொழுது அந்தக் குழுவில் தானும் இருக்கப் போவது தெரிந்ததுமே, கஷ்டங்களைப் பற்றி யோசிக்கத் தொடங்கிவிட்டானே?

தன் யோசனையை நினைத்து அவனுக்கே சிரிப்பு வந்தது. அவன் மௌனத்தை வேறுவிதமாக புரிந்து கொண்ட டைரக்டர் சொன்னார். "இதில் நிர்ப்பந்தம் எதுவும் இல்லை யஷ்வந்த்! உங்களுக்கு விருப்பம் இல்லாவிட்டால் யாருமே வற்புறுத்தப் போவதில்லை. பார்க்கப் போனால் இந்த மாதிரி பிரயாணத் திற்காக யாரையுமே கட்டாயப்படுத்தவும் முடியாது."

யஷ்வந்த் நொந்து கொண்டே "என் உத்தேசம் அது இல்லை. எதிர்பாராத பெரிய விஷயத்தைக் கேட்டதால் என்ன சொல்வதென்று சட்டென்று புரியவில்லை. இந்த மாதிரிச் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்ததற்கு பெருமைப்படுகிறேன்" என்றான்.

"குட்! எல்லோருடைய ஒப்புதலையும் பெற்றுக்கொண்ட பிறகுதான் குழுவைத் தீர்மானம் பண்ணுவோம்" என்றார் டைரக்டர்.

"யார் யாரைக் கேட்கப் போறீங்க?" என்றான் யஷ்வந்த், அப்பொழுதே கமாண்டர் பதவியை மானசீகமாக ஏற்றுக் கொண்டாற்போல்.

"டாக்டர் பிலிப்ஸ்... குழுவில் ஒரு டாக்டர் இருக்க வேண்டியது அவசியம்."

யஷ்வந்த் தலையை அசைத்தான்.

"ஆஸ்ட்ரோநாட் ஆக ரொம்ப அனுபவம் உள்ள நிகில், அவனை உங்களுக்கும் தெரியும். இந்தப் பிரயாணத்தில் அவன் அனுபவம் ரொம்பவும் உதவியாக இருக்கும்.'

யஷ்வந்திற்கு சந்தோஷம் ஏற்பட்டது. இந்த எல்லை யில்லாத பயணத்தில் தெரிந்த ஒருவரின் துணை. ஆர்ட்டிக் பனிமலைப் பிரதேசத்தில் தன் தனிமையைப் பகிர்ந்து கொண்டவன். இப்பொழுது வாழ்க்கையில் கடைசி வரையி லும்...

"இன்னும் யார்? எவ்வளவு பேர் கொண்ட குழுவை அனுப்புவதாக இருக்கீங்க?" கேட்டான் யஷ்வந்த்.

"உன்னைத் தவிர நான்கு பேர். ஒரு டாக்டர், ஒரு வானவியல் அறிஞன், ஒரு கம்ப்யூட்டர் விஞ்ஞானி..."

"யார்? வாயுபுத்ரனா?" டைரக்டரின் வார்த்தைகளைப் பாதியிலேயே இடைமறித்துக் கேட்டான்.

"இல்லை. புரொபசர் நிக்கொலோவஸ்கி. இத்துறையில் நிபுணர். உனக்கும் தெரிந்தேயிருக்கும்."

"பெயரைக் கேட்டிருக்கிறேன். சந்தித்ததில்லை. சரி, ஐந்தாம் நபர் யார்?"

"அனூஹ்யா என்ற பயோகெமிஸ்ட்."

யஷ்வந்த் சட்டென்று நிமிர்ந்தான். மூச்சுவிடக்கூட மறந்தவனாய் திக்பிரமை அடைந்தான். ஆனந்தத்தையும் மீறிய உணர்வு அது. டைரக்டர் அவன் முகத்தில் ஏற்பட்ட மாறுதலைக் கவனிக்கவில்லை. இந்தக் குழுவில் ஒரு பயோகெமிஸ்ட்டின் தேவை ஏன் ஏற்பட்டது என்றும், அதற்கு அனூஹ்யாவை ஏன் தேர்ந்தெடுக்க நேர்ந்தது என்றும் சொல்லிக் கொண்டே போனார்.

யஷ்வந்த் செவிகளில் அவை விழவில்லை.

அனூஹ்யா!

தம் குழுவோடு வரப்போகும் ஐந்தாவது ஆள் அனூஹ்யா.

தன்னோடு பல ஆண்டுகள் வரை... பல லட்சம் கோடி மைல்கள் எல்லையில்லாத சூனியவெளியில்... மேலும் மூவரோடு... இந்தப் பிரயாணத்தில் கொஞ்சமேனும் தடையோ சந்தேகமோ மனதில் இருந்திருந்தாலும், அது இந்த வினாடியே யாரோ துடைத்தெறிந்தாற்போல் மாயமாகிவிட்டன.

அப்பொழுதே அவன் தன் சம்மதத்தைத் தெரிவித்து விட்டான். பத்திரத்தில் கையெழுத்திட்டுவிட்டு "மற்றவர்களிடம் இந்த விஷயத்தைத் தெரியப்படுத்தி விட்டீர்களா?" என்று கேட்டான்.

"இல்லை யஷ்வந்த். முதலில் உன்னோடுதான் தொடக்கம். எவ்வளவோ வாதங்களை மேற்கொண்ட பிறகு லிஸ்ட் தயாராயிற்று. இனி ஒவ்வொருவரிடமும் கேட்கணும்."

"நிகில் வெளியேதான் இருக்கிறான்."

"அப்படியா?"

"போய் அனுப்புகிறேன்" என்று யஷ்வந்த் வெளியே வந்தான். நிகில் அவனுக்காக வராண்டாவில் காத்திருந்தான்.

விஷயத்தை அவனிடம் சொல்வதற்காக வந்த யஷ்வந்த் அப்படியே நின்று விட்டான். தான் சொன்னால் அவன் வருவான். அவனுக்கு தன் மீது இருக்கும் மதிப்பு தெரியும்.

அசல் விஷயம் அது இல்லை. துருவ எல்லையில் அவனோடு கழித்த நாட்களில், அவன் எப்போதும் ஏதோ போலிருந்ததைப் பார்த்துவிட்டு, அவன் கேட்ட கேள்வி, "நீ யாரையாவது காதலித்திருக்கிறாயா நிகில்?" என்று.

அதற்கு அவன் அளித்த பதில் புன்முறுவல்! புதுமையாய் எவ்வளவோ சாதித்தாலும் இப்பொழுதுதான் காதலில் அடி யெடுத்து வைக்கும் தடுமாற்றம் அதில் தெரிந்தது. அதை விட்டுவிட்டு சாவின் கடைவாயிலில் தன்னோடு சேர்ந்து வரச் சொல்லிக் கேட்கும் உரிமை அவனுக்கு ஏது?

தன்மீது அவனுக்கு இருக்கும் மதிப்பையும் அன்பையும் இந்த விதமாகப் பயன்படுத்திக் கொள்வது சரிதானா? வாழ்க்கையில் எதையுமே அனுபவிக்கவிடாமல் அவன் எதிர் காலத்தைச் சூனியமாக்குவது அழகா? அவனுக்கே உற்சாகம் இருக்குமானால் அது வேறு விஷயம். ஆனால் இந்தத் திட்டத் தில் தனக்கு விருப்பமில்லை என்று அவனே சொன்ன பிறகும் கூடத் தான் அவனிடம் கேட்பது...

நிகில் யஷ்வந்ததைப் பார்த்தான். ஏதோ சொல்ல வந்தவன் தயங்கினாற்போல் நின்றுவிடவே "என்ன சார்?" என்று கேட்டான். யஷ்வந்த் முதலில் தன்னைப் பற்றிச் சொன்னான். விண்வெளிக் குழுவுக்குக் கமாண்டர் என்று சொன்னதுமே நிகில் "கங்கிராஜுலேஷன்ஸ்" என்றான்.

"அது மட்டுமில்லை நிகில். அந்தக் குழுவில் சேர உன்னிடமும் சம்மதம் கேட்கச் சொன்னார்கள்."

நிகில் அவன் சொன்னது புரியாததுபோல் ஒரு வினாடி திகைப்படைந்தவன். சட்டென்று தேறிக் கொண்டான். அவன் முகம் பிரகாசமாயிற்று "நிஜமாகவா சார்?" என்றான் சந்தோஷமாக. இம்முறை வியப்படைவது யஷ்வந்தின் பங்கா யிற்று. அவன் இவ்வளவு சந்தோஷமாக, சீக்கிரமாக ஒப்புக் கொள்வான் என்று யஷ்வந்த் எதிர்பார்க்கவில்லை.

"நீ எங்களுடன் வருவதற்கு சம்மதிக்க மாட்டாய் என்று தான் நினைத்தேன்."

நிகிலின் முகம் வாடிவிட்டது. "பயப்படுவேன்னு நினைத்து விட்டீர்களா சார்?" என்றான்.

"செ... செ... அப்படி இல்லை. உனக்கு இந்தத் தீர்மானித்தின் மேல் நம்பிக்கையே இல்லை இல்லையா?"

நிகில் சிரித்தான். "யுத்தம் வேண்டாம் என்று ஒரு போர் வீரன் நம்பிக்கையுடன் வாதாடலாம். அதுக்காக தன் தொழிலுக்கு எதிராக வாதாடுகிறான் என்று சொல்ல முடியாது இல்லையா? இந்தத் திட்டத்தில் எனக்கு அவ்வளவாக நம்பிக்கை இல்லை என்பது உண்மைதான். ஆனால் சகல உயிர்களையும் காப்பாற்றுவதற்காக அனுப்புகிற ஒரு குழுவில் என்னையும் ஒருத்தனாகத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்று தெரிந்ததுமே நான் சந்தோஷப்படாமல் இருக்க முடியுமா?"

"ஆனால் இதில் பலவந்தம் ஒன்றுமில்லை. நிகில் என்னோடுகூட இன்னும் நான்கு பேர் வர வேண்டும். அவ்வளவுதான். உனக்கு விருப்பமில்லாத பட்சத்தில் வேறொரு வானியல் விஞ்ஞானி வருவார்."

நிகில் சங்கடத்துடன் பார்த்தான். "உங்களுக்கு நான் வருவது பிடிக்கவில்லையா சார்?" என்று கேட்டான்.

"நோ... நோ... அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. உனக்கு நிறைய எதிர்காலம் இருக்கிறது என்றும், எல்லாவற்றையும் விட்டுவிட்டு எஞ்சிய வாழ்க்கையைச் சூனியவெளியில் கழிக்க வேண்டியிருக்குமே என்றுதான் சொன்னேன். எல்லாவற்றை யும் விட முக்கிகயமாக உன் காதலி..."

"ஓ... அந்த விஷயமா?" என்றான் நிகில். கொஞ்ச நேரம் கழித்து மெல்லத் தொடர்ந்தான். "உண்மைதான் சார். ஸ்ரீஜாவால் இதைத் தாங்கவே முடியாது. ஆனாலும், அவளும் இதுக்கு எதிர்ப்பு தெரிவிப்பாள் என்று நான் நினைக்கவில்லை."

"அவள் உன்னையே நினைத்துக்கொண்டு எவ்வளவோ ஆசைகளை வைத்துக் கொண்டிருக்கக் கூடும்."

"உண்மைதான். அந்தக் காரணத்திற்காக நான் இந்தப் பயணத்தை மறுத்தால், எனக்குப் பதில் வேறொரு நபர் போக வேண்டியிருக்கும். அந்த நபருக்கு இப்பொழுதுதான் திருமணம் ஆகியிருக்கலாம். அல்லது ஒரு வயது குழந்தைக்குத் தந்தை யாகி, அந்தக் குழந்தை வளர்வதைக் கொஞ்சம் கொஞ்சமாக பார்த்து மகிழவேண்டுமென்று நினைத்திருக்கலாம். இந்த மாதிரி ஒவ்வொருத்தருக்கும் ஏதோ ஒரு பிரச்னையோ, பூமியில் வாழ்வதில் ஆர்வமோ இருப்பது சகஜம்தானே சார். என் மாமன் மகளும் நானும் கல்யாணம் பண்ணிக் கொள்ள லாம் என்று நினைத்திருந்தோம். அந்த எண்ணத்தில்தான்

மேலும் நெருங்கிவிட்டோம். எங்கள் கல்யாணம் நடந்த பிறகு இந்த அழைப்பு வந்திருந்தால் என்ன செய்திருப்பேன்? நிச்சயமாக ஒப்புக்கொண்டுதானே இருப்பேன்? ஒரு விதத்தில் பார்த்தால் ஸ்ரீஜா அதிர்ஷ்டசாலி. இந்த நவீன சமுதாயத்தில் அவளுக்கே வரன் கிடைக்காமலா போய்விடும்? ஒரு போர்க் கைதியைக் காதலித்ததாக நினைத்துக்கொண்டு அவள் என்னை மறக்க முயற்சிக்கலாம். என் விஷயத்தைக் கேட்கிறீங் களா? மனிதனுக்கு வாழ்க்கையைவிட காதல் ஒன்றும் முக்கியமில்லை. விண்வெளிப் பரிசோதனை சங்கம் என்னைத் தேர்ந்தெடுத்ததே பெரிய பெருமை. பூமியில் உள்ள ஜீவராசி களைக் காப்பாற்றுவதற்காக என்மீது சங்கம் வைத்துள்ள நம்பிக்கைக்கு முன்னால் என் பர்சனல் விஷயங்கள் ரொம்ப அற்பமானவை. இதை மறுக்க முடியுமா?"

யஷ்வந்த் அவனைக் கண்கள் அகல விரிய பார்த்துக் கொண்டேயிருந்தாள். அந்த வினாடி நிகில் ரொம்ப உயர்ந்து விட்டாற்போலத் தோன்றிது. தான் எண்ணியதை நினைத்து வெட்கமாக இருந்தது.

விண்வெளிப் பயணம் என்றதும் வினாடி நேரம் மனம் தவிதவித்தது. அது வினாடி நேரமாக இருந்தால்தான் என்ன? அதுவே போதும். அனூஹ்யாவும் வரப்போகிறாள் என்று தெரிந்த பிறகு கொஞ்சம் தேறிக்கொண்டது. ஆனால் அவனோ? தனக்குப் பயணத்தில் நம்பிக்கை இல்லாவிட்டாலும் சரி, கட்டளைக்கு அடி பணிந்துவிட்டான். காதலியையும் துறக்கச் சித்தமாகிவிட்டான். மேலுக்கு சாதாரணமாகத் தென் படக் கூடிய பெரிய மனிதர்கள் இவ்வுலகத்தில் மிகச் சிலர்தான் இருப்பார்கள்.

யஷ்வந்த் கையை நீட்டி அவன் கையைப் பற்றிக் கொண்டான். "ஐ யாம் ஹாப்பி நிகில். வெல்கம் டு அவர் டீம்"

என்றான். நிகில் சம்மதம் தெரிவித்துக் கையொப்பமிட உள்ளே போனான்.

சரியாக அதே சமயத்தில், மேகங்களைத் துளைத்துக் கொண்டு சூப்பர் சானிக் விமானம் இந்தியாவை நோக்கி வந்து கொண்டிருந்தது. இரு கைகளையும் தலைக்குப் பின்னால் கோர்த்துக் கொண்டு கண்களை மூடிச் சாய்ந்த வண்ணம் பயணம் பண்ணிக் கொண்டிருந்தாள் ஸ்ரீஜா.

நிகில் தந்தையாவதற்கு இன்னும் ஆறுமாதங்கள் இருப்ப தாக டாக்டர் உறுதி செய்தார். டெலிபோனில் எவ்வளவு முயற்சி செய்தபோதும் அவன் கிடைக்கவேயில்லை. நிகிலைக் கல்யாணம் செய்து கொள்ள அழைத்துப் போவதற்காக வந்து கொண்டிருந்தாள் அவள். தான் கருவுற்று இருப்பதை உலகத் தாரிடமிருந்து மறைக்க எந்த முயற்சியும் செய்யவில்லை அவள்.

அவளுக்கு நிகில் மீது நம்பிக்கை இருந்தது.

அதே சமயத்தில் தன் அறையில் மேஜைக்கு முன்னால் உட்கார்ந்தபடி கடிதம் எழுதிக் கொண்டிருந்தாள் அனூஹ்யா.

அன்புள்ள யஷ்வந்த்,

இந்தக் கடிதம் உங்களுக்கு ஆச்சரியத்தை அளிக்கும் என்று தெரியும். ஆனால் சில விஷயங்களை நேரில் பார்த்து பேசிக் கொள்வதைவிட இவ்விதமாக கடிதத் தின் மூலம் தெரிவிக்கும் போதுதான் நன்றாக சொல்ல முடிகிறது.

விஷயத்திற்கு வருகிறேன்.

இப்பொழுதெல்லாம் நான் அடிக்கடி சைக்கியாட்டி ரிஸ்டை சந்திக்கும்படி நேரிடுகிறது. அதற்குக் காரணம் நீங்கள்.

உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கலாம். நாம் பிரிந்து எவ்வளவோ நாட்கள் ஆகிவிட்டனவே. இப்பொழுது உங்கள் காரணமாக நான் சைக்கியாட்டிரிஸ்ட்டை சந்திக்க வேண்டிய அவசியம்தான் என்ன என்று.

காலத்திற் கேற்பமாறும் நாகரீகமோ, மாறும் விருப்பு வெறுப்புகளோ பெண் ஒருத்தியை மாற்றி விடாது என்பதற்கு ஓர் உதாரணம் நான்தான். நாம் பிரிந்து இவ்வளவு நாளாகிவிட்ட போதிலும் உங்களை என் நினைவுகளிலிருந்து துரத்திவிட முடியவில்லை. சேர்ந்து வாழ்ந்து வந்த காலமெல்லாம் வெறும் இரு வேறு வழிப்போக்கர்களைப் போல் ஒரே வீட்டில் வசித்து வந்தோம் நாம். ஒருத்தர் மீது மற்றொருவர் தேவைக்கு மீறி அதிக மதிப்பைக் காட்டிக் கொண்டோம். என்னை ஒரு சிறுமியைப் போல் நீங்கள் பார்த்தீர்கள். நானோ உங்களை ஒரு பொறுப்பான பெரிய மனிதரைப் போல் பார்த்தேன். என்னவானால் என்ன? கடைசியில் இருவரும் பிரிந்துவிட்டோம்.

ஆனால் நீங்கள் மறந்துவிட்டாற்போல் அத்தனை எளிதில் என்னால் உங்களை மறக்க முடியவில்லை... நான் ஒரு பெண் என்பதால்.

கடைசியில் எப்படியானால் என்ன? மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டேன். சூழ்நிலைக்கேற்ப நாமும் மாற வேண்டியதுதானே. சரியாக இந்தச் சமயத்தில் தான் வாயுபுத்ரன் எனக்கு அறிமுகமானான். அவனும் இளைஞன். உற்சாகம் மிகுந்த வாலிபன். தன் குறும்புத் தனத்தாலும், உறுதியாலும் மெல்ல மெல்ல என்னைத் தன்பால் கவர்ந்துகொண்டான். முதலில் குழப்பமடைந் தாலும் கடைசியில் நானும் சம்மதித்து விட்டேன்.

சரியாக இந்தச் சமயத்தில்தான் பூமிக்குச் சில

லட்சம் கிலோ மீட்டர்கள் தொலைவிலிருந்து சாவின் கடைவாயிலில் நின்றபடி நீங்கள் என்னைக் கூப்பிட்டீர்கள்.

மனம் உருகிவிட்டேன்.

அதிர்ஷ்டவசமாக நீங்கள் திரும்பி வந்து விட்டீர்கள். (உங்களைக் காப்பாற்றிய வாயுபுத்ரன் என் நண்பன். என்னைக் காதலிப்பவன்) சாவதற்கு முன்னால், வாழ்க்கையின் கடைசித் தருணம் என்றெண்ணிக் கொண்டிருந்த தருணத்தில் நீங்கள் என்னைக் கூப்பிட்டது திரும்பவும் என்னை சங்கடத்தில் ஆழ்த்தி விட்டது. உங்களுக்கென்ன வந்தது? திரும்பி வந்ததுமே உங்கள் பரிசோதனை உலகத்திற்குள் புகுந்து விட்டீர்கள். உங்கள் நினைவு என்ற சூழற்காற்றுடன் திரும்பவும் நான் வேதனையுடன் தனிமையில் நின்றுவிட்டேன்.

உங்களுக்கு நினைவு இருக்கிறதா? வேலையின்மேல் உங்களுக்கு உள்ள உற்சாகம் காதலின்மேல் இல்லாததால்தான் நாம் பிரிய நேர்ந்தது. ஒவ்வொருவருக்கும் தம் மனிதர்கள் என்றெண்ணிக் கொண்டிருப்பவர்களிடமிருந்து கொஞ்சமாவது அன்பு தேவை. அது மனதில் மட்டும் இருந்தால் போதாது. வெளியிலும் காட்டிக் கொள்ள வேண்டும். நீங்களோ அப்படிப் பட்டவர் இல்லை. எப்பொழுதுமே பட்டும் படாமலும் இருப்பீர்கள். அது அடுத்தவருக்கு எத்தனை நரகம் என்பதைக்கூட புரிந்து கொள்ள மாட்டீர்கள்.

அப்படிப்பட்ட சமயத்தில் ரொம்பவும் கஷ்டப்பட்டு, என்னைக் கட்டுப்படுத்திக்கொண்டு, எப்படியோ ஒருவாறு காதலை வரவேற்கத் தொடங்கினேன். வாயுபுத்ரன் இதற்குக் காரணமானான். நாங்கள் திருமணம்

கூட செய்துகொள்ள முடிவு பண்ணி விட்டோம்.

இந்தச் சமயத்தில் நீங்கள் சயின்ஸ் சிடிக்கு வந்ததும், அதற்கு முன்பே என்னைக் கூப்பிட்டதும், அவன்மீது நான் வளர்த்துக் கொண்டிருக்கும் அன்பைத் திரும்பவும் சிதைத்துவிட்டது. என்னால் எந்த முடிவுக்கு வர முடியவில்லை. திரும்பவும் சைக்கியாட்ரிஸ்டைத் தஞ்சமடைந்தேன். அவர் உங்களை நேரில் சந்திக்கச் சொல்லி அறிவுரை வழங்கினார்.

உங்களைச் சந்தித்து, என் இந்தப் புது வாழ்க்கையைப் பற்றிச் சொன்னால் நீங்கள் புரிந்துகொள்வீர்கள் என்றும், இனி இந்தச் சங்கடமான நிலை இருக்காது என்றும் அவர் தெரிவித்தார். அதுவும் உண்மைதான் என்று தோன்றுகிறது.

மேலும் இந்த விஷயமெல்லாம் உங்களிடம் தெரிவித்துவிட்டால் என் மனதில் எந்த மூலையிலேயோ இருக்கும் குற்ற உணர்ச்சி போய்விடும் என்று தோன்றியது. உங்களுடைய அண்மையில் என்னால் யாரையும் காதலிக்க முடியாது. என் மனம் முழுவதும் பயம்தான் நிரம்பியிருக்கும். பயத்திலிருந்து கௌரவம் பிறக்கும். கௌரவத்திலிருந்து அன்பு பிறக்கும். கௌரவம் நிரம்பிய அன்பு எனக்கு வேண்டாம்.

அதனால்தான் இந்தக் கடிதம்.

சைக்கியாட்ரிஸ்டின் யோசனையின்படி இதையெல்லாம் உங்களை நேரில் சந்தித்து சொல்லியிருக்க வேண்டும். ஆனால் அவ்வளவு தைரியம் இல்லாததால் இவ்வாறு எழுதுகிறேன். ஒரு முறை நீங்கள் இதை எளிதாக எடுத்துக் கொண்டு விட்டதாக தெரிந்து விட்டால்... வாயுபுத்ரனோடு நான்...

இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
ஒரு காலத்தில் உங்கள் அன்புக்காக தவித்த
அனூஹ்யா.

அவள் எழுதி முடித்துவிட்டு உறையின் மீது யஷ்வந்தின் விலாசத்தை எழுதிக் கொண்டிருந்தபோது, அண்ணி கூப்பிட்டு ஏதோ வேலை சொன்னாள். அவள் உறையை ஒட்டிவிட்டுப் போய்த் தபாலை பெட்டியில் போட்டுவிட்டு வந்து அண்ணி சொன்ன வேலையில் ஆழ்ந்தாள்.

சைக்கியாடிரிஸ்ட் சொன்னது உண்மைதான்.அவள் மனம் இப்பொழுது நிம்மதி அடைந்தது.

மூழ்கிவிடுவோமோ, மிதப்போமோ என்று தெரியாத நிலைமையைவிட, நிச்சயமாக மூழ்கிவிடுவோம் என்று தெரிந்துவிடுவது நல்லது. ஆனால் இப்பொழுது அந்த உதாரணம் சரியானது இல்லை. அவள் குறிப்பிட்டதுபோல் வாயுபுத்ரனோடு அவள் வாழ்க்கை உண்மையிலேயே சந்தோஷ மாக இருக்கும்...

யஷ்வந்த் அண்மையில் இல்லாவிட்டால்.

மேற்கண்ட சம்பவம் நடந்த அரைமணிக்கெல்லாம் அவளுக்கு டைரக்டரிடமிருந்து அழைப்பு வந்தது. அவசரமாக வரச்சொல்லி.

அவள் தயாராகிப் போய்ச் சேர்ந்தபோது அவர் அறை யில் தனியாக இருந்தார்.

"வாங்க... உங்களுக்காகத்தான் காத்துக் கொண்டிருக் கிறேன்" என்றார் கை நீட்டியபடி

அவருடன் கை குலுக்கிவிட்டு அவள் எதிரேயிருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். பறக்கும் தட்டைப் பற்றியும் உலகம் தற்சமயம் எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளைப் பற்றியும் இரண்டு மூன்று வார்த்தைகள் பேசிவிட்டு "இதற்காக ஒரு குழுவை விண்வெளிக்கு அனுப்புகிறோம். இதைப்பற்றி உங்க அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டார்.

அவள் ரொம்ப சாதாரணமாக "இதனால் அவ்வளவு உபயோகம் இருக்கும் என்று தோன்றவில்லை. ஆனால் முயற்சி செய்வதில் தவறென்ன இருக்கு?" என்றாள்.

"கரெக்ட்! நாங்களும் அப்படித்தான் நினைக்கிறோம் மிஸ் அனூஹ்யா! அப்படிப் புறப்படும் ஐந்தாறு பேர் கொண்ட ஒரு குழுவில் நீங்களும் செல்லத் தயாராக இருக்கீங்களா? உங்களுக்குத் தடை ஏதாவது உண்டா?"

திடீரென்று எதிர்பாராமல் வந்த அந்தக் கேள்விக்கு அவள் திகைத்துவிட்டாள். சட்டென்று நிமிர்ந்து "நானா?" என்றாள்.

அவள் அப்படிச் சொன்னதை அவர் வேறுவிதமாக புரிந்துகொண்டு "குழுவில் ஒரு பயோகெமிஸ்ட் இருப்பது அவசியம் என்று நிபுணர்கள் எண்ணுகிறார்கள். உங்களுக்கு ஆட்சேபணை இருந்தால் நிர்ப்பந்தம் எதுவும் இல்லை" என்றார்.

அவள் உடனே பதில் சொல்லவில்லை. யோசனையில் ஆழ்ந்தாள். ஒரு குழுவுடன் சேர்ந்து விண்வெளியில் பயணம் என்பது த்ரில்லிங்கான விஷயமாக இருந்தது. உலகத்திலுள்ள எல்லா பெருமைப்படக் கூடிய விஷயம். ஆனால் அது தராசில் ஒரு பக்கம் மட்டுமே. அடுத்த பக்கத்தில் நிறைய பிரச்னைகள் உள்ளன. உலகத்தில் எவ்வளவோ பயோ கெமிஸ்டுகள்

இருக்கும்போது தன்னையே ஏன் தேர்ந்தெடுத்தார்கள்? அவள் ஒரு பெண் என்பதாலும், அவள் ஒரு "மிஸ்" என்பதாலும், ஒரு முறை திருமணமாகி, விவாகரத்து பெற்று, வாழ்க்கையில் இரண்டாவது பாகத்தில் இருப்பதாலும்.

அனூஹ்யா கெட்டிக்காரி. ஒன்றுடன் ஒன்றைச் சேர்த்து யோசித்துப் பார்க்கக் கூடியவள்.

இந்தப் பிரயாணம் சில வருடங்கள் வரை நீடிக்கும் என்பதால் விண்வெளியிலேயே அடுத்த தலைமுறை பயணி களை உருவாக்குவது இவர்கள் உத்தேசமாக இருந்தாலும் வியப்படையமாட்டாள். நிறைய பேரை அனுப்புவது சாத்தியம் இல்லை என்பதால், கண்டிப்பாக ஒரு ஜோடியாவது இருக்கும் படி பார்த்திருப்பார்கள். இப்பொழுது அவள் போக மறுத்தால் வேறொரு பயோ கெமிஸ்டைக் கேட்பார்கள். அதுவும் ஒரு பெண்ணாகத்தான் இருக்கும்.

அவளுக்கு உடனே வாயுபுத்ரனைப் பற்றிய நினைவு வந்தது. குழுவோடு சேர்ந்து அவள் போகப்போவது அவனுக் குத் தெரிந்தால்... அந்த அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்வானா? பார்க்கில் நாள் முழுவதும் அவளுக்காகக் காத்திருந்தவன் வாழ்நாளெல்லாம் அவளுக்காகவே காத்திருப்பானா? அப்படியே இருந்து விடுவானா?

யஷ்வந்துடன் அவள் வாழ்க்கை முடிந்துவிட்டது. வாயுபுத்ரனுடன் வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்ள எண்ணி யிருந்தாள். ஆனால் இப்பொழுது விதி வேறொரு கோணத்தில் அவளைத் தள்ளுகிறது. போவது என்று முடிவாகிவிட்டால், குழுவில் இருக்கும் யாராவது ஒருத்தரைத்தான் அவள் தேர்ந் தெடுத்துக் கொள்ள வேண்டும். துணையாக இருக்க வேண்டும். மேலதிகாரிகள் இதை வெளியே சொல்ல மாட்டார்கள். ஆனால் அந்த விஷயம் அவளுக்கும் தெரியும் என்பதை அவர்

கள் அறிவார்கள். இவர்கள் இருபத்தொன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள். சென்டிமென்டை விட மெடீரியலிஸம் முக்கியம் இவர்களுக்கு.

அவள் போக மறுக்கலாம். காரணம்கூட கேட்க மாட்டார்கள். ஆனால் பயந்துவிட்டாள் என்று பிரசாரம் பண்ணுவார்கள். உலகத்தைக் காப்பாற்றும் அவகாசம் கிடைத்தபோது தப்பித்துக்கொண்டுவிட்டாள் என்று நினைத்துக் கொள்வார்கள். பார்ட்டிகளுக்குப் போகும்போது அந்தப் பக்கமாய் முகத்தைத் திருப்பிக்கொண்டு சிரிப்பார்கள். மேலுக்கு எல்லோரும் சாதாரணமாக இருப்பார்கள். இப்படிப் பட்ட மனிதர்களைக் காப்பாற்றுவதற்காக அவள் போக வேண்டும்.

இந்த யோசனைகளால் அவள் தடுமாறிக் கொண்டிருந்த சமயத்தில் டைரக்டர் சொன்னார். "அவசரம் ஒன்றுமில்லை. அனூஹ்யா... நீங்க யோசித்துச் சொல்லுங்கள். நாளை வரையிலும் அவகாசம் இருக்கிறது."

அவளுக்கும் அதுதான் நல்லது என்று பட்டது. கொஞ்சம் அவகாசம் வேண்டும்.

அதைவிட முக்கியமாக... வாயுபுத்ரனைக் கலந்து யோசிக்க வேண்டும்.

அன்று மாலையில் வாயுபுத்ரனைச் சந்தித்தாள்.

"நிஜமாகவா?" கேட்டான் நிகில். அவன் முகம் வாடிவிட்டது. அந்த வார்த்தைகளால் அவன் எவ்வளவு தளர்ந்துவிட்டான் என்பதை ஊகித்துக் கொண்டாள். "ஆமாம். நிஜம்தான்" என்றாள் ஸ்ரீஜா. வெகுநேரம் நிசப்தம். அவன் மௌனத்தைத் தாங்க முடியாமல் "இதைச் சொன்னதுமே இவ்வளவு மௌனமாக இருந்துவிடுவாய் என்று நினைக்கவில்லை" என்றாள் நிஷ்டுரமாக.

"வேறென்ன நினைத்தாய்?"

"உணர்ச்சி வசப்பட்டு ஏதாவது செய்வாய் என்று எதிர் பார்த்தேன். குறைந்தபட்சம் சட்டென்று ஏதாவது சொல்வாய் என்று நினைத்தேன்."

அவன் மெல்ல நிமிர்ந்து "எனக்கு என்ன பேசுவது என்றே தெரியவில்லை" என்றான்.

அவள் கோபமாக "தெரியவில்லையா? இவ்வளவு நல்ல செய்தியைச் சொன்னதுமே என்ன பேசுவது என்றுகூடத் தெரிய வில்லையா?" என்றாள். அவன் மௌனம் அவளை பயமுறுத் தியது. லேசாக சந்தேகமும் வந்தது. "நிகில்! நீ தந்தையாகப் போகிறாய் என்ற செய்தி உனக்குச் சந்தோஷமாக இல்லையா?" என்று கேட்டாள் தீவிரமாக.

"சாதாரண நிலையாக இருந்தால் குதித்து கும்மாள மிட்டிருப்பேன் ஸ்ரீஜா!" எங்கேயோ பார்த்தபடி பதிலளித்தான். இந்தச் செய்தியைக் கேட்டதும் அவன் மனம் சிதறிவிட்டது. "நம் விவாகம் உடனே நடைபெறும்படி செய்திருப்பேன். என் இந்த சலனமற்றத் தன்மையைப் பார்த்து உனக்கு சந்தேகம்கூட ஏற்படலாம். இந்த விவகாரத்தைத் தட்டிக் கழிக்க தீர்மானித்து விட்டேனோ என்று நினைத்திருக்கலாம். ஆனால் நடந்தது என்னவென்று உன்னிடம் சொல்ல வேண்டும். நீ கருவுற்று இருக்கிறாய் என்ற விஷயம் குறைந்தபட்சம் ஒரு நாளைக்கு முன்னால் தெரிந்திருந்தால் நான் அவர்களுக்கு என் சம்மதத் தைத் தெரிவித்திருக்க மாட்டேன். போகமாட்டேன் என்று மறுத்திருப்பேன்."

"எதற்கு சம்மதம்? யாரிடம் மறுத்திருப்பாய்? என்ன விஷயம்?"

"சயின்ஸ் ரிசர்ச் நிறுவனத்தாரிடம் மறுத்திருப்பேன்."

"எங்கேயோ போக மாட்டேன்னு சொன்னாயே? எங்கே?"

"விண்வெளிக்கு."

"ஓ... அவ்வளவுதானே. இப்படிப் போவது புதிது ஒன்று மில்லையே? போய்விட்டு வா. திரும்பி வந்த பிறகே கல்யாண விஷயத்தை வெளிப்படுத்துவோம்" என்றாள் அவள், எப்போது போன்ற விண்வெளிப் பயணம் என்று எண்ணிக்கொண்டு.

"நான் போவது கிரகங்களைத் தாண்டி... சூனியவெளிக்கு ஸ்ரீஜா! திரும்பி வருவேனா என்றே தெரியாது."

"கிரகங்களைத் தாண்டி சூனியவெளிக்கா?" அவள் வாயடைத்துப் போய்விட்டாள்.

கிரகங்களைத் தாண்டி ஒரு குழு போகப்போவது தெரியும். ஆனால் அதில் நிகில் இருப்பான் என்று கனவிலும் அவள் ஊகித்திருக்கவில்லை. அந்தப் பயணத்தின் விளைவு எப்படி யிருக்கும் என்பதை அவள் ஊகித்துப் பார்த்தாள். திரும்பி பூமிக்கு வரக்கூடிய வாய்ப்பு நூற்றுக்கு ஒரு சதவீதம் தான். அதுவும் எத்தனையோ வருடங்களுக்குப் பிறகு.

அவளுக்கு என்ன பேசுவதென்று தெரியவில்லை. அவன் அவளையே பார்த்து உட்கார்ந்திருந்தான்.

வாயுபுத்ரன் வலுக்கட்டாயமாகச் சிரிக்க முயன்றான். ஆனால் அதில் உயிர் இருக்கவில்லை. அவன் அவ்வாறு இருந்து அவள் என்றுமே பார்த்ததில்லை. எப்போதும் சிரித்துப் பேசிக் கொண்டே ஜாலியாக இருப்பான். அவனுக்கு வருத்தம் என்பதே தெரியாதோ என்பது போலிருக்கும் அவனைப் பார்த்தால். அப்படிப்பட்டவன் இந்தச் செய்தியைக் கேட்ட துமே அப்படியே இடிந்து போய்விட்டான். மனதில் தோன்றிய வேதனையை வெளியில் காட்டிக்கொள்ளாமல் இருக்க

அரும்பாடு பட்டான் என்பதைத் தெரிந்து கொண்டாள். அவன் தேறிக்கொள்ள சில வினாடிகள் பிடித்தன.

"இன்னும் நான் என் முடிவைச் சொல்லவில்லை. நான் மறுத்தால் வேறு யாரையாவது அனுப்புவார்கள். எனக்கு ஒரு நாள் அவகாசம் வேண்டுமென்று கேட்டேன்." அவள் அவனைப் பார்த்தாள். அவன் வேண்டாம் என்று சொல்லுவானோ என்ற ஆசையோடு.

"இன்னும் யார் யார் போகிறார்கள்?"

"நான் கேட்டுக் கொள்ளவில்லை. ஒருக்கால் நாட்டிற்கு ஒருத்தரை அனுப்புவார்களோ என்னவோ."

"நம் நாட்டின் சார்பில் நீயா?"

"தெரியாது. அவர் சொன்னது என்னவென்றால், குழுவில் ஒரு பயோகெமிஸ்ட் இருக்கணும் என்று நினைக்கிறார்களாம்." அவள் பதில் சொல்லிக் கொண்டிருந்தாளே தவிர, அவன் கேள்வி கேட்ட விதம் அவளுக்கு அதிருப்தியைத் தந்தது. தான் இந்த விஷயத்தைச் சொன்னதுமே "போக வேண்டாம்" என்று சொல்லுவான் என்று எதிர்பார்த்தாள். அவன் இந்த விதமாக கேள்விகளைக் கேட்டபடி முக்கிய விஷயத்தைச் சொல்லாதது அவளுக்கு ஏமாற்றத்தைத் தந்தது. அதுவும் வாயுபுத்ரன் இப்படிப்பட்ட விஷயங்களில் மனதில் உள்ள உணர்ச்சிகளை மறைத்துக்கொள்ளத் தெரியாதவன். "உலகம் முழுவதும் நாச மாகிப் போகட்டும். மனித ஜாதியே நசித்துப் போகட்டும். உயி ரோடு இருக்கும் வரையிலும் இருவரும் சேர்ந்தே இருப்போம்" என்று சொல்லுவான் என்று எதிர்பார்த்தாள்.

"நான் உன்னிடம் யோசனையைக் கேட்கணும் என்று தான் ஒருநாள் அவகாசம் கேட்டேன். சொல்லு. என்ன செய்யலாம்?" அவனைப் பரபரப்போடும், கலக்கத்தோடும்

பார்த்தபடி கேட்டாள் அனூஹ்யா.

அவன் ஒரு வினாடி கண்களை மூடிக்கொண்டு ஏதோ யோசனையிலிருந்து விடுபட்டாற்போல் மெதுவாக "நீ போ அனூஹ்யா" என்றான்.

"எனக்குப் போகணும் என்று இல்லை. ஒரு காலத்தில் நான் ரொம்ப நீதி பாடங்களைச் சொல்லிக் கொண்டிருந்தேன் ஸ்ரீஜா! ராணுவ வீரர்கள் மனைவி குழந்தைகளை விட்டுவிட்டு மரணத்தை வரவேற்றபடி போர்க்களத்திற்குப் போவ தில்லையா என்று வாதாடினேன். ஆனால் தியரிக்கும் பிராக்டிகலுக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கும்னு இப்பொழுதுதான் புரிகிறது. அன்பை மனதில் நிரந்தரமாக வைத்துக் கொண்டு என்னை மறந்துவிட்டு, நான் போனபிறகு வேறு யாரையாவது மணந்து கொள் என்று உனக்கு யோசனையை வழங்கலாம் என்று இருந்தேன். இந்தக் காலத் தில் உடல் நெருக்கம் சர்வசாதாரணம்தானே என்று நினைத் தேன். ஆனால் என் உருவம் உன்னுள் வளருகிறது என்று தெரிந்த பிறகு என்னால் உன்னை விட முடியவில்லை."

அவள் அவன் மேல் கையை வைத்தாள். அவள்கூட இன்னும் அந்த அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. திருமணம் நடக்க முடியாமல் போவதற்கு ஒரு காரணம் ஏற்படக் கூடும் என்று அவள் கனவிலும் நினைக்கவில்லை. அப்படியிருக்கும் போது, வெளியேயிருந்து வந்து சேர்ந்திருக்கும் இந்த ஆபத்து அவள் ஆசைகளையும், எதிர்கால எண்ணங்களையும் குழி தோண்டிப் புதைத்துவிட்டது.

ஆனால், அந்தச் சூழ்நிலையில்கூட அவள் தன் விவே கத்தை இழந்து விடவில்லை.

தான் சொல்ல எண்ணியது இதயத்திலிருந்து வார்த்தை

களாக வெளிவரும் முன்பே, துக்கமானது கண்ணீர் உருவில் கண்களிலிருந்து வந்தது. அதை அவன் பார்க்காமல் இருப்பதற்காக முகத்தைத் திருப்பிக் கொண்டு, குரலைச் சாதாரணமாக மாற்றிக்கொள்ள முயன்றபடி, "நீங்க போங்க நிகில்" என்றாள்.

"நீங்க என்ன சொல்றீங்க?'' என்றாள் அனூஹ்யா திகைத்துப் போய்.

அதற்குள் வாயுபுத்ரன் தேறிக்கொண்டான். தன் வாதத்துக்குத் தேவையான துணிச்சலை வரவழைத்துக் கொண்டான்.

"நான் யோசித்துப் பார்த்துவிட்டுத்தான் சொல்கிறேன் அனூஹ்யா. எனக்காக நீ நின்று விடவேண்டாம். அதற்காக என் காதலைச் சந்தேகப்படவும் வேண்டாம். மேலுக்கு ஆடிப் பாடிக்கொண்டு உல்லாசமாகத் தென்படுகிற இந்த வாயுபுத்ரன் உன்னை ரொம்ப ஆழமாக நேசிக்கிறான் என்று நீ தெரிந்து கொண்டால் போதும். இந்த உணர்வுடன் நீ கிளம்பிப் போனால், ஆஃப்டர் ஆல், வாழ்நாள் முழுவதும் என்னால் இங்கே உயிர் வாழமுடியும்."

அவன் அவ்வளவு எளிதாக இந்தப் பிரச்னைக்குப் பரிகாரத்தைக் காட்டிவிடுவான் என்று எண்ணியிருக்கவில்லை அவள். போக வேண்டாம் என்றுதான் சொல்லுவான் என்று எதிர்பார்த்தாள்.

அவன் அவ்வாறு சொல்லாதது அவளுக்குள் ஒரு விதமான சங்கடத்தை ஏற்படுத்தியது. அவளுக்கு இந்தப் பிரயாணத்தில் அவ்வளவாக ஆர்வமில்லை. அவள் போகாவிட்டால் வேறொருத்தரை அனுப்பப் போகிறார்கள். ஆனால் இவன் "போ" என்று சொல்லுவதுதான் அவளுக்குப் புரியாத புதிராக இருந்தது. என்ன சொல்வது என் புரியவில்லை அவளுக்கு.

அதற்குள் அவனே சொன்னான். "நீ என்ன நினைக்கிறாய் என்று எனக்குத் தெரியும். இவ்வளவு நாளாக இப்படிக் காதல் பாட்டுப் பாடிக் கொண்டிருந்தவன், இப்பொழுது திடீரென்று பிளேட்டை திருப்பி விட்டானே என்றுதானே நினைக் கிறாய்?"

அவள் பதில் பேசவில்லை. அருகில் வந்து இரு தோள் களிலும் கைகளை வைத்தான். அவள் தன்னையறியாமலேயே அவனை நெருங்கினாள். அவன் அவள் முகத்தைப் பார்த்து "உலகத்தில் யாருக்குமே கிடைக்காத வாய்ப்பு உனக்குக் கிடைத் திருக்கிறது. மனித இனத்தின் சார்பில் தூது போகும் முதல் பெண் நீ! அவ்வளவு பெரிய வாய்ப்பை என் சுயநலத்திற்காகப் பலியாக்க மாட்டேன். உன் உடல் என் கைகளுக்கிடையே சிறைபடுவதைவிட, உன் புகழ் அண்டவெளியெல்லாம் தாண்டி பரவுவது எனக்கு சந்தோஷத்தைத் தரும். என் காதலுக்காக உன் புகழை பலியாக்க மாட்டேன்."

"ஆனால் எனக்கே இந்தப் பயணம் பிடிக்காவிட்டால்?"

"உனக்கு இன்னும் வேறு ஏதாவது காரணம் இருந்தால் பயணத்தைத் தவிர்த்துக் கொள். ஆனால் நம்மைப் பற்றிய காரணம் மட்டும்தான் என்றால், வேண்டாம்."

அவள் பதில் பேசவில்லை.

"என் வாதம் உனக்குப் புரிகிறதா? அல்லது தவறாகப் புரிந்து கொண்டு விட்டாயா?"

அவள் அதற்குக்கூடப் பதில் பேசவில்லை. அவள் அதைப் பற்றியே யோசிக்கவும் இல்லை. விதியைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருந்தாள். இந்த விதி என்பது எவ்வளவு விநோதமானது? ஆதியிலிருந்தே அவளைத் துரத்திக் கொண்டே இருக்கிறது. முதலில் யஷ்வந்த்தோடு சேர்த்து

வைத்துப் பிரித்தது. பிறகு வாயுபுத்ரனோடு சேர்த்து வைத்தது. இப்பொழுது சூனியவெளிக்கு அனுப்பி வைக்கிறது.

எதிர்பார்த்த அளவுக்கு வேதனையாக இல்லையே இந்தப் பிரிவு. ஏன்? அவளுக்கும் வாயுபுத்ரனுக்கும் இடையே பந்தம் அவ்வளவு பலமாக ஏற்படவில்லையா? அவளிடம் காதலை விடக் குமுறலே அதிகமாக இருந்ததாலா?

அவளுக்கு சைக்கியாட்ரிஸ்ட் சொன்னது நினைவுக்கு வந்தது.

"நீங்க உங்கள் மாஜிக் கணவரிடமிருந்து முற்றிலுமாகப் பிரிந்து போய்விடுங்கள். அப்பொழுது உங்களுக்கு இந்த துன்பம் இருக்காது."

இப்பொழுது இந்த வாயுபுத்ரனிடமிருந்துகூட முற்றிலும் பிரிந்து போய்விட்டால்... இது ஒரு அனுபவமாக எஞ்சி நின்று விடுமோ?

இது என்ன வாழ்க்கை? ஒன்று சேருவதும், பிரிந்து போவதும்... இவ்வளவுதானா? அவளுக்கு ஏன் வருத்தமாக இல்லை? பெயர், புகழ் இவைகளின் மேல் அவளுக்கு ஒன்றும் மோகமில்லையே? உண்மையில் இந்தப் பயணம் சாவின் விளிம்பிற்கே அழைத்துச் செல்லக்கூடியது. இருந்தும் பயணம் இல்லை. இருக்க வேண்டிய வருத்தம் இல்லாமல் போனது தான் வேதனையாக இருந்தது.

"எனக்குத் தற்கொலை பண்ணிக் கொள்ளணும் என்ற அளவுக்கு வேதனையாக இருக்கு." கண்ணீருடன் சிரித்தபடி ஸ்ரீஜா சொன்னாள். "ஆனால் இதையே வெளியே சொன்னால் மெலோ ட்ராமாவாக இருக்கும். அந்தக் காலத்தில் பத்னி மார்கள் தம் கணவர்களை முறுவலுடன் போர் களத்திற்கு அனுப்பி வைப்பார்களாம். அப்படி அனுப்பி வைக்கணும் என்று

எனக்குத் தோன்றுகிறது. ஆனால் இந்தக் கண்கள் இருக்குப் பார். இவை மனிதனுக்கு தெய்வம் தந்த சாபம். மனதைக் கண்ணாடியைப் போல் எடுத்துக் காட்டி விடும். பிராக்டிகாலிடியும் மெடீரியலிசமும் உயர்வு என்று எண்ணுகிறோமே தவிர, அதைக் காட்டிலும் சென்டிமென்டோடு வாழ்வதுதான் உயர்வு. நிகில்! நில்லு... என்னைப் பேச விடு. திரும்பவும் இதைபோல் மனம் விட்டுச் சொல்ல வராது எனக்கு. நாம் நாளைக்கே திருமணம் செய்து கொள்வோம். தாமதிக்க வேண்டாம். பிறகு நீ போய்விட்டு வா. உனக்காக நான் காத்திருக்கிறேன். நீ திரும்பி வருவாய் என்று என் மனம் சொல்கிறது. ஆனால் நீ திரும்பி வரும் போது உன் மகனை உனக்குக் காட்டினால் தூக்கிக் கொள்வதற்கு பதில் கைகுலுக்க வேண்டிய வயதில் இருப்பான் அவன். அதற்குள் முப்பது வயதாகிவிடும் அவனுக்கு. நான் சொல்றதெல்லாம் சிரிப்பாக இருக்கிறதா உனக்கு? எனக்கு மட்டும்... எனக்கு மட்டும்." என்று அவள் ஹோவென்று அழுதுவிட்டாள்.

அவளைக் கைகளில் ஏந்திக் கொண்டான் அவன். துக்கத்திற்கு ஆறுதல் நிசப்தம்தான்.

ஆணுக்கு தெய்வம் கைகளைத் தந்தது காதலை வெளிக்காட்டிக் கொள்வதற்கு மட்டுமே இல்லை. அதைவிட முக்கியமாக... ஆறுதல் சொல்வதற்கு.

தன் சம்மதத்தைத் தெரிவித்துக் கையொப்பமிட்ட பத்திரத்தை டைரக்டரிடம் தந்தாள் அனுராஹ்யா.

"கங்கிராஜுலேஷன்ஸ்... நாளையிலிருந்து உங்களுக்கு ஒரே வாழ்த்துக்களும்... பரபரப்பும்தான்" என்றார் அவர்.

அவள் "ட்ரைனிங் எப்போதிலிருந்து?" என்று கேட்டாள்.

"இன்னும் நான்கு நாட்களில் தொடங்கும். ரஷ்யாவி

லிருந்து இன்னொரு பேப்பர் வர வேண்டியிருக்கு."

"கேட்க மறந்துவிட்டேன். குழுவில் யார் யார் இருக்கிறார்கள்?"

"டீம் கமாண்டர் யஷ்வந்த். ஆஸ்ட்ரோபிசிஷியன். இரண்டாவது நிகில் என்று..." அவர் சொல்லிக் கொண்டே போனார்.

அவள் காதில் அது விழவில்லை.

முதல் பெயரைக் கேட்டதுமே அவள் செவிகள் செயலிழந்து விட்டன. யஷ்வந்த்... யஷ்வந்த்...

ராக்கெட்டிலிருந்து சூனியவெளியில் குதித்ததால், அந்த அகண்ட வேகத்தோடு பயணித்துக் கொண்டே போகும் மனிதன் எப்படித் தன்னைச் சுற்றிலும் தானே சுற்றிக் கொண்டிருப்பானோ, அதேபோல் அந்தப் பெயரைக் கேட்டதுமே அவள் மனம் உணர்ச்சி வசப்பட்டது. உடம்பிலிருந்த சக்தியை எல்லாம் யாரோ இழுத்துக் கொண்டு விட்டாற்போல் மேஜையின் மீது கைகளை ஊன்றி தன்னைத் தான் கட்டுப்படுத்த வேண்டியிருந்தது.

உடம்பில் ஏற்பட்ட நடுக்கத்தைத்தான் அவளால் அடக்க முடிந்ததேயன்றி மனதில் தோன்றிய சஞ்சலத்தை எப்படித் தடுத்து நிறுத்துவாள்?

வீட்டிற்கு எப்படித்தான் வந்து சேர்ந்தாளோ அவளுக்கே தெரியாது ஐந்து நிமிஷம் பிடித்தது தன்னைத் தேற்றிக் கொள்ள.

அப்பொழுது நினைவிற்கு வந்தது அவளுக்கு. தான் யஷ்வந்திற்கு எழுதிய கடிதத்தைப் பற்றி.

அந்தக் கடிதம்...

தன் உணர்வுகள், தான் வாயுபுத்ரனைக் காதலித்த விஷயம்... யஷ்வந்தின் நினைவுகள் தன்னை எப்படி வேதனையைத் தருகின்றன என்று விவரித்த விதம், தன் மனக்குமுறல்...

இப்பொழுது வாழ்நாள் முழுவதும் தாமிருவரும் ஒரே விண்வெளி வாகனத்தில் ஆண்டுக்கணக்காகப் பயணம் செய்ய வேண்டும். அதற்குள் அவளுக்கு சந்தேகம் வந்தது. அந்தக் கடிதத்தின் மேல் விலாசம் எழுதினாளா? ஆம். உண்மைதான். இப்பொழுது சந்தேகம் திடமாயிற்று உண்மையில் விலாசம் எழுதினாளா?

எழுதாமல் இருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஏன் இந்த கோரிக்கை? எப்படியும் அவனும் தானும் சேர்ந்து பயணம் செய்யப் போகிறார்கள் என்பதால், வாயுபுத்ரனின் விஷயம் அவனுக்குத் தெரியாமல் இருந்தால் நன்றாக இருக்குமே என்று நினைக்கிறாளா? அவ்வளவு ஹீனமாகவா எண்ணுகிறாள் அவள்? வாயுபுத்ரன் தன்னோடு வரப்போவதில்லை என்றறிந்து, இனி யஷ்வந்த்தான் கதி என்று நினைக்கத் தொடங்கிவிட்டாளா?

சீ... சீ... அவள் தலையைச் சிலிர்த்துக் கொண்டாள். ஒவ்வொரு மனிதனின் மனதிலும் இருட்டு மூலை உண்டு என்பது தெரியும். ஆனால் இவ்வளவு கொடுமையாய்த் தன் மனம் எண்ணுவதை இப்பொழுதுதான் தெரிந்துகொண்டாள் அவள். ஒரு முடிவுக்கு வந்தவளாக எழுந்து கொண்டாள். அவளுக்கு யஷ்வந்ததும் வேண்டாம். வாயுபுத்ரனும் வேண்டாம். மற்ற உயிர்களைப் பொருட்டு அவள் போகப் போகிறாள், அவ்வளவுதான்.

இரு நூறடி உயரத்திற்கு மேலிருந்த அந்தக் கப்பலை நிமிர்ந்து பார்த்தான் யஷ்வந்த். மிகக் குறுகிய காலத்திற்குள் அதைத் தயாரித்திருக்கிறார்கள் விஞ்ஞானிகள். வேறு எரி

பொருள் தேவையில்லை. சோலார் சக்தியைக் கொண்டு இயங்கும் இந்த வாகனம், எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் பிரயாணம் செய்ய வல்லது. சக்தியைத் தன்னுள் சேமித்து வைத்துக்கொள்ளும். ஆனால் ஒரே ஒரு ஆபத்து உண்டு. ஏதேனும் ஒரு கிரகமோ அல்லது நட்சத்திரமோ தன் ஈர்ப்பு சக்தியால் இந்த வாகனத்தை இழுத்துக் கொண்டுவிட்டால், அந்தப் பிடிப்பிலிருந்து மீறி வெளிவரத் தேவையான சக்தி அந்த வாகனத்திற்கு இருந்தது. ஆனால் அதைக் காட்டிலும் அதிகமான ஈர்ப்புசக்தியால் பாதிக்கப்பட்டால் அவர்கள் பிரயாணத்திற்கு அதுதான் முடிவு.

யஷ்வந்த் மற்ற விவரங்களைப் பரிசீலித்தான். எவ்வளவு குலுங்கலைத் தாங்கும்? எவ்வளவு எதிர்ப்பைத் தாங்கக் கூடியது? ரேடியேஷன் கண்ட்ரோல் போன்ற விவரங்கள்.

விண்வெளிக் கப்பலில் பயணம் செய்யப் போகும் நபர்கள் ஒருத்தரோடு ஒருத்தர் அறிமுகம் செய்யப்பட்டார்கள். யஷ்வந்தின் கண்கள் அனூஹ்யாவைத் தேடத் தொடங்கின. அவன் மனம் முழுவதும் பரபரப்பு நிரம்பியிருந்தது. இவ்வளவு நாட்களுக்குப் பிறகு அவளைக் காணப் போகும் மகிழ்ச்சி.

தொலைவில் சந்தடி கேட்டதும் நிமிர்ந்தான் அவன். ஆக்ஸிலரி ப்ரெபெல்லர் சிஸ்டம் யூனிட் பக்கத்திலிருந்து மெதுவாக நடந்து வந்து கொண்டிருந்தாள் அனூஹ்யா.

அவள் நெருங்கி வந்தாள்.

யஷ்வந்த் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் நிமிர்ந்தாள். இருவரில் பார்வையும் கலந்தன.

அங்கிருந்த டைரக்டருக்கு இருவரின் பழைய உறவு பற்றித் தெரியாது. “இவள் மிஸ் அனூஹ்யா. பயோகெமிஸ்ட்ரி யில்...” என்று அறிமுகம் செய்து வைத்தார்.

"எனக்குத் தெரியும்." சுருக்கமாகச் சொன்னான் அவன்.

அதற்குள் யாரோ கூப்பிட்டதால் டைரக்டர் அங்கிருந்து போய்விட்டார்.

"சொக்கியமா அனூஹ்யா?" பரிவோடு கேட்டான்.

ஆனூஹ்யா சிரிக்க முயன்றாள். தான் எழுதிய கடிதம் யஷ்வந்திற்குக் கிடைக்கவில்லை என்று புரிந்தது. இந்த உண்மை நிம்மதியைத் தருகிறதோ? நிம்மதி ஏற்பட்டதை நினைத்து வருத்தமாக இருந்தது. மனம் செய்யும் தில்லுமுல்லு களை மனிதன் ஏன் வெளிப்படையாக ஒப்புக்கொள்வ தில்லை?

"விதிதான் நம்மைத் திரும்பவும் சந்திக்க வைத்திருப்ப தாகத் தோன்றுகிறது. இந்தப் பயணத்தில் உனக்கு சந்தோஷம் தானே?" என்று கேட்டான்.

அவள் தலையை அசைத்தாள். சந்தோஷம்தான் என்பது போல்.

அவன் மேலும் நெருங்கிவந்தான். அவள் தலையை அசைத்தது அவனுள் உற்சாகத்தை அளித்தது.

"இந்தப் பயணமா? அல்லது என்னோடு சேர்ந்து பண்ணு கிற பயணமா?" குறும்புடன் அவன் உதடுகள் விரிந்தன.

எப்பொழுதோதான் அவன் அவ்வாறு சிரிப்பான். எப்பொழுதும் சீரியஸாக இருக்கும் அவன் அவ்வாறு சிரிக்கும் போது பார்க்கத் தெவிட்டாததாக இருக்கும்.

அவளுக்கு ஏனோ அந்தச் சமயத்தில் வாயுபுத்ரன் நினைவுக்கு வந்தான்.

வாயுபுத்ரனால் ரொம்ப நேரம் வரை அந்தச் செய்தியை ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. அனூஹ்யாவுடன் வாழ்

நாளெல்லாம் சேர்ந்து இருக்கக் கூடிய வாய்ப்பு கேவலம் ஒரு ஸ்தானத்தால் தவறிவிட்டது.

வாயுபுத்ரனின் நம்பர் இரண்டு.

விண்வெளி பயணத்திற்கு பயணிகளின் லிஸ்ட்டைத் தயாரித்தபோது, யாராவது ஒருத்தர் வராவிட்டால் அவருக்குப் பதில் இரண்டாவதாக யாரை அனுப்புவது என்ற பட்டியலை என்.எஸ்.ஆர்.ஐ. தயாரித்தது. நிகோலாவஸ்க்கியின் பெயருக்கு அடுத்த பெயர் வாயுபுத்ரனுடையது. கடைசி நிமிஷத்தில் முதல் லிஸ்ட் பயணிகளுள் யாருக்காவது ஏதாவது தடை ஏற்பட்டால் உடனே அடுத்த ஆளை அனுப்புவதற்காக, அவர்களுக்குக்கூடப் பயிற்சி தரப்படும். அந்த விதமாக வாயுபுத்ரனுக்கும் பயிற்சிக்கு வரச் சொல்லி அழைப்பு வந்தது.

அவன் ஆசையை விட்டுவிட்டான். அனூஹ்யாவை இனி பார்க்க முடியாது. கிரகங்களையெல்லாம் தாண்டிப் போய் மனித இனத்திற்கு சேவையைப் பண்ணச் சொல்லி அவளை உற்சாகப்படுத்தி விட்டானே தவிர, மனதில் மட்டும் வேதனையை அனுபவித்துக் கொண்டிருந்தான். இனி நிரந்தரமாக அவளை விட்டுப்பிரிய வேண்டியதுதான் என்றெண்ணிக் கொண்டான். ஆனால் மனித பிரயத்தினத்தின்படி நிகோலாவஸ்க்கியின் பலவீனம் என்னவென்று இரண்டே நாளில் சோதித்துவிட்டான் அவன். கம்ப்யூட்டர் டெக்னலாஜியில் நிபுணனான அந்த ரஷ்யன், ஜோதிடத்தின்பால் அளவில்லாத நம்பிக்கை வைத்திருந்தான் என்று தெரியவந்தது. அது போதும் வாயுபுத்ரனுக்கு.

அனூஹ்யாவுக்கு வீட்டிலிருந்த நபர்களை சரிக்கட்டுவது கஷ்டமாக இருந்தது.அண்ணன். அண்ணி, குழந்தை எல்லோரும் இந்தச் செய்தியைக் கேட்டு திகிலடைந்து விட்டார்கள். ஆனால் மெள்ள மெள்ளத் தமைத் தேற்றிக் கொண்டார்கள்.

செய்தித்தாள்கள் இந்தச் செய்தியைச் சிறப்பாக பிரசுரித்தன. போட்டோக்கள்... இண்டர்வியுக்கள்.

விண்வெளிக்குப் போகும் இந்தக் குழு திரும்பி வரும் வாய்ப்பு ஏறக்குறைய சூனியம்தான் என்று எல்லோருக்குமே தெரியும். அந்த உணர்வை மனதிற்குள் பொத்தி வைத்துக் கொண்டு எல்லோரும் வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள். எதிர்காலத்து சந்ததிகளுக்காகச் சூரியனைக் காப்பாற்றும் முயற்சியில் உயிரைத் தாரைவார்க்கப் போகிற இந்தக் குழுவிற்கு உலகமே கையெடுத்துக் கும்பிட்டது.

அதற்குப் பிறகு குழுவில் எல்லோரும் பயிற்சிக்கு அனுப்பப்பட்டார்கள். ஆறு வாரங்கள் வரை விதவிதமான பயிற்சிகள். உடல், மனம் சம்பந்தப்பட்ட தேர்வுகள்...

விண்வெளி அண்டவெளியில் சூனியத்தில் எவ்வளவு விதமான ஆபத்துக்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று ஊகித்து, இங்கே இவர்களுக்கு அந்த விதமான பயிற்சிகள் தரப்பட்டன.

பிரயாணத்திற்கு இன்னும் இரண்டு வாரங்களே இருந்தன.

"நாளையிலிருந்து உங்கள் குழுவில் புது மெம்பர் வரப் போகிறார்" என்றார் டைரக்டர் யஷ்வந்திடம்.

"யாரு?"

"வாயுபுத்ரன்."

யஷ்வந்த் வியப்புடன் "என்னது? என்றான்.

"நிகோலவஸ்கிக்கு உடல் நலம் சரியாக இல்லை. கடைசிச் சமயத்தில் பின் வாங்கிவிட்டார்" என்று சிரித்துவிட்டு, "ஆனால் உண்மைக் காரணம் அது இல்லை. அவருக்கு ஜோதிடத்தின் மேல் நம்பிக்கை அதிகம். "இந்தப் பிரயாணம் செய்தால்

இன்னும் இரண்டு மாதங்களில் இறந்துவிடுவாய்" என்று யாரோ சொன்னார்களாம்."

யஷ்வந்திற்கு இந்தச் செய்தி சந்தோஷத்தைத்தான் ஏற்படுத்தியது. வாயுபுத்ரன் ரொம்ப கெட்டிக்காரன் என்றும், உற்சாகம் நிரம்பிய இளைஞன் என்றும் யஷ்வந்திற்குத் தெரியும்."

அப்படிப்பட்டவன் தன் குழுவில் இருந்தால் தனக்கு எவ்வளவோ தைரியமாக இருக்கும்.

அவனுக்குத் தெரியாததெல்லாம் ஒன்றுதான்.

தன் மாஜி மனைவிக்கு அவன் காதலன் என்பது!

கடைசித் தருணத்தில் ஏற்பட்ட இந்த மாற்றத்தால் அனூஹ்யாவுக்கு அதிர்ச்சி ஏற்பட்டது.

அவள் அப்பொழுதுதான் கொஞ்சம் கொஞ்சமாக தேறிக் கொண்டிருந்தாள். அதற்காக யஷ்வந்துடன் தன் எதிர்கால வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று அவள் நினைக்கவில்லை. காலமும் விதியும் எப்படித் தீர்மானிக்கிறதோ அதுபோல் நடந்துகொள்வோம் என்ற முடிவுக்கு வந்திருந் தாள். இப்பொழுது அவள் இதயத்தில் காதலைவிடக் கடமை உணர்ச்சியே அதிகமாக இடம் பெற்றிருந்தது. அப்படிப்பட்ட சமயத்தில் யஷ்வந்த்துடன் கூட வாயுபுத்ரனும் வரப்போவ தாகச் செய்தி கிடைத்தது. தன் உணர்ச்சிகளைக்கூட வெளியே யாரிடமும் சொல்லிக் கொள்ள முடியாத நிலைமை அவளுக்கு.

யஷ்வந்தின் அண்மையில் அவளால் வாயுபுத்ரனோடு பேசக்கூட முடியாது. ஆனால், அவன் சும்மாயிருக்க மாட்டான். தன் காதலை வெளிப்படுத்திக்கொள்ள யார் அருகே இருந்தாலும் பொருட்படுத்தமாட்டான். அது யஷ்வந் திற்குத் தெரிந்துவிட்டால்... தெரிந்துவிட்டால்?

ஏன்? இதில் தவறென்ன இருக்கிறது?

இல்லை. அது இல்லை அவள் சங்கடம். யஷ்வந்த் போன்ற ஒரு நபரின் மனம் அவள் நடவடிக்கையாலோ, சுயநலத்தாலோ வருத்தப்பட்டால் அவளால் தாங்கிக் கொள்ள முடியாது. அவன் தன்னை எவ்வளவு தூரம் நேசிக்கிறான் என்பதை அவள் அறிவாள்.

விவாக வாழ்க்கையைக் கழித்த வரையிலும் தன் முட்டாள் தனத்தால் அவனை வருத்தப் படுத்தியிருக்கிறாள். பிரிந்துபோய் விட்டோம் என்றாகிவிட்டது. இப்பொழுது தன் வரவால் அவனை வாழ்நாளெல்லாம் வருத்தப்படுத்தக் கூடிய உரிமை அவளுக்கு இல்லை. பிரயாணம் தொடங்குவதற்கு முன்னால்வரை அவள் அதைப் பற்றியேதான் யோசித்துக் கொண்டிருந்தாள்.

அதிர்ஷ்டவசமாக யஷ்வந்த்தோ அல்லது வாயுபுத்ரனோ பயிற்சிக் காலத்தில் அவனோடு பேச அதிகமாக முயற்சி செய்ய வில்லை. உலகத்தின் மிக நீண்ட பிரயாணத்தை மேற் கொள்ளும் நிகழ்ச்சியில் மூழ்கிப் போயிருந்தார்கள் அவர்கள்.

நிகிலுடன் ஸ்ரீஜாவின் திருமணம் புரட்சியை ஏற்படுத் தியது. பிரயாணத்திற்கு இன்னும் இரண்டே நாள் இருந்த போது நடந்த இத்திருமணம் எல்லோருக்கும் வேதனைக்குரிய விஷயமாக ஆயிற்று. ஸ்ரீஜாவின் தனித்தன்மையை எல்லோரும் பாராட்டினார்கள். காதல் என்றால் அப்படி இருக்கவேண்டும் என்றார்கள்.

இந்தத் திருமணம் விஷயமாகக் கொஞ்சம் அதிருப்தி யுடன் இருந்தது நிகில் ஒருத்தன்தான். தனக்காக அவள் தன் எதிர்காலத்தைப் பாழடித்துக்கொள்வதாகப் பாவித்தான் அவன். இனி வாழ்நாளில் என்றுமே தன் மகளையோ அல்லது மகளையோ பார்க்கும் பாக்கியம் தனக்குக் கிடையாது என்ற

எண்ணம் அவன் மனதைச் சங்கடப் படுத்தியது. ஆனால், அதை என்றுமே வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. தன் வேலைகளை சலனமில்லாமல் பண்ணிக் கொண்டிருந்தான்.

பத்துமணி பன்னிரெண்டு நிமிஷங்களுக்கு வாகனம் புறப்படுவதற்கு முகூர்த்தம் தீர்மானிக்கப்பட்டது.

உலகத்தின் நான்கு மூலைகளிலிருந்தும் போட்டோ கிராபர்களும், பத்திரிகையாளர்களும் வந்தார்கள். உலகம் முழுவதும் டி.வி.யில் நேரடி ஒலிபரப்புக்கு ஏற்பாடு செய்யப் பட்டது.

ராக்கெட்டைப் போல் அல்லாமல் சோலார் சக்தியால் இயங்கும் வாகனம் என்பதால் ரிமோட் கண்ட்ரோல் சிஸ்டம் இல்லை.

சோலார் எனர்ஜியைப் பெற்றுக் கொள்ளும் கண்ணாடி யைப் போன்ற உபகரணத்துடன் கிளம்புவதற்குத் தயாராக நின்று கொண்டிருந்தது "சுஹ்ருத்பாவ்."

காலையிலிருந்து ஜனங்கள் அவ்விடத்தில் எள்விழ இட மில்லாமல் கூடியிருந்தார்கள். பல நாட்டு தூதர்கள், பிரமுகர் கள், விஞ்ஞானிகள், வாழ்த்துக் கூறுபவர்கள், கண்ணீருடன் வழியனுப்புபவர்கள்...

ஸ்ரீஜா மட்டும் அந்த இடத்தில் தனியாக நின்று கொண்டிருந்தாள். நான்காம் மாதம் முடிந்து ஐந்தாம் மாதம் தொடங்கியிருந்தது அவளுக்கு. தாய் தந்தையர் இருந்தார்களே தவிர அவளிடம் பேசுவதற்கு எந்த முயற்சியும் செய்யவில்லை. மகளின் நடவடிக்கை அவர்களுக்கு முட்டாள்தனமாகத் தென் பட்டது.

பத்து அடிக்கவிருந்தது.

எல்லோருக்கும் முன்னால் யஷ்வந்த் வாகனத்திற்குள்

நுழைந்தான். பிறகு வாயுபுத்ரன். அதற்குப் பிறகு அனுஹ்யா.

நிகில் ஸ்ரீஜாவிடம் வந்தான். கண்களில் நீர் வழிய அவள் அவனைப் பார்த்தாள். அவன் அவளை இழுத்து அணைத்துக் கொண்டு நெற்றியில் முத்தம் பதித்தான். "போய் வருகிறேன்."

அவள் தெளிவின்றித் தலையை அசைத்தாள்.

அவன் பார்வை அவள் வயிற்றின்மீது வினாடி நேரம் நிலைத்தது.

"அதிர்ஷ்டம் நன்றாக இருந்தது. காரியத்தைச் சாதித்துக் கொண்டு திரும்பி வந்தால், அப்போது நீ இருபத்தைந்து வயது மகளுடனோ அல்லது மகனுடனோ வரவேற்பாய் இல்லையா?" சிரிக்க முயற்சி செய்தான்.

இண்டர் பெர்சனல் காலரின் சத்தம் கேட்டது.

"போய் வருகிறேன்."

அவள் தலையை அசைத்தாள். அவன் வாகனத்தை நோக்கி நடந்தான்.

ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஜெய் ஜெய் என்று முழக்கப் பட்டது, போருக்குக் கிளம்பும் வீரனுக்கு ஹாரத்தி காட்டினாற் போல் இருந்தது.

அவன் கடைசியாக வாகனத்திற்குள் நுழைந்தான். ஸ்பேஸ் சூட்டுக்கள் இல்லை. அந்த வாகனம் பூமியின் சூழ் நிலையைத் தாண்டுவதற்கு ஐந்து நாட்கள் பிடிக்கும். ஆனால் துரிதமான ஒளி வேகத்தை மேற்கொள்வதற்கு அதற்குப் பிறகு பதினைந்து நாட்கள் அற்புதமான ஆக்சில ரேஷன்!

ஸ்ரீஜா பார்த்துக் கொண்டேயிருந்தாள். வாகனம் மெல்ல எழும்பியது.

பத்தடி நீளம், பத்தடி அகலம் கொண்ட டி.வி. திரையில் உள்ளேயிருந்தவர்கள் தென்பட்டார்கள். ராக்கெட்டில் தென்படுவதுபோல் பரபரப்பு எதுவும் இருக்கவில்லை.

வாகனம் மேகங்களுக்குப் பின்னால் மறைந்தது. அவள் இன்னும் பார்த்துக் கொண்டேயிருந்தாள். கோடிக்கணக்கான மைல்கள் தொலைவிலுள்ள வேறு கிரகவாசிகளுக்கு பூமியின் மீது உள்ள உயிரினங்களைக் காப்பாற்றச் சொல்லி வேண்டு கோள் விடுப்பதற்காக, சமாதான தூதுக்குப் போகும் அந்தக் குழுவின் பிரயாணம் தொடங்கிவிட்டது.

(முதல் பாகம் நிறைந்தது)

இரண்டாம் பாகம்

பூமியிலிருந்து புறப்பட்ட கண நேரத்திற்கெல்லாம் சுஹ்ருத்பாவ் மேகங்களைத் தாண்டி ஆகாயத்திற்குள் ஊடுருவிக் கொண்டு போயிற்று.

சுமார் இருநூறடி நீளமுள்ள அந்தக் கப்பல் சிறிய அளவு ஸ்கை ஸ்க்ரேப்பரைப் போல் இருந்தது. (பூமியின் ஈர்ப்பு சக்தி உள்ள வரையில்தான் அது செங்குத்தாக பயணம் செய்யும். அதற்குப் பிறகு சாய்ந்தவாக்கில் பயணம் தொடரும்) கப்பலின் கீழ்பகுதியில் சக்தியை சேமித்து வைத்திருக்கும் ஸ்டோரேஜ் டேங்குகளும், இடைப் பகுதியில் கண்ட்ரோல் ரூமும், பக்கத் தில் யஷ்வந்த், அனுஹ்யாவிற்கு லேடரேடரிகளும், டாக்டருக் காக ஒரு க்ளினிக்கும், அவைத் தவிர ஐந்து பேருக்கும் தனித்தனி அறைகளும் இருந்தன. அவர்கள் வாழ்க்கையின் எஞ்சிய நாளெல்லாம் எந்தக் குறையும் இல்லாமல் இருப்பதற்காக எல்லா வசதிகளும் செய்யப் பட்டிருந்தன. உலக நலனுக்காக வாழ்க்கையைத் தியாகம் செய்ய முன்வந்தவர்களுக்கு எந்த

விதமான குறைபாடும் இருக்கக் கூடாது என்று விஞ்ஞானிகள் பட்ட சிரமத்தின் பலன்தான் அந்த வாகனம். டின்களில் அடைக்கப்பட்ட உணவுகள் இருந்த இடத்தில் கம்ப்ரெஸ் செய்யப்பட்ட உணவுகள் வந்துவிட்டன.

ஓரங்குலத் துண்டு ஒன்றைச் சுடவைத்தால் அந்த ஐவருக்கும் ஒரு நாளைக்குப் போதுமான சாப்பாடு தயாராகி விடும். அவ்விதமாக சுமார் ஐம்பது வருடங்களுக்கும் மேலாக அவர்களுக்குப் போதுமான பரிபூரண ஆகாரம் சேமித்து வைக்கப் பட்டிருந்தது. வாய்க்குத் தேவையான ருசி விஷயத் திலும் அவர்களுக்கு எந்த விதமான குறைபாடும் இல்லை.

வாகனத்திற்கு இரு பக்கமும், இறக்கைகளைப் போல் பரந்த சோலார்செல் பிளேட்டுகள். அவைகள் சூரியனின் வெளிச்சம் படும் இடத்தில் இருக்கும் வரையிலும் சூரியச் சக்தியை சேமித்து வைத்துக்கொள்ளும். அந்தக் குறுகிய நாட்களுக்குள்ளேயே வாகனத்தின் வேகம் மணிக்குப் பன்னிரண்டாயிரம் மைல்கள் வரை வரையறுக்கப்பட்டது. அதற்குப் பிறகு அது இரு மடங்காகி ஒளி வேகத்தில் செல்லத் தொடங்கும்.

சூனியவெளியில் எந்த பொருளானாலும் ஒளிவேகத்தை அடைய முடியாது என்று இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்த வர்கள் நம்பினார்கள். சூனியத்தில் ஜீரோ மாஸ் என்றால் ஊடுருவிச் செல்லும் தூசி அணுக்களாகப் பயணம் செய்தால் ஒளிவேகத்தை எட்ட முடியும் என்று தீர்மானிக்கப்பட்டதால், அப்படிப்பட்ட பொருளைத் தயாரிப்பதிலேயே முனைந் திருந்தார்கள் அதுவரையிலும். ஆனால் ஒளிவேகத்தைக்கூட மீறக்கூடிய சக்தியைத் தரக்கூடிய க்வார்ட்ஸ் வேறு கிரகத்தி லிருந்து வந்த பறக்கும் தட்டில் கிடைத்தால், அதனை பல விதங்களில் பரிசோதித்துப் பார்த்தான் யஷ்வந்த். இரண்டே வாரங்களில் அவன் செய்த அந்தப் பரிசோதனை உலகப் புகழ்

பெற்ற விஞ்ஞானிகளையெல்லாம் கூட வியப்பில் ஆழ்த்தி விட்டது. NEWS - Ship (*Natural Environment Within Space Ship*) பிரபாவத்துடன் அவர்கள் பிரயாணத்தைத் தொடங்கியதி லிருந்தே வீட்டில் இருப்பது போலவே இருக்கலாம். ஆனாலும், வாகனம் விண்வெளியை அடையும் வரையிலும் ஜாக்கிரதை யாக சோபாவில் உட்கார்ந்தார்கள். ஐவரின் அந்தரங்கத்திலும் விதம் விதமான உணர்வுகள்.

கமாண்டரான யஷ்வந்த் கண்ட்ரோலிங் பானெலிடம் உட்கார்ந்திருந்தான். அவன் மனம் முழுவதும் யோசனையில் ஆழ்ந்திருந்தது. போன முறை அவன் சந்திரனில் நழுவி விழுந்த பிரயாணம் அவனை எவ்வளவு ஆபத்தில் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டதோ அதை இன்னும் அவன் மறக்க வில்லை. சாவின் விளிம்பு வரையிலும் தொட்டுவிட்டு வந்திருப்பதால் அவனுக்குச் சாவு என்றால் பயமில்லை. ஆனால் மனதின் ஆழத்தில் ஏதோ இனம் புரியாத உத்வேகம். பூமியிலிருக்கும் சகல ஜீவராசிகளின் எதிர்காலத்தை தன் இதயத்திற்குள் புதைத்துக் கொண்டு விட்டாற்போன்ற உணர்வு. எதிரிகளின் சக்தி எப்படிப்பட்டது என்று தெரிந்த வன் என்பதால் விவரம் புரியாத பயம் அவனைப் பிடித்துக் கொண்டிருந்தது. தன் உணர்வுகளை வெளியில் காட்டிக் கொள்ளாமல் வேலையில் ஆழ்ந்திருப்பது போல் இருந்தான்.

வாயுபுத்ரனின் யோசனை வேறுவிதமாக இருந்தது.

எவ்வளவோ சாதிக்க வேண்டும் என்றெண்ணிக் கொண்டு சூழ்நிலையின் பாதிப்பால் சாதாரண ஆளாக வாழ்ந்து மறைந்த தன் தாத்தா ராம்மோகனின் நினைவு வந்தது அவனுக்கு. சில நாட்களுக்கு முன்னால் அவர் எழுதிய டைரியைப் படித்தான். ஐம்பது வருடங்களுக்கு முன்னால் எழுதிய டைரி அது. அன்று முதல் அவனிடம் விவரிக்க முடியாத உத்வேகம் ஏற்பட்டிருந்தது. கிரகங்களையும், நட்சத்திரங்களை யும் சுற்றி வர வேண்டும்

என்று எவ்வளவு தவித்திருக்கிறார் அவர்? அந்த அண்ட வெளியின் விளிம்பில் நின்றபடி தான் பிறந்த பூமியைப் பார்க்க வேண்டுமென்று எவ்வளவு துடித்திருக்கிறார்? அவர் விரும்பியது இன்று தனக்குக் கிடைக்கப் போகிறது. எவ்வளவு மெலோ டிராமா இது? இன்னும் சில நாட்களில் தான் கிரகங் களுக்கப்பால் இருந்தபடி மினுக் மினுக்கென்று மின்னும் பூமி யைப் பார்ப்பான். வாயுபுத்ரன் கண் களை மூடிக்கொண்டு தாத்தாவின் நினைவுகளில் ஆழ்ந்து விட்டான்.

நிகிலின் மனம் பற்பல விதமாகச் சென்றது. ஐம்பதாண்டு எதிர்காலத்தை உலக நலனுக்காகத் தியாகம் செய்த தியாக மூர்த்தியாய்த் தன்னை உலகம் தலையில் வைத்துக் கொண்டு கொண்டாடும். ஒரு சிறிய அபார்ஷன் மூலம் எதிர்காலத்தை ஆனந்தமயமாக்கிக் கொள்ளக்கூடிய வாய்ப்பு இருந்தும்கூட தனக்காக வாழ்க்கையைத் தியாகம் செய்த ஸ்ரீஜாவின் பெருந் தன்மையைப் பாராட்டக் கூடியவர்கள் எத்தனை பேர்? அவள் உருவம் அவன் கண் இமைகளுக்குப் பின்னால் படிந்துபோய் அசைய மறுத்தது. ஸ்ரீஜாவைப் பற்றியும், பிறக்கப் போகும் குழந்தையைப் பற்றியும் யோசித்துக் கொண்டிருந்தான் அவன்.

அனூஹ்யாவின் மனம் அல்லகல்லோலமாக இருந்தது. விண்வெளியில் மனரீதியான, உடல் ரீதியான தொல்லை களைத் தாங்கிக் கொள்வதற்குப் பயிற்சி அளித்திருந்தார்கள். ஆனால் பிரச்னை மனிதனுக்குத் தரும் பயிற்சி அதீதமானது. முதல் முறையாக விண்வெளியில் பயணம் செய்யப் போகும் உற்சாகமும், பரபரப்பும், சந்தோஷமும், தன் நிலைமையை நிமிஷத்திற்கு நிமிஷம் நினைவு படுத்திக் கொண்டே இருந்த அவ்விருவரின் உருவங்களுக்குப் பின்னால் குறுகிப் போய்க் கொண்டே இருந்தன. கண்களை மூடிக்கொண்டு உட்கார்ந்த படி மனதைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்கு முயற்சி செய்தாள்.

இந்த நால்வரையும் கவனித்தபடியே அவரவர்களின் மனதில் இருப்பதைப் புரிந்துகொள்ள முயற்சி செய்து கொண்டிருந்தார் பிலிப்ஸ். அந்தக் குழுவில் எல்லோரையும் விட வயதில் பெரியவர் அவர்தான். தொழில் ரீதியாக ஒரு டாக்டர். மற்றவர்களின் நடவடிக்கைகளை பரிசீலிப்பது அவருடைய பொழுதுபோக்கு.

நெருங்கியவர்களை எல்லாம் விட்டுப் பிரிந்து, திரும்பி அவர்களைப் பார்ப்போமோ இல்லையோ என்ற அவஸ்தை அவர்கள் மனதை எப்படி ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது என்று புரிந்தது. பாரமாக இருந்த இதயம் கண்ணீரால் லேசாகும். ஆனால் அவர்கள் அந்த நிலையைத் தாண்டி விட்டார்கள். மனதைக் கட்டுக்குள் கொண்டுவர முயன்று கொண்டிருந்தார்கள். அதனால்தான் இந்த மௌனம்.

"பூமியில் இருக்கும் இரண்டாயிரம் கோடி மக்கள் இருக்கிறார்கள் நம் ஆன்ம சாந்திக்கு பிரார்த்தனைப் பண்ணுவதற்கு நாமும் இப்பொழுதிலிருந்தே தொடங்கணுமா?" வாயுபுத்ரனின் வார்த்தைகளால் அறையில் கொஞ்சம் டென்ஷன் குறைந்தது.

"தாங்க்யூ வாயுபுத்ரா! கிளம்பியதிலிருந்தே உங்கள் எல்லோரையும் பார்க்கும் போது ஏனோ இறுக்கமாக இருப்பதுபோல் தோன்றுகிறது. பிரயாணம் தொடங்கி ஒரு மணி நேரம் கூட ஆகவில்லை. இப்பொழுதிலிருந்தே வருத்தத்தை மூட்டைக் கட்டிக்கொள்ளத் தொடங்கினால் போகப் போக பாரம் அதிகமாகிவிடும். சியர் அப் பிரண்ட்ஸ்!" என்றார் டாக்டர் பிலிப்ஸ்.

"ஐயாம் சாரி டாக்டர். வேண்டியவர்களை எல்லாம் விட்டுப் பிரிந்து வந்த துக்கத்தை அவ்வளவு சீக்கிரத்தில் மறந்து விடமுடியுமா? புதுமையை எவ்வளவுதான் அனுசரித்து

வந்தாலும் மனதில் மட்டும் இன்னும் சென்டிமென்டுகளை விட முடியாதவர்கள் நாங்கள்" என்றான் நிகில்.

அந்த வார்த்தைகளை யஷ்வந்த் தடுத்து நிறுத்தினான். "இந்த விஷயத்தில் மட்டும் உன் கருத்தை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது நிகில். வெளிப்படையாக காட்டிக் கொள்ளாமல் போனால் சென்டிமென்டுகள், பாசம் எதுவும் இல்லை என்று எண்ணுவது தவறு. எது எப்படி இருந்தாலும் பிலிப்ஸ் சொன்னது உண்மை. நாம் தற்சமயம் யோசிக்க வேண்டியது தற்போதைய நிலைமையைத் தானே தவிர நம் வீட்டு நபர்களைப் பற்றியில்லை. இந்த வினாடியிலிருந்து நாம் ஐவரும் ஒரு குடும்பம். வாழ்நாளெல்லாம் உற்ற துணையாக இருக்க வேண்டியவர்கள். பூமியில் யாருக்குமே கிடைத்திராத புது அனுபவம் நம்முடையது. பிரண்ட்ஸ்! இந்த வினாடியி லிருந்து நாம் ஐவரும் ஒரு குடும்பம். வாழ்நாளெல்லாம் உற்ற துணையாக இருக்க வேண்டியவர்கள். பூமியில் யாருக்குமே கிடைத்திராத புது அனுபவம் நம்முடையது. பிரண்ட்ஸ்! இந்த வினாடியிலிருந்து சென்டிமென்டுகள், துக்கங்கள், வேதனை கள்... இதையெல்லாம் மறந்துவிடுங்கள். ஒவ்வொரு நிமிஷத் தையும் புன்னகையுடன் கழியுங்கள். செய்யும் காரியம் எவ்வளவு கஷ்டமானதாக இருந்தாலும், உதட்டில் மட்டும் புன்னகை சிதறக் கூடாது" என்றான்.

"இந்த வினாடியிலிருந்து நான் தூக்கத்தில்கூட சிரித்துக் கொண்டே இருப்பேன் என்றும், என் உதடுகள் கோணிக் கொண்டு விகாரமாக தென்பட்டாலும் விடமாட்டேன் என்றும் உத்தரவாதம் தருகிறேன். அதுமட்டுமில்லை. என்னோடுகூட இருக்கும் மற்றவர்களும் எப்போதும் சிரித்துக் கொண்டே இருக்கும்படி என்னால் முடிந்த வரையிலும் முயற்சிக்கிறேன். கிச்சுக்கிச்சு மூட்டியாவது சரி," வாயுபுத்ரன் சீரியஸாக சொன்ன தைக் கேட்டு எல்லோர் முகத்திலும் சிரிப்புத் தவழ்ந்தது.

"இன்னொரு விஷயம். எங்க பிரம்மவித்யா வேண்டாம் என்றாலும் கேட்டுக்கொள்ளாமல் என்னோடுகூட வந்து விட்டாள். அவள் உங்கள் எல்லோருக்கும் நல்ல பொழுது போக்கைத் தருவாள் என்று நம்புகிறேன் நான்."

"பிரம்ம வித்யா யாரு?" வியப்படைந்தவனாய்க் கேட்டான் நிகில்.

"என் முதல் மனைவி. என் உயிர். "சீரியஸாகச் சொன்னான் வாயுபுத்ரன். அனூஹ்யா சட்டென்று நிமிர்ந்து பார்த்தாள் அவனை. திடீரென்று அந்த அறையில் சஸ்பென்சுடன் கூடிய டென்ஷன் ஏற்பட்டது.

"அப்படி என்றால் இரண்டாவது மனைவியை பூமியி லேயே விட்டுவிட்டு வந்துட்டீங்களா என்ன?"

"இல்லை. அவளைத் தேடிக் கொண்டுதான் நான் வந்திருக் கிறேன். எந்தக் கிரகத்தில் தரிசனம் தந்து அனுகிரகம் பண்ணப் போகிறாளோ தெரியவில்லை." ஓரக்கண்ணால் அனூஹ்யா வைப் பார்த்துக் கொண்டே சொன்னான்.

"அழகுதான். அந்த வாயுபுத்ரனோ கட்டை பிரம்மச்சாரி. இந்த வாயுபுத்ரனுக்கு இரண்டு மனைவிகளா? இருவருக்கு மிடையே இனி விண்வெளியில் சண்டை தொடங்கிவிடும் என்று சொல்லுங்கள்.

"ஆமாம். அதுவும் நம் நல்லதுக்குத்தான்."

"எப்படி?"

"அந்தச் சண்டையைக் காட்டி நாம் மாயாஸைக் கூட பயமுறுத்தலாம். அவ்விருவரையும் கிரகத்தின்மீது விட்டு விட்டுப் போய் விடுவோம்" என்று பயமுறுத்தினால் நம் ஜோலிக்கு அவர்கள் வர மாட்டார்கள்."

"நீங்க இந்த மாதிரி கேலி செய்வது அழகாக இல்லை" என்றாள் அனூஹ்யா இடைமறித்து.

"சாரி. நான் பெண் இனத்தைப் பழிக்கவில்லை. ஒரே கணவனைத் தாங்குகிற இரு மனைவியரின் பெருந்தன்மையை எடுத்துக் காட்டினேன். அவ்வளவுதான்"

"இந்தப் பேச்சை விடுங்கள். அனூஹ்யா மேடம்! இப்படி வாங்க" என்று கூப்பிட்டான் நிகில்.

"இப்பொழுதுதானே பேசிக்கொண்டோம். ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று. ஒரே வயதுடையவர்கள் நாம். நமக்குள்ளே மரியாதை எதுக்கு? அனூஹ்யா என்றே கூப்பிடு" என்றாள் அனூஹ்யா.

"சரி அனூஹ்யா! இந்த குழுவில் நீ ஒருத்திதான் முதல் முதலாக விண்வெளிக்குப் பயணம் பண்ணுகிற பெண். பூமியில் நமக்குத் தந்த பயிற்சிகள் வேறு. விண்வெளியில் எப்படிப்பட்ட சூழ்நிலை இருக்குமோ அதை செயற்கையாக தயாரித்து கொடுக்கப்பட்ட பயிற்சி அது. இப்பொழுது உண்மையான பயணம் தொடங்கிவிட்டது. பயிற்சியில் அனுபவத்திற்கு வராத விஷயங்களை இப்பொழுது காட்டுகிறேன்" என்று எழுந்து கொண்டான். நிகிலுக்கு அந்த வாகனத்தின் ஒவ்வொரு பாகமும் தெரியும்.

"சுஹ்ருத்பாவ் சந்திரனின் ஈர்ப்புக்குள் நுழைவதற்கு இன்னும் அரைமணி நேரம்தான் இருக்கிறது. ரொம்ப மெது வாக பயணம் செய்வது போல் தோன்றினாலும் வேகம் கொஞ்சமும் குறையவில்லை. இனி நாம் நாற்காலியைவிட்டு எழுந்து நடக்கத் தொடங்கலாம்." நிகில் ஒருக்கமாக போய் நின்று கொண்டு சொன்னான்.

அனூஹ்யா அவனுக்கு அருகில் வந்தாள். நிகில் வாகனத்

தில் இருந்த உலோகத்தால் ஆன ஜன்னல் திரையை ஒரு பக்கமாக ஒதுக்கினான். அத்துடன் ஸ்பேஸ் வ்யூயர் இணைக்கப் பட்டிருந்தது. ஒரு ஜன்னல் வழியாக வெளியே பார்க்கிற உணர்வை உண்டாக்கியது அது. அதில் தென்பட்ட காட்சி களைப் பார்த்து வியப்படைந்தவளாக அப்படியே நின்று விட்டாள் அனூஹ்யா.

எதிரே பூமி ரொம்ப பெரிதாக தென்பட்டது. பிரம்மாண்டம் என்றால் இதுதான் போலும் என்று தோன்றியது. அவள் உடல் தன்னையறியாமலேயே நடுங்கியது.

"ஜன்னல் வழியாக கையை நீட்டினால் கைக்குத் தட்டுப் படும் போலிருக்கே தவிர நாம் தொலைவில் இருக் கிறோம். இன்னும் தொலைவாகப் போகப் போக விதவித மான உருவங் களில் தென்படும். பார்த்துக் கொண்டே இருங் கள்."

நீல நிறத்தில் கடல்களும், அடர்ந்த கோதுமை நிறத்தி லும், செம்மண் நிறத்திலும் பூமியின் பகுதிகளும் தெளிவாகத் தென்பட்டுக் கொண்டிருந்தன. ஒரு பெரிய குளோபைப் பார்ப்பது போலிருந்தது. யுத்தத்தின் பாதிப்பைக்கூட எதிர்த்து நின்று சீன பெருஞ்சுவரும், சகாரா பாலைவனமும் தெளிவாகத் தென்பட்டன.

"நம் வாகனத்தில் எட்டு கேமிராக்கள் இணைக்கப் பட்டுள்ளன. நாம் திரையின் மீது எந்தப் பகுதியைப் 'பார்க்க ணும் என்று விரும்பினாலும் பார்க்கலாம்" என்று நாலடி சதுர முள்ள திரையைக் காட்டினான் நிகில்.

"திரையின் மீது க்ளோஸப்பில் பூமியைத் தெளிவாக பார்த்தாலும், இம்மாதிரி இந்த ஜன்னல் வழியாக பார்க்கும் போதுதான் சகஜமாக பார்ப்பது போன்ற ஒரு உணர்வு ஏற்படு கிறது" என்றாள் அனூஹ்யா.

"நீ சொல்வது உண்மைதான். இப்பொழுது இந்த மாதிரிப் பார்த்தால்தான் நன்றாக இருக்கும். ஆனால் தூரமாக போகப் போக டெலஸ்கோபிக் கேமிரா காட்டுவதுபோல் துல்லிய மாக நம் கண்களால் பார்க்க முடியாது. கண்ட்ரோல் பானெலுக்குப் பக்கத்தில் நேவிகேஷன் குளோப் இருக்கும். நாம் பூமியின் எந்தப் பிரதேசத்தின் மேல் இருக்கிறோம் என்று அது எடுத்துக் காட்டும். அதற்குப் பிறகு விண்வெளியில் எந்தப் பக்கம் போகணும் என்று நமக்கு கம்ப்யூட்டர் வழி காட்டும்."

"இந்தப் பூமி, அதுவும் எவ்வளவு நாள்? அதிகமாகப் போனால் மேலும் ஒரு ஐந்து நாள்" என்றெண்ணிக் கொண்டே அனூஹ்யா அக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தாள். வினாடிக்கு வினாடி பூமி தொலைவிற்குப் போய்க் கொண்டே யிருக்க, கெலிடியோ ஸ்கோப்பில் டிசைன்கள் மாறினாற்போல் விதவிதமான காட்சிகள் வேகமாக மாறிக் கொண்டிருந்தன. நேவிகேஷன் குளோப் நான்கு பிரதட்சணங்களை முடித்தாற் போல் காட்டியது. இன்னும் கொஞ்ச நாளில் அவர்களின் பார்வைக்கு பூமியும் நட்சத்திரம் போலவே காட்சியளித்து பிறகு கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துவிடும்.

பானெலின் மீது சிவப்பு பல்பு எரிந்தது.

"பி காஷியஸ்... அலீன் பெல்ட் எ ஹெட்" என்ற எழுத்துக் கள் கம்ப்யூட்டர் ஸ்கிரீன் மீது தென்பட்டன.

"போய் உட்கார்ந்து கொள்வோம். இந்த எல்லை யெல்லாம் ரொம்ப சக்தி வாய்ந்த கதிர் வீச்சு இருக்கும். வாகனத் திற்கு எந்த விதமான ஆபத்தும் இல்லை. ஆனாலும் அப்படி யும் இப்படியும் ஆடலாம்" என்று சொல்லிவிட்டு, வாயுபுத்ரன் போய் உட்கார்ந்து கொண்டான்.

இரு பக்கங்களிலிருந்து காந்த சக்தியால் இழுக்கப்பட்டு

நலிந்து போனாற்போல் அனூஹ்யாவால் சட்டென்று நகர முடியவில்லை. அதற்குள் வாகனம் ஒரு பக்கமாக சாய்ந்ததும், அதைப் பார்த்துவிட்டு யஷ்வந்த் அவளைப் பிடித்துக் கொண்டதும் நடந்துவிட்டன. அந்தக் குலுக்கலுக்கு பின்னுக் குப் போயிருக்க வேண்டியவள் முன்னுக்கு விழுந்துவிட்டாள். பயந்தவாறு கண்களை மூடித் திறப்பதற்குள் எதிரே யஷ்வந் தின் முகம் ரொம்ப சமீபத்தில் இருந்தது. தான் அவன் மடியில் படுத்திருப்பதைப் பார்த்து வெட்கத்தால் மற்றொரு முறை கண்களை மூடிக் கொண்டாள் அவள். பத்து ஆண்டுகளுக்கு முன்னால்... ஆழ்ந்த உறக்கத்தில் அவன் ஆழ்ந்திருக்கும்போது, மென்மையாக கன்னங்களை வருடுவாள். தூக்கத்திலேயே அவன் அவளை இழுத்து அணைத்துக் கொண்டால், அவன் மூச்சுக்காற்றில் தன் மூச்சுக்காற்று இழைய, அம்முகத்தையே பார்த்துக் கொண்டிருப்பாள். அந்த ஸ்பரிசம் தந்த ஆனந்தம் வாழ்க்கையில் வேறெதுவும் தந்ததில்லை. தூங்கிவிட்டால் அந்த தொடுகையை அனுபவிக்கும் உணர்வு குறைந்து போய் விடுமோ என்ற பயத்தால் அப்படியே இரவெல்லாம் விழித்துக் கொண்டேயிருப்பாள். பிறகு...

யஷ்வந்த் மெதுவாக அவளை எழுப்பினான். மறுவார்த் தைப் பேசாமல் எழுந்து தன் அறைக்குப் போய்விட்டாள் அனூஹ்யா.

வாயுபுத்ரன் பின்னாலிருந்து தம்மையே பார்த்துக் கொண்டிருந்தான் என்று அவளுக்குத் தெரியும்.

கண்ணாடிப் பலகையின் மீது பூச்சிக்கள் அப்படியும் இப்படியும் சுற்றிக் கொண்டிருந்தன. அனூஹ்யாவின் பார்வை அவற்றின்மீது நிலைத்திருந்ததே ஒழிய மனம் மட்டும் ஒத்துழைக்கவில்லை.

“இந்தப் பயிற்சியை மனிதர்கள் மீது செய்தால் நன்றாக

இருக்குமோ என்னவோ? ஸ்பெஸிமென் ஆக இருக்கச் சொன்னால் நான் தயார்." பின்னாலிருந்து வெகு அண்மையில் வாயுபுத்ரனின் குரல் கேட்டதும் அனூஹ்யா திடுக்கிட்டாள். எந்த விதமாக மனதைக் கடமையில் செலுத்தினாலும் அந்தக் குரலைக் கேட்டதுதான் தாமதம் நீரில் பட்ட கல்லைப் போல் அது அலையலையாய் எழும்பத் தொடங்கிவிடுகிறது. அது அவளுடைய பலவீனமா? இருவருக்குமிடையே நலிந்து போவதற்காக அல்லவே அவள் இந்தக் குழுவில் சேர்ந்தது? கடமையை முடிக்க வேண்டும் என்று எடுத்துக் கொண்ட முடிவு அவனுடைய ஒரே வார்த்தையில் துடைத் தெறிந்தாற் போல் காணாமல் போய் விடுகிறதே? மனதைக் கட்டுப் பாட்டில் வைத்துக் கொள்ள முடியவில்லை.

இன்னும் கொஞ்ச நாளில் அவனை விட்டுப் பிரிந்துவிட வேண்டும் என்று தெரிந்த பிறகு, "நீ போ அனூஹ்யா! என் காதலுக்காக உன் புகழைப் பலியாக்க மாட்டேன். எங்கே இருந்தாலும் மனப்பூர்வமாக உன்னைக் காதலித்துக் கொண்டே இருப்பேன்" என்று அவன் வழியனுப்பிய பிறகு, ஏகாந்தமாக அவனைச் சந்திப்பது இதுதான் முதல் தடவை. அவன் இல்லாமல் விண்வெளியில் பயணம் செய்யப் போகிறோம் என்று தெரிந்ததுமே பாதாளத்திற்கு ஒடுங்கிப் போகத் தொடங்கியது மனம். கடைசி நிமிடத்தில் அவனும் வருகிறான் என்று தெரிந்ததுமே, சுவர்க்கத்திற்குப் பறக்கத் தொடங்கி விட்டது. ஆனாலும் அந்த உணர்வு சில வினாடிகள்தான். சங்கடம், மனக்குழறல் அவளைத் திணரடித்துக் கொண்டிருந்தன.

"சாரி அனூஹ்யா. அன்றைக்கு என் காதலை நீ எந்தேகப் பட்டாய் என்று நான் நினைத்தது உண்மைதான் என்று தோன்றுகிறது. உன்னைப் போகச் சொல்லி விட்டேனே தவிர அதற்குப் பிறகு என் இதயம் என்னைச் சுட்டுப் பொசுக்கி விட்டது. என் இதயத்தை உயிர்ப்பிப்பதற்காக எவ்வளவு

அவஸ்தைப் பட்டேன் தெரியுமா?

"அப்படி என்றால்?'' சந்தேகத்துடன் கேட்டாள் அனூஹ்யா.

"இந்தப் பிரயாணத்தில் வர வேண்டியவனை தடுத்து நிறுத்தி அந்த இடத்தில் நான் வருவதற்கு குறுக்கு வழியை நாடினேன். அதற்காக நான் வெட்கப் படவில்லை அனூஹ்யா." திடீரென்று அவன் குரல் மென்மையாக மாறிவிட்டது. "நீ இல்லாத அந்த உலகத்தில் வாழ்வது என்னால் முடியாது என்று புரிந்துவிட்டது. மயான வைராக்கியத்தைப் போல் வாழ்க்கையின் மீதே வைராக்கியம் ஏற்பட்டது. என்னைப்பற்றி நீ என்ன நினைத்துக்கொண்டாலும் சரி. நான் தவறான பாதையைத்தான் தேர்ந்தெடுத்தேன். நிகோலவஸ்க்கியின் பலவீனத்தை காஷ் செய்து கொள்வதற்காக எனக்கு இருந்த சொத்துக்களை எல்லாம் செலவழித்தேன். அம்ப்கோர்ஸ்! இனி எனக்கு சொத்து இருந்து என்ன பயன்? எனக்கு வேண்டியது உன் நெருக்கம். வாழ்நாளின் கடைசி வரையிலும் உன் கையைப் பிடித்துக் கொண்டு விண்வெளி எல்லைக்குள் ஊடுருவி நுழைந்து போய்க் கொண்டே இருப்பதைவிட வேறென்ன சாபல்யம் இருக்கு?"

"வாயு" அவள் குரல் நடுங்கியது. காதலால்... உணர்ச்சி வசப்பட்டதால்.

"அனு" அவன் அவளை நெருங்கி வந்து தோளில் கரங்களைப் போட்டுப் பலமாக அணைத்துக் கொண்டான்.

அனூஹ்யாவின் உடல் சிலிர்த்தது. அவள் மேனியில் யஷ்வந்த் விட்டுப் போன ஸ்பரிசத்தின் உணர்வு. வாயுபுத்ரனின் கைப்பட்டதுமே எதிர்மறையாகிவிட்டதுபோல் தோன்றவே சட்டென்று பின்னால் நகர்ந்துகொண்டாள்.

"ஏன், என்மீது இன்னும் கோபம் போகவில்லையா?"

"அதெல்லாம் இல்லை. ஏனோ என் மனம் வசத்தில் இல்லை. நம் கடமை ஒவ்வொரு வினாடியும் என்னைக் கலவரப் படுத்திக் கொண்டே இருக்கிறது. இப்படிப்பட்ட உணர்வு களை எல்லாம் விட்டுத் தொலைவில் இருக்கச் சொல்லி எச்சரிப்பது போல் இருக்கு."

"அனு! எங்கே என் கண்களைப் பார்த்து இன்னொரு தடவை சொல்லு?"

அவள் தைரியமாக நிமிர்ந்து பார்த்தாள். மனதைத் திடப் படுத்திக் கொண்டு, கண்களில் எந்த உணர்வுகளையும் காட்டி விடக் கூடாது என்ற உறுதியோடு பார்த்தாள்.

ஆனால்...

அவன் கண்களில் பனிக்கட்டியில் நெருப்புப் போல் அவள்பால் இருந்த அன்பெல்லாம் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. பனிக்கட்டி உருகிக் கண்ணீராகி அவன் கன்னங்களில் வழிந்துக் கொண்டிருந்தது.

"வாயு!"

"அனுஹ்யா!" அவன் கைகள் அவளைச் சுற்றிப் பிணைத் துக் கொண்டன. "எவ்வளவு கலங்கி விட்டேன் என்று உனக்கு எப்படி எடுத்துச் சொல்வது? எந்தக் காரணத்தால் உன்னை இந்தக் குழுவில் அனுப்புகிறார்கள் என்று தெரியாத அப்பாவி ஒன்றுமில்லை நான். இவர்களில் யாருக்கு நீ துணைவியாக ஆவாயோ என்ற யோசனை என்னைப் பைத்தியமாக்கி விட்டது. வேறொரு ஆணின் கைகள் உன் தோளைப் பற்றினால், என் உடலில் தேளும் பாம்பும் ஊர்ந்தாற்போல் இருக்கும். கொஞ்ச நேரத்திற்கு முன்னால் யஷ்வந்தின் கைகள் உன்னை

அதுபோல் பற்றிய போது என்னால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. அவன்மீது எனக்கு எவ்வளவோ மதிப்பு உண்டு. அவனுக்கு முன்னால் உன்னிடம் நெருங்கிப் பழக தயங்குவேன். ஆனால் உன் விஷயத்தில் அவன் அண்மையை என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. என்னைப் புரிந்து கொள்வாய் இல்லையா? புத்திசாதுரியத்தில் நான் அவன் கால் தூசுக்கு சமமாக மாட்டேன். ஆனால் நீ என்னை விட்டுப் போவதற்கு அது காரணமாக இருக்கக் கூடாது."

யஷ்வந்தைப் பற்றிய பேச்சு வந்ததுமே அனூஹ்யா மெதுவாய் அவன் கைகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டதை அவன் கவனிக்கவில்லை. அந்த நேரத்தில் அவள் முகத்தைப் பார்த்திருந்தான் என்றால், ஒருக்கால் அவள் மனக் குமுறல் கொஞ்சமாவது புரிந்திருக்குமோ என்னவோ.

"உனக்கு யஷ்வந்தின் மீது ரொம்ப மதிப்பு என்று நினைக் கிறேன்." அவள் குரல் கிணற்றுக்குள்ளிலிருந்து வெளி வந்தாற் போல் இருந்தது.

"ஆமாம், வெறும் மதிப்பு மட்டுமே இல்லை. பக்தியும் கூட. சாவின் கடைவாயில் வரைக்கும் சென்று காப்பாற்றிய தும் அதற்காகத்தான். அவன் இல்லாவிட்டால் நம் இந்தப் பயணமே இல்லை. அதாவது மனித இனமே சுவடு இல்லாமல் போயிருக்கும் என்று அர்த்தம். அந்த விஞ்ஞானி எனக்குத் தெய்வமாக தென்படுகிறான்."

சொல்லிவிடு... சொல்லிவிடு என்றது அவள் மனம். இனி இந்த முக்காட்டிற்குள் மறைந்துக் கொண்டிருக்க அவளால் முடியாது. "என் நிலைமை..." என்று அனூஹ்யா சொல்லத் தொடங்கிய அதே சமயத்தில் இண்டர்காம் ஒலித்தது.

"எல்லோரும் டைனிங் ஹாலுக்கு வாங்க. சாப்பாட்டு

வேளை ஆகிவிட்டது." நிகிலின் குரல் கேட்டது.

"வா... வா. விண்வெளியில் இருந்து கொண்டு சாப்பிடப் போகிற முதல் டின்னர். சாரி. இங்கே லஞ்ச்... டின்னர் இவ் விரண்டிற்குமே வித்தியாசம் இருக்காதுன்னு நினைக்கிறேன். முதல் பார்ட்டி கொண்டாடுவோம் வா." ஆர்வத்துடன் எழுந்துகொண்டான் வாயுபுத்ரன். சக்தியை இழந்தவளாக அவனைத் தொடர்ந்தாள் அனூஹ்யா. மற்ற மூவரும் இவர் களுக்காகவே காத்திருந்தார்கள். யஷ்வந்தின் பார்வையில் கடு களவு வருத்தம் தென்பட்டாற்போல் தோன்றியது அவளுக்கு. போய் யஷ்வந்தின் பக்கத்தில் காலியாக இருந்த நாற்காலியில் உட்கார்ந்தாள்.

"நாம் அவர்களைத் தேடிக்கொண்டு வருகிறோம் என்று மாயாஸ்க்கு செய்திகள் போய்க் கொண்டு இருக்கிறதா?" கேட்டான் பிலிங்ஸ்.

"நாம் புறப்பட்டதிலிருந்து ஒவ்வொரு நிமிஷமும் பூமியி லிருந்து ஆல்பா கிரக வாசிகளுக்கும், இண்டர் பிளானெடரி சொஸைட்டிக்கும் ஆட்டோமேட்டிக்காக சிக்னல்கள் போய்க் கொண்டே இருக்கு. என் உத்தேசத்தின்படி அவர்கள் தற்சமயம் சூரியனுக்கு அண்மையில் இல்லை. அருகில் உள்ள அண்டரோ மேடா விண்வெளி வரைக்கும் நாம் பிரயாணம் பண்ண வேண்டி யிருக்கும்." நிகில் பரிமாறிக் கொண்டே பதிலளித்தான்.

"அனூஹ்யா! சாப்பிட்ட பிறகு என் அறைக்கு வந்தால் எங்க பிரம்ம வித்யாவை அறிமுகப்படுத்தி வைக்கிறேன். உனக்கும் நல்ல துறை." வாயுபுத்ரன் சொன்னான்.

அனூஹ்யா பதில் பேசவில்லை. இரு பக்கங்களிலும் உட்கார்ந்து கொண்டு வாயுபுத்ரனும், யஷ்வந்தும் பேசிக் கொண்டிருக்க, தன்னுள் ஏற்பட்டுக் கொண்டிருந்த குமுறல்

அவர்களுக்குத் தெரியாமல் கட்டுப்படுத்திக்கொள்ள பலவிதமாக முயன்று கொண்டிருந்தாள். அவள் முகத்தில் தோன்றிக் கொண்டிருந்த மாறுதல்களைக் கவனித்தவர் ஒருவர்தான். அவர்தான் பிலிப்ஸ்!

அதற்குப் பிறகு அரைமணிநேரம் கழித்து, அனூஹ்யா வாயுபுத்ரனின் அறையை நோக்கி நடந்தாள். அவள் அடியெடுத்து வைத்ததுமே, ஒரு இனிமையான குரல் "வாங்க வாங்க..." என்று கேட்டது. அனூஹ்யா அதிர்ந்துவிட்டாள். வாயுபுத்ரன் உண்மையாகவே யாரையாவது அழைத்துக் கொண்டு வந்திருப்பானோ? அறை முழுவதும் நோட்டம் விட்டாள். யாருமே தென்படவில்லை.

"ஹலோ!" ஸ்லீப்பிங் பேக்கிலிருந்து தலையை வெளியே நீட்டிக் குறும்பாக அழைத்தான் வாயுபுத்ரன்.

"அறிமுகம் பண்ணுங்க. குழப்பமாக பார்க்கிறாங்க."

திரும்பவும் அதே குரல் கேட்டது. அனூஹ்யா அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தாள். எதிரே பெரிய கம்ப்யூட்டர் இருந்தது.

"ஹலோ. என் பெயர பிரம்மவித்யா. உங்கள் எல்லோருடைய சேவைக்கும் தயாராக இருக்கிறேன்" என்றது பெண் குரலில்.

"மனிதர்கள் யாராலும் பண்ண முடியாத காரியங்களையெல்லாம் பண்ணும். உன்னோடு விளையாடும், பேசும், கதை சொல்லும், பாட்டுப் பாடும். உன் பரிசோதனையில்கூடப் பயன்படும்."

"அழகாத்தான் இருக்கு. ரொம்ப அபாரமான மூளை தான்."

"ரொம்பப் பெரிசுதான். வெயிட் ஐநூறு கிலோ." பதிலளித்தது பிரம்மவித்யா. "அது வெறும் மூளையின் வெயிட் மட்டும்தான். மொத்த எடை இரண்டாயிரம் கிலோ."

"நம்ப முடியவில்லையே. என் கண்களுக்கு அவ்வளவு சின்னதாகத் தென்படுகிறாயே?"

"பார்ப்பதற்கு ஐந்து உயரம் இரண்டடி அகலமே தவிர, இந்த வாயுபுத்ரன் எவ்வளவு ஃபீட் பண்ணியிருப்பான்னு சொல்லவே முடியாது. ராவும் பகலுமாக ஓய்வே எடுத்துக் கொள்ளாமல் ஒரே ஃபீடிங் தான். செத்தேன் போ."

"அப்படி என்றால் நீங்க படைத்த இந்தக் கம்ப்யூட்டருக்கு நீங்க தந்தையாவீங்களே தவிர கணவன் எப்படி ஆவிங்க?" வாயுபுத்ரனைக் கேட்டாள் அனூஹ்யா.

"நான் படைத்தேன் என்று யார் சொன்னது? கம்ப்யூட்டர் இருபதாம் நூற்றாண்டில்தான் பிறந்தது. நான் மெருகேற்றி வித்தையைக் கற்றுக் கொடுத்தேன். அவ்வளவுதான்."

"பேச்சுக் கற்றுத் தந்தது சமீபத்தில்தான் என்று சொல்லுங்கள்."

"ஆமாம். பெற்றால்தான் பிள்ளையா என்பதுபோல் கற்றால்தான் வித்தையா?" என்றது பிரம்மவித்யா.

"நீ கொஞ்சம் வாயை மூடிக்கொள்கிறாயா? நாங்க பேசிக் கொள்ள வேண்டியது நிறைய இருக்கு." வாயுபுத்ரன் எரிந்து விழுந்தான்.

"நீதான் என் வாயை மூடுகிறாயே தவிர நானே என் வாயை மூடிக்கொள்ளும் சந்தர்ப்பம் இல்லாமல் செய்து விட்டாய் இல்லையா?"

"தவறுதான். அடுத்த வேலை அதைத்தான் முதலில்

செய்யப் போகிறேன்," வாயுபுத்ரன் எழுந்துகொண்டு பட்டனை அணைத்து விட்டான்.

"அம்மாடா! இனி நாம் பேசிக்கொள்ளலாம்" என்று அனூஹ்யாவுக்கு எதிரில் வந்து உட்கார்ந்துகொண்டான்.

கதவின் மேல் டொக் டொக் என்ற சத்தம்.

"யாரது?"

"நான்தான். டாக்டர் பிலிப்ஸ்."

"கமின்'' என்றான் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு.

"யாருடையதோ புதுக் குரல் கேட்டதே. யாரது?" சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டே கேட்டார் பிலிப்ஸ்.

"அந்த சத்தம் கேட்டது இந்த பிரம்மவித்யாவிடமிருந்து தான்." வாயுபுத்ரன் திரும்பவும் பட்டனை அழுத்தினான்.

"ஹலோ டாக்டர் பிலிப்ஸ். நான் பிரம்ம வித்யா. வாங்க... வாங்க."

பிலிப்ஸ் ஆச்சரித்தால் வாயைப் பிளந்தார். "இவ்வளவு தெளிவாகப் பேசும் கம்ப்யூட்டரை, அதிலும் பெண் குரலில் இவ்வளவு துல்லியமாகப் பேசும் கம்ப்யூட்டரைப் பார்ப்பது இதுதான் முதல் தடவை. ரொம்ப நன்றாக இருக்கிறது."

"இப்போ பார்த்துக் கொண்டு இருக்கீங்களே. இதைப் படைத்தது வாயுபுத்ரன்தான்." என்றாள் அனூஹ்யா.

"பிரம்மவித்யா! உனக்குத் தெரிந்த வித்தைகள் என்னென்ன?"

"எல்லாம் தெரியும். உங்களைப் பற்றிச் சொல்லட்டுமா?

2054ல் ஜூலை பத்தாம் தேதியன்று கிரீன்விச்நேரம் காலை பத்துமணி இருபது நிமிஷம் பதினைந்து வினாடிக்குப் பிறந்தீங்க. பிறந்த போது உங்கள் எடை நாலு பௌண்டுதான். பத்து நாள் வரையிலும் இன்குபேட்டரில் வைக்க வேண்டியிருந்தது."

"போதும் போதும். எல்லோருடைய வாழ்க்கை சரிதமும், ஜாதகமும் சரிதான். உன் சரிதத்தைப் பற்றிச் சொல்லு. கேட்டுக் கொள்கிறேன்" என்றார் பிலிப்ஸ்.

"என் வரலாறு ரொம்ப பழமைவாய்ந்தது. கம்ப்யூட்டருக்கு அடிப்படை இரண்டு எண்கள். ஒன்று பூஜ்ஜியம். இரண்டாவது ஒன்று என்ற எண். உலகத்திற்கு சைபர் என்ற எண்ணைத் தர முடிந்த இந்தியாவால் கம்ப்யூட்டரைப் படைக்க முடியாமல் போய்விட்டது. ரேடியோ, டெலிபோன், கார், விமானம்... இவற்றையெல்லாம் மனிதன்தான் கண்டு பிடித்தான். இவை எல்லாம் அவன் வேலைகளை எளிதாகப் பண்ண முடிந்தேயன்றி அவனுக்குப் பதிலாக வேலை செய்ய முடியவில்லை. அவற்றிடமிருந்து வேலை வாங்க மனிதனும் கொஞ்சம் வேலை செய்ய வேண்டும். அதாவது அவன் சிரமம் கொஞ்சம் குறைந்தது.

இருபதாம் நூற்றாண்டில் நவீனமான கம்ப்யூட்டர் அமெரிக்காவில் கண்டு பிடிக்கப்பட்டது. 1970க்குப் பிறகு கம்ப்யூட்டரின் மதிப்பு உயர்ந்தது. மனிதன் செய்யக் கூடிய வேலைகளை எல்லாம் செய்யக் கூடிய ரோபோட்டைத் தயாரிக்கத் தொடங்கினார்கள். மூன்றாம் உலகப்போர் வந்து உலகத்தில் பரிசோதனைகள் எல்லாம் நின்றுவிட்டன. இவ்வளவு ஆண்டுகளுக்குப் பிறகு மனிதன் மறுபடியும் விஞ்ஞானத்தை நம்ப வேண்டிய அவசியம் வந்துவிட்டது. பலகோடி விஷயங்களை உள்ளடக்கி, எப்பொழுது எது

வேண்டும் என்பதை நொடிப்பொழுதில் தெரிந்து கொள்ள வேண்டிய முயற்சி பலித்துவிட்டது. அதுதான் மனிதனை மீறிய சக்தி.”

“இதையெல்லாம் மனிதனால் பண்ண முடியாது என் கிறாயா?” கேட்டார் பிலிப்ஸ்.

“முடியாது. மனிதனின் மூளையில் சில கோடி அணுக்கள் உள்ளன என்பது உண்மைதான். ஆனால் அவற்றுள் பெரும் பாலானவை தூங்கிக்கொண்டேதான் இருக்கும். ஆனால் கம்ப்யூட்டர் அம்மாதிரி இல்லை. எவ்வளவு விஷயங்களை ஃபீட் பண்ணுகிறோமோ அவ்வளவும் எந்தச் சமயத்திலும் விழிப்புடனேதான் இருக்கும். நான் உங்களைவிட விழிப்புடன் யோசிப்பேன்.”

“ரொம்ப நன்றாக இருக்கு. கம்ப்யூட்டர் விவரங்களைத் தரும் என்றுதான் தெரியுமே தவிர, பேசும் என்று எனக்குத் தெரியாது.”

“ஆதுதான் சொன்னேனே, வாயுபுத்ரனின் படைப்பு என்று. எதிராளியின் குரலைக் கேட்டதுமே, அதைப் புரிந்து கொண்டு பதிலை வார்த்தைகள் உருவில் சொல்லக் கூடிய வித்தையைக் கண்டுபிடித்தது இவர்தான்.”

அனுஹ்யா சட்டென்று “ஆனால், நான் பேசாத போதே எனக்கு வரவேற்பு அளித்ததே?” என்றாள்.

“வாயுபுத்ரனைப் பொறுத்தவரையிலும் நீ ஸ்பெஷல் அனுஹ்யா” என்றது கம்ப்யூட்டர். அவ்வறையில் தர்மசங்கட மான நிசப்தம் ஏற்பட்டது.

அதை சிதறடித்தபடி “ரொம்ப பெரிய விஷயம்தான் இது. கங்கிராஜுலேஷன்ஸ் வாயுபுத்ரா! ஆனால் டாக்டர் என்ற

முறையில் நான் உங்களுக்கு ஒரு அறிவுரை சொல்லணும். குறைந்தபட்சம் அரைமணி நேரமாவது ஓய்வெடுத்துக் கொள்ளச் சொன்னேன். முதலில் அந்தக் காரியத்தைப் பண்ணுங்க இருவரும்" என்றார் பிலிப்ஸ்.

அனூஹ்யா எழுந்து தன் அறைக்குள் சென்றாள். அவளுக்கு ஏனோ வெட்கமாக இருந்தது.

பத்து நாட்கள் கழிந்துவிட்டன.

விண்வெளிக்கு அவர்கள் அனுப்பிய சிக்னல்களுக்கு எந்தப் பதிலுமே வரவில்லை. சூரிய குடும்பத்தின் விளிம்பிற்கு அவர்கள் பயணம் வந்து சேர்ந்துவிட்டது. புறப்பட்ட போது இருந்ததைவிட அவர்களின் வாகனத்தின் வேகம் ஆறுமடங்கு அதிகமாகிவிட்டது. சீக்கிரத்திலேயே "துரித ஒளி வேக நிலையை" எட்டிவிடும்.

ஸ்ரீஜா.

அண்டவெளியில் வெகு தூர சூனியத்தை நோக்கி எங்கள் பயணம் தொடங்கப் போகிறது. "இனி எங்களைப் பற்றி எந்த விவரமும் உனக்குத் தெரியும் வாய்ப்பு இல்லை" என்று நினைப்பதைவிட, "உன்னைப் பற்றி எந்த விஷயமும் தெரியும் வாய்ப்பு இல்லை" என்ற எண்ணம்தான் அதிக வருத்தத்தைத் தருகிறது. ஒரு புன்னகைக்காக இரத்தத்தை யெல்லாம் பிழிந்து தருவேன் என்றாய். உன்னைப் பற்றிய ஒரு செய்திக்காக உயிரையே கூடத் தருவேன். ஆனால் அதுகூட இனி சாத்தியம் இல்லை.

அதனால்தான் ஸ்ரீஜா.

திருமணமாகி பதினைந்து நாள் கூட ஆகாமலேயே எந்தக் கணவனுமே கேட்கக்கூடாத ஒன்றை உன்னிடம் கேட்

கிறேன். இன்னும் சமயம் மிஞ்சி விடவில்லை. ஐந்தாம் மாதத்தில் அபார்ஷன் பண்ணிக்கொள்வது இந்தக் காலத்தில் பெரிய விஷயமில்லை. அதற்கு பிறகு உனக்குப் பிடித்தவன் கிடைத்தால் கல்யாணம் செய்துகொள். திரும்பி வருவேனோ என்று தெரியாத எனக்காக உன் வாழ்நாளை யெல்லாம் வீணாக்காதே. உனக்குப் பண்ணிவிட்ட அநியாயத்திற்காக ஒவ்வொரு வினாடியும் குமுறிக் கொண்டே இருக்கிறேன். என்னை இந்தக் குமுறலிலிருந்து விடுதலை செய். உன்னிடமிருந்து எந்தத் தகவலுமே கிடைக்க முடியாத தூரத்திற்கு நான் போய்ச் சேருவதற்கு முன்பே உன் பதில் கிடைத்து விட்டால் எனக்கு மன நிம்மதி.

எதுவும் தெரிந்துகொள்ள முடியாத துர்பாக்கிய நிலையில் உள்ள உன் நிகில்."

ஸ்ரீஜாவின் கண்ணீரால் கடிதம் நனைந்தது. கம்ப்யூட்டர் மூலமாக ஒலிபரப்பட்ட அந்தக் கடிதம் அவளுக்குக் கிடைக்க நான்கு நாட்கள் பிடித்தன.

"அவன் சொன்னதில் உண்மை இருக்கும்மா. இன்னும் மிஞ்சி விடவில்லை. அப்படியே பண்ணிவிடு.'' தாய் கெஞ்சினாள் கண்ணீர் மல்க. ஒரே மகளின் வாழ்க்கை இவ்வாறு வீணாக்கிப் போய்க் கொண்டிருக்கிறதே என்ற வேதனையில் பரிதவித்தாள் அவள்.

"மன்னித்துவிடும்மா. இந்த விஷயதைப் பற்றி இனி என்னிடம் பேச வேண்டாம். நான் போகிறேன். உடனே போய் பதில் எழுதணும்" என்று எழுந்துகொண்டாள் ஸ்ரீஜா.

"பிரம்மாவித்யா! என் கடிதத்திற்கு பதில் கிடைத்ததா?"

"இது நூற்று ஒன்றாவது தடவை நீ இந்த கேள்வியைக் கேட்பது. பதில் வந்தால் என் வாய் சும்மாயிருக்குமா? நீ

வேண்டாம் என்றாலும் நான் சொல்லிவிடுவேன்."

"நாம் ஒளிவேகத்தை அடைய இன்னும் எவ்வளவு நேரம் இருக்கு?"

"சரியாக நாலுமணி நேரம், பதினைந்து நிமிஷம், ஐம்பது வினாடிகள்."

"அவ்வளவு நேரம் உன் அருகிலேயே உட்கார்ந்து கொள் கிறேன்."

"சரி. அப்படியே ஆகட்டும். நேரம் தெரியாமல் இருக்க உனக்கு வேதாளக் கதையோ அல்லது அரேபியன் கதையோ சொல்லட்டுமா?"

"வேண்டாம். கேட்கும் மனநிலையில் நான் இல்லை. மனிதனுக்கும் கம்ப்யூட்டருக்கும் உள்ள வித்தியாசம் என்ன வென்று எனக்கு இப்பொழுதுதான் புரிந்தது."

"என்ன அது?"

"மனிதனால்தான் காதலிக்க முடியும். கம்ப்யூட்டருக்கு காதல் தெரியாது." எரிச்சலுடன் சொன்னான்.

பிரம்மவித்யா பேசவில்லை. அது உண்மையில்லை என்று காலம் நிரூபித்து விட்டது சீக்கிரத்திலேயே.

கண்களைத் திறந்தவுடன் அவன் கேட்ட முதல் கேள்வி "பிரம்மவித்யா! இன்னும் எவ்வளவு நேரம் இருக்கு?"

"பன்னிரெண்டு நிமிஷம் பத்து வினாடிகள் இருக்கு." அவர்களுடைய வாகனம் ஒளி வேகத்தை எட்டிவிட்டால் வேறெந்தச் செய்தியும் கிடைக்காது.

"என் கடிதம் ஸ்ரீஜாவுக்குக் கிடைக்கவில்லையா? இனி எனக்கு பதில் கிடைக்காதா?" சிறுவனைப் போல் கேட்டான் நிகில்.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. என் கடமையை நான் சரியாக செய்கிறேன். அவ்வளவுதான்."

நேரம் வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. நிகிலின் உள்ளங் கைகளில் வியர்த்தது. அங்கேயே உட்கார்ந்து விட்டான்.

பத்து நிமிஷங்கள் கழிந்தன. இன்னும் சில வினாடிகளே பாக்கி.

வினாடிகளைக் கணக்கிடத் தொடங்கியது பிரம்மவித்யா. பத்து... ஒன்பது... எட்டு... கடைசி வினாடி முடிந்ததுமே துக்கத் தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் நிகில் ஹோ வென்று அழுதுவிட்டான். மேலும் ஐந்து நிமிஷங்கள் கழிந்தன.

"நிகிலுக்கு செய்தி," பிரம்மவித்யாவின் குரலைக்கேட்டு திடுக்கிட்டான். சிவந்த கண்களைத் துடைத்துக் கொண்டே "நேரம் முடிந்து விட்டது என்று சொன்னாயே. விளையாட இது நேரம் இல்லை."

"அழகாக இருக்கு. நம் நேரத்துக்கும் பூமியின் நேரத் திற்கும் வித்தியாசம் அதிகரித்துவிட்டது. இந்த விஷயத்தைப் பற்றி நீ என்னைக் கேட்டிருந்தால் அப்பொழுதே சொல்லி யிருப்பேன். எதைப் பற்றியும் யோசிக்காமல் அழுது கொண்டு உட்கார்ந்திருந்தாய். நான் என்ன செய்யட்டும்?"

"தவறு செய்து விட்டேன். சமாச்சாரத்தைச் சட்டென்று படி." கைகளைக் கூப்பினான் நிகில்.

"நிகில்.

யோசித்துப் பார்க்கும் மேதாவித்தனம் படைத்த மனிதன் உருவாகி 806 தலைமுறைகள் கடந்துவிட்டன. முதல் 750 தலை முறைகளை விட்டுத்தள்ளுங்கள். அதற்குப் பிறகு மனிதன் எத்தனையோ விதமான சவால்களை எதிர்கொண்டு வந்திருக்

கிறான். எல்லாவற்றையும் திக்விஜயமாக சாதிக்க முடிந்திருக் கிறது அவனால். கனவிலும் ஊகிக்க முடியாத காரியங்களைச் சாத்திருக்கிறான். ஏமாற்றம் என்ற வார்த்தையை வெல்ல முடிந்ததுதான் அதற்குக் காரணம். இன்றைக்கு முடியவே முடியாது என்றெண்ணிய காரியத்தைச் சாதிப்பதற்காக நீங்கள் எல்லோரும் விண்வெளியை நோக்கிப் போகிறீர்கள். காரணம் என்ன? ஆசாவாதம்தான். அந்த ஆசையை கடசி வரைக்கும் விட்டு விடாதீர்கள்.

என் வாழ்க்கை வீணாகிவிடும் என்று ஏன் எண்ணு கிறீர்கள்? ஒரே வாழ்நாளில் முடிக்க முடியாத அளவிற்குப் பொறுப்புகள் என்மீது இருக்கின்றன. உங்களைப் பற்றி யோசித்துப் பார்க்கக்கூட முடியாத அளவுக்கு பிசியாகி விட்டேன். உலக அன்புக்கு முன்னால் நம் அன்பு ரொம்ப சிறியது. இது என் மொழி. என் இனம். இது என் மதம், இது என் நாடு என்ற நிலையிலிருந்து உயர்ந்து இது என் பூமி, இது என் உலகம் என்ற நிலையில் மனித இனத்தின் பிரதி நிதியாகப் போகிறீர்கள். உங்கள் பொறுப்பை உணர்ந்து கொண்ட போது என்னைப் பற்றி யோசிக்கும் சமயம் உங்களுக்கு இல்லாமல் போகலாம். பி பிரேவ்! விஷ் யு ஆல் தி பெஸ்ட்."

அவன் அப்படியே சிலையாக உட்கார்ந்திருந்தான். அவன் நிலையைப் பார்த்து கம்ப்யூட்டர்கூட வாயைத் திறக்கவில்லை. 'உண்மைதான் ஸ்ரீஜா. உன் வார்த்தைகள்தான் எனக்குத் தைரியம். இனி ஒரு நாளும் அதைரியத்தை அணுக விட மாட்டேன்' என்றெண்ணிக் கொண்டான்.

"ஏன் அங்கேயே நின்று விட்டாய். வா அனுஹ்யா" கூப்பிட்டான் யஷ்வந்த்.

அவன் மட்டும் கன்ட்ரோல் ரூமில் இருந்தான் என்பதை

கவனிக்காமல் ஏதோ யோசனையில் மூழ்கியபடி அந்தப் பக்கமாக வந்தாள் அவள். பிரயாணம் தொடங்கியதிலிருந்து முதல் நாள் எல்லோருக்கும் முன்னால் அவனோடு பேசிய தைத் தவிர அவனைத் தனியாக சந்தித்ததில்லை அவள். இப்பொழுதுதான் முதல் தடவையாய்ச் சந்திக்கிறாள்.

அனூஹ்யா வந்து எதிரே இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள். முதல் முறையாக இண்டர்வ்யூவுக் குப் போகும் நபரைப் போல் இருந்தாள் அவள்.

அவளிடமிருந்த அதைரியத்தைப் போக்கடிப்பதற்காக மெதுவாகச் சிரித்தான் அவன். பதிலுக்குத் தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்.

"என்னைப் பார்த்து இன்னும் உனக்குப் பயம் போக வில்லை அனூஹ்யா?"

"இது பயத்தால் வந்த நடுக்கமில்லை. எனக்கே என்ன வென்று விளங்காத பயம்" என்று சொல்ல நினைத்தாள். ஆனால் குரல் வெளிவரவில்லை.

"நாம் பிரிந்துபோய் எட்டு ஆண்டுகள் ஆகிவிட்டது என்று நினைக்கிறேன். அப்போ இருந்ததைவிட இப்போது மனதளவில் முதிர்ச்சியடைந்து விட்டிருக்கிறோம். இன்னும் எதற்காக இந்தப் பயம்? குறைந்தபட்சம் சக ஊழியர்களாக வாவது இருக்கலாம் இல்லையா? நண்பர்களாக இல்லா விட்டாலும் விரோதிகளாக நடந்துகொள்ள வேண்டிய அவசியம் இல்லையே?"

"இதோ இப்படித்தான்... இப்படியேதான் முகத்தில் அடித்தாற்போல் ஏன் பேச வேண்டும்? சுமுகமாக, அன்பாகப் பேச இன்னுமா கற்றுக்கொள்ளவில்லை?" மனதிற்குள்ளேயே நினைத்துக் கொண்டாள் ரோஷத்துடன்.

"ஒருக்கால் நம் சப்ஜெக்டுகள் வேறு வேறாக இருந்தது கூட ஒரு காரணமாக இருக்கலாம். அப்பொழுதெல்லாம் வானியல் சாஸ்திரத்தைப் பற்றிப் பேசினால் அலுப்போடு முகத்தைத் திருப்பிக் கொள்வாய். இப்பொழுது யோசித்துப் பார்த்தால் தவறு உன்மீது இல்லைன்னு தோன்றுகிறது. தெரியாத உற்சாகத்துடன் நான் உன்னைப் போர் அடிப்பேன். ஆனால் இப்பொழுது என் சப்ஜெக்ட் உன்னை ரொம்பக் கவர்ந்துவிட்டது இல்லையா? இப்படிவா அனூஹ்யா" கூப்பிட்டான் அவன். அவ்வளவு பிரியமாக கூப்பிடும்போது அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அன்பைக் காட்டு வதில் கூட பெண் ஒருத்தியின்பால் மரியாதையைக் காட்டுவது ரொம்ப அரிது. அந்த மரியாதை அன்பிற்குரியது என்பதை அவளால் மறுக்க முடியவில்லை. பதுமையைப் போல் எழுந்து அவனிடம் சென்றாள்.

"இது டெலஸ்கோபிக் வ்யூவர். இந்த வழியாக பாரு. எவ்வளவு அழகான காட்சி தென்படுகிறது என்று" என்றான்.

தாங்க முடியாத வெட்கம் அவளைச் சூழ்ந்துகொண்டது. தேறிக்கொண்டு அந்த கருவியின் வழியாக பார்த்த அனூஹ்யா திகைத்துப் போய் அப்படியே நின்றுவிட்டாள்.

"ரொம்ப அழகாக இருக்கு இல்லையா? குட்டிக் கிருஷ்ணன் வாயைத் திறந்து சகல லோகத்தையும் காண்பித் தாற்போல், இந்தச் சின்ன கருவி மூலமாக பிரம்மாண்டத் தைப் பார்ப்பது."

எதிரே விண்வெளியில் சிதறினாற்போல் பரவி, மின்னிக் கொண்டிருந்த நட்சத்திரங்களும், இன்னொரு பக்கத்தில் நீல நிறத்தில் மினுமினுத்துக் கொண்டிருந்த செவ்வாய் கிரகமும்.

"கொஞ்ச நாட்களுக்கு முன்னால் இவ்வளவு நெருக்கத்

தில் சந்திரனைப் பார்த்தாய். பூமியில் கால்பங்கே இருந்தது அது. ஆனால் இந்த அங்காரக கிரகம் ஏறக்குறைய பூமியளவே இருக்கிறது. உருவத்திலும், அளவிலும் கிட்டத்தட்ட சூழ் நிலையிலும்கூடப் பூமியைப் போன்றதுதான். அதனால்தான் நம்மைப் போன்ற ஜீவராசிகள் அங்கும் இருக்கலாம் என்று நினைத்தார்கள் நூறு ஆண்டுகளுக்கு முன்னால். அது உண்மை யில்லைன்னு ருசுவாகிவிட்ட பிறகு மனித இனம் வசிப்பதற்கு ஏற்ற இடமாக மாற்றணும் என்று நினைத்தார்கள். அதுகூட சாத்தியப்படவில்லை. காரணம் ஆக்சிஜன் குறைவு."

அவள் காதில் வாங்கவில்லை. பார்த்துக் கொண்டிருந் தாள்.

"எவ்வளவு அழகாக இருக்கு இந்தக் காட்சி! பூமியில் எந்த ஓவியனுக்கும் எட்டாத சௌந்தரியம்" என்றாள் அனூஹ்யா தனக்குள் சொல்லிக் கொள்வதுபோல்.

"உண்மைதான். இப்படிப்பட்ட அபூர்வமான சௌந்தரியத் தைக் கண்ணாரக் காணக் கிடைத்த நாம் அதிர்ஷ்டசாலிகள். நம் காரிய சாதனையில் உயிரே போனாலும் பரவாயில்லை. வாழ்க்கை மட்டும் சாபல்யமாகிவிட்டது என்று திருப்தியடைய லாம்."

"புறப்பட்டு எவ்வளவு நாளாகிவிட்டதோ தெரியவில்லை. இரவுக்கும் பகலுக்கும் வித்தியாசமில்லை. வெற்றி கிடைப்பது கஷ்டம் என்று தோன்றுகிறது. அவர்களிடமிருந்த எந்தத் தொடர்பும் கிடைக்கவில்லையே. ஏன்?"

"அதற்குள்ளேயே கிடைத்து விடுமா? இன்னும் ஐந்து வருஷங்களுக்குள் கிடைத்துவிட்டால் நாம் அதிர்ஷ்டசாலிகள் தான்.

"நம் சூரியனையே ஏன் தேர்ந்தெடுத்தார்கள்? வேறு எத்தனையோ நட்சத்திரங்கள் அவர்களுக்கு சமீபத்தில் இல்லையா?"

"இது அவர்கள் மட்டுமே பதில் சொல்லக் கூடிய கேள்வி. சூரியனைவிட பிரகாசமான பெரிய நட்சத்திரங்கள் நிறைய உள்ளன. இப்படிப் பாரு" என்று டெலஸ்கோப்பை சரி செய்து காண்பித்தான்.

"மஞ்சள் கலந்த பசுமையோடு தென்படுகிற அந்த நட்சத்திரம் ஆல்பா சென்டனரி. பூமிக்கு 413 வருஷங்கள் தொலைவில் இருக்கிறது. சூரியனைவிட ஒன்றரை மடங்கு ஒளியைக் கொண்டது. அதற்குக் கொஞ்சம் மேலே தென் படுகிறது. அதன் ஜோடி நட்சத்திரம் பீடா சென்டனரி. நீலமும் வெள்ளையும் கலந்த நிறத்தில் அந்த நட்சத்திரம் சூரியனை விட ஐந்தாயிரம் மடங்கு ஒளியைக் கொண்டது" என்றான். அவன் பார்வை அவள் கழுத்தில் படிந்தது. செழுமையான உடற்கட்டு அவளுடையது. தொட்டால் கன்றிவிடும் போல் இருந்தது அவள் நிறம். அவன் அரும்பாடுபட்டு பார்வையைத் திருப்பிக் கொண்டே சொன்னான்.

"அவர்களுக்குத் தெரியாமல் இல்லை. அவர்கள் சூரியனை தேர்ந்தெடுத்ததற்கு வேறு ஏதாவது காரணம் இருக்கலாம். அந்தக் காரணம் தெரிந்தால் தவிர அவாகளிடம் நயமாக எடுத்துச் சொல்ல நம்மால் முடியாது."

"நாம் வெற்றியடைவோம் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறதா?"

அவன் அதற்கு பதில் அளிக்காமல் "என் வாழ்க்கையில் மிக முக்கியமான சந்தோஷமான நிகழ்ச்சி எது தெரியுமா அனூஹ்யா? மரணத்திற்கு சமீபத்தில் சேர்ந்துவிட்டு இன்னும்

சில வினாடிகளில் இறந்து விடுவேன் என்று நினைத்துக் கொண்டிருந்த போது, ஐ லவ் யூ யஷ்வந்த் என்று உன் குரலை கேட்டதுதான். சாகப்போகும் ஒருவனின் வாயிலில் துளசி தீர்த்தத்தை விட்டால் உயிரு சுலபமாக போகும் என்றும், சுவர்க்கத்திற்குப் போவான் என்றும் நினைப்பார்களாம். ஆனால் இனிமையால் அந்த வார்த்தை என்னைச் சாவின் வாயிலிருந்து மீட்டுக் கொண்டு வந்து சேர்ந்துவிட்டது" என்றான்.

அனூஹ்யாவின் மனம் ஏதோபோல் ஆகிவிட்டது. அருகில் சென்று வார்த்தைகளால் தெரிவிக்க முடியாத உணர்வுகளை ஸ்பரிசத்தால் தெரிவிக்க வேண்டும் என்று துடிப்பு ஏற்பட்டது. அவன் தோள்கள் சரியாக ஓரடி தூரத்தில்தான் இருந்தன. கைகெட்டும் தூரத்தில், அந்த ஏகாந்தத்தில் அவன் அவ்வாறு பேசிக் கொண்டிருக்கையில் தலையை அவன் தோளில் சாய்த்துக் கொண்டே கேட்க வேண்டும் என்று தோன்றியது. அனூஹ்யா நடுங்கும் விரல்களை நீட்டினாள்.

"அஃப்கோர்ஸ், என் உயிரைக் காப்பாற்றிய புண்ணியம் வாயுபுத்ரனைத்தான் சேரும். அவன் நன்றியை எத்தனை ஜென்மம் எடுத்தாலும் தீர்த்துக் கொள்ள முடியாது. இரண்டு முறை உயிரையும் பொருட்படுத்தாமல் என்னைக் காப்பாற்றி இருக்காவிட்டால், உன்னோடு சேர்ந்து இம்மாதிரி பிரயாணம் பண்ணும் வாய்ப்பு ஏற்பட்டிருக்காது."

அவன் பின்னால் திரும்பிப் பார்த்தபோது அனூஹ்யா முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொண்டு எல்லையில்லாத சூனியத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

விண்வெளிக் கப்பலில் இரவு பகல் என்று எதுவும் இல்லை. வெளியே சூரிய அஸ்தமனத்தையும், உதயத்தையும் தாண்டிய நிலைக்கு எப்பொழுதோ வந்த சேர்ந்து

விட்டிருந்தது விண்வெளிக் கப்பல். ஆரஞ்சு வண்ண ஒளியில் அது நிரந்தரமாகப் பிரயாணம் செய்து கொண்டிருந்தது. ஒவ்வொரு பத்து மணி நேரத்திற்கு ஒவ்வொருவராக பங்கு போட்டுக்கொண்டு விழித்துக் கொண்டிருந்தார்கள். அந்த உறக்கம்கூட நான்கு மணி நேரம்தான். உடனேயே விழிப்பு வந்துவிடும். பூமியில் பகலும் இரவும் ஏறக்குறைய சமமாக இருந்ததால் மனிதன் எட்டுமணி நேர உறக்கத்திற்குப் பழக்கப் பட்டிருந்தான். விண்வெளியில் அந்தத் தேவை இல்லாமல் போய்விட்டது. கண்ட்ரோலுக்குப் பக்கத்தில் எப்பொழுதும் யாராவது இருவர் விழித்துக் கொண்டிருக்கும்படி ஏற்பாடு செய்திருந்தான் யஷ்வந்த்.

விண்வெளிக் கப்பலில் எந்தெந்த அறையில் என்னென்ன பொருட்கள் இருந்தனவென்று அனூஹ்யாவுக்குத் தெரியாது. மருந்துகள், தண்ணீர், காற்று... மனிதனின் வாழ்க்கைக்குத் தேவையான பொருட்கள் இருந்தனவென்று தெரியும். அவள் கவனமெல்லாம் விண்வெளியின் மீதே இருந்தது.

அவள் கடைசி அறைக்குப் போனாள். அவ்வறையில் பெரும்பாலும் தினசரி வாழ்க்கைக்குத் தேவையான பொருட் கள்தான் இருந்தன. அரிசி, கோதுமை, மாமிச உணவு முதலிய அரிய பொருட்களை அவர்கள் இனி வாழ்க்கையில் முற்றிலும் மறந்து விட வேண்டியதுதான். அந்தச் சிறிய அறையில் ஐந்து பேருக்கு எழுபத்தைந்து வருடங்களுக்குப் போதுமான ஆகாரம் எனெர்ஜி உருவில் பாதுகாக்கப் பட்டிருந்தது. இரண்டு தலைமுறைக்குப் போதுமான ஆகாரம்.

அவள் பார்வை ஒரு சிறிய டப்பாவின் மேல் விழுந்தது.

சிறு குழந்தைகளுக்குத் தரும் பால் பவுடர் டின் அது. சூனிய வெளியில் பிறந்துவிட்ட பாவத்திற்காகக் குழந்தை களுக்கு சிசுவாக இருக்கும் பொழுதே செயற்கை உணவு கொடுக்

காமல் குறைந்த பட்சம் பாலியப் பருவத்திலாவது பால் என்றால் எப்படி இருக்கும் என்பதைக் காட்டுவதற்காக அதை வைத்திருந்தார்கள்.

அதற்குள் அவள் பார்வை பக்கத்தில் இருந்த இன்னொரு பொருள் மீது பட்டது.

அதைக் கண்டு அவள் காய்ந்த சருகாக நடுநடுங்கினாள். தம் குழந்தைகள் பெரியவர்கள் ஆக ஆக, காலம் அசுர வேகத் தில் பறக்க, தாம் வரிசையாக ஒருவரையடுத்து மற்றவர் மரண மடைந்தால், தம் உடல்கள் அனாதைப் பிணங்களாகச் சூனியத் தில் தூக்கி எறியப்பட்டு விடாமல், பூலோக வாசிகள் அவர் களுக்கு அளித்த கடைசிப் பரிசுகள் அவை...

ஐந்து பிணப் பெட்டகங்கள்.

"பிரம்மவித்யா! நாம் புறப்பட்டு எவ்வளவு நாளாச்சு?" கேட்டாள் அனூஹ்யா.

எல்லையில்லாத இந்த பயணத்தில் பொழுதைக் கழிப்ப தற்கு அங்கிருந்தவர்களுக்கு ஒரு நல்ல துணையாகி விட்டிருந்தது பிரம்மவித்யா. யஷ்வந்த் உள்பட யாருக்குப் போரடித்தாலும், பிரம்மவித்யாவுடன் செஸ் விளையாடுவதும், வம்பு பேசுவதும், கதை கேட்பதும் பழக்கமாகிவிட்டது. குழப்பத்திலிருந்து மீளவேண்டும் என்று நினைக்கும் போதெல் லாம் அனூஹ்யா பிரம்மவித்யாவுடன் வாதத்தில் இறங்கி விடுவாள்.

"ஆறு மாதங்களும், பதினேழு நாளும், பதினெட்டு மணி நேரமும், இருபது நிமிஷங்களும், பன்னிரெண்டு வினாடிகளும் ஆகிறது."

"இந்தக் கணக்கில் சூனியத்தின் கோடிக்குப் போய்ச் சேர எவ்வளவு காலமாகும்?"

"இன்னும் பதினைந்து வருடங்கள். அதுவும் நாம் நினைத்தாற்போல் புறப்பட்டதைவிடம் வேகம் இருமடங் கானால் மட்டுமே."

"அது சாத்தியம் என்கிறாயா?"

"கண்டிப்பாக. ஒருமுறை வியாழன் கிரகத்தைத்தாண்டி விட்டோம் என்றால் பிரயாணம் வேகத்தை மேற்கொண்டு விடும். ஏன் என்றால் இதுவரைக்கும் நீங்க அண்ட வெளியில் விட்டுவிட்டு வந்த குப்பை கூளமெல்லாம் வியாழன் எல்லை வரைக்கும் தான் உட்பட்டது. அதுகூட நம் வாகனம் ஸ்பெஷ லாகத் தயாரிக்கப்பட்டிருப்பதால் இதுவரைக்கும் தப்பியது. இதுவரைக்குமே சுமார் ஆறு ஏழு தடவை ஏதேதோ பொருட் கள் வந்து மோதியிருக்கின்றன. நாலைந்து இடங்களில் நம் கப்பல் நசுங்கியிருக்கிறது. நசுங்கல் என்றால் ஏதோ சிறியதாக ஏற்பட்டிருக்கும் என்று நினைக்காதே. பார்த்தாயானால் பயந்துபோவாய்."

"நிஜமாகவே பயமாகத்தான் இருக்கிறது. நம் பயணம் வெற்றிகரமாக முடியும் என்ற நம்பிக்கை உனக்கு இருக்கிறதா?"

"சந்தேகத்தால் நேரத்தைப் பாழடித்துக்கொள்ளாதே. நம்பிக்கையை வளர்த்துக்கொள். என்னைப் போல் சந்தோஷ மாக இருப்பாய்.'

"ரொம்ப உற்சாகத்தைத் தருகிறாய். அதுதான் உன்னைக் கண்டால் எனக்கு ரொம்பப் பிடிக்கும்."

"எனக்கும் உன்னைக் கண்டால் ரொம்பப் பிடிக்கும். இந்தக் குழுவில் எல்லோரைக் காட்டிலும் உன்மேல் தான் எனக்குப் பிரியம் அதிகம்."

பின்னாலிருந்து "பிரியம் பிரியம் என்கிறாயே. இந்த

விண்வெளியில் உன்னதமான காதலர்கள் யாருன்னு சொல்லு பார்க்கலாம்" என்று குரல் கேட்டது.

அதைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள் அனூஹ்யா. வாயுபுத்ரன் முறுவலுடன் நின்று கொண்டிருந்தான்.

பிரம்மவித்யா பேசவில்லை. வாயுபுத்ரன் வியப்புடன் அருகில் வந்தான்.

"உன்னைத்தான் கேட்டேன். ஏன் பதிலே சொல்ல மாட்டேன் என்கிறாய்?"

பதில் இல்லை. வாயுபுத்ரனுக்குச் சந்தேகம் வந்தது. இது வரையிலும் இம்மாதிரி நடந்ததேயில்லை. "என்ன ஆகி விட்டது உனக்கு?" வாயுபுத்ரன் அருகில் வந்து பரிசோதித் தான்.

"ஸ்பீச் கண்ட்ரோல்?"

"ஓ.கே." திரையில் தென்பட்டது.

"மைக்?"

"ஃபர்பெக்டலி ஓ.கே."

"அப்படி என்றால் பதிலை வாயால் சொல்லாதற்குக் காரணம்?"

"என்ன இது? என்ன நடந்துவிட்டது வாயுபுத்ரன்? பிரம்மவித்யா ஏன் பேசவில்லை?" அனூஹ்யா பயந்தபடி கேட்டாள்.

வாயுபுத்ரன் மறுபடியும் எல்லாவற்றையும் பரிசோதித் தான்.

"என்னவாகிவிட்டது பிரம்மவித்யா? சொல்லு... பேசு." அனுஹ்யாவின் கண்கள் குளமாகிவிட்டன. அந்தக் குரல் பெரிதாகக் கேட்டதால் மற்ற மூவரும் கூடக் கலவரத்தோடு ஓடிவந்தார்கள் அறைக்குள்.

"என்ன நடந்தது? என்ன சத்தம் இது?"

"பிரம்மவித்யா பேச மாட்டேன் என்கிறது. ஏதோ சத்தம் தான் வருகிறது."

"செக் செய்தாயா வாயுபுத்ரா?" சிலையாய் நின்று கொண்டிருந்த வாயுபுத்ரனைக் கேட்டான் யஷ்வந்த்.

"என்னவென்று தெரியவில்லை. எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது. சின்ன க்ளூ கூட கிடைக்க மாடேங்கிறது."

யஷ்வந்தும் நிகிலும் கூட பிரம்மவித்யாவை பேச வைக்க முயன்றார்கள். இந்தக் குறுகிய காலத்திற்குள் பிரம்மவித்யா எல்லோருக்குமே நெருக்கமாகி விட்டிருந்தது. எல்லை யில்லாத இந்தப் பயணத்தில் அது இல்லாமல் இனி என்ன செய்வோம் என்று புரியாமல் தலையைப் பிய்த்துக் கொண்டார் கள்.

"ஏனிந்த மௌனம் பிரம்மவித்யா?" என்று திரும்பவும் கேட்டாள் அனுஹ்யா.

"பேசு பிரம்மவித்யா. ப்ளீஸ்" வாயுபுத்ரனின் குரல் அடைத்தது.

"அதான். அதான் நான் சொல்ல நினைத்தது. என்னை ஒரு இயந்திரமாக நினைத்து எல்லாக் கேள்விகளையும் அதட்டியபடி கேட்கிறாயே தவிர எப்பொழுதாவது ப்ளீஸ் என்று சொல்லியிருக்கிறாயா?" என்ற வார்த்தைகள் ஒலித்தன.

"ஓஹ். அதுதானா." எல்லோரின் முகத்தில் நிம்மதியுடன்

கூடிய சிரிப்பு. என்றுமே சிரிக்காத யஷ்வந்த் கூட பெரிதாக சிரித்தான்.

"சிரிப்பெல்லாம் அப்புறம். முதலில் கண்ட்ரோல் ரூமுக்குப் போங்கள். நாம் ஆஸ்டராயிட் பெல்ட்க்குள் நுழையப் போகிறோம்" என்றது பிரம்மவித்யா.

அவள் கண்ட்ரோல் ரூமுக்கு ஓடினாள். அதற்குள் யஷ்வந்த் பிசியாகிவிட்டிருந்தான்.

"ஆஸ்ட்ராயிட் பெல்ட் என்றால் நாம் வியாழன் கிரகத்துக்கு சமீபத்தில் போய்க் கொண்டிருக்கிறோம் என்று தானே அர்த்தம்?" கேட்டாள் அனூஹ்யா.

"ஆமாம். ஆனால் வியாழனுக்குச் சமீபத்தில் என்று சொல்லாதே. இதைக் கடப்பதற்கு நமக்குப் பல நாட்கள் ஆகும். அதிலும் ரொம்ப ஆபத்தான இடம் இது."

"ஆபத்து என்றால் எந்த விதத்தில்?" கேட்டாள்.

"இந்த பெல்ட் எப்படி உருவாயிற்று என்று யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. ஒருக்கால் ஏதாவது கிரகம் முற்றிலுமாக கிரகமாக மாறாமலேயே வியாழனின் ஈர்ப்பு சக்திக்குட்பட்டு சிதைந்து போயிருக்கக் கூடும் என்று விஞ்ஞானிகளின் கருத்து. சில மீட்டர் தூரத்திலிருந்து சில நூறு மீட்டர்கள் அகலத்தில் இவை வியாழனின் கீழ் பகுதியில் சுற்றிக் கொண்டிருக்கும். அவை மோதிக்கொண்டு கிரகங்கள் மீதுகூட ஆழமான குழிகள் உருவானதுண்டு. சிலது பூமி வரையிலும் கூடப் போய்ச் சேரும். ஒரு பெரிய மாவு மிஷின் போல் இந்த உபகிரகங்களே மோதிக்கொண்டு மாவு மாவாக தூளாகி அணுக்களாக சுற்றிக் கொண்டு இருக்கும். சிறிய வற்றால் நமக்கு ஆபத்து இல்லை. பெரிசு ஏதாவது மோதினால் மட்டும் சாம்பலாகி விடுவோம்."

எல்லோரும் சலனமில்லாமல் உட்கார்ந்திருந்தார்கள். அது வரையிலும் அவர்கள் கிட்டத்திலிருந்து பார்த்திராத உபகிரகங்கள் திரையின் மீது தென்பட்டுக் கொண்டிருந்தன. தொலைவில் செந்நிறத்தை பூசிக் கொண்டதுபோல் வியாழன் கிரகம்.

நிமிடங்கள் மணிகளாக மாறிக் கொண்டிருந்தன. பிலிப்ஸும் அனூஹ்யாவும் அப்படியே உறக்கத்தில் ஆழ்ந்து விட்டார்கள்.

"இனி ஆபத்தைத் தாண்டி விட்டோம் என்று நினைக்கிறேன்" என்றான் வாயுபுத்ரன். அவன் அவ்வாறு சொல்லிக் கொண்டிருந்தபோதே சிவப்பு பல்ப் எரிந்தது.

"டேஞ்சர்... டேஞ்சர்" கம்ப்யூட்டரில் சிவப்பு எழுத்துக்கள் தென்பட்டன. யஷ்வந்த் கண்ட்ரோலைக் கையில் எடுத்துக் கொணட்டான். நிகில் அவனுக்கு அருகிலேயே உட்கார்ந்து உதவி செய்து கொண்டிருந்தான்.

"அந்தப் பக்கம் பாருங்கள்." வாயுபுத்ரன் பெரிதாக கத்தினான். நாலைந்து உபகிரகங்கள் வாகனத்தை மோதுவது போல் வந்து கொண்டிருந்தது திரையின்மீது நன்றாக தெரிந்தது. இன்னொன்று கீழேயிருந்து மேல் பக்கமாக துளைத்துக் கொண்டே வந்து கொண்டிருந்தது.

சுற்றிலும் வந்து சூழ்ந்த சதுரங்க சேனைகளைத் தன்னந் தனியாக எதிர்த்து நிற்கும் போர் வீரனைப் போல் கஹ்ருத் பாவ் முன்னோக்கிப் போய்க் கொண்டேயிருந்தது. எல்லோரும் மூச்சை இழுத்து அடக்கியபடி பார்த்துக் கொண்டிருந் தார்கள். இரு பக்கங்களிலிருந்தும் வந்து கொண்டிருந்த அபாயத்தை யஷ்வந்த் எப்படி சமாளிக்கப் போகிறான் என்று புரியவில்லை.

இவ்வளவு சிரமப்பட்டு வந்து, விண்வெளிக்கு நடுவிலேயே சாம்பலாக வேண்டியதுதானா? அந்தக் குழுவில் யாருக்குமே சாவு என்றால் பயம் இல்லை. ஆனால் இந்தத் திட்டம் தோல்வியடைது விட்டால், அந்தச் செய்தி பூமிக்குப் போய்ச் சேருவதற்கே சில நாட்களாகிவிடும். அதற்குப் பிறகு இன்னொரு குழுவை அனுப்புவது சாத்தியமில்லை. மனித ஜாதியின் எதிர்காலமே சில நிமிடங்களில் ஆதாரப் பட்டிருக்கிறது. இரு பக்கங்களிலிருந்தும் உபகிரகங்கள் நெருங்கி வந்து கொண்டிருந்தன. அது வாகனத்தின் மீது மோதிக் கொண்டாலோ, அல்லது ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டாலோ ஆபத்து சஹ்ருத்பாவ்க்குத்தான். சில நூறு மைல்கள் தூரத்தில் இன்னொரு ஆஸ்ட்ராயிட் குறுக்கிட்டுக் கொண்டிருந்தது. யஷ்வந்த் மனதிலேயே கணக்கிட்டுப் பார்த்துக் கொண்டான். உபகிரகங்களின் கூட்டம் வெகு சமீபத்தில் வந்து விட்டது. கப்பல் ஒரே பாய்ச்சலில் உயரே எம்பி. கண்மூடித் திறப்பதற்குள் முன்னாலிருந்த உபகிரகத்தையும் தாண்டிப் போய்விட்டது. ஆனால் அதே சமயத்தில் கீழே இரண்டு உபகிரகங்கள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டன.

அந்த வெடிப்பு அவர்கள் கனவிலும் ஊகித்திராத அளவிற்குப் பயங்கரமாக இருந்தது. அந்த வெடிப்புக்கு சுற்றுப் பக்கத்திலிருந்த உபகிரகங்கள் எல்லாம் சிதறிப் போயின. சில துண்டுகளாகி அங்குமிங்கும் பறக்கத் தொடங்கின. திரையில் அந்தக் காட்சி பயங்கரமாகத் தென்பட்டது.

“வேகத்தை அதிகரிக்கணும்.’ கத்தினான் நிகில்.

“லாபம் இல்லை. நாம் இப்பொழுதே உச்ச வேகத்தில் போய்க் கொண்டு இருக்கிறோம். இதை விட வேகமாக போனால் வியாழனின் ஈர்ப்பு சக்திக்கு கவரப்பட்டு விடுவோம்”

என்றான் யஷ்வந்த். எல்லோரும் மூச்சை அடக்கிக் கொண்டிருந்தார்கள். அந்த நிசப்தத்திலிருந்து "நம் வேகம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது" என்று பிரம்மவித்யாவின் குரல் கேட்டது. யஷ்வந்த் மீட்டரைப் பார்த்தான். உண்மையிலேயே வாகனத்தின் வேகம் அதிகரித்து விட்டிருந்தது. குறைப்பதற்காக அவன் கம்ப்யூட்டருக்கு ஆணை பிறப்பித் தான். ஆனால் லாபமில்லாமல் போய்விட்டது.

"கீழே மோதிக்கொண்ட அவ்விரு சக்திகளின் கெனட்டிக் எனர்ஜிகளும் நம் வாகனத்தை மேல்நோக்கிப் பறக்கச் செய்து விட்டன. வழியில் எந்தத் தடங்கலும் இல்லாமல் போனால் நாம் பிழைப்போம். நம்மால் வேறெதுவும் செய்ய முடியாது."

திரையின் மீது எதுவுமே தென்படவில்லை. திடீரென்று கஹ்ருத்பாவ் ஒரு பக்கமாக சாய்ந்தது. யஷ்வந்த்தின் விரல்கள் கம்ப்யூட்டரின் கீ போர்ட் மீது மளமளவென்று வேலை செய்து கொண்டிருந்தன.

"எல்லோரும் பெல்ட்டை மாட்டிக் கொள்ளுங்கள்." யஷ்வந்த் கத்தினான்.

அதற்குள் ஆபத்து நேர்ந்தே விட்டது.

எது வந்து மோதிற்றோ தெரியவில்லை. ஆனால் அந்தத் தாக்குதலுக்கு வாகனம் திடீரென்று குலுங்கியது. கண்ட்ரோலை விட்டுவிட்டு யஷ்வந்த் தொலைவில் போய் விழுந்தான். நாற்காலியைப் பிடித்துக் கொண்டிருந்த நிகில் அப்படியே கீழே சரிந்தான். சில நிமிடங்கள் வரை அந்த அதிர்வு வாகனத்தை ஆட்டிக் கொண்டே இருந்தது.

நாற்காலியில் உட்கார்ந்திருந்த மற்ற மூவரும் கீழே விழுந்து கிடந்த யஷ்வந்தைப் பார்த்துக் கொண்டே இருப்பதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியாதவர் களானார்கள்.

சில நிமிடங்களுக்குப் பிறகு கம்ப்யூட்டர், வாகனத்தின் கண்ட்ரோலைச் சரி செய்தது. வாயுபுத்ரன் ஓடிவந்து யஷ்வந்தின் தலையைத் தூக்கினான். ரத்தம் தாரையாக வழிந்து கொண்டிருந்தது. நிகில் பெரிதாக முனகிக் கொண்டிருந்தான். அவனுடைய கால் பானலுக்கடியில் சிக்கிக் கொண்டு விட்டது. பிலிப்ஸ் முதலுதவி செய்வதில் ஆழ்ந்துவிட்டார். எவ்வளவு பெரிய ஆபத்து வந்தாலும் சரி, வாகனத்தை கண்ட்ரோல் செய்வதை விட்டுவிடக் கூடாது. வாயுபுத்ரன் உடனே கமாண்டர் சீட்டில் உட்கார்ந்து கொண்டான். ரிச்சர் ஸ்கேல் பத்து டிக்ரிகளைக் காட்டிக் கொண்டிருந்தது. அவ்வளவு கடினமான அதிர்ஷ்டம்தான். அவன் திரையின் மீது பார்வையிட்டான். ஆஸ்ட்ராயிட் பெல்ட்டைத் தாண்டிச் சூனியத்தை நோக்கி பறந்து கொண்டிருநத்து கஹ்ருத்:பாவ். பக்கத்திலேயே ரத்த வெள்ளத்தில் யஷ்வந்த்.

யஷ்வந்தின் தலையில் பலமான அடிதான் பட்டிருந்தது. டாக்டர் பிலிப்ஸ் தன் ரத்தத்தை ஏற்ற வேண்டியிருந்தது. நிகிலின் கால் களுக்கிக் கொண்டு விட்டதால் அவனால் அசைய முடியவில்லை.

பல நாட்கள் யஷ்வந்த் அவ்வாறே நினைவில்லாமல் கிடந்தான். பொறுப்பு முழுவதும் வாயுபுத்ரன் மீது விழுந்தது. யஷ்வந்த், நிகில் இருவரையும் அனூஹ்யாதான் கவனித்துக் கொண்டாள். நிகிலைப் பார்க்கும்போது அவளுக்குத் தன் அண்ணன்தான் நினைவுக்கு வந்தான்.

முதல் இரண்டு நாட்களும் யஷ்வந்தின் நிலைமை கவலைக்கிடமாக இருந்தாலும், மெள்ள மெள்ளமாக தேறிக் கொண்டான். பத்து நாட்கள் வரையிலும் அவள் கண்ணும் கருத்துமாக பார்த்துக் கொண்டாள். அவள் வாழ்க்கையில அந்தப் பத்து நாட்கள்தான் ரொம்பத் திருப்திகரமான

நாட்களாக இருந்தன.

அவ்வப்பொழுது வாயுபுத்ரன் வந்து பார்த்து விட்டு போவான். யஷ்வந்திற்கு மிக நெருக்கத்தில் இருந்த போதிலும் அவள் எழுந்துகொள்ள மாட்டாள். அதை அவன் கவனித் தானா இல்லையா என்று கூடப் பொருட்படுத்தும் நிலையில் இல்லை அவள்.

அவ்விருவரும் முற்றிலுமாகத் தேறிக் கொண்ட அதே நேரத்தில் விண்வெளிக் கப்பல் அங்காரக கிரகத்திற்கு சமீபமாக போய்க் கொண்டிருந்தது. அதை கிரகம் என்று சொல்வதை விட வாயு சமுத்திரம் என்று சொல்வது சரி. அடர்த்தியாக, வெண்ணிற மேகங்கள் திரண்டாற்போல் விளங்கியது. நிலம், நீர் போன்ற எல்லைகள் கிடையாது. மலைகள், பள்ளத் தாக்குகள் இல்லை. அடர்த்தியான வாயுக்கூட்டம். அவ்வளவு தான். அந்த வாயுகிரகம் மிக வேகமாக, பம்பரத்தை போல் தன்னைத் தானே சுற்றிக் கொண்டே இருந்தது. பூமி தன்னைத் தான் சுற்றிக் கொள்ள 24 மணி நேரம் எடுத்துக் கொண்டால், அதைவிட 317.9 மடங்கு பெரிதான செவ்வாய் கிரகம் பத்தே மணி நேரத்தில் ஒரு முறை தன்னைத்தான் சுற்றுகிறது.

“அந்த வெண்மை. அதெல்லாம் அமோனியா வாயு மயம். சிவப்பு வெந்து கொண்டிருக்கும் உஷ்ணப் பிரதேசம். பருவ சீதோஷ்ணம் அந்த இடங்களில் ஷீணித்துப் போய்க் கொண்டிருக்கிறது என்று தோன்றுகிறது. நீல நிறக் கோடுகள் எல்லாம் சூனிய பிரதேசங்கள். தென்படுகிற சிவப்பு நிறம் பாஸ்பரஸ், சல்பர் வாயுக்கள். அவற்றின் மீது சூரிய கிரணங்கள் பட்டு அல்ட்ரா வயலெட்டாக மாறி, இந்த விதமாக பல வண்ணங்களில் காட்சித் தருகிறது. சுமார் நான்கு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னால் நம் பூமிகூட இதே போல்தான் இருந்தது” என்றான் வாயுபுத்ரன்.

"அது என்ன? வியாழனுக்கு நடுவில் சிவப்புப் புள்ளிகள் மினுமினுக்கிறதே?" என்றாள் அனூஹ்யா.

"அதுதான் தி கிரேட் ரெட் ஸ்பாட். சுமார் அரை டஜன் பூமிகளை தன்னுள் அடக்கிக் கொண்டு விடக்கூடிய நெருப்பு. கொஞ்சம் தூரத்திலிருந்து பார்த்தால் சின்னச் சின்ன கலர் கலரான வளையங்கள் புகையைக் கக்கிக் கொண்டிருப்பது போல் தென்படும். அது என்ன தெரியுமா?"

"அது என்ன?"

"விண்வெளியில் நமக்கு முதல் முதலாகத் தென்படுகிற எரிமலை. அது வியாழனின் துணைகோள். அந்தப் பக்கத்தில் தென்படுகிற மூன்று துணைகோள்கள் யுரோசா, காவிமாட், காலிஸ்ட்டோ. அந்த மூன்றும் வியாழனுக்கு சந்திரன்கள். ஒரு கணவனுக்கு மூன்று மனைவியர்களைப் போல்." சிரித்தான் வாயுபுத்ரன். அவள் சிரிக்கவில்லை.

குவா குவா என்ற பச்சிளங் குழந்தையின் அழுகையால் மயக்கம் மெல்ல மெல்ல விடுபட்ட ஸ்ரீஜாவுக்கு. கண்களைத் திறந்து பார்த்தாள்.

அப்பொழுதுதான் பிறந்த குழந்தை! அவள் மனம் முழுவதும் தாய்மை உணர்ச்சியால் நிரம்பி வழிந்தது. குழந்தையை ஆசையோடு பார்த்தாள். அவளுக்குத் தன் கணவன் ஒலியலைகளின் மூலமாக அனுப்பியிருந்த செய்தி நினைவுக்கு வந்தது.

ஸ்ரீஜா...

இந்தச் செய்தி உன்னை அடையும் போது நான் தந்தை யாகி விட்டிருப்பேன். பையனாக பிறந்தாலும், பெண்ணாகப் பிறந்தாலும் சரி, அனந்த என்ற பெயர் முதலில் வருவது போல் வை. இந்த நிரந்தரமான சூனிய வெளியில், வழி தெரியாமல்

நாங்கள் போய்க் கொண்டே இருக்கும் போது ஏனோ எனக்கு அடிக்கடி இந்தப் பெயர் நினைவுக்கு வருகிறது. மற்றதை உன் விருப்பத்திற்கு விட்டு விடுகிறேன்.

அவள் நிகிலுக்காக ஒரு கடிதம் எழுதினாள். மறுநாள் அதை சயின்ஸ் சிடிக்கு அனுப்ப நினைத்துக் கொண்டிருந்த போது அன்று மாலையில் டி.வி.யில் ஒரு செய்தி வந்தது.

"விண்வெளி கப்பல் கஹ்ருத்பாவ் ஆஸ்ட்ராயிட் பெல்ட் வழியாக பயணித்துக் கொண்டிருக்கிறது. ஒரு வெடி விபத்தி லிருந்து மயிரிழையில் தப்பித்துக் கொண்டது. அதன் வேகம் அதிகரித்து விட்டதால் இனி பூமியிலிருந்து அந்த வாகனத் திற்கு எந்த செய்தியும் போய்ச் சேர வாய்ப்பு இல்லை."

இந்தக் கடைசி வரி ஸ்ரீஜாவைக் கலங்கடித்தது. சயின்ஸ் மாணவி என்பதால் அவளால் புரிந்து கொள்ள முடிந்தது. ஆனால் யதார்த்த நிலை அவளைத் துக்கத்தில் மூழ்கடித்தது. இனி கணவனோடு தன்னால் பேச முடியாது. சூனியவெளியில் எங்கேயோ இந்த மூலையிலிருந்தே அவன் அனுப்பும் சிறு சிறு செய்திகளை மட்டும் பெற்றுக் கொள்ள முடியும். அவ்வளவு தான்.

"விண்வெளி கப்பலின் நலமான பயணத்திற்காக உலகத் தின் பல்வேறு மூலைகளிலும் பிரார்த்தனைகளை நடத்தி வருகிறார்கள்."

அவள் டி.வி.யை அணைத்தாள்.

"டாக்டர் பிலிப்ஸ்!" அழைத்தாள் அனூஹ்யா.

"எஸ்."

"உங்களுடன் கொஞ்சம் பேச வேண்டும்."

"ஏன்? உடல் நலம் சரியாக இல்லையா?" மென்மையாக விசாரித்தார்.

"மனநிலைதான் சரியாக இல்லை. உங்களுடைய அறிவுரை எனக்குத் தேவையாக இருக்கிறது."

"உன் பிரச்னையை ஓரளவுக்கு புரிந்து கொண்டிருக் கிறேன்."

"அவ்வளவு தூரத்திற்கு வெளிப்பட்டு விட்டேனா நான்?"

"உன்னைவிட வாயுபுத்ரனும், யஷ்வந்தும்தான் வெளிப் பட்டு விட்டார்கள்." பிலிப்ஸ் சிரித்தார்.

"யஷ்வந்தா? என்னால் நம்ப முடியவில்லை!

"வாயுபுத்ரன் உன்னைப் பார்க்கும் ஒரு பார்வையில் அவன் மனதை அப்படியே படம் பிடித்து விடலாம். இனி யஷ்வந் தைப் பற்றிக் கேட்கிறாயா? சாதாரண சமயங்களில் கட்டுப் படுத்திக் கொள்கிறானோ தெரியாது. மயக்க நிலையில் இருந்த போது தனக்கே தெரியாமல் பிதற்றினான். உன்னை எவ்வளவு தூரம் நேகிக்கிறான் என்று."

அனூஹ்யாவின் முகம் நிறம் மாறியது. "பிரச்னை அது மட்டுமே இல்லை டாக்டர். யஷ்வந்த் என் மாஜி கணவர்."

குண்டு வெடித்தாற்போல் திடுக்கிட்டார் பிலிப்ஸ். அவள் எதையும் மறைக்கவில்லை. எல்லாவற்றையும் விவரித்தாள்.

"டாக்டர்! யஷ்வந்திற்கு அருகில் இருக்கும் போது அவருக்கு ரொம்ப வேண்டியவள் போல் பெருமையாக உணரு கிறேன். அப்படிப்பட்ட நபரை கணவனாக அடைந்திருந்ததும், விட்டுப் பிரிந்து தொலைவில் போய்க் கொண்டிருக்கிறேன் என்று நினைக்கும் பொழுது இதயத்தில் முள் தைத்து விட்டாற் போல் இருக்கிறது. ஆனால் வாயுபுத்ரனுக்கு என் மீதுள்ள அன்பு என்னால் தாங்கிக் கொள்ளக் கூட முடியாத அளவிற்கு ரொம்ப ஆழமானது. ஒரு மனுஷி ஒரே சமயத்தில் இருவரை எப்படி காதலிக்க முடியும்? அதுதான் எனக்கும் புரியவே

இல்லை. ஒரே உறையில் இரு கத்திகளைத் திணிக்கும் முயற்சியில் என் மீதே எனக்கு வெறுப்பு ஏற்படுகிறது. இப்படிப் பட்ட பிரச்னை இதற்கு முன்னால் வேறு யாருக்காவது ஏற்பட்டிருக்குமோ என்னவோ எனக்குத் தெரியாது. இன்னொரு பிரச்னை என்னவென்றால், அவ்விருவருக்கும் ஒருவர் மீது மற்றவருக்கு ஆழ்ந்த அன்பு! நேசம்! பக்தி! இது தான் என் முடிவை யார் மீதும் செலுத்த முடியாமல் தடுக் கிறதோ என்று நினைக்கிறேன்."

"உங்களுக்குள் அறிமுகமாகி இவ்வளவு நாளாக போதி லும் இன்னும் ஒருத்தரைப் பற்றி மற்றவருக்குத் தெரியப் படுத் தாமல் இருப்பது தவறு."

"முயற்சி செய்தேன் டாக்டர். முடியவில்லை. என்னால் முடியவே இல்லை."

"உன் பேச்சைக் கொண்டு பார்த்தால், யஷ்வந்த் மேல் உனக்கு ஒருபடி அதிகமான பிரியம் இருப்பதுபோல் தோன்று கிறது. அவனுக்கு மனைவியாக இருந்தால் மற்ற விஷயங்களை மறந்து போக முடியும்."

"இல்லை டாக்டர். அந்த விதமாகவும் யோசித்தேன். யாருக்கு நெருக்கமானாலும் அடுத்தவருக்குத் துரோகம் செய்து விட்டாற்போன்ற உணர்வு தோன்றும் என்று நினைக்கிறேன். ஒரு ஸ்டேஜில் இவ்விருவரைப் பற்றியும் யோசிக்காமல் கடமை யின் மீதுதான் மனதை செலுத்தணும் என்ற முடிவிற்கு வந்தேன். ஆனால், இந்தச் சின்ன வாகனத்தில் இருவருக்குமி டையே வாழ்ந்துகொண்டு மனதைக் கட்டுப் பாட்டில் வைத்துக் கொள்வது ரொம்பக்க கஷ்டமாக இருக் கிறது."

"உன் உணர்வுகள் அவர்களுக்குத் தெரியாததுதான் உன் மன உளைச்சலுக்கு மேலும் காரணமாகிவிட்டது அனுஹ்யா. குறைந்த பட்சம் ஒருத்தருக்காவது தெரிவித்துவிட்டால் உன்

பிரச்னைக்குப் பரிகாரம் சுலபமாகும். இப்பொழுதும் ஒன்றும் மிஞ்சிப் போகவில்லை" என்றார் பிலிப்ஸ்.

ஒரு முடிவுக்கு வந்துவிட்டது போல் அவள் தலையை அசைத்தாள். தன்னுடைய முடிவை முதலில் யாரிடம் சொல்வது?

யஷ்வந்தால் தாங்கிக் கொள்ள முடிந்தாலும் முடியுமோ என்னவோ, வாயுபுத்ரனால் தாங்கிக் கொள்ளத்தான் முடியுமா?

"பிரம்மவித்யா! நம் வேகம் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து கொண்டே வருகிறது."

"சோலார் டாங்கியிலிருந்து சக்தி சரியாக பட்டுவாடா ஆகவில்லை."

"தவறு எங்கே இருக்கு என்று பார்த்துச் சொல்லு."

"எனக்குச் சரியாக தெரியவில்லை."

"முயற்சி செய். பவர் டாங்குகள் எண்பதடி உயரம் வரையிலும் இருக்கின்றன. அதில் எங்கே என்று சரியாக பார்த்துச் சொல்லு."

"நாலாவது டாங்கிற்குப் பக்கத்தில் உள்ள ஜாயிண்ட் பானலை மாற்றணும் என்று நினைக்கிறேன்."

"நம்மிடம் ஸ்டாக் இருக்கு இல்லையா?" கேட்டான்.

கம்ப்யூட்டர் உடனே பதில் சொல்லவில்லை. "இருக்கு" என்றது கொஞ்சம் பொறுத்து.

"ஏன் இவ்வளவு பயப்படுகிறாய்? ஐந்து நிமிஷ வேலை இது."

"அப்படி என்றால் முடித்துவிட்டு வா."

விஞ்ஞான வரலாற்றில் கம்ப்யூட்டர் உடனே பதில்

சொல்ல முடியாமல் போனது அதுதான் முதல் தடவை.

வாயுபுத்ரன் விண்வெளி உடை அணிந்துகொண்டு தயாராக இருந்தான். அனூஹ்யா கண்ட்ரோல் பானெலிடம் உட்கார்ந்திருந்தாள். வாகனத்தை நியூட்டலுக்குக் கொண்டு வந்தான் யஷ்வந்த். (நியூட்டல் என்றால் ஒரே வேகத்தில் பிரயாணம் செய்வது)) சூனியத்தில் தன்னைத் தானே சுற்றிக் கொண்டே மேலுக்கு நகர்ந்து கொண்டிருந்தது கஹ்ருத்பாவ். மனிதன் வெளியே இருக்கும்போது வாகனத்தின் வேகத்தில் மாறுபாடு ஏற்படக் கூடாது,

திரையின் மீது வாயுபுத்ரன் வெளியே போவது தென் பட்டுக் கொண்டிருந்தது. அனூஹ்யாவுக்கு பயமாக இருந்தது. விண்வெளியில் நடப்பவர்களை பூமியில் இருந்து கொண்டு டி.வி. ஸ்க்ரீனில் பார்த்திருக்கிறாளே ஒழிய நேரில் இப்பொழுது தான் முதல் முறையாக பார்க்கிறாள். அதுவும் கண்ட்ரோ லிடம் தான் உட்கார்ந்து கொண்டிருந்தது பயத்தை மேலும் அதிகரித்தது.

வாயுபுத்ரன் விண்வெளியில் அடியெடுத்து வைத்தான். உடனே பின்னாலிருந்த கதவு மூடிக் கொண்டது. அவன் மெதுவாக கீழே இறங்கிப் போய்க் கொண்டிருந்தான். எந்த ஆதாரமும் இல்லாமல் அவன் அவ்வாறு கீழ் நோக்கி இறங்கிக் கொண்டிருந்ததைப் பார்த்து, எந்த நிமிஷத்தில் கீழே விழுந்து விடுவானோ என்பதுபோல் மூச்சை அடக்கிக் கொண்டு பார்த்துக் கொண்டிருந்தாள்.

"அனூஹ்யா!"

அவள் குரல் ஸ்பீக்கரில் கேட்டதுமே துள்ளி நிமிர்ந்தாள். "கம்ப்யூட்டருக்கு கனெக்ஷன் கொடு."

அவள் தந்தாள்.

"பிரம்மவித்யா! நீ சொன்ன பானெல் 4 இதுதானா?"

கேட்டான் வாயுபுத்ரன்.

"இல்லை. இரண்டடிகள் கீழே இருக்கும்."

வாயுபுத்ரன் மேலும் கொஞ்சம் கீழே இறங்கினான். இம்முறை கருப்பு எழுத்துக்களில் பானெல் 4 என்று முத்திரை யிடப்பட்ட பாக்ஸ் தென்பட்டது. வாயுபுத்ரன் சோலார் டாங்கின்மீது நின்றுகொண்டு இடுப்பில் கட்டிக்கொண்டிருந்த பெல்டிலிருந்து கருவியை எடுத்தான். பாக்ஸின் மூடியைத் திறக்க அறை நிமிஷம் பிடித்தது. வாயுபுத்ரன் மனதிற்குள் ஏதோ சந்தேகம், தான் சரி செய்ய வேண்டியது இது இல்லையோ என்று. அவன் மேலும் கொஞ்சம் கீழே இறங்கினான். பவர் பாக்ஸ் 2வுக்குப் பின்னால் வாகனம் கொஞ்சம் தேசமடைந்தாற் போல் தென்பட்டது.

"வாயு! சீக்கிரமாக வரணும். கம்ப்யூட்டர் டேஞ்சர் சிக்னலைக் காட்டுகிறது."

வாயுபுத்ரன் மேலே ஊர்ந்து வரத்தொடங்கினான். அவன் உள்ளே வந்து கதவைச் சாத்திக் கொண்டதும் நிம்மதி யாக மூச்சுவிட்டாள் அனூஹ்யா.

வாயுபுத்ரன் கண்ட்ரோல் ரூமிற்குள் நுழைந்தான். வாகனம் வேகத்தை மேற்கொள்ளவில்லை. மேலும் குறைந்தது.

"பிரம்மவித்யா! என்ன இது? வாகனத்தின் வேகம் குறைகிறதே?"

"ஆமாம்."

"தவறு எங்கே இருக்கு?"

"அதான் சொன்னேனே."

"புதிதாக மாற்றிய பிறகுமா?"

"ஆனாலும் தவறு அங்கேதான் இருக்கிறது."

"நீ லாயக்கு இல்லை. வெறும் இயந்திரம் என்பதை நிரூபித்து விட்டாய்." அலுத்துக் கொண்டான் வாயுபுத்ரன்.

பிரம்மவித்யா மௌனம் வகித்தது.

யஷ்வந்த் களைப்புடன் எழுந்து உட்கார்ந்து கொண்டான். வாயுபுத்ரன் பிரித்து எடுத்து வந்த ஜாயிண்டைப் பரிசீலித்தான். அவனுக்கு தெம்பு இருக்கவில்லை. தலையிலிருந்த காயம் இன்னும் ஆறவில்லை.

"இதில் எந்த குறையும் இல்லையே?" என்றான் நிகில்.

"ஆமாம். ஆனால் கம்ப்யூட்டர் திரும்பவும் அதே குறையைத்தான் காட்டுகிறது."

"நம்மிடம் இன்னொரு ஜாயிண்ட் பாக்ஸ் இருக்கா?"

"இல்லை. ஒன்றுதான் இருந்தது. இப்பொழுதுதான் அதை மாற்றினேன்."

"தவறு அங்கேதான் இருந்ததுன்னு கம்ப்யூட்டர் சொன்ன போது, அதை மாற்றிய பிறகும் இன்னும் அதை நிலை தொடருகிறது என்றால், தவறு ஒருக்கால் சோலார் பவர் பாக்ஸில் தான் இருக்கலாம் என்பது என் சந்தேகம். சோலார் பவர் ஸ்டாக் எவ்வளவு இருக்கும்னு பாரு."

"பத்தாயிரம் யூட்டுகள்." வாயுபுத்ரன் வந்து சொன்னான். சொல்லும் போதே வரப்போகும் ஆபத்தை அவன் உணர்ந்து விட்டான். சோலார் பவர் லீக்காகிக் கொண்டு இருக்கிறது.

யஷ்வந்தின் முகம் களையிழந்தது. தவறு எங்கே என்று புரிந்துவிட்டது. ஒளி வேகத்தை மீறி வாகனத்தை ஓட்ட வேண்டுமென்றால் பத்து கிகோ வாட்ஸ் சக்தியோடு வாகனத்தை முன்னோக்கி செலுத்த வேண்டும். அப்பொழுது தான் வாகனத்தின் வேகம் அதிகரிக்கும். இல்லாவிட்டால்

வேகம் குறைந்து பாரம் அதிகமாகி சாதாரண வேகத்துடன் சில நாட்கள் ஓடி... பிறகு செயற்கை சூழ்நிலையை இழந்து விடும். அப்பொழுது உள்ளே நிமிடத்திற்கு நிமிடம் அழுகிய முட்டையைப் போல் அழிந்துபோய் உயிரை இழக்க வேண்டியது தான். செவ்வாய் கிரகத்தைச் சேர்ந்த அம்மோனியா மேகங்கள் வாகனத்தை தம் பக்கம் இழுத்துக் கொள்ளும்.

"முந்தா நாள் விபத்தில் சோலார் பவர் பாக்ஸ் அடி பட்டிருக்க வேண்டும். அதுதான் காரணம் என்று நினைக் கிறேன்" யஷ்வந்த் விவரித்தான்.

யாருமே பதில் சொல்லவில்லை.

அந்த நிசப்தத்தைச் சிதறடித்தவாறு "நான் போகிறேன். இன்னொரு முறை செக் செய்கிறேன். சொல்லுங்கள். என்ன செய்ய வேண்டு என்று" என்றான் வாயுபுத்ரன்.

"பவர் பாக்ஸ் என்றால் ரொம்ப ஆபத்து வாயுபுத்ரா! எந்தச் சின்ன தவறு நேர்ந்தாலும் நீ எதிர்பாராத அளவுக்கு பெரிய ஷாக் அடிக்கும்."

அந்த விஷயம் எல்லோருக்குமே தெரியும். ஆனால் இது அவன் வேலை. கம்ப்யூட்டர் சம்பந்தப்பட்ட இப்படிப்பட்ட ரிப்பேர்களுக்காகத்தான் அவன் இந்தக் கப்பலில் அனுப்பப் பட்டு இருக்கிறான். சாப்பிட்டுவிட்டு கும்மாளம் அடிப்பதற் காக அல்ல.

"பரவாயில்லை. முயற்சி செய்யாமல் தோல்வியை ஒப்புக் கொள்ள முடியாது. நீங்க வழி காட்டுங்கள்" என்றான். யஷ்வந்த் அவனைப் பார்த்தான். இருவர் பார்வையும் கலந்தன. ஒரு காலத்தில் தன்னைச் சாவின் விளிம்பிலிருந்து மீட்டுக் காப்பாற்றியவனை இப்படிப்பட்ட ஆபத்திற்கு உள்ளாக்கு வதா? தன் ஆதரவற்ற நிலைக்கு துக்கம் வந்தது யஷ்வந்திற்கு. வாயுபுத்ரன் அவன் மனதில் இருந்ததைப் புரிந்து கொண்டான்.

"இந்தக் கப்பலுக்குத் தற்சமயம் கமாண்டர் நான்தான். நீங்க வழிக்காட்ட முடிந்தால் மகிழ்ச்சியடைவேன். இல்லா விட்டாலும் நான் போய்ச் செய்ய வேண்டியதைச் செய்வேன்." அவன் வார்த்தைகளில் உறுதி தென்பட்டது.

"இந்தக் கப்பலின் கேப்டனாக நான் உன்னை பவர்பாக்ஸ் பக்கம் அனுப்ப மாட்டேன்."

"மன்னியுங்கள். உங்களுக்குக் காயம்பட்ட பிறகு என்னிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தைத் திரும்பி நான் உங்களிடம் ஒப்படைக்கவில்லை" கடுமையாகச் சொன்னான் வாயுபுத்ரன்.

இருவருக்குமிடையே அன்பு போர் நடந்து கொண்டி ருந்தது. ஆனால் பிரச்னைக்கு அது பரிகாரம் இல்லை என்று இருவருக்குமே தெரியும். யஷ்வந்த் செய்வதறியாமல் தலையை அசைத்தான்.

வாயபுத்ரன் இன்னொரு முறை விண்வெளி ஆடை யணிந்து கொண்டு வெளியே போவதைப் பார்த்து அனுராஹ்யா வின் மனம் கலவரமடைந்தது. பிரம்மவித்யா ஏன் பொய் சொன்னது என்றும் புரியத் தொடங்கியது.

ஏர்லாக் சிஸ்டத்தைத் திறந்து வாயுபுத்ரன் சூனியத்திற் குள் அடியெடுத்து வைத்தான். ஒரு நிமிஷத்திற்குப் பிறகு அவன் குரல் கேட்டது.

"இங்கேதான் அடி வாங்கியிருக்கிறது யஷ்வந்த்.. உள்ளே ஒயர்கள் தென்படுகின்றன."

"ஜாக்கிரதை. இன்சுலேடெட் கிளவுஸ் போட்டிருக் கிறோமே என்று நினைத்து அவற்றைத் தொட்டுவிடாதே. பக்கத்தில் சிவப்பு நிற பாக்ஸ் ஒன்று தென்படுகிறது. அதில் புஷ் பட்டன் இருக்கும். அதைப் போடு." வாயுபுத்ரன் யஷ்வந்த் சொன்னபடியே செய்து கொண்டிருந்தான். பத்து நிமிஷங்

களில் வேலை முடிந்துவிட்டது. உள்ளே இருந்தவர்களின் முகத்தில் சந்தோஷம் தென்பட்டது.

"எல்லாம் மூடியாகிவிட்டதா?" கேட்டான் யஷ்வந்த்.

"முழுவதும் மூடியாகிவிட்டது. இப்போ என்ன செய்ய வேண்டும்?"

"ஒரே ஒரு வேலை பாக்கியிருக்கு. நீ ஆன் செய்த பட்டனைத் திரும்பவும் ஆஃப் செய்யணும்."

வாயுபுத்ரன் புஷ்பட்டன் மீது விரலை வைத்தான். அது ஆஃப் ஆன அடுத்த வினாடி வாகனம் திடீரென்று குலுங்கியது. அதை எதிர்பார்க்காத வாயுபுத்ரன் கைக்கு அகப்பட்ட பவர் பாக்ஸை பிடித்துக் கொண்டான். அவ்வளவுதான்! ஆயிரம் வோல்ட் எலெக்ட்ரிக் ஷாக் அடித்தாற்போலப் பின்னுக்குச் சரிந்துவிட்டான். நினைவு தப்பிக் கொண்டிருந்த போது அவன் கடைசியாகச் செய்த காரியம் பவர் பாக்ஸின் லாக்கைப் போட்டதுதான். அந்தக் குலுங்கலுக்கு அவன் பலமாக எதிர்த் திசையில் பின்னுக்குப் போனான். கண்ணிமைக்கும் நேரத்திற்குள் வாகனம் முன்னோக்கிப் போயிற்று.

"சோலார் பவர் சிஸ்டம் ஓ.கே." என்று கம்ப்யூட்டரில் மின்னியது. அந்த வாக்கியம் சந்தோஷத்தைத் தரவில்லை. சூனியத்தில் நீந்தியபடி துடித்துக் கொண்டிருந்த வாயுபுத்ரனின் உடல் மீதே நிலைத்திருந்தன அவர்கள் பார்வையெல்லாம்.

நினைவு தப்பாமல் இருந்திருந்தால் வாகனத்தை அடைவது அவனுக்கொன்றும் பிரச்னையில்லை. சூனிய வெளியில் ஒன்று வேகம்... இரண்டாவது நினைவு இல்லாத நிலை. அது போதாது என்று முறுக்கிக்கொண்டிருக்கும் கயிறு.

"வாயுபுத்ரா! கெட் அப்!" ஸ்பீக்கரிலிருந்து கத்திக் கொண்டிருந்தான் யஷ்வந்த். பதில் இல்லை. வாயுபுத்ரன் மூச்சு

விட்டுக் கொண்டிருப்பது மட்டும் தெளிவாகத் தென்பட்டுக் கொண்டிருந்தது.

யஷ்வந்த் வாகனத்தைச் சமமான வேகத்திற்கு கொண்டு வந்தான். வாகனத்தைப் பின்னுக்கு எடுத்துச் செல்வது சுலபம் தான் என்றாலும் அந்த வேகத்திற்கு வாயுபுத்ரன் மேலும் பின்னுக்குப் போக நேர்ந்தால் கஷ்டம்.

"என்ன செய்வது?" யஷ்வந்திற்கு தலையை வெடித்து விடும் போல் இருந்தது. அனூஹ்யாவின் நிலைமை அதைவிட மோச மாக இருந்தது. வந்து யஷ்வந்தின் காலடியில் சரிந்தாள்.

"நான் போகிறேன். சொல்லுங்கள். என்ன செய்ய வேண்டும் என்று" என்றாள்.

"வேண்டாம். உன்னால் ஆகிற காரியம் இல்லை இது. புவியீர்ப்பு இல்லாத சூனியத்தில் பழக்கமே இல்லாமல் நடப்பதும், இன்னொரு ஆளை இழுத்து வருவதும் உன்னால் ஆகக்கூடிய காரியம் இல்லை. டாக்டர் பிலிப்ஸ் ரொம்ப பலவீனமாக இருக்கிறார். என்ன செய்வதென்றுதான் புரிய வில்லை" யஷ்வந்தின் குரல் அடைத்தது.

"ஆனாலும் பரவாயில்லை. முயற்சி செய்கிறேன். என் உயிரே போனாலும் பரவாயில்லை. அனுமதி கொடுங்கள்" என்றாள் அனூஹ்யா அழுது கொண்டே.

"அனூ!" மென்மையாக அழைத்தான். அனூஹ்யா நிமிர்ந்து பார்த்தாள். அவன் அவ்வாறு கூப்பிட்டு எவ்வளவோ நாட்கள் ஆகியிருக்கும்.

"ஒரு காலத்தில் இப்படிப்பட்ட நிலையில் இருந்த என்னை இரு முறை காப்பாற்றிய நபர் ஆதரவில்லாமல் சூனியத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கும்போது பார்த்துக் கொண்டு சும்மாயிருப்பேன் என்று எப்படி நினைத்துவிட்டாய்?

எழுந்திரு. போய் என் ஸ்பேஸ் சூட் கொண்டுவா. கொஞ்சம் உதவி செய். நானே போகிறேன்."

"கொஞ்ச நேரம் நின்றால் கூட தலைசுற்றி விழுந்துவிடும் நிலையில் இருக்கீங்க. நீங்கள் போவதாவது? வேண்டாம்."

"பரவாயில்லை. இந்த அளவுக்காவது ரிஸ்க் எடுத்துக் கொள்ள வேண்டியதுதான். நிகில் நிற்கக்கூட முடியாத நிலை யில் இருக்கிறான். போய் விண்வெளி ஆடையை எடுத்துக் கொண்டு வா. அப்படியே டாக்டரை ஒரு முறை கூப்பிடு."

அனூஹ்யா உள்ளே போனாள். யஷ்வந்த் களைப்புடன் கண்களை மூடிக்கொண்டான். அவனுக்குத் தெரியும் தான் போகக்கூடிய நிலையில் இல்லை என்று.

"யஷ்வந்த்! டாக்டர் பிலிப்ஸை எங்கேயும் காணவில்லை" கலவரத்தோடு திரும்பி வந்தாள் அனூஹ்யா.

"சரியாகப் பாரு."

"எல்லா இடமும் பார்த்தாகிவிட்டது. எங்கேயுமே இல்லை" அவள் சொல்லிக் கொண்டிருந்தபோதே, வே அவுட் திறந்து கொண்ட சத்தம் கேட்டது. யஷ்வந்த் சட்டென்று கேமிராவை ஆன் செய்தான். ஏர்லாக் சிஸ்டத்தை ரிலீஸ் செய்துவிட்டு, விண்வெளி ஆடையுடன் வெளியே போய்க் கொண்டிருந்த பிலிப்ஸ் தென்பட்டார்.

"வேண்டாம் டாக்டர்! வந்து விடுங்கள். உங்களால் முடியாது." கலவரத்துடன் கத்தினான் யஷ்வந்த்.

"பரவாயில்லை. பிராக்டிகல் அனுபவம் இல்லா விட்டா லும் ட்ரெயினிங்கில் சூனியத்தில் நடந்திருக்கிறேன். முயற்சி செய்ய விடுங்கள்." பிலிப்ஸின் குரல் வெளிக் கதவு வழியாக கேட்டது. அனூஹ்யா வேகமாக வெளியே ஓடினாள்.

சில நாட்களுக்கு முன்னால்தான் யஷ்வந்திற்குத் தன் ரத்தத்தைக் கொடுத்திருந்தார் பிலிப்ஸ். அவ்விருவரின் உடல் நிலை காரணமாக ஓய்வே இல்லாமல் பலவீனமாக இருந்தார். சூனியத்தில் இருக்கும் ஆளைப் பிடித்துக் கொண்டு நடப்ப தற்கு நிறைய சக்தி வேண்டும்.

"டாக்டர்! என் பேச்சைக் கேளுங்கள். திரும்பி வந்து விடுங்கள்." யஷ்வந்த் அழைத்தான்.

மைக்கில் பிலிப்ஸின் குரல் "சாரி யஷ்வந்த்" என்று கேட்டது.

யஷ்வந்த் எழுந்து அவரைத் தடுப்பதற்காக வெளியே வரப்போனான். அவ்வறையின் கதவு மூடிக்கொண்டு விட்டது. அதற்குள் அனூஹ்யா வெளி அறைக்குப் போய் சேர்ந் திருந்தாள். டாக்டர் பிலிப்ஸ் ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்.

வாயுபுத்ரனையும் வாகனத்தையும் ஒன்று சேர்த்துக் கட்டியிருந்த கயிறு லூசாகிக் கொண்டிருந்தது. அவ்வளவு வேகத்தில், பரஸ்பர சக்தியுடன் அந்த பாரத்தை வைத்துக் கொள்வது கஷ்டம்தான். நியூட்டனின் தியரி மனிதனை பரிகசித்துக் கொண்டிருந்தது.

"வேண்டாம் டாக்டர். உங்களுக்கு அவ்வளவு சக்தி இல்லை."

டாக்டர் பிலிப்ஸ் நின்றார். "வாயுபுத்ரனைக் காப்பாற்ற முடிந்தால் நல்லது. இல்லாவிட்டாலும் என் தேவை உங்களுக்கு அவ்வளவாக அவசியம் இல்லை. எந்தெந்த உடல் கோளாறுகளுக்கு என்னென்ன மறுந்துகளைப் பயன்படுத்த ணும் என்று பிரம்மவித்யாவுக்கு ஃபீட் பண்ணி வைத்து விட்டேன்."

"டா...க்...ட...ர்!" என்றாள் அனூஹ்யா.

முகத்திரைக்குள்ளிருந்த பிலிப்ஸின் முகபாவங்கள் தென்படவில்லை. கையை நீட்டினார்.

அவளுக்குப் புரியவில்லை. தன்னையும் அறியாமல் கைகுலுக்கினாள்.

"உன் மனதில் இருப்பதைச் சீக்கிரமாக அவ்விருவருக்கும் சொல்லிவிடு அனூஹ்யா. பிரச்னை வேகமாகவும், பலமாகவும் வளர்ந்து, வேதனைத் தருவது மனதில்தான். வெளியே வந்து விட்டால் அது பலவீனமாகி விடுகிறது. இது நான் உனக்குத் தரும் கடைசி அறிவுரை."

"என்ன டாக்டர்? என்ன சொல்றீங்க நீங்க?" தொண்டை அடைக்கும் குரலில் கேட்டாள்.

வெளியே அடியெடுத்து வைத்தபடி பிலிப்ஸ் சொன்னார். "எனக்கு ஆறாவது அறிவின்மீது நம்பிக்கை இருக்கு அனூஹ்யா."

"..."

நிலைமை அவ்வளவு தூரத்திற்கு வந்த பிறகு யஷ்வந்த் சாதாரண கமாண்டராகிவிட்டான். பிலிப்ஸ் செய்து கொண்டிருந்த காரியத்தைத் தம் மூவருள் யாராவது ஒருத்தர் செய்ய வேண்டியதுதானே. இல்லாவிட்டால் வாயுபுத்ரன் உயிர் பிழைக்க மாட்டான். அவன் ஆணைகளை பிறப்பிக்கத் தொடங்கினான்.

"டாக்டர்! நான் சொல்வதுபோல் செய்யுங்கள். விண் வெளிக் கப்பலைப் பிடித்துக் கொண்டு பாதி தூரம் வரை நடந்து செல்லுங்கள். சோலார் மிக்கிடம் நின்று விடுங்கள்."

பிலிப்ஸ் அவ்வளவு தூரம் நடந்து போனார்.

"வாயுபுத்ரன் எவ்வளவு தூரத்தில் இருக்கிறான்?"

"இரு நூறடி தூரத்தில்,"

யஷ்வந்த் கப்பலை திரும்பவும் செலுத்தினான்.

"போதும். என்னால் கைநீட்டிப் பிடித்துக் கொள்ள முடியும்" என்றார் பிலிப்ஸ்.

திரையின்மீது அவர் வாயுபுத்ரனைப் போய் அடைந்ததைப் பார்த்த பிறகுதான் அனூஹ்யா நிம்மதியாக மூச்சை விட்டாள்.

பிலிப்ஸ் வாயுபுத்ரனின் இடுப்பில் இருந்த பெல்ட்டைப் பிடித்துக் கொண்டார். மெதுவாக பின்னால் நீந்தத் தொடங்கினார். விண்வெளி ஆடை பாரமானாற்போல் இருந்தது. மார்பில் லேசாக எரிச்சல் ஏற்பட்டது. எடையற்ற சூனியத்தில் அவருடைய உடல் சுவாதீனத்தை இழந்து கொண்டிருந்தது.

டாக்டராக முப்பதாண்டுகள் அனுபவம் இருந்தது அவருக்கு. இதயம் சொல்வதைத் தெரிந்துகொண்டு விட முடியும்.

வாயுபுத்ரனை கதவிற்கு அருகில் கொண்டு வந்து சேர்ப்பதற்குள் இதயத்தில் பாரம் அதிகமாகிவிட்டது. கதவைத் திறக்கும் பட்டனை அழுத்தினார். மெதுவாக உள்ளே தள்ளினார். அவர் கண்கள் நிம்மதியாக மூடிக்கொண்டன. உதடுகளில் குறுநகை படர்ந்தது.

பூமி இருந்த திசையைப் பார்த்தார். அங்கு எதுவுமே இல்லை. நிரந்தர சூனியம்.

"டாக்டர்! நீங்களும் உள்ளே வாங்க."

யஷ்வந்தின் குரல் அவருக்குக் கேட்கவில்லை. உயிரற்ற

உடல் மெதுவாகக் கப்பலைவிட்டு தூரத்திற்குப் போயிற்று. இணைப்பை எப்பொழுதோ நீக்கிவிட்டிருந்தார். பூலோக வாசிகள் ஏற்பாடு செய்திருந்த பிணப்பெட்டிகளின் விஷயம் ஒருக்கால் அவருக்குத் தெரியாமல் இருக்கலாம்.

ஏர்லாக் கதவை மூடினான் யஷ்வந்த்.

"கமான்! க்விக் டாக்டர்! என்ன நடக்கிறது? அனூஹ்யா, நீ போய் வாயுபுத்ரனை உள்ளே அழைத்துக் கொண்டு வா."

அவள் அவன் வார்த்தைகளைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. கமாண்டரின் ஆணைகளை உடனே பின் பற்றாமல் இருப்பது இதுதான் முதல் தடவை.

டாக்டர் பிலிப்ஸின் உடல் கப்பலைவிட்டு மெல்ல மெல்லத் தொலைவிற்குப் போய்க் கொண்டிருந்தது. கப்பலின் பின் பகுதியில் என்ன நடக்கிறது என்று யஷ்வந்திற்கும், நிகிலுக்கும் தெரியவாய்ப்பு இல்லை. தெரிவிக்க முயற்சியும் செய்யவில்லை அவள். அதற்கு அவசியமும் இல்லை.

அவள் இன்னும் அப்படியே பார்த்துக் கொண்டே யிருந் தாள். செவ்வாய் கிரகத்து அம்மோனியா மேகத்திரள் களுக்குப் பின்னால் டாக்டர் பிலிப்ஸின் உடல் மறைந்து போயிற்று.

அவள் கண்கள் குளமாயின.

டாக்டர் பிலிப்ஸ்!

இன்ட்ராவர்ட் என்பதால் யஷ்வந்திற்கு நெருக்கமானார். நிகிலை மகனைப் போன்ற அன்புடன பார்த்துக் கொண்டார். தான் சொல்லும் ஜோக்குகளை மனதார ரசிக்கும் நபராக வாயுபுத்ரனின் பாராட்டை பெற்றவர். அப்படிப்பட்டவர் இனி இல்லை. பூமிக்குப் பலகோடி மைல்கள் தூரத்தில் கொதிக்கும் பாஸ்பரஸ் தீயில் அவர் உடல் தகனமாவிட்டது. அவர்

ஆன்மாவின் சாந்திக்காக அனூஹ்யா அப்படியே மௌனமாக நின்றாள்.

"என்ன நடந்தது? என்ன நடந்தது அனூஹ்யா?" ஸ்பீக்கரில் யஷ்வந்தின் குரல் கேட்டுக் கொண்டே இருந்தது.

"உங்க அப்பா உனக்கு அம்புலி மாமாவைக் கொண்டு வந்து தருவார். நீ சாப்பிடு."

ஸ்ரீஜா ஆறுமாதக் குழந்தைக்கு ஆகாரத்தை ஊட்டிக் கொண்டிருந்தாள். அவள் தாயின் கண்களில் கண்ணீர் வழிந்தது. முதலில் பைத்தியக்காரத்தனமாகத் தோன்றினாலும் ஸ்ரீஜாவிடம் தென்பட்ட தைரியம். உறுதியைப் பார்த்து அவர்களின் மனம் மாறி விட்டது. குழந்தை அவர்களுக்கு அருமையாகி விட்டாள்.

ஸ்ரீஜா ஒரு நிமிடம் கூட சும்மாயிருக்க மாட்டாள். பகல் முழுவதும் பள்ளியில் பாடம் சொல்லிக் கொடுப்பாள். இரவில் அனாதை ஆசிரமத்தில் இருக்கும் குழந்தைகளைக் கவனித்துக் கொண்டாள். கொஞ்சம் ஓய்வு கிடைத்தாலும் போதும் மகளிடம் பொழுதை கழிக்கத் தொடங்கிவிடுவாள். மனதிற்குள் எவ்வளவு வேதனையை அடக்கி வைத்துக் கொண்டிருந்தாளோ தெரியாது. ஆனால் வெளியில் மட்டும் அவளைவிட உற்சாகமானவர்கள் இருக்க முடியாது என்பது போல் காட்சி தந்தாள்.

விண்வெளிக்குப் போன குழுவிலிருந்து செய்தி வந்து மாதங்கள் கழிந்துவிட்டன. ஆனாலும் அவளிடம் ஏமாற்றம் தெரியவில்லை.

"இது வரையிலும் எந்த மனிதனாலுமே முடியாது என்று எண்ணியிருந்த காரியத்தை சாதிப்பதற்காகப் போயிருக்கிறார்கள் அவர்கள். அவர்களிடம் உள்ள மனவுறுதி, விடா முயற்சி இவற்றில் பாதியாவது நம்மிடம் இல்லாவிட்டால் எப்படி?" என்பாள்.

நாட்கள் மாதங்களாயின.

விண்வெளிக் கப்பல் கிரகங்களைத் தாண்டிப் போய் விட்டது என்று மட்டும் தெரியும். அவர்களிடமிருந்து எந்த செய்தியும் இல்லை. விண்வெளிக் கப்பல் பயணம் செய்து கொண்டிருக்கும் வேகத்துடன் ஒப்பிட்டால் அதிலிருந்து செய்திகளை அனுப்புவதற்காக நிச்சயமாக அதன் வேகத்தைக் குறைக்க வேண்டும். பூமியிலிருந்து எப்படியும் அதற்குச் செய்தி கள் போய்ச் சேராது. ஒலியலைகளின் வேகத்தைவிட கப்பலின் வேகம் அதிகம் என்பதாம்.

இப்பொழுது பூமிக்குச் செய்தியை அனுப்புவதற்காக கப்பலின் வேகத்தைக் குறைத்து, திரும்பவும் அதிகரிப்பதற்காகச் சூரிய சக்தியை வீணாக்குவது அனாவசியம் என்று யஷ்வந்த் அபிப்பிராயப்பட்டான். எர்த் கண்ட்ரோல்காரர்கள் கூட அப்படித்தான் பாவித்தார்கள். மிகமிக முக்கியமான செய்தி யாய் இருந்தால் தவிர செய்திகளை அனுப்பத் தேவை யில்லை என்று அறிவித்து விட்டார்கள். அதற்குப் பிறகு கப்பலி லிருந்து செய்திகள் வருவது நின்றுவிட்டது. மக்களுக் கிடையே கூட முன்பிருந்த ஆர்வமும், பயமும் இப்பொழுது இல்லை. ஆபத்து காத்திருக்கிறது என்று அவர்களுக்குத் தெரியும். அதைப்பற்றி அவர்கள் மறந்துவிட்டார்கள். மக்களின் வழக்கமே அதுதானே. காட்டை அழிப்பதிலிருந்து, சூழ்நிலையை விஷமய மாவது வரை ஆபத்தானது வந்த பிறகு தானே அதைப்பற்றி யோசிப்பார்கள்?

விஞ்ஞானிகளும், ஆபத்தின் தீவிரத்தைப் பற்றித் தெரிந்தவர்களும் மட்டுமே விண்வெளிக் கப்பலின் க்ஷேமத் திற்காக ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதில் ஸ்ரீஜா முக்கியமானவள்.

கப்பல் கிளம்பிய ஒரு ஆண்டிற்குப் பிறகு ஒரு செய்தி வந்தது. சிறிய செய்தி.

"எங்கள் மெம்பர்களின் ஒருவரான டாக்டர் பிலிப்ஸ் இறந்துவிட்டார் என்பதை வருத்தத்துடன் தெரிவிக்கிறோம்."

விண்வெளிக் கப்பல் சூனியவெளியில் வேகமாக போய்க் கொண்டிருந்தது. வேற்று கிரக வாசிகளுக்காக செய்தியை அனுப்பியபடி கப்பலிருந்து ஒலியலைகள் நிரந்தரமாகப் போய்க் கொண்டே இருந்தன. மறுபக்கத்திலிருந்து பதில் மட்டும் இல்லை.

சேமித்து வைத்திருக்கும் உணவைப் பற்றியோ, பயணத்தைப் பற்றியோ கவலையில்லை. தம் வாழ்க்கை இந்தக் கப்பலிலேயே கடைத்தேறிப் போனாலும் பரவாயில்லை. அவர்கள் கவலையெல்லாம் மாயாஸைப் பற்றித்தான். சூரியனுக்கு அவர்கள் செய்யும் இழுக்கால் மனித இனத்திற்கு என்ன தீங்கு நேருமோ என்ற திகில்தான்.

எல்லாவற்றையும் விட பயங்கரமானது மோனாடனி! அவ்வளவு சிறிய விண்வெளிக் கப்பலில் நாலே நாலு பேர் தான். மணிகள்... நாட்கள்... மாதங்கள்...

பிலிப்ஸ் மரணத்திற்குப் பிறகு பயணத்தில் ஆர்வம் தணிந்துவிட்டது. இயந்திரகதியாகிவிட்டது. சுற்றிலும் தென்படும் காட்சிகள் மேலுக்கு அற்புதமாகத் தோன்றினாலும், அது மிக ஆபத்து வாய்ந்த ஜோன் என்று அவர்களுக்குத் தெரியும். சில ஆயிரக்கணக்கான டிக்ரிகள் உஷ்ணத்திற்கும், ரேடியேஷனுக்கும் இடையே பயணம்.

அனூஹ்யாவுக்கு திடீரென்று உறக்கத்திலிருந்து விழிப்பு ஏற்பட்டது. எதிரே வாயுபுத்ரன் அவளையே பார்த்தபடி உட்கார்ந்திருந்தான். அவள் சட்டென்று கத்தப் போனாள்.

அவளைக் கையால் தடுத்துவிட்டு "இனி என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது. இன்றைக்கு இந்த விஷயம் முடிவாகிவிடணும்" என்று அருகில் இழுத்துக் கொண்டான்.

"விடுங்கள்... விடுங்கள் வாயு'' திமிறினாள். "ப்ளீஸ் அரக்கனாக மாறிடாதீங்க."

"மனிதனை அரக்கனாக்குவது உன்னைப் போன்ற பெண்கள்தான். உன் மனதைச்சரியான வழியில் கொண்டு போகணும் என்றால் இது ஒன்றுதான் வழி. இல்லாவிட்டால் அது இஷ்டம் வந்ததுபோல் ஆடிக் கொண்டிருக்கும். என்னை யும் ஆட்டுவித்துக் கொண்டு இருக்கும்."

"வேண்டாம். என்னை கட்டாயப் படுத்தாதீங்க. டோண்ட் ஃபோர்ஸ் மீ" கத்தினாள் அவள்.

அறையில் மணி அடித்தது. ஸ்பீக்கரிலிருந்து யஷ்வந்தின் குரல் "எனி ட்ரபுள்?" என்று கேட்டது.

வாயுபுத்ரனின் ஆவேசம் நிமிட நாழிகையில் அடங்கி விட்டது.

"ஒன்றும் இல்லை." பதில் சொல்லிவிட்டு, ஸ்பீக்கரை அணைத்துவிட்டு, அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள். இனிச் சொல்லித் தீர வேண்டிய சமயம் வந்துவிட்டது. இனியும் விஷயத்தை இழுத்துக் கொண்டிருக்கக் கூடாது."

"இப்படி உட்காருங்கள் வாயு" என்றாள். அவள் குரலில் தென்பட்ட அதிகாரத்திற்கு அவள் தன்னையும் அறியாமல் உட்கார்ந்து கொண்டான்.

"சில நாட்களுக்கு முன்னால் நான் அந்த விஷயத்தை உங்களிடம் சொல்லிவிட வேண்டும் என்றுதான் இருந்தேன். டாக்டர் பிலிப்ஸ் எனக்கு ரொம்ப தைரியம் சொன்னார்.

ஆனால் எதிர்பாராமல் அப்படி ஆகிவிட்டது."

"உன் மனதில் இருக்கும் விஷயத்தை என்னிடம் சொல்லத் தயங்கினாயா? டாக்டர் பிலிப்ஸ் எதுக்கு நடுவில்?"

"உங்களுக்குத் தெரியாது வாயு. மானசீகமாக ரொம்ப தளர்ந்துவிட்டேன் நான். இன்னும்கூட என் மனம் சுவா தீரத்தில் இல்லை. அவரைவிட்டு என்னால் முற்றிலுமாக விலக முடியவில்லை."

"நீ இன்னுமா அவரை மறக்கவில்லை அனூஹ்யா? அவரை விட்டுப் பிரிந்து எவ்வளவோ நாளாகிவிட்டதே? லட்சக் கணக்கான மைல்கள் தொலைவில் இருக்கிறார். ஆனாலும்."

"அவர் அவ்வளவு தொலைவில் இல்லை வாயு... நம்மிடையேதான் அவரும் இருக்கிறார்."

"நம்மிடையே என்றால் யூ மீன்...?" வாயுபுத்ரன் அதிர்ச்சியடைந்தேன். வார்த்தையை முடிக்க முடியாமல் திணறினான்.

"ஆமாம். யஷ்வந்த் தான்."

தொலைவில் இரண்டு ஆஸ்ட்ராயட்கள் மோதிக் கொண்டாற்போல் கலவரம். மனதில் எதிர்மறையான உணர்வுகள். மோதல்கள், வாயுபுத்ரன் சிலையாக நின்று விட்டான். அவன் வாழ்க்கையில் இப்படிப்பட்ட அதிர்ச்சி என்றுமே ஏற்பட்டதில்லை. யஷ்வந்த்... யஷ்வந்த்... அவனைத் தவிர வேறு யாராக இருந்தாலும் அவன் பொருட்படுத்தியிருக்க மாட்டான்.

ஆனால்... ஆனால்... அவன் தன் காதலியின் மாஜி கணவன்.

"அவர்தான் வாயு. அவரை நீங்க மதிக்கிறீங்க. ஆராதித்து வரீங்க. அவர் மீது உங்களுக்கு பக்தியும்கூட. உங்களுக்கே அப்படியிருந்தால் என் மனதில் எப்படிப்பட்ட உணர்வுகள்

இருக்கும் என்று எண்ணிப் பாருங்கள். அவருக்கு சந்தோஷத்தைத் தர முடியாவிட்டாலும், அவர் எதிரேயே இன்னொரு வருடன் நெருக்கமாக பழகுவது... ஊஹும். என்னால் முடியாது. இந்த குமுறலால் நலிந்து போய்க் கொண்டிருக்கிறேன்." அனூஹ்யா கைகளால் முகத்தைப் பொத்திக் கொண்டாள்.

அவன் இன்னும் தேறிக் கொள்ளவில்லை. யஷ்வந்தின் குணாதியத்தைப் பற்றி அவன் அறிவான். இமயமலை அவன். அப்படிப்பட்ட நபரின் மனதில் இன்னும் அனூஹ்யாவின் மீது அன்பு இருந்ததானால்... அவனுக்கெதிரில் தன்னால் அவளுடன் உரிமையாக பழக முடியுமா? குறைந்தபட்சம் சிரித்துப் பேசவாவது முடியுமா?

மனதிலும் வெளிப்புறமும் பயங்கரனமாக சூனியம். ரொம்ப நேரம் கழித்து தேறிக் கொண்டான். மெதுவாக "அனூஹ்யா!" என்று அழைத்தான்.

அனூஹ்யா நிமிர்ந்து பார்த்தாள்.

"உன் கணவர் யஷ்வந்த் என்று தெரியாத போது, உன் கணவர்பால் இவ்வளவு நாளாகியும் உனக்கிருந்த மாறாத அன்பைக் கண்டு ஆச்சரியப்பட்டிருக்கிறேன். அவர் யாரென்று இப்பொழுது தெரிந்த பிறகு உன் வேதனையை முழுவதுமாக புரிந்து கொண்டேன். உன்னை மனைவியாகப் பெற்ற அந்தக் கணவன் எவ்வளவு அதிர்ஷ்டசாலி என்று நினைப்பேன். ஆனால் இப்பொழுது அவனைக் கணவனாக பெற்ற நீ எவ்வளவு அதிர்ஷ்டசாலி என்று நினைக்கிறேன். அவன்பால் உனக்குத்தான் எவ்வளவு அன்பும், கௌரவமும்! அதனால் தான் உன்னுள் இத்தனை குமுறல்! அதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. அவன் கண்களில் தென்பட்ட அந்த வேதனை நிழலுக்குக் காரணமும் இப்பொழுதுதான் புரிகிறது. அதனால்..." அவன் நிறுத்தினான்.

அனூஹ்யா சந்தேகத்தோடு நிமிர்ந்தாள்.

"அவன்தான் உனக்குத் தகுந்தவன் என்று நான் நினைக்கிறேன்." அவன் ஒரு வினாடி நிறுத்தினான். "அனூஹ்யா, நான் உன்னை ஆழ்ந்து நேசித்தது உண்மைதான். ஆனால் நீங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் நேசிக்கிறீங்க. அவன் கண்களில் உயிரூட்டுவதற்காக உயிரையும் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் நானும், நிகிலும். அதற்காக என் காதலைத் துறக்கத் தயாராக இருக்கிறேன். அதை என் அதிர்ஷ்டமாக நினைக்கிறேன். போ அனூஹ்யா! அவன் கண்களில் ஒளியை நிரப்பு. என்னைப் போல் மகிழ்ச்சியடைபவர்கள் வேறு யாருமே இருக்க மாட்டார்கள்."

அவன் அவளைப் பார்க்க முடியாதவனாக முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

விளையாட்டுப் பையனைப் போல் வாழ்க்கையை எளிதாக எடுத்துக் கொள்ளும் இவனிடம்தான் எவ்வளவு பெருந்தன்மை! யஷ்வந்த்பால் அவனுக்கு இருந்த பக்திக்கும் மதிப்பிற்கும் அசந்துவிட்டாள். மௌனமாக எழுந்து போய் விட்டாள். யஷ்வந்தின் அறைக்கு இல்லை... தன்னுடைய அறைக்கு.

"அனூஹ்யா! அழைத்தாயாமே?"

பரிசோதனைக்கூடத்தில் பிசியாக இருந்த அனூஹ்யா திரும்பினாள். களைத்துப் போயிருந்த முகத்தில் சந்தோஷம் நிரம்பி வழிந்தது. அழகாக முறுவல் பூத்தான்.

"ஆமாம் யஷ்வந்த். என் பரிசோதனை பலித்துவிட்டது. அதை முதலில் உங்களிடம்தான் சொல்லணும் என்று அழைத்தேன்."

"கங்கிராட்ஸ்! எங்கே காட்டு?"

அனூஹ்யா குடுவையிலிருந்து பச்சை நிறத் திரவத்தைக் காட்டினாள். "ஆன்ட்டி பாக்டீரியல், ஆன்ட்டி வைரஸ் சொல்யூஷன்."

"எந்த வைரஸ்?" எந்த பாக்டீரியாவுக்கு?" கேட்டான்.

"எதுவானாலும் சரி. சாதாரண ஜலதோஷத்திலிருந்து கான்ஸர், எயிட்ஸ், டி.பி. வரைக்கும் அணு உருவில் உடலை ஆக்கிரமித்துக் கொள்ளும் கண்ணுக்குப் புலப்படாத கிருமி களைக் கொன்று விடும் என்று கருதுகிறேன். இதன் வாக்ஸினைக்கூடச் சீக்கிரத்தில் தயாரித்து விடுகிறேன். அதற்கு பிறகு ஜலதோஷம் தொற்றிக்கொள்வதோ பரவுவதோ கூட இருக்காது."

அவள் வார்த்தை முடிக்கக்கூட இல்லை. யஷ்வந்த் அவள் கைகளைப் பிடித்துக் குலுக்கினான். அவன் அத்தனை ஆனந்த மாக இருக்கும் நேரம் அரிது.

"ரியல்லீ! எவ்வளவு நல்ல செய்தி. இந்தச் செய்தியை உடனே பூமிக்கு அனுப்பி விடுகிறேன். ஃபார்முலாவைக்கூட அனுப்புவோம். இப்பொழுது இல்லாவிட்டாலும், சில நாட் களுக்குப் பிறகாவது போய்ச் சேரும். எனி வே ஐ யாம் வெரி ஹேப்பி. மற்ற இருவரிடமும் இதை நல்ல செய்தியைத் தெரிவிக் கிறேன். இரு." அவன் போகப் போனான்.

"இந்தப் பரிசோதனையைப் பண்ணிக் கொண்டிருப்பது வாயுபுத்ரனுக்குத் தெரியும்."

"என்ன சொன்னான்?"

"விண்வெளியின் விளிம்பைக்கூடத் தாண்டி விட முடியுமோ என்னவோ. ஆனால் ஜலதோஷத்திற்கு மருந்தைக் கண்டுபிடிக்க முடியாது என்றார். நன்றாக பனியில் நின்று

ஜலதோஷத்தை வரவழைத்துக் கொள்கிறேன். என் மீது பரிசோதனை செய்து சிகிச்சை பண்ணு என்றார்."

"அவன் எப்பொழுதுமே அப்படித்தான். எதையுமே லேசாக எடுத்துக் கொள்வான். நான் போய் இந்தச் செய்தியைச் சொல்கிறேன்."

அவள் அதைப்பற்றி அதிக உற்சாகம் காட்டவில்லை. "யஷ்வந்த்!" என்றாள் தயங்கிக் கொண்டே.

"என்ன?" என்றான்.

"சில நாளாக உங்களிடம் ஒரு விஷயம் சொல்லணும் என்று இருந்தேன்."

"எதைப்பற்றி? வாயுபுத்ரன் விஷயம்தானே?"

"அப்படி என்றால்... உங்களுக்குத் தெரிந்து போய் விட்டதா?"

"நீதான் கடிதத்தில் எழுதியிருந்தாயே?"

அவள் வாயடைத்துப் போனவளாக நின்றுவிட்டாள். அவள் அதை எதிர்பார்க்கவில்லை.

"ஆம்... அந்தக் கடிதம் உங்களுக்குக் கிடைத்ததா?" என்றாள்.

"கிடைத்தது" என்றான் சுருக்கமாக.

அவளுக்கு என்ன பேசுவதென்று புரியவில்லை. அந்த அறையில் சூழ்ந்திருந்த நிசப்தம் அவளை அச்சுறுத்தியது. அதற்குள் அவன் அவளை நெருங்கி வந்தான்.

"அனாவசியமாக உன் வாழ்க்கையில் மறுபடியும் நுழைந்து விட்டேனே என்று வருத்தப்பட்டேன். என்னை நம்பு

அனுாஹ்யா! அன்றைக்குச் சந்திரனின் மீது விழப் போனவன். அதுதான் என் வாழ்நாளில் கடைசி தருணம் என்று நினைத்து விட்டேன். அதனால்தான் உன்னோடு கடைசி நிமிஷத்தில் பேச பேசணும் என்று விரும்பினேன். அது உனக்கு எவ்வளவு குழப்பத்தை ஏற்படுத்தியது என்று இப்பொழுதுதான் புரிந்தது. ஆனால் அதற்குள் இந்த விபத்து, பிலிப்ஸ் மரணம்... சரி. அதை யெல்லாம் விடு. இன்றைக்கே வாயுபுத்ரனோடு பேசுகிறேன்."

"நான் பேசிவிட்டேன் யஷ்வந்த். இந்த விஷயத்தை செட்டில் பண்ணிவிட்டேன். அவரும் என் விஷயத்தைப் புரிந்து கொண்டு விட்டார்."

"அப்படி என்றால்?"

"எனக்கு உங்கள் மீதுள்ள அன்பு நசிந்து போய் விட வில்லை என்றும், அந்தரங்கத்தில் நான் இன்னும் உங்களையே விரும்புகிறேன் என்றும் அவர் நினைக்கிறார்."

"தவறாக எடை போட்டு விட்டான். உனக்கு என்மீது இருப்பது கௌரவம் மட்டும்தான். எவ்வளவு ஜென்மங்கள் எடுத்தாலும் எந்த ஒளிவு மறைவுமில்லாமல் நாம் ஒன்றிணைய முடியாது. நமக்கு ஒருவர்பால் மற்றவருக்கு இருப்பது அன்பு. காதல் இல்லை. வாத்சல்யம், பக்தி, அவ்வளவுதான். அது இல்லை வேண்டியது. நீங்கள் இருவரும் சீக்கிரத்திலேயே மணம் புரிந்து கொள்ளுங்கள். பிறகு எந்தப் பிரச்னையும் இருக்காது."

அவள் உடனே பதில் பேசவில்லை. சக்தியை எல்லாம் ஒன்றாக திரட்டிக் கொண்டாள்.

"நான் சொல்ல நினைத்தது அது இல்லை. உங்களுக்கு முன்னால் தைரியமாக ஒன்றுமே பேச முடியாது. அதனால் தான் தடுமாற்றமடைந்து ஒன்றுக்கு இன்னொன்றை சொல்ல நேரிடுகிறது. ஆனால் இப்பொழுது என் மனம் நிச்சலனமாக

இருக்கிறது. எனக்கு வேண்டியது எது என்று பிலிப்ஸின் மரணத்தால் தெரிந்து விட்டது. அவரைப்பற்றி உங்களுக்குச் சரியாக தெரியாது. என்னை மகளைப் போல் பாவித்தார். நாங்கள் நிறைய பேசிக்கொள்வோம். சிறு வயதிலிருந்தே அவர் யாருடைய அன்பையும் பெற்றதில்லை. அம்மா, அப்பா, அண்ணன், தங்கை என்று எந்த உறவும் இல்லை. யாரையுமே காதலித்ததில்லை. ஆனால் எப்பொழுதும் எவ்வளவு சந்தோஷ மாக இருப்பார்? இப்பொழுது நான் கண்டுபிடித்த இந்த ஆன்ட்டி வைரஸ் பரிசோதனையில் அவருக்கும் பங்கு உண்டு யஷ்வந்த் சகல மனித இனத்தையும் அவர் நேசித்தார். அவர் களுக்காகவே ஐம்பதாண்டு காலம் உழைத்தார். அவர் களுக் காகவே உயிர் வாழ்ந்தார். உண்மையான மனித நேயம் என்றால் அதுதான். இரு ஆண்களின் அன்பில் யாரைத் தேர்ந் தெடுப்பது என்று தயங்கிக் கொண்டு வாழ்க்கையைப் பாழடித்துக் கொண்டிருந்தேன். என் பிரச்னை எவ்வளவு அற்பமானது? எனக்கு இப்பொழுது தெளிவாகப் புரிந்து விட்டது. எனக்கு நீங்களும் வேண்டும், வாயுபுத்ரனும் வேண்டும், நல்ல நண்பர்களாக மட்டும். மனுஷியாக பிறந்ததற்கு என்னால் முடிந்த வரையிலும் மனித இனத்திற்கு சேவை செய்கிறேன். பிழைத்து மறுபடியும் பூமிக்குப் போக நேர்ந்தாலும், என் பரிசோனைக்காகவே உயிரை விடுவேன். என் இந்த முடிவைச் சொல்லணும் என்றுதான் உங்களைக் கூப்பிட்டேன்." சொல்லி விட்டு அவள் நிம்மதியாக மூச்சு விட்டாள். எரிமலை எதுவும் வெடிக்கவில்லை. நிலநடுக்கமும் வரவில்லை.

"ரொம்ப நல்ல முடிவு அனுஹ்யா. குட் லக்." யஷ்வந்த் சிரித்துவிட்டுப் போய்விட்டான்.

பிரச்சைனையே உடனே புரிந்து கொண்டு முடிவுகளை எடுத்துக் கொள்பவர்கள் இருவர்தான். மேதாவிகள்.. கம்ப்யூட்டர்...

"நாளையிலிருந்து இன்னொரு குழந்தையைச் சுமக்கணும் நான்" என்றது பிரம்மவித்யா.

"என்ன இது? இதுவரையில் எவ்வளவு பேரை சுமந்து கொண்டிருந்தாய்?" கேட்டான் நிகில்.

"உங்கள் எல்லோருடைய குழந்தைகளையும் சுமந்து கொண்டு இருக்கிறேன். ஒவ்வொருத்தரும் ஏதோ ஒரு பரிசோதனை செய்வதும், அதை என் வயிற்றுக்குள் புகுத்துவதும் வழக்கமாகி விட்டது. நேற்று வரை அனூஹ்யா மருந்தும் மாயமும் ஊற்றி வந்தாள். நாளையிலிருந்து யஷ்வந்த் கவிதை களையும் பாட்டு களையும் நிரப்பப் போகிறானாம்."

"என்ன இது யஷ்வந்த்? நீங்க ஒரு கவிஞர்னு எனக்குத் தெரியாதே?" வியப்புடன் கேட்டான் வாயுபுத்ரன்.

யஷ்வந்த் சிரித்துவிட்டு "சாதாரண புவியீர்ப்புச் சக்திக்கு அதீதமாக சூனியவெளியில் அல்டரா சானிக் சத்தத்தின் உற்பத்தியைக் கண்டுபிடித்துவிட்டேன். எதுக்கும் உபயோகப் படும் என்று கம்ப்யூட்டரில் பத்திரப்படுத்தி வைத்துவிட்டேன்' என்றவன் தொடர்ந்து "மனிதர்களைப் பைத்தியமாக்குவதற்குத் தவிர வேறெதுக்கும் பயன்படாது இவை" என்றான்.

"நாங்கள் பூமிக்குத் திரும்பிப் போய்ச் சேர்ந்தாலும், சேரா விட்டாலும் நீ கண்டிப்பாக சேர்ந்து விடணும் என்பது எங்கள் ஆசை. அப்பொழுது எங்கள் பரிசோதனைகள் எல்லாம் எல்லோருக்கும் பயன்படும் என்று ஒரு எதிர்பார்ப்பு. அதனால் தான் உன்னிடம் எல்லாவற்றையும் ஃபீட் செய் கிறோம்" என்றாள் அனூஹ்யா பிரம்மவித்யாவிடம்.

"நீங்கள் இல்லாவிட்டால் நான் எப்படிப் போவேன் மனித உலகத்திற்கு? நடக்காத காரியம்."

"ஏன் நடக்காது? எங்களுக்கு வயதாகிக் கொண்டே வருகிறது. எவ்வளவு நாள் இருப்போம் என்று தெரியாது. உன் விஷயம் வேறு" என்றான் யஷ்வந்த்.

பிரம்மவித்யா பதில் பேசவில்லை.

"ஏன்? கோபம் வந்துவிட்டதா?"

"என்னோடு கொஞ்ச நேரம் பேசாமல் இருங்கள்."

"அப்பப்பா... நிஜமாகவே கோபம் வந்துவிட்டதா?"

"இருங்கள். இது கோபம் இல்லை. என்னைப் பேச்சில் ஆழ்த்தாதீங்க. நமக்கு ஏதோ..."

வார்த்தைகள் முடியவில்லை. கண்ட்ரோல் ரூம் சிவப்பு ஒளியால் நிரம்பிவிட்டது. யஷ்வந்த் கலவரமடைந்தவனாக எல்லா சானல்களையும் பரிசோதித்தான். எங்கேயும் எந்த க்ளூவும் தென்படவில்லை. டெலஸ்கோபிக் வ்யூவர் திரையை ஃபோகஸ் செய்தான். தொலைவில் லேசாக மேகத்திறன்கள் தென்பட்டன.

"அது என்ன? பிளாக்ஹோலா?" கேட்டாள் அனூஹ்யா.

"இல்லை. பிளாக்ஹோல் கண்ணுக்குத் தென்படாது." யஷ்வந்த் வாகனத்தை வேறு பக்கமாகத் திரும்பினான். என்ன நடந்தது என்று சொல்லாமல் பிடிவாதம் பிடித்தது கம்ப்யூட்டர். மேகத்தைப் பார்த்து ஆபத்து எச்சரிக்கை ஏன் தந்ததோ அந்த நால்வருக்கும் புரியவேயில்லை.

"ஆபத்து எந்தப் பக்கம் இருக்கிறதோ?" அவன் சொல்லிக் கொண்டிருந்தபோதே எங்கிருந்தோ ஒரு வாயு கூட்டம் சுஹ்ருத்பாவின் எல்லைக்குள் வந்துவிட்டது. நொடிப் பொழுதில் அது வாகனத்தைத் தாண்டிப் போய்விட்டது. எல்லோரும் நிம்மதியாக மூச்சு விட்டுக் கொண்டார்கள்.

அந்தச் சந்தோஷம் அதிக நேரம் நீடிக்கவில்லை.

கம்ப்யூட்டர் வாகனத்தின் திசையை மாற்ற முயற்சி செய்தது. ஆனால் அதற்குள் தாமதமாகிவிட்டது. எல்லையில்லாத ஈர்ப்பு சக்தி வாயைப் பிளந்துகொண்டு வாகனத்தை உள்ளே இழுத்துக் கொண்டுவிட்டது.

அடுத்த வினாடி கம்ப்யூட்டர் செயல் இழந்துவிட்டது. எந்தக் கன்ட்ரோலும் அவர்கள் ஆதீனத்தில் இல்லாமல் போய் விட்டது. கடியாரம் வேலை செய்யவில்லை. பிரம்மவித்யா ஊமையாகிவிட்டது.

அவர்களின் மூளையைத் தவிர எல்லாச் சாதனங்களும் அந்த ஈர்ப்பு சக்திக்கு வசமாகிவிட்டன.

"பிளாக்ஹோல்" யாரோ கத்தினார்கள். வாகனத்தின் வேகம் நான்கு மடங்கு அதிகமாகவிட்டது. கிர்ரென்று சுழன்று கொண்டிருந்தது. "இன்னும் எவ்வளவு நேரம்? சில வினாடி கள்... நிமிடங்கள்..." என்றெண்ணிக் கொண்டான் யஷ்வந்த். வாகனம் அதள பாதாளத்தை நோக்கி நழுவிப் போய் கொண்டே இருந்தது.

அதிலிருந்து மீளுவதென்பது இயலாத காரியம். யஷ்வந்த் ஆதரவில்லாமல் பின்னுக்குச் சரிந்தான். எஞ்சிய மூவரும் நாற்காலியோடு ஒட்டியபடி உட்கார்ந்திருந்தார்கள். அதிர்ஷ்ட வசமாக வாகனத்தின் செயற்கை ஈர்ப்பு சக்தி அந்தச் சக்திக்கு இன்னும் வசப்படவில்லை. அது மட்டும் நடந்திருந்தால் அவர்கள் அனைவரும் இந்நேரம் அந்த வாகனத் திற்குள் ளேயே சுழன்று சுழன்று நலிந்து போயிருப்பார்கள். யஷ்வந் திற்கு முந்தைய அனுபவம் நினைவுக்கு வரவே உடல் சிலிர்த்தது. பயத்தோடு கண்களை மூடிக்கொண்டான். மின்சாரம் இல்லை. நிமிடங்கள்... மணிகள் கழிந்து

கொண்டிருந்தன. பசி, தாகத்தை மறந்துவிட்டான். பயம் யோசிக்கும் சக்தியை நசிக்கச் செய்துவிட்டது. இது நிரந்தரப் பயணம் நிற்காது. "எல்லாம் முடிந்துவிட்டது" என்றான் யஷ்வந்த் பதில் வரவில்லை. அவன் கண்கள் இருட்டில் மின்னின. அம்மூவரும் நினைவிழந்து விழுந்து விட்டிருந்தார்கள். எங்குமே சலனம் இல்லை. அவன் கண்கள் மூடிக் கொண்டன. சுஹ்ருத்பாவ் முடிவில்லாத வாயுகுண்டத்தில் சுழிந்து கொண்டே போய்க் கொண்டிருந்தது.

உலக விண்வெளிப் பயணச் சங்கத்தின் தலைவரின் முகம் டி.வி.யில் தென்பட்டதுமே மகனைத் தூங்கவைத்துக் கொண்டிருந்த ஸ்ரீஜா ஓட்டமாக ஓடி வந்து டி.வி.யின் முன்னால் உட்கார்ந்து கொண்டாள். எவ்வளவோ முக்கிய மான விஷயமாக இருந்தால் தவிர மொத்தம் முன்னூறு சானெல்களிலும் அவருடைய பிரசங்கத்தை அவ்வாறு ஒளிபரப்ப மாட்டார்கள். அவருடைய முகத்தைப் பார்த்தால் ஏதோ கேட்கக் கூடாதா செய்தியைச் சொல்ல வந்தார் போலிருந்தது.

"பிரண்ட்ஸ்!

உங்களுடன் அடிக்கடி இவ்வாறு பேச வேண்டி யிருப்பதை நினைத்து இவ்வளவு நாளும் மகிழ்ச்சியடைந்து கொண்டிருந்தேன். இவ்வளவு நாளாக உங்களுக்குப் பெரும் பாலும் நல்ல செய்திகளைத்தான் சொல்லி வந்தேன். ஆனால் இன்றைக்கு இறுதியாக உங்களுக்கு மிகத் துன்பமான செய்தி யைச் சொல்ல வேண்டியிருக்கிறது.

ஒளி வேகத்தை மேற்கொண்ட பிறகு சுஹ்ருத்பாவ் வாகனத்திடமிருந்து நமக்குத் தொடர்பு அறுந்து விட்டது. சில சிக்னல்களின் மூலமாக அது இருக்கும் இடத்தைப் பற்றித் தெரிந்து கொண்டு வருகிறோம். இது வரையில் விண்வெளிக்

கப்பலைப்பற்றித் தெரிந்த விவரங்களை எல்லாம் உங்களுக்கு உடனுடன் தெரிவித்து வந்திருக்கிறேன். அது போலவே இன்று கம்ப்யூட்டரில் கிடைத்த சிக்னல்களைக் கொண்டு புரிந்து கொண்ட வேதனை மயமான செய்தியை உங்களுக்குத் தெரிவிக்க வேண்டியிருக்கிறது.

நம் விண்வெளி வாகனம் பிளாக்ஹோலுக்கு பலியாகி விட்டது. ஆபத்தில் சிக்கிக் கொள்வதற்கு முன்னால் இதைப் பற்றி நமக்கு தெரிவிக்க வழி செய்துவிட்டு, பிறகுதான் சிக்கிக் கொண்டிருக்கிறது. ஒருமுறை பிளாக்ஹோலுக்குள் போய் விட்டால் பிறகு எந்தச் சூழ்நிலையிலும் வெளியேற வழியில்லை என்று உங்களுக்குத் தெரியும். இனி இப்போ தைக்கு நம் எதிர்காலப் புரோகிராம் என்று எதுவும் அவசிய மும் இல்லை. ஐந்து பேரின் உயிருக்கு ஆபத்து விளைவித்த முடிவை மேற்கொண்ட அதிகாரியான என்னை மன்னிக்கும் படி கேட்டுக் கொள்கிறேன். கடவுள் என்று ஒருவர் இருந் தால், மனித இனத்தின் எதிர்காலத்தையும், சூரியனையும் காப்பாற்றும்படி வேண்டிக் கொண்டு விடை பெற்றுக் கொள்கிறேன்."

டி.வி.யிலிருந்து சோக கீதம் கேட்டுக் கொண்டிருந்தது. ஸ்ரீஜா சிலையாக உட்கார்ந்திருந்தாள். பக்கத்தில் மகள் விளையாடிக் கொண்டிருந்தாள்.

எல்லா விதமான நோய்களையும், வேதனையையும் தீர்க்கவல்லது ஒரே மருந்துதான்... அதுதான் காலம்.

வாயுபுத்ரன் கண்களைத் திறந்தான். சுற்றிலும்தான் இருள் சூழ்ந்திருந்ததோ, அலலது தன் கண்பார்வைதான் போய் விட்டதோ என்று புரியவில்லை. அந்த இருட்டு அவ்வளவு பயங்கரமாக இருந்தது. இரவு நேரத்து இருட்டாக இருந்தால் கொஞ்ச நேரத்தில் கண்கள் இருட்டிற்குப் பழக்கப் பட்டு

விடும். ஆனால் இந்த இருட்டு அவ்வாறு இல்லை. பூமிக்கு ஆயிரம் அடிகளுக்குக் கீழே சமாதியானாற்போல் இருந்தது. கைகளால் துழாவிப் பார்த்தான். நாற்காலியின் விளிம்பு தட்டுப்பட்டது. அப்படி என்றால் தான் வாகனத்தில் தான் இருக்கிறான் என்று புரிந்தது. அவனுக்குக் கொஞ்சம் கொஞ்ச மாக நினைவுக்கு வரத் தொடங்கியது.

வாகனம் வேகமாக பிளாக்ஹோலுக்குள் துளைத்துக் கொண்டு போனதும், தம் கன்ட்ரோலை விட்டுப் போய் வேக மாக சுழன்று கொண்டு சுற்றத் தொடங்கியதும்... அதற்குப் பிறகு சில வருடங்கள் கழிந்து போய்விட்டது போலிருந்தது.

அந்த இருட்டுக்கு அர்த்தம் இப்பொழுது புரிந்தது. தான் இன்னும் பிளாக்ஹோலில்தான் இருக்கிறான். ஆனால் ஏதோ வித்தியாசம். வாகனம் அசையாமல் நின்று விட்டது போல் இருந்தது. அதாவது பிளாக்ஹோல் இடையிலேயே நின்று போயிருக்க வேண்டும். அப்படி இருக்க முடியாது. பிளாக் ஹோலுக்கு முடிவு என்பதே இல்லை. ஏதோ நடந்திருக்க வேண்டும். என்ன நடந்திருக்கும்?

வாயுபுத்ரன் கையை துழாவிப் பார்த்தான். இன்னொரு உடல் கைக்குத் தட்டுப்பட்டது. நிகில் ஆக இருக்கும் என்று நினைத்தான். அவன் எழுந்துகொள்ளப் போனான். உடம்பு ஒத்துழைக்கவில்லை.

எங்கிருந்தோ இசை மெலிதாக கேட்டது. அது இசை தானா? தன்னுடைய பிரமைதானோ.

அதற்குள் யாரோ லேசாக சிரித்த ஓசை. அந்த ஓசை சாதாரணமாக இல்லை.

"பிரம்மவித்யா!" கூப்பிட்டுக் கொண்டே எழுந்து கொள்ளப் போனான். இடுப்பிற்குச் சுற்றியிருந்த பெல்ட்

தடுத்தது. இதெல்லாம் கனவு இல்லை என்ற நம்பிக்கை வந்தது. அந்த இருள் பயங்கரமாக இருந்தது. எங்கேயிருக்கிறான் அவன்? நரகத்திற்கு நடுவிலா?

"உங்கள் மனித இனத்தைச்சேர்ந்தவர்கள் எந்த லோகத் தில் இருந்தாலும் சரி சுவர்க்க நரகத்தைப் பற்றியே யோசிக் கிறீங்க. உங்கள் யோசனைகள் ரொம்ப சுவாரசியமாகத்தான் இருக்கு."

"யாரு பேசுகிறது?" பெரிதாக கத்தினான். யாரோ பேசு கிறார்கள். அதாவது தம் விண்வெளிப் பயணம் எல்லாமே கனவுதானா? அறையில் படுத்து உறங்கிக் கொண்டே கனவு காண்கிறானா? "யாரது?

"அனாவசியமான யோசனைகளால் மூளையை ஏன் பாழக்குகிறாய்? இந்த ஒரு வினாடிக்குள் நூறு கேள்விகள் தலையெடுத்து விட்டன உன் மனதில். அதெல்லாம் அனாவசியம்தானா?"

"காது கேட்கிறது. கண்ணில் எதுவுமே தென்பட வில்லையே?" என்று எண்ணிக் கொண்டான்.

"உன் கண்கள் வெளிச்சத்தைப் பார்க்கத்தான் பழக்கப் பட்டுள்ளன. எங்கள் கண்கள் அவ்வாறு இல்லை. வெளிச்ச மும் இருட்டும் இரண்டுமே எங்களுக்கு ஒன்றுதான்."

"அப்படி என்றால் பூனைக்கண் என்று சொல்லு" வெறுப் போடு எண்ணிக்கொண்டான்.

லேசாக சிரித்த சத்தம். "அவ்வளவு சிறிய பிராணியோடு ஒப்பிடாதே."

"எனக்கு வெளிச்சம் வேண்டும் ப்ளீஸ்" கெஞ்சுவது போல் கேட்டான் வாயுபுத்ரன்.

"மன்னிக்கணும். ரொம்பகாலமாக நீங்க பிளாக் ஹோலில் இருக்கீங்க. திடீரென்று வெளிச்சத்தைப் பார்த்தால் உங்கள் கண்கள் பழுதடைந்து போய்விடும். அதனால்தான் கொஞ்சம் கொஞ்சமாக வெளிச்சத்தை கொண்டு வருகிறோம்."

"என்ன? நிஜமாக நடப்பதுபோலவே தோன்றுகிறதே? என்ன இது? எல்லோரும் என்னவானார்கள்? உயிரோடு இருக்கிறார்களா?" தனக்குள் நினைத்துக் கொண்டான்.

"உங்கள் யாருக்குமே எந்த ஆபத்தும் இல்லை. நினைவு திரும்பவில்லை. அவ்வளவுதான்."

"நீங்க யாரு? இது என்ன உலகம்? நான் மனதில் நினைப்ப தெல்லாம் உங்களுக்கு எப்படி தெரிகிறது?"

"இதை ப்ளானெட் வேகா என்பார்கள். உங்கள் பாஷை யில் சொல்லணும் என்றால் மில்கி வே கேலக்ஸி. அதாவது விண்வெளி எல்லைக்குக் கோடியில் இருக்கும் ப்ளோரா எனப்படும் சூரியனின் கிரகம் இது."

"அப்படி என்றால் ப்ளானெட் ஆல்ஃபா இங்கேதானா இருக்கு?" பரபரப்புடன் கேட்டான் வாயுபுத்ரன்.

"ஆமாம். அது எங்கள் சூரிய குடும்பத்தில் மற்றொரு கிரகம். மொத்தம் ஐந்து கிரகங்கள் உள்ளன. உங்கள் மனதில் இருப்பதைத் தெரிந்திருப்பதைப் பற்றிக் கேட்டாய். உங்களுக்கு இதுவரையிலும் அனுபவமாகியிருக்கும் இல்லையா? உங்கள் மனதில் நினைப்பதெல்லாம் எங்களுக்குத் தெரிந்துவிடும். நீங்கள் இந்தக் கலைக்கு டெலிபதி என்று பெயர் வைத்திருக் கிறீர்கள். ஆல்ஃபா கிரகவாசிகளின் குறிப்பைப் பெற்றுக் கொண்டு நீங்கள் புறப்பட்டு வந்திருக்கிறீர்கள். வழியில் ஹோலுக்குள் சிக்கிக் கொண்டு விட்டீர்கள். எங்கள் ராடார் அந்த விஷயத்தை எங்களுக்கு உடனே தெரியப்படுத்திவிட்டது.

வந்து உங்களைக் காப்பாற்ற முடிந்தது. அங்கிருந்து எங்கள் கிரகத்திற்கு அழைத்து வந்தோம்."

"பிளாக் ஹோலிலிருந்து காப்பாற்றுவதா? நடக்காத காரியம்."

"எங்களால் முடியாதது எதுவுமே இல்லை. ஒரு காலத்தில் வானத்தில் பறவைகளைப் போல் பறப்பது முடியாத காரியம் என்றெண்ணிக் கொண்டிருந்த உங்கள் மனிதர்கள் விமானத்தைப் படைத்தார்கள். அதே தியரியை இங்கே பின்பற்ற வேண்டும். பிளாக்ஹோல் ஈர்ப்பு சக்தியை உங்கள் வாகனத்தால் எதிர்த்து நின்ற முடியவில்லை. ஆனால் நாங்கள் அதில் நுழைந்து உங்க வாகனத்தை வெளியே இழுத்து வந்து விட்டோம். அதாவது நாங்கள் சாதித்த முன்னேற்றம் உங்களுக்குப் புரியும் என்று நினைக்கிறேன்."

"அப்படியே எங்கள் மொழியைக்கூட கற்றுக் கொண்டிருக்கீங்க. அப்படித்தானே."

"கற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் எங்களக்கு இல்லை வாயுபுத்ரா! சூரியன், ராடார் போன்ற வார்த்தைகளையும், உன் பெயர், உன் மனம், பூமியில் நீங்கள் பேசும் மொழி எல்லாமே நீங்கள் பேசும்போதே எங்கள் மொழியில் மாற்றி அதற்கு பதிலைக் கூடத் தயாரிக்கும் பிரெயின் கம்ப்யூட்டர் எங்களுக்குள்ளேயே இருக்கிறது. எங்கள் முன்னேற்றத்தை பார்க்கணும் என்று நீங்கள் விரும்பினால் பார்க்கலாம். தற்போது நீங்கள் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். அப்புறமாக வந்து சந்திப்போம்."

மிக மெதுவாக யாரோ அசைந்த சத்தம்.

"ஒரு நிமிஷம்" என்றான். சத்தம் நின்றது.

"நீங்க... உங்க பெயரை நான் தெரிந்துகொள்ளலாமா? உங்களுக்கு எங்களை போலவே பெயர்கள் உண்டா?"

"உண்டு. ஆனால் உங்களைப் போன்ற பெயர்கள் இல்லை. எங்களுடையதெல்லாம் நம்பர்களுடன் கூடிய பெயர்கள். என்னை பி 7 வேகா என்று கூப்பிடுங்கள் போதும். வேகா என்பது எங்கள் வீட்டுப் பெயர். எங்க கிரகவாசிகள் அத்தனை பேருக்கும் ஒரே வீட்டுப் பெயர்தான். உங்களைப் போல் ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு பெயர் கிடையாது. உங்களைப் போல் பலதரப்பட்ட ஜாதிகளும், பாஷைகளும் கிடையாது."

"எவ்வளவு நல்ல பண்பாடு! எல்லோரும் ஒரு குடும்பம் என்று நாங்கள் கனவு காணுவோமே தவிர அத்தனை உயரத் திற்கு போகவில்லை இன்னும்."

"அதனால்தான் அப்படி அழிந்து போகிறீர்கள்." போகத் தொடங்கிய ஓசை. வாயுபுத்ரனுக்குத் தூக்கக் கலக்கம் விடுபட வில்லை. மறுபடியும் தூக்கத்தில் ஆழ்ந்து விட்டான். அந்த கடைசி வார்த்தைகள் இன்னும் அவன் மனதில் சூழன்று கொண்டே இருந்தன.

"வாயு! வாயு!" யாரோ கூப்பிட்டார்கள். யாரது? அனூஹ்யா குரல் போல் இருக்கிறதே? எங்கேயிருக்கிறாள்? அவன் தலை பாரமாக இருந்தது.

முகத்தைக் குளிர்ந்த துணியால் துடைத்துக் கொண்டிருந் தார்கள் யாரோ. எழுந்து உட்கார்ந்து கொண்டான். எதிரே மூவரும் கலக்கத்தோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள். மெல்லிய ஒளிக்கீற்று ஒன்றுதான் தென்பட்டது அறையில்.

"என்ன நடந்தது? எங்கேஇருக்கிறோம் நாம்?"

"அதுதான் தெரியாமல் குழம்பிக் கொண்டிருக்கிறோம்.

நீங்களானால் தூக்கத்தில் உளறிக் கொண்டிருந்தீங்க, வேகா பி 7 என்று."

"ஆமாம். நான் அவர்களோடு பேசினேன். உண்மையிலேயே வேகா கிரகத்தின் மீதுதான் இருக்கிறோம் என்று நினைக்கிறேன்." எழுந்து உட்கார்ந்தான். "ஆமாம். நாம் அதிகமாக வெளிச்சத்தைப் பார்க்கக் கூடாதுன்னு சொன்னான் அவன். அதனால்தான் மிகக் குறைந்த வெளிச்சத்தையே உள்ளே விட்டிருக்கிறான்."

மற்ற மூவரும் அவனை பைத்தியத்தைப் பார்ப்பது போல் பார்த்தார்கள்.

"யாரோடு பேசினாய்? கனவு ஏதாவது கண்டாயா?" கேட்டான் யஷ்வந்த்.

வாயுபுத்ரன் சொன்னது கதை போல் இருந்தது. நின்று கொண்டிருந்த விண்வெளிக் கப்பல் அவன் சொன்னது கனவு இல்லை என்று நிரூபித்துக் கொண்டிருந்தது.

"இல்லை." வாயுபுத்ரன் தம் உரையாடலை விவரித்துச் சொன்னபோது எல்லோரும் நிசப்தமாகக் கேட்டார்கள். எல்லோர் மனதிலும் ஒருவிதமான பரபரப்பு. நிம்மதி. நினைத்ததை சாதித்து விட்டோம் என்ற சந்தோஷம். அத்துடன் ஏதோ பயம்மும்கூட.

"என்ன நடக்கிறது இப்போது?" கேட்டான் நிகில்.

"ஒன்றும் நடக்காது. உங்களை இன்டர் பிளானடெரி சொஸைடிக்கு அனுப்புவோம். அதற்குப் பிறகு அவர்களின் தீர்மானத்தைப் பொறுத்திருக்கிறது உங்கள் எதிர்காலம்" என்று குரல் கேட்டது.

எல்லோரும் அந்தக் குரல் கேட்ட திசையில் திரும்பினார்

கள். அவ்வளவாக வெளிச்சம் இல்லை. ஆனால் அந்த மங்கலான வெளிச்சத்திலேயே தெளிவாகத் தென்பட்டன இரு உருவங்கள்.

அந்த நால்வரின் உடல்களும் சிலிர்த்தன. முதல் முறையாக மற்றொரு கிரகத்தைச் சேர்ந்தவர்களைப் பார்த்த உத்வேகம்! இருக்கிறார்களா இல்லையா என்று தெரியாத போதிலும், நூறு ஆண்டுகளாக அவர்களுக்காகத் தவம் செய்து, அவர்கள் கண்முன் தோன்றியதுமே என்ன பேசுவதென்று புரியாத உத்வேகம் அது.

ஒல்லியாக உயரமாக இருந்தார்கள் அவர்கள். உடம் பெல்லாம் கவசத்தைப் போல் ஏதோ போர்த்தியிருந்தது. கண் கள் இருந்த இடத்தில் இரண்டு வைரங்களை பதித்தாற் போல் ஒளி.

"நான்தான் வேகா பி 7" என்று அந்த ஆள் முன்னுக்கு வந்தான். அவன் நடந்தாற்போல் இல்லை. காற்றில் மிதந்தாற் போல் இருந்தது.

"இவர்கள் மிதப்பவர்களா? வியாழன் கிரகத்தில் இப்படிப் பட்ட ஜீவிகள் இருக்கலாம் என்று ஒரு காலத்தில் விஞ்ஞானி கள் நினைத்திருந்தார்களாம்." யஷ்வந்த் மனதில் நினைத்துக் கொண்டானோ இல்லையோ அந்த செய்தி உடனே வேகா வுக்கு போய்ச் சேர்ந்துவிட்டது.

"நாங்கள் மிதப்பவர்கள் இல்லை. எங்களிடம் கொங்சம் வாயு அதிகமாக இருப்பது உண்மைதான். அதற்காக முற்றிலும் பாரத்தை தரையில் வைத்து நடப்பவர்கள் இல்லை. எங்கள் கிரகத்து சூழ்நிலை உங்கள் பூமியைப் போல் இல்லை. அதனால் இவ்வாறு இருக்கிறோம். எங்கள் கிரகத்தின் மேல் நீங்கள் சாதாரணமாக நடக்கணும் என்றால் இந்த மாதிரி கவசங்களை அணிந்து கொள்ளணும்."

"எது எப்படி இருந்தாலும் நீங்கள் எங்களுக்கு செய்த உதவிக்கு நன்றி. வாயுபுத்ரன் எங்களுக்கு எல்லாம் சொன்னான். எங்களைக் காப்பாற்றியதற்கு ரொம்பகடமைப் பட்டிருக் கிறோம்" என்றான் யஷ்வந்த்.

"நீங்கள் திரும்பத் திரும்ப எங்களுக்கு நன்றியைச் சொல்லத் தேவையில்லை. ஒருத்தருக்கொருத்தர் உதவுவது எங்கள் கடமை. எங்கள் உரிமையை எவ்வளவு கடுமையான முறையில் சாதித்துக் கொள்கிறோமோ, அத்தனைகத்தனை கண்டிப்பான முறையில் பொறுப்புகளையும் ஏற்றுக் கொள் வோம். அதனால் எங்களுக்கு மன்னிப்புகள், நன்றிகள் எல்லாம் இருக்காது."

"உங்கள் கிரகத்தை சுற்றி பார்க்கும் வாய்ப்பு கிடைக் குமா?" கேட்டான் யஷ்வந்த்.

"கண்டிப்பாக, ஆனால் உங்களுக்கு அதிக நேரம் இல்லை. கூடிய சீக்கிரத்தில் நீங்கள் இண்டர் பிளானடெரி சொஸடி காரர்களுக்கு உங்கள் வேண்டுகோளை சமர்ப்பித்து விட்டால் நல்லது. நீங்கள் வந்த செய்தி ஆல்ஃபா கிரகவாசிகளுக்குத் தெரிந்து போய்விட்டது. உங்களுக்காகக் காத்திருக்கிறார்கள்."

"எனக்கு ஒரு சந்தேகம்" என்றான் வாயுபுத்ரன்.

"என்ன?" கேட்டான் வேகா பி 7.

"நீங்க எங்களுக்காக இத்தனை சிரமப்பட்டு உயிரைக் காப்பாற்றினீர்கள். ஆனால் ஆல்ஃபா கிரகவாசிகளோ பூமியையே அழித்து விடணும் என்று எண்ணுகிறார்களே ஏன்?"

"அதற்குப் பதிலை அவர்களே சொல்லுவார்கள். ஒரு விஷயம் மட்டும் உங்களுக்குத் தெளிவாகச் சொல்கிறேன். இண்டர் பிளானடெரியின் முடிவுகளை நாங்கள் மதிக்கி றோம். ஒருக்கால் உங்களுக்கு எதிர்ப்பதமாக இருந்தால்

எங்களால் எந்த உதவியும் செய்ய முடியாது. சரி, நாம் புறப் படுவது நல்லது என்று நினைக்கிறேன்."

அவன் தந்த உடைகளை வாங்கிக் கொண்டார்கள் நால்வரும். அலுமினியத்தால் செய்யப்பட்ட அந்த உடை மிக லேசாக இருந்தது ஆனால் உடுத்திக் கொண்டதும் உடல் பாரமாகி விட்டாற்போல் இருந்தது.

முதல் முதலாக வேகா கிரகத்தில் காலடி எடுத்து வைக்கப் போகிறார்கள். கால்கள் நடுங்கின. வாயுபுத்ரனுக்கு தாத்தாவின் டைரி நினைவுக்கு வந்தது. இந்த அனுபவத் திற்காகத்தானே அவர் அவ்வளவு தவித்தார்? பூமிக்கு பல கோடிக் கணக்கான மைல்கள் தூரத்தில்... நட்சத்திரங்களுக்கு சமீபத்தில்... மனிதர் கள் ஊகித்திற்கு எட்டாத தொலைதூர பிரதேசத்தில்...

அந்தத் தரையில் காலடி எடுத்து வைத்தபோது பூமியின் மீது நடப்பது போலவே இருந்தது. வெளியே வந்ததுமே நிமிர்ந்து ஆகாயத்தைப் பார்த்தார்கள். ஆகாயம் முழுவதும் விதவிதமான நிறங்களில் வானவில்கள்.. நான்கு சந்திரன்கள். அவை மற்ற நான்கு கிரகங்கள் என்று ஊகித்துக் கொண்டார் கள். அதில் ஒன்று தமக்கு எதிரிகளான ஆல்ஃபா கிரக வாசி களுடையது. வாகனம் கிளம்பிய ஓசை கூட கேட்கவில்லை. ஆனால் மிக வேகமாகப் போவதை உணர்ந்தார்கள்.

"நீங்கள் ஊகித்தது நிஜம்தான். எங்கள் வாகனங்கள் நியூட்ரான் சக்தியால் இயங்குகின்றன. எல்லாம் ஆட்டோ மேட்டிக். அதனால் எந்த விபத்தும் ஏற்பட வழியில்லை."

யஷ்வந்த் மனதிலிருந்த கேள்விக்குப் பதிலளித்தான் வேகா.

கொஞ்ச நேரம் யாருமே பேசவில்லை. மனதில் எந்த யோசனையும் இல்லாமல் இருப்பது எவ்வளவு கஷ்டம் என்று

புரிந்தது அவர்களுக்கு. பதினைந்தாயிரம் ஆண்டுகள் முன்னோக்கி சென்றுவிட்ட விஞ்ஞானத்தைக் கண்டார்கள் அவர்கள்.

வாகனம் ஊருக்குள் நுழைந்தது. எங்கேயுமே மாட மாளிகைகள் இல்லை. வீடுகள் எல்லாமே ஏறக்குறைய ஒரே மாதிரியாக இருந்தன. கண்களைப் பறிக்கும் விளக்கு வெளிச்சம் இல்லை. ஆனால் வெளிச்சத்திற்குக் குறைவில்லை. தெருக்களில் வாகனங்கள் வந்து கொண்டும் போய்க் கொண்டிருந்தன. ஆனால் எங்குமே சத்தம் இல்லை. நிசப்த மான புதுமை நிலை அது.

"எங்களுக்கு ஒரு நாள் சுமார் முப்பது மணி நேரம். அதல் பதினைந்து மணி நேரம் எல்லோரும் கண்டிப்பாகக் கஷ்டப் பட்டு வேலை செய்தாக வேண்டும். அவ்வளவு கஷ்டப் பட்டால்தான் எங்களுக்கு தேவையானவற்றை சாதித்துக் கொள்ள முடியும் என்று நீங்கள் நினைத்தால் அது தவறு. எங்கள் சக்தியைப் பயன்படுத்திக் கொள்வதற்காகத்தான் இந்த உழைப்பு. எங்களிடம் வேண்டிய நியூட்ரான் சக்தி இருக்கு. அருகில் உள்ள ஆண்ட்ரோமேடா கேலக்யிலிருந்து பெற்றுக் கொண்டோம். ஆனாலும் எல்லோருக்கும் ஒரு வியாபகம் உண்டு. அதற்குப் பிறகு எஞ்சி பதினைந்து மணி நேரத்தில் எட்டு மணி நேரம் ஓய்வு எடுத்துக் கொவோம். மீதி ஏழு மணி நேரத்தை எங்கள் குடும்பத்திற்காகப் பயன்படுத்துவோம். குடும்பம் என்றால் கல்யாணம் எல்லாம் கிடையாது எங்களுக்கு. எல்லோரையும் சமமாக பாவிப்போம். பெரியவர் கள் வேலையில் ஆழ்ந்திருக்கும் நேரத்தில், அதாவது நாளுக்கு பதினைந்து மணி நேரம் குழந்தைகள் எல்லோரும் பள்ளியில் இருப்பார்கள். அவர்களுக்குத் தேவையான வசதிகள் எல்லாம் அங்கே இருக்கும். பெரியவர்கள் வீடு திரும்பியதும் அவரவர் கள் பசங்களை அவர்களிடம் கொண்டு வந்து விட்டு விடுவார்

கள். சாப்பாடு எல்லா வேளையும் எல்லோருக்கும் இலவசமாக தரப்படும்." வாகனத்தை ஓரிடத்தில் நிறுத்திவிட்டு, சாப்பாட்டை எடுத்து வந்தான் வேகா.

"சாப்பிடுங்கள். உங்களுக்கு எந்த விதமான தீங்கும் செய்யாது. நீங்கள் சாப்பிடும் ஆகாரத்தைப் போல் இதைச் சாப்பிட்டால் ஹைபர் டென்ஷன். இதயநோய் எதுவுமே வராது. எங்க கிரகவாசிகளுக்கு சக்தியைத் தருவதற்காகத் தயாரிக்கப்பட்டவை."

உணவு பதார்த்தங்கள் ரொம்ப ருசியாக இருந்தன. வாயில் போட்டதுமே கரைந்து விட்டன. கொஞ்சம் சாப்பிட்டதுமே வயிறு நிரம்பிவிட்டது. அவர்கள் இன்னொன்றையும் உணர்ந்து கொண்டார்கள். வேகா கிரகவாசிகளுக்குத் தாகம் கிடையாது.

"ஓய்வு நேரங்களில் நீங்கள் என்ன பொழுது போக்கைக் கடைப்பிடிப்பீங்க?" கேட்டான் நிகில்.

"தெரிந்தால் நீங்க ஆச்சரியப்படுவீங்க. காட்டச் சொல்றீங்களா?"

"காட்டுங்கள்."

வாகனத்தில் டி.வி. ஸ்கிரீனைப் போல் ஒன்று தெரிந்தது. அதில் தென்பட்ட காட்சி சட்டென்று அவர்களுக்குப் புரியவில்லை. புரிந்ததும் சிலையாகிவிட்டார்கள்.

அது ஒரு பெரிய ஹால். மக்கள் நிரம்பியிருந்தார்கள். செருப்புகளைத் தூக்கி வீசியெறிந்து கொண்டிருந்தார்கள். நாற்காலிகளைத் தூக்கி மோதிக் கொண்டார்கள். பெரிதாக கத்திக் கொண்டிருப்பது போல் அவர்களின் வாயசைப்பிலிருந்து புரிந்து கொள்ள முடிந்தது.

"அது உங்கள் பூமியில் ஏதோ ஊரில் நாடாளுமன்ற

கூட்டம். நாட்டை முன்னுக்குக் கொண்டு வருவதற்காக வாக்குறுதி கொடுத்துவிட்டு மக்களால் தேர்ந் தெடுக்கப் பட்டவர்களாம் அவர்கள். நாங்கள் பார்த்து மகிழ்வற்கு இதைவிட வேடிக்கையான காட்சி வேறென்ன இருக்க முடியும் சொல்லுங்கள். இதைத் தவிர விதவிதமான ஆட்டம் பாட்டு களுடன் எளிதில் பொழுது போகும் எங்களுக்கு."

"அவ்வளவு கூர்மையாக எங்கள் பூமியை கவனித்து வருகிறீர்களா?"

"எப்போதும் இல்லை. அதான் சொன்னேனே. ஒரு நாளைக்கு ஏழிலிருந்து எட்டு மணி வரையிலும் எங்களுக்கு ஓய்வு நேரம். அதில் சில நேரம் இப்படிப்பட்ட காட்சிகளைப் பார்ப்போம்" என்று திரும்பினான் வேகா.

"இனி நாம் திரும்புவோம். நீங்க உடனே உங்கள் வாகனத்திலேயே ஆல்ஃபா கிரகத்திற்குப் போய்ச் சேர்ந்தால் நல்லது. அதற்குத் தகுந்த ஏற்பாடுகள் நடந்து முடிந்து விட்டன." சொன்னான் வேகா பி 7. "உங்களுக்கு ஐ.நா. சபை இருப்பது போல் எங்களுக்கு இண்டர் பிளானெடரி சொஸட்டி அந்த ஆல்ஃபா கிரகத்தில் இருக்கு. எங்கள் சார்பில் லாயர்கள் வருவார்கள். நீங்களே உங்கள் சார்பில் வாதாடலாம்."

"உங்கள் உதவியை மறக்கவே முடியாது. ஆல்ஃபா கிரக வாசிகளுடன் போட்டியில் நாங்கள் வெற்றி பெறுவதற்கு ஏதாவது வழி சொல்லித் தரமாட்டீர்களா?" கேட்டான் நிகில்.

"அவர்களின் நியூட்ரான் சக்தி சில நூற்றுக் கணக்கான ஆண்டுகளுக்கு மட்டுமே போதுமானதாக இருந்தது. அவர்கள் வேறு ஏதாவது சக்தியைத் திரட்டிக்கொள்ள முயன்றால் நாங்கள் அவர்களுக்கு உதவி செய்தாக வேண்டும். இண்டர் கேலக்ஸி வாயேஜில் அவர்கள் ஆண்ட்ரோமோடாவிலிருந்து நியூட்ரான் சக்தியைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆனாலும்

அவர்கள் உங்க சூரியனையே தேர்ந்தெடுத்தார்கள் என்றால் அதற்குக் காரணம் ஏதாவது இருக்க வேண்டும். அது என்ன வென்று நீங்களே தெரிந்துகொண்டால் நல்லது."

"அவர்கள் எங்களை வசப்படுத்திக் கொண்டு தமக்கு வேண்டிய விதத்தில் பேச வைத்தால் என்ன செய்வது?" கேட்டான் யஷ்வந்த்.

"அப்படி எதுவும் நடக்காது. ஐந்து கிரகங்களிலிருந்தும் ஐந்து பேர் ஜட்ஜ்கள் இருப்பார்கள். இண்டர் பினாடரி சொஸைட்டியில் உங்களுக்கு எந்த அநியாயமும் நேராமல் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு அவர்களுடையது. எங்க ஜட்ஜ்களோடு கூட நானும் வருவேன்."

"நீங்க இந்த கிரகத்திற்கு, அதாவது இந்த நாட்டுக்கு அதிகாரியா?" கேட்டான் வாயுபுத்ரன்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. இங்கே அதிகாரிகள் என்று யாரும் கிடையாது. அவங்கவங்க கடகைளை அவங்கவங்க சரிவர செய்தால் அதிகாரிகளின் அவசியமே இல்லை. எலலோருமே சமமான அறிவுடையவர்கள்தான் இங்கே. எங்களுக்குப் பொறுப்புகளை சமமாக பங்கிட்டுத் தரும் இயந்திரங்கள் இங்கே இருக்கின்றன. தற்சமயம் உங்களை கொண்டு இண்டர்பிளானடெரி சொஸைட்டிக்கு அழைத்துச் செல்லும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கு" என்றான் வேகா பி 7.

"நீங்களும் எங்களோடு வரப் போறீங்களா?"

"இல்லை. சீக்கிரத்தில் வந்து சேர்ந்து கொள்வோம். நீங்கள் போக வேண்டிய வழியைப் பற்றிக் கம்ப்யூட்டருக்கு ஃபிட் செய்துவிட்டோம். உங்கள் பாஷையில் சொல்லணும் என்றால் ஒரே வார்த்தையில் சொல்லிவிட்டுப் போகிறேன். விஷ் யூ குட்லக்." வேகா பி 7 போய்விட்டான்.

சுஹ்ருத்பாவ் காற்றில் எழும்பியது.

இண்டோர் ஸ்டேடியம் போன்ற பெரிய ஹால் அது. ஒரு பக்கத்தில் ஐந்துபேர் ஜட்ஜ்கள் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுக்கு இடது பக்கத்தில் பூமியிலிருந்து வந்த நால்வருக்கு சோபாவைப் போன்ற இடம் ஒதுக்கப் பட்டிருந்தது. வலது பக்கத்தில் நாற்காலியைப் போன்ற ஆசனம் இருந்தது. ஆல்ஃபா கிரகத்திலிருந்து வாதம் புரிய ஒரே ஒரு நபர்தான் வந்திருந்தார். பூலோகவாசிகளின் சார்பில் யஷ்வந்தைத் தேர்ந் தெடுத்துக் கொண்டார்கள்.

ஹால் முழுவதும் ஜனங்கள் நிரம்பிருந்தார்கள். அவர்கள் வந்த வாகனத்தை அடையாளம் புரிந்துகொண்டான் வாயுபுத்ரன். எல்லாம் வேறு வேறு விண்வெளி வாகனங்கள். அதாவது ஐந்து கிரகங்களிலிருந்து ஜனங்கள் வந்து சேர்ந் திருக்கிறார்கள். அந்தக் கிரகங்களில் இப்படிப்பட்ட கூட்டம் கூடுவது இதுதான் முதல் தடவை.

வாதத்தை தொடங்கலாம் என்பது போல் லேசான சத்தம் கேட்டது. யஷ்வந்த் தொடங்கினான்.

“எங்களுடைய பூமி. எங்கள் சூரிய குடும்பத்தில் உள்ள சூரிய சக்தியை வினியோகித்துக் கொள்வதற்கு யாருக்காவது தடை இருந்தால் இண்டர் பிளானடெரி சொஸைட்டிக்குத் தெரிவிக்கும்படி வந்த குறிப்பை நாங்கள் பெற்றுக் கொண்டோம். எங்கள் சூரிய குடும்பத்தில் ஒன்பது கிரகங்கள் இருந்த போதிலும் அதில் பூமி ஒன்றுதான் பிராணிகள் வசிக்கும் இடம். சுமார் நூறு மில்லியன் ஜனத் தொகை கொண்டது. ஆல்ஃபா கிரகவாசிகள் பரிசோதிக்க வந்து எங்கள் சூரியனின் சக்தியைக் கொஞ்சம் எடுத்துக் கொண்ட போதே, விண்வெளியில் சுற்றிக் கொண்டிருந்த எங்கள் விண்வெளிப் பட்டணம் அழிந்துவிட்டது. நிறைய உயிர்ச்

சேதம் ஏற்பட்டது. சூரியனின் சக்தி குறையக் குறைய அதன் பிரபாவம் எங்கள் பூமியில் உள்ள உயிர்களின் மீது படும். எங்கள் மனித இனமே அழிந்துவிடும். அதனால்தான் எங்கள் பூலோகத்துச் சார்பில் எங்கள் சூரியனிடமிருந்து எந்த விதமான சக்தியையும் எடுத்துக்கொள்ளக் கூடாது என்று ஆல்ஃபா கிரகவாசிகளுக்கு விண்ணப்பித்துக் கொண்டு, எங்கள் வேண்டுகோளை பிளானடெரி சொஸைட்டிக்குத் தெரியப் படுத்துகிறோம். எங்கள் வேண்டுகோளைப் பரிசீலித்து எங்களுக்கு நியாயம் வழங்க வேண்டுகிறோம்." தன் டிஃபன்ஸ் வாதனையை முடித்துக் கொண்டான் யஷ்வந்த்.

"உங்கள் தீர்மானம் என்ன? அவர்களுடைய வேண்டு கோளை ஏற்றுக் கொள்கிறீங்களா?" கேட்டார் ஜட்ஜ் ஆல்ஃபாவை.

"உங்களுக்குத் தெரியும். எங்களிடமுள்ள நியூட்ரான் சக்தி ரொம்பவும் குறைந்து கொண்டே வருகிறது என்று. இந்த விண்வெளியில் சில லட்சக் கணக்கான நட்சத்திரங்கள் இருந்தாலும், நாங்கள் இந்தச் சூரியனையே தேர்ந்தெடுத்தற்கு சில காரணங்கள் உள்ளன. முதல் காரணம் மற்றவற்றோடு ஒப்பிட்டால் அது மிகச் சிறிய நட்சத்திரம். அந்தச் சக்தியை பொருளாக மாற்றினால் அது இரண்டு மைல்கள் பரப்பளவு கொண்ட பொருளாகத்தான் இருக்கும். அதை எங்கள் கிரகத் திற்குக் கொண்டு போவது ரொம்ப சுலபம். மேலும் சூரியன் செகண்ட் ஜெனரேஷன் ஸ்டார். அதனால் இவர்களின் சூரியனையே கொள்ளையடித்து சக்தியை எடுத்துக் கொள் வதற்கு அனுமதி தரும்படியாக கேட்டுக் கொள்கிறோம்" என்றான் ஆல்ஃபா.

யஷ்வந்த் ஆவேசத்தோடு, "இது அநியாயம். சகல பிராணிகளும் சமம் என்று மேற்கோள் காட்டும் நீங்கள், உங்களைப் பற்றி மட்டும்தான் யோசிக்கிறீர்கள். அந்தச் சூரிய

சக்தியின் மீது சில கோடி ஜனத்தொகை கொண்ட ஒரு கிரகம் ஆதாரப்பட்டிருக்கிறது என்று தெரிந்திருந்தும், நீங்கள் இந்த முடிவை எடுத்துக் கொண்டது அராஜகம். எங்கள் சூரியனிட மிருந்து இந்தச் சக்தியையும் எடுத்துக்கொள்ள நாங்கள் சம்மதிக்க மாட்டோம். இந்த விஷயத்தில் எங்களுக்கு நியாயம் கிடைக்கும்படி நீங்கள்தான் செய்ய வேண்டும்." யஷ்வந்த் ஜட்ஜைப் பார்த்துச் சொன்னான்.

"இதற்கு உங்கள் பதில்?" கேட்டார் வேகா ஜட்ஜ் ஆல்ஃபாவைப் பார்த்து. "நிறைய பிராணிகள் வசிக்கும் பூலோகவாசிகளிடம் உங்களுக்கு ஏன் கருணை இல்லை?"

"இல்லை. அந்தச் சூரியனையே எடுத்துக் கொள்வதால் எங்களுக்குச் சக்தி மட்டுமே இல்லை. இன்னும் பல லாபங் களும் ஏற்படும்" என்று ஆல்ஃபா ஒரு சிறிய பாட்டில் போன்ற பொருளை எடுத்தான். "இது என்னவென்று உங்களுக் கெல்லாம் தெரியும். சமீபத்தில் இதை நாங்கள் எல்லா கிரகங் களுக்கும் சாம்பிள் அனுப்பி வைத்தோம். ரொம்ப ருசியாக இருப்பதாக நீங்கள் எல்லோரும் பாராட்டினீர்கள். அந்த பூமி நம் ஆதினத்திற்குள் வந்தால் இந்த ஆகாரம் நம் ஐந்து கிரக வாசிகளுக்கும் சில ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் போது மானதாக இருக்கும். எங்கள் எல்லோருக்கும் பிடித்த உணவு இது."

"அது என்ன?" கேட்டான் யஷ்வந்த் சந்தேகத்துடன்.

"எங்கள் பறக்கும் தட்டு உங்கள் பூமிக்கு அருகில் வந்த போது, உங்கள் விண்வெளிப் படகுஒன்று அதற்கு சமீபத்தில் வந்தது. நாங்கள் அதில் இருந்த ஆளை ஹிப்னடைஸ் செய்து வெளியே இழுத்தோம். அவன் பெயர்..."

"ராய்..." என்றான் யஷ்வந்த்.

"ஆமாம். ராய்" என்று நிறுத்திவிட்டு மெல்ல சொன்னான் ஆல்ஃபா. "அவன் மாமிசம் இது."

அனூஹ்யா வீலென்று அலறி முகத்தைக் கைகளால் பொத்திக் கொண்டாள். கேட்டுக் கொண்டிருந்த நால்வரின் உடல்களும் பயத்தால் சிலிர்த்தன. யஷ்வந்தின் முகம் கோபத்தால் சிவந்தது. கஷ்டப்பட்டு ஆவேசத்தை அடக்கிக் கொண்டான். அவன் குரல் நடுங்கியது.

"எங்கள் பூமியில் நாகரீகம் அடையாத இனம் கானிபால்ஸ். ஆனால் விஞ்ஞானத்தில் இவ்வளவு தூரம் முன்னேறி இருக்கும் கிரகவாசிகளான நீங்கள்கூட சக மனிதர்களின் உயிரை எடுத்து மாமிசத்தைப் புசிக்கும் அளவிற்குத் தாழ்ந்து விடுவீர்கள் என்று நினைக்கவில்லை."

"சக மனிதர்கள் என்ற வார்த்தையை நான் ஆட்சேபிக்கிறேன். நாம் மனிதர்கள் இல்லை மிலார்ட்! கொஞ்சம் யோசித்துப் பேசச் சொல்லுங்கள் யஷ்வந்தை. யார் தாழ்ந்தவர்கள்? பூமியில் இருப்பவர்கள் மாமிசம் சாப்பிடுவதில்லையா? ஆட்டையும், மாட்டையும், மீனையும் கைக்குக் கிடைத்த பறவைகளையும் கொன்று பதப்படுத்தி டப்பாக்களில் வைத்து விற்பதில்லையா?"

"எங்கள் பூமியில் மாமிசம் புசிக்கும் மனிதர்கள் இருக்கிறார்கள். உண்மைதான். ஆனால் இந்த மாதிரிச் சகமனிதர்களைத் தின்னும்படியான நீசமான நிலையில் இல்லை அவர்கள். மிருகங்களின் மாமிசம் எங்களுக்கு உணவு. அதைச் சாப்பிட்டாக வேண்டும். வேறு வழியில்லை எங்களுக்கு."

"எந்த விதத்தில் வேறு வழியில்லாமல் போய்விட்டது உங்களுக்கு? அவை வாயில்லா ஜீவன்கள், பலவீன நிலையில் இருப்பவை. அதுதானே காரணம்? அப்படி என்றால் எங்களு

டைய விஞ்ஞானம், முன்னேற்றம் இவற்றுக்கு முன்னால் மனிதர்கள்கூட எதற்கும் பயன்படாத ஜீவன்கள்தான். உங்களுக்கு அவை மிருகங்கள் என்றால் எங்களுக்கு நீங்கள் மிருகங்கள்" என்றான் ஆல்ஃபா.

அங்கு ஊசி விழுந்தாலும் கேட்கும்படியான நிசப்தம் ஏற்பட்டது. எல்லோரும் யஷ்வந்தையே பார்த்தார்கள். அவன் என்ன பதில் சொல்லப் போகிறான் என்று வாயுபுத்ரனுக்குப் புரியவில்லை.

"நீங்கள் எங்களைவிட எல்லா விதத்திலேயும் உயர்ந்த நிலையில் இருக்கீங்க. அப்படியும் நாங்கள் செய்யும் தவறையே நீங்களும் செய்யணும் என்று ஏன் நினைக்கிறீங்க? அந்த வேகா கிரகவாசிகளோ அல்லது வேறு கிரகவாசிகளோ பலவீன மடைந்துவிட்டால் அவர்களை இப்படித்தான் கொன்று சாப்பிட முடியுமா உங்களால்? நாங்கள் மிருகங்கள் இல்லை. எங்களுக்கும் பேசும் சக்தி இருக்கிறது. எங்கள் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு மொழியிருக்கிறது. கருணை, இரக்கம் போன்றவை எங்களுக்கும் உண்டு."

யஷ்வந்த் வாதத்தைக் கேட்டதும் ஆல்ஃபா கிரகவாசி சிரித்தான். "தந்தத்திற்காக யானைகளையும், சர்மத்திற்காக முதலைகளை, முயல்களை உயிரோடு கொல்லும் மனிதர் களிடமா மன்னிப்பு காட்டுவது?"

நிகில், வாயுபுத்ரன், அனூஹ்யா மூவரும் யஷ்வந்தையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

யஷ்வந்த் சொன்னான். "எந்த பிராணியாக இருந்தாலும் பரிணாம சித்தாந்தத்தின் மீதுதான் ஆதாரப்பட்டிருக்கிறது ஜஸ்டிஸ்! சில சுயநலவாதிகளைக் கொண்டு எல்லா மனிதர் களையும் எடைபோடுவது தவறு. வேகா கிரகாவாசிகள்

ஆல்ஃபா கிரகாவாசிகள் அளவுக்கு புத்திசாலிகளாக இல்லாமல் இருக்கலாம். அதற்காக அவர்களைக் கொல்வோம் என்றால் இனி நீதி நியாயம் எங்கே இருக்கு? விஞ்ஞானம், அறிவு வித்தியாசம் உள்ளவர்கள். அது ஒன்றுதான் வேறுபாடு. நாங்கள் ஆதரவு இல்லாதவர்கள்என்பதற்காக எங்களை பலியிட்டு விடாதீர்கள்."

ஆல்ஃபா சொன்னான். "சரி. நீங்களும் நாங்களும் ஒன்றே என்று வைத்துக்கொள்வோம். சில தவிர்க்க முடியாத சூழ் நிலையில் நாங்கள் உங்களைக் காட்டிலும் பலவீனமடைந்து விட்டோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது நீங்கள் எங்கள் மீது படையெடுக்க மாட்டீர்களா?"

"மாட்டோம்." திடமாகச் சொன்னா யஷ்வந்த்.

"இன்னொரு முறை யோசித்துப் பார்த்துவிட்டுச் சொல்லுங்கள்."

"மாட்டவே மாட்டோம்."

ஆல்ஃபா கையை நீட்டினான். டி.வி. திரையின் மீது ஒரு படம் வந்தது. "மிலார்ட்! அறிவில் தமக்குச் சமமானவர்களின் மீதும், சக உயிர்களின் மீதும் படையெடுக்க மாட்டோம் என்று இந்த மனிதன் சொல்கிறான். பல கோடிக் கணக்கான குரல்கள் ஜெயில் தண்டனை கொடுக்கக் கூடாது என்று வேண்டுகோள் விடுத்த தலைவன் இவன். இதற்கு யஷ்வந்த் என்ன பதில் சொல்லப் போகிறான்?"

யஷ்வந்த் சிலையாகிவிட்டான்.

"வாயில்லா ஜீவன்களை இம்சிப்பது தவறு இல்லை என்றும், அது பரிணாம வளர்ச்சியின் சித்தாந்தம் என்றும், வாழ்க்கையின் போராட்டத்தில் ஒரு பகுதி என்றும் பதிலைச் சொல்லிவிட்டால் எங்கள் கிரகவாசிகள் பூலோகவாசிகளைக்

கொன்று புசிக்க மாட்டோம். அவர்களையும் சக பிராணிகளாக பாவிப்போம். இந்த தலைவனுக்கும், அவன் சார்ந்திருந்த இனத்தாருக்கும் நேர்ந்த அநியாயத்திற்கும் பதில் சொல்லச் சொல்லுங்கள், போதும்."

யஷ்வந்த் என்ன வேசுவதென்று புரியாமல் அப்படியே நின்றுவிட்டான்.

டி.வி. திரையின் மீது வில்சன் மண்டேலாவின் படம் தெரிந்தது.

ஆல்ஃபா முடித்தான். "அவ்வளவுதான் மிலார்ட்! என் வாதம் முடிந்துவிட்டது."

"ஜட்ஜ்கள் தம் தீர்ப்பை நாளைக் காலையில் சொல்லு வார்கள்" என்றான் வேகா.

யாருமே பதில் பேசவில்லை.

"நாங்கள் ஜெயிப்போமா?" என்று கேட்டான் நிகில் மெதுவாக.

"எங்கள் இரக்கம் உங்கள்மீதுதான் இருக்கு நிகில். ஆனால். ஆல்ஃபா வாசிகள் ரொம்பப் பிடிவாதமாக இருக் கிறார்கள். அவர்கள் பக்கமும் உண்மை இருக்கிறது."

"ஆமாம். அவன் பேசியதைக் கேட்டால் உண்மைதானே என்று தோன்றுகிறது. மனித இனம் தலை குனிய வேண்டிய வாதம் அது" என்றான் யஷ்வந்த்.

வேகா விடை பெற்றுக்கொண்டு போய்விட்டான்.

எல்லோரும் மௌனமாக உட்கார்ந்திருந்தார்கள். யாரு டைய மனமும் தம் வசத்தில் இல்லை.

வாயுபுத்ரன் தன் அறைக்குப் போய்விட்டான். அவன்

அறையிலிருந்து பாட்டுச் சத்தம் கேட்டது. அவர்களுடைய தீர்ப்பு முன் கூட்டியே தெரிந்து போய்விட்டது போலிருந்தது எல்லோருக்கும்.

"நாம் இங்கேயே சாக வேண்டியதுதான்" என்றான் நிகில்.

"மரணத்தைப் பற்றிய வருத்தத்தைவிட, இவ்வளவு தூரம் வந்துவிட்டு, இப்படித் தோல்வியடைந்ததுதான் ரெம்ப வேதனையாக இருக்கிறது" என்றான் யஷ்வந்த்.

அறைக்குள் போன வேகத்திலேயே திரும்பி வந்தான் வாயுபுத்ரன். அவன் முகம் இப்பொழுது தெளிவாக இருந்தது.

"ஏன் இந்த வைராக்கியம்? உயிரோடு இருக்கப் போகும் நான்கு நாட்களும் சந்தோஷமாக அனுபவிப்போம். எல்லோருக்கும் விருந்துச் சாப்பாட்டுக்கு ரெடி பண்ணு அனுஹ்யா! நிகில், நீ உதவி செய்" என்று ஆர்வத்துடன் வேலையில் மூழ்கிவிட்டான்... இடையில் பிரம்மவித்யாவுடன் விளையாடிக் கொண்டிருந்தான். அறையில் இசை எதிரொலித் துக் கொண்டிருந்தது.

அவன் கட்டாயத்தின் பெயரில்தான் எல்லோரும் டைனிங் டேபிளுக்கு முன்னால் உட்கார்ந்து கொண்டார்கள்.

"ஏன் இவ்வளவு மௌனமாக சாப்பிடறீங்க? சிரியுங்கள், பேசுங்கள். நாம் புறப்பட்ட முதல் நாளன்று எடுத்துக் கொண்ட முடிவை மறந்து விட்டீங்களா?"

"எப்படி மறப்பேன்? ஆனால் பிரச்னை நம்மைப்பற்றி இல்லை. முற்றிலுமாகத் தோல்வியடைந்து விட்டோமே என்ற வருத்தம்தான். மனித ஜாதிக்கு நம்மால் பயன்பட முடிய வில்லையே என்கிற வேதனைதான்."

"அப்படிப் பேசாதே. வந்து இப்படவே பிடித்துக் கொண்டு

போனாலும் போய் விடுவார்கள்" என்றான் நிகில். விரக்தி கலந்த புன்னகையோடு.

"இன்றைக்கு இனி வர மாட்டார்கள். அவர்களுக்கு இவ்வளவு ஆக்சிஜன் ஒத்துக் கொள்ளாது. அதுவும் வாயு புத்ரன் அறை முழுவதும் ஆக்சிஜனை விட்டிருக்கிறான். அதோடு இசை சத்தத்தை அவர்களால் தாங்கிக்கொள்ள முடியாது" என்றது பிரம்மவித்யா.

"இவர்களிடம் கடைசி ஆசையை தீர்த்து வைக்கும் சம்பிரதாயம் இருக்கோ இல்லையோ?'' கவலையுடன் சொன்னான் வாயுபுத்ரன்.

"என்ன கேட்கப் போகிறாய்?" கேட்டாள் அனூஹ்யா.

"இந்த ஆல்ஃபா கிரகத்து அபூர்வ அழகியோடு ஒரு நாள் கழிக்கணும் என்று."

என்றுமே சிரிக்காத யஷ்வந்த்கூட அதைக் கேட்டுச் சிரித்து விட்டான்.

ஜட்ஜ்களிடமிருந்து அழைப்பு வரும் வரையிலும் அவன் அது போலவே பேசிக் கொண்டே இருந்தான்.

"இரு தரப்பினரின் வாதங்களையும் கேட்ட பிறகு, பல விதமாக யோசித்துப் பார்த்தாலும், எங்களுக்கு ஆல்ஃபா கிரகவாசிகளின் வாதமே நியாயமானதாகத் தோன்றுகிறது. காரணம் இல்லாமல் தமக்குள் தாமே கொன்று கொண்டும், தமக்கு உதவுகிற மிருகங்களையே கருணையின்றி இம்சிப்பதை யும் பார்த்த பிறகு, பூலோகவாசிகளுக்கு உயிரோடு வாழும் அருகதையே கிடையாது என்று தோன்றுகிறது. அவர்களு டைய அறிவு உயிர் வாழ்வதற்காக அல்லாமல் மரண ஹோமத் திற்காகப் பயன்படுகிறது. எந்த விதமான இரக்கமும் அவர்கள்

பால் காட்ட வேண்டிய தேவையும் இல்லை. அதனால் அவர்களுடைய சூரிய சக்தியை ஆல்ஃபா கிரகவாசிகள் பயன் படுத்திக் கொள்வதாக இருந்தால், அதற்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. அவர்களுக்கு அனுமதி வழங்குகிறோம்."

அந்த தீர்ப்பை முன்பே ஊகித்திருந்ததாலும் யஷ்வந்திற்கு வருத்தமாக இருந்தது. யோசித்துப் பார்க்காமல் பூலோக வாசிகள் செய்கிற அக்கிரமங்களுக்குச் சரியான தண்டனை கிடைத்தாற் போலிருந்தது. நூறு ஆண்டுகளாக வேறு கிரக வாசிகளைப் பற்றிப் பரிசோதனைகள் செய்ததும், அரும் பாடுபட்டு அவர்களை சந்தித்ததும், பிறகு அவர்கள் பார்வையில் அக்கிரமம் செய்பவர்களாக குற்றம் சாட்டப்பட்டு தண்டனை பெற்றதும்... மனித இனம் வெட்கப்பட வேண்டிய விஷயம்.

திடீரென்று அந்த இடத்தில் எங்கிருந்தோ சத்தம் ஒலிக்கத் தொடங்கியது. அதை யாருமே உடனே கவனிக்க வில்லை சிறிய விசிலைப் போல் தொடங்கிய அந்த சத்தம் இசையாய் மாறி ஸ்டீரியோ ஃபோனிக்லிருந்து எல்லா திசைகளும் பிரதிபலிக்கும்படி எதிரொலிக்கத் தொடங்கியது. யாரோ கட்டிப் போட்டு விட்டாற்போல் மாயாஸ் அப்படியே நின்று விட்டார்கள். யஷ்வந்த் ஃபீட் செய்த சத்தத்தை பிரம்மவித்யா ரிபீட் செய்து கொண்டிருந்தது.

அந்த இடம் முழுவதும் சூனியம். ஒலியலைகள் பரவாது. பேச்சுக்கள்கூட டெலிபதி மூலம்தான் தொடர்புகொள்ளப் பட்டன. ஆனால் இந்த ஒலியலைகள் மட்டும் அபூர்வமாக சுற்றிலும் பரவிக் கொண்டிருந்தன.

கொஞ்ச நேரத்தில் அவை குறையத் தொடங்கின. ஒலியலைகள் எல்லாம் ஒன்றாக குவிந்து போய் ஒரே பக்கமாக மையத்தில் நின்றுவிட்டன. இப்பொழுது சத்தம் கேட்க

வில்லை. ஆனால் அலைகளை மட்டும் உணர முடிந்தது.

கட்டுக்குள்ளிருந்து விடுபட்டவர்களைப் போல் மாயாஸ் பரபரப்பாக ஓடிக் கொண்டிருந்தார்கள்.

"நில்லுங்கள்!" வாயுபுத்ரனின் குரல் மைக்கில் கேட்டது. எல்லோரும் நின்றார்கள்.

"ஒரு முறை பின்னால் திரும்பிப் பாருங்கள்."

திரும்பிப் பார்த்தவர்கள் அப்படியே நின்றுவிட்டார்கள்.

அங்கே மாயாஸ்களில் சிலர் காற்றில் குட்டிக்கரணம் போட்டுக் கொண்டிருந்தார்கள். பைத்தியம் பித்தவர்களைப் போல் குதித்துக் கூத்தாடிக் கொண்டிருந்தார்கள். நடந்தது என்னென்று இப்பொழுது எல்லோருக்கும் புரிந்துவிட்டது. ஆல்ட்ராஸோனிக் ஒலியலைகள் அவர்களை நான்கு பக்கங்களிலிருந்தும் சூழ்ந்து கொண்டிருந்தன. சத்தம் என்றாலே ஒவ்வாமையிருக்கும் மாயாஸ் அதைத் தாங்க முடியாமல் பைத்தியங்களாகிக் கொண்டிருந்தார்கள்.

வாயுபுத்ரன் ஜட்ஜ்களைப் பார்த்துத் திரும்பவும் சொன்னான். "எப்படியும் எங்களை கீழ்த்தரமானவர்களாக எடுத்துக் காட்டினார்கள். உங்களைவிட எல்லாவிதத்திலும் பலவீனமானவர்கள் என்றும் சொன்னார்கள். ஆனால் பூரண சக்தியடைவர்கள் என்று யாருமே இருக்க முடியாது. ஒவ்வொருவரிடமும் சில பலவீனங்கள் இருக்கும். ஒலியைத் தாங்கிக் கொள்ள முடியாதது உங்கள் பலவீனம். அதைக் கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு நாங்கள் அறிவிலிகள் என்று நினைத்தது உங்கள் தவறு. அதனால்தான் இப்படிப் பட்ட பாடத்தைக் கற்பிப்பதற்காகவே உங்கள் ஆட்களை இம்சிக்க வேண்டியிருந்தது. நீங்கள் எப்படிப்பட்ட சக்தியாக இருந்தாலும் எதிர்த்து நிற்க முடியும் என்று சொன்னீங்க.

முடிந்தால் இந்த சக்திக்கு எதிராக எதிர்த்து நில்லுங்கள் அல்லது நிறுத்துங்கள் இந்த சத்தத்தை" என்று கத்தினான்.

ஜட்ஜ்கள் யாருமே நகரவில்லை.

"அது உங்களால் முடியாது. சாதாரண சத்தத்தையே ஸ்டீரியோஃபோனிக் சௌண்டில் கேட்டால் காத தூரத்துக்கு ஓடுவீங்க நீங்க. இது அதைவிட லட்சம் மடங்கு சக்தி வாய்ந்தது. அதன் அருகில் செல்வது என்றால் சாவை வலிய வரவழைத்துக் கொள்வதுதான். சொல்லுங்கள், இன்னும் நாங்கள் உங்களைவிட அறிவில் தாழ்ந்தவர்கள் என்று நினைக்கிறீங்களா?"

"முதலில் அதை நிறுத்துங்கள். இன்னும் கொஞ்ச நேரம் நீடித்தால் அவர்கள் அழிந்து போய் விடுவார்கள்" என்றான் ஆல்ஃபா.

"நிறுத்துகிறேன். உங்க கிரகவாசிகளை ஒழிக்கணும் என்றோ, நாசமாக்க வேண்டும் என்பதோ எங்களுடைய உத்தேசம் இல்லை. ஆனால் எங்களுக்கு நியாயம் வேண்டும். உங்களைவிட நாங்கள் பலவீனமானவர்கள் என்ற வாதம் இப்பொழுது சரியில்லை என்று நிரூபணமாகிவிட்டது. உங்களைவிட நான் ஒன்றும் பெரிய விஞ்ஞானி இல்லை. சிறிய லாஜிக்கால் உங்களை தோற்கடித்தேன். புத்திசாதுரியம் உங்களுக்கு மட்டுமே சொந்தம் இல்லை என்பதை இப்பொழுதாவது புரிந்து கொள்ளுங்கள். எங்கள் சூரியனை எங்களுக்கு விட்டுக் கொடுங்கள். இதுதான் எங்களுடைய வேண்டுகோள். நீங்களும் சுகமாக இருங்கள். எங்களையும் சுகமாக வாழ விடுங்கள். சூரியன் போன்ற நட்சத்திரம் உங்களுக்கு வேறு கிடைக்கும்."

வாயுபுத்ரன் அவர்கள் பதிலுக்காக எதிர்பார்த்து நின்றான்.

ஜட்ஜ்கள் தேறிக் கொண்டார்கள். ஒருவரை ஒருவர் பொருள் பொதிய பார்த்துக் கொண்டார்கள்.

"முதலில் எங்கள் கிரகவாசிகளை அந்தச் சத்தத்திலிருந்து காப்பாற்றுங்கள்" என்றார் ஆல்ஃபா ஜட்ஜ். "இந்த விதமாக எங்களைப் பயமுறுத்திவிட முடியாது."

"உங்களை பயமுறுத்துவது எங்கள் உத்தேசமில்லை. உங்களை அழிக்கக் கூடிய ஆயுதம் எங்களிடம் இருக்கிறது என்று சமாதானத்திற்கு அடியெடுத்து வைக்கும் முயற்சி இது. இப்போது சொல்லுங்கள் உங்கள் முடிவை" என்று வாயுபுத்ரன் ரிமோட் ஸ்பீக்கரிலிருந்து சொன்னான். "பிரம்மவித்யா! இனி போதும்."

சத்தம் நின்று விட்டது.

மாயாஸ் கீழே சரிந்து விழுந்தார்கள். ஜட்ஜ்களுக்கிடையே ரொம்ப நேரம் பேச்சு வார்த்தை நடந்தது.

ஆல்ஃபா சார்பில் வந்த ஜட்ஜ் எழுந்து நின்றார். "இதற்கு முன்னால் நாங்கள் எடுத்த முடிவை மாற்றிக் கொள்கிறோம். உங்கள் சூரியன் ஜோலிக்கு இனி ஒரு நாளும் நாங்கள் வர மாட்டோம். வாயுபுத்ரன் சொன்னது உண்மை. புத்தி சாதுர்யத் திற்கு ஒரு எல்லை கிடையாது என்றவர் யஷ்வந்தைப் பார்த் துச் சொன்னான்.

"இது உங்களுக்கு பயந்து இல்லை. இந்த ஆல்ட்ரா ஸோனிக் சவுண்டுக்கு இன்ஸுலேட்டரைத் தயாரிப்பது எங்களுக்கு ஒன்றும் பெரிய விஷயம் இல்லை. அது எங்களுக் குச் சில மணி நேர வேலை. அவ்வளவுதான். புத்தி பேதலித்து விட்டவர்களை நாலு நாட்களில் குணமாக்கி விடுவோம். ஆனால் உங்க வாயுபுத்ரன் காட்டிய துணிச்சல், சமயோஜிதம் எங்களுக்கு மிகவும் பிடித்து விட்டது. அதனால்தான்

உங்களுக்குப் பரிசாக கேட்டதைத் தருகிறோம்."

அனுரஹ்யா தன்னையறியாமல் கை தட்டினாள்.

"தாங்க்யூ... தாங்க்யூ வெரிமச்" என்றான் வாயுபுத்ரன்.

"இனி நீங்கள் உங்க கிரகத்துக்குப் போகலாம். ஆனால் ஒரு கேள்வி. இங்கே சூழ்நிலையை ஏறக்குறைய சூனியமாக்கி விட்டோம். எங்களுக்கு சவுண்ட் அலர்ஜி இருப்பதுதான் அதற்குக் காரணம். ஆனால் சூனியத்தில் ஒலியலைகளை அல்ட்ராஸோனிக்காக மாற்றவல்ல சாதனத்தை எப்பொழுது கண்டு பிடித்தீர்கள்? அது எங்களுக்குத் தெரியாமல் இருப்பது ஆச்சரியமாக இருக்கிறது."

"அது எங்க யஷ்வந்த் இந்தப் பயணத்தில் கண்டுபிடித்த உயர்ந்த கருவி. அதை எங்க பிரம்மவித்யாவுக்கு ஃபீட் செய் தான். அது இந்த விதமாக பயன்பட்டது."

"கங்கிராஜுலேஷன்ஸ் யஷ்வந்த், அண்ட் குட் பை" என்றார் ஆல்ஃபா ஜட்ஜ்.

"தாங்க்யூ" யஷ்வந்த் தன் குழுவினரை பார்த்தான். எல்லோர் கண்களிலும் ஆனந்தக் கண்ணீர்.

வாயுபுத்ரன் கைகளை நீட்டினான். அனுரஹ்யா அதில் சரிந்தான். அவளைக் காற்றில் விரரென்று தூக்கிச் சுற்றினான். அவள் சிறு குழந்தையைப் போல் பெரிதாகச் சிரித்தாள்.

அதில் நிச்சியமாக ரொமான்ஸ் இல்லை.

"நன்றி என்பது உங்களுக்குப் பழக்கமாக இல்லாவிட்டா லும் இப்பொழுது மட்டும் எங்கள் நன்றியைப் பெற்றுக் கொண்டு தீர வேண்டியதுதான்" என்றான் வாயுபுத்ரன் வேகா பி 7னிடம்.

"அதற்கென்ன வந்தது? எங்கள் வழக்கத்திற்கு கட்டுப் பட்டு செய்யக் கூடியதைச் செய்தோம். உங்களுக்கு நல்லது நடந்தது. சந்தோஷம்" என்றான் வேகா பி7. "சொல்லுங்கள், உங்களுக்கு என்ன பரிசு வேண்டும்?"

"எதுவும் வேண்டாம். கொடுத்தது போதும்."

சுஹ்ருத்பாவ் பூமிக்குப் பயணம் செய்யத் தயாராக இருந்தது. எல்லோரும் சந்தோஷமாக பேசிக் கொண்டிருந் தார்கள். நிகில் மட்டும் உதாசீனமாக தனியாக ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தான். அதைப் பார்த்துவிட்டாள் அனூஹ்யா.

"நிகில்! என்ன நடந்தது?"

"ஒன்றுமில்லை. நான் எந்த சூழ்நிலையில் வந்தேன் என்று உனக்கேத் தெரியும். நாம் என்றைக்கோ விண்வெளியில் மடிந்திருப்போம் என்று அங்கே எல்லோரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது போனால் நிலைமை எப்படி இருக்குமோ? ஸ்ரீஜா வேறு கல்யாணம் செய்து கொண்டிருந்தால் நான் போய் அவளைத் தொந்தரவு செய்ய நேருமோ என்று பயமாக இருக்கு. அதைவிட இந்தச் சூனியத் தில் கலந்துவிட்டால் தேவலை இல்லையா?" என்றான் அவன் வேதனையுடன். அவர்கள் பேச்சைக் கேட்டுவிட்டு வேகா வி செவன் அருகில் வந்தான்.

"நீங்க பூமியை விட்டுப் புறப்பட்டு வந்து எவ்வளவு நாளாச்சுன்னு நினைக்கிறீங்க?" என்று கேட்டான்.

"பிரம்மவித்யாவின் கணக்குப்படி நான்கு வருஷங்கள்."

அவர்களைத் தன்னோடு வரும்படி வேகா வலுக் கட்டாயமாக அழைத்துச் சென்றான். ஒரு பெரிய பிளானடோரியம் போல் இருந்தது அது. அவன் சில ஸ்விட்சு களைத் திருப்பினான். திரையில் படம் தென்பட்டது. ஆடை

யணிந்த முறையிலிருந்து அது பூமி என்றும் இந்தியா என்றும் புரிந்தது. ஒரு பெண் காரை விட்டிறங்கி நடந்து கொண்டிருந் தாள். இருபத்தெட்டு வயது இருக்கக்கூடும். இரு குழந்தைகள் அவளோடுகூட இருந்தார்கள்.

"அவள் யாரென்று அடையாளம் தெரியவில்லையா?"

நிகில் தெரியவில்லை என்று தலையை அசைத்தான். வேகா இன்னொரு கண்ட்ரோலைத் திரும்பினான். அந்தப் பெண்ணின் முகம் மட்டும் க்ளோசப்பில் தெரிந்தது.

"இப்பொழுது?"

நிகில் கூர்ந்து கவனித்துவிட்டு "ஸ்ரீஜாவைப் போல் சாயல் தென்படுகிறதே" என்றான். அருகில் இருந்த குழந்தைகளைப் பார்த்து அவன் முகம் வாடிவிட்டது. ஆனால் அந்தப் பெண் முற்றிலும் ஸ்ரீஜாவைப் போல் இல்லை. நான்கு வருடங்களில் அவ்வளவு மாறுதல் ஏற்படுவது கஷ்டம்."

"ஸ்ரீஜா..." என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான். அருகில் நின்றபடி அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த வேகா" அவள் உன் மனைவி ஸ்ரீஜா இல்லை நிகில்" என்றான் மெதுவாக.

"பின்னே?" சந்தேகத்தோடு கேட்டான்.

"ஸ்ரீஜாவின் பேத்தியின் மகள்"

ஷாக் அடித்தாற்போல் சிலையாகிவிட்டார்கள் அங்கிருந்த அனைவரும்.

"நீங்கள் நினைப்பது போல் நீங்க பூமியைவிட்டு வந்து நான்கு வருடங்கள் ஆகவில்லை. எழுபத்தாறு வருஷங்கள் ஆகிவிட்டன."

ஒரு குளிர்ந்த அலை தம்மை வந்து அப்படியே சூழ்ந்து

கொண்டாற்போல் நடுங்கிவிட்டார்கள் அவர்கள். எ...மு...ப...த்... தா...று... வருஷங்களா? தாம் இப்பொழுது போய்ச் சேரும் போது தம் மனிதர்கள் யாருமே இருக்க மாட்டார்கள். மூன்று நான்கு தலைமுறை கழிந்து விட்டிருக்குமா?

"நீங்கள் பிளாக் ஹோலில் சுமார் எழுபது வருஷங்கள் தூங்கிவிடீர்கள்" என்றான் வேகா.

நிகில் கண்களில் நீர் நிரம்பியது. வெகு நேர நிசப்தத் திற்குப் பிறகு வாயுபுத்ரன் கேட்டான்.

"பின்னே பிரம்மவித்யா ஏன் பொய் சொன்னது?"

"ஒலியின் வேகத்திற்கு சமமாக பயணம் செய்ததால் உங்களிடம் பெரிய மாறுதல் எதுவும் ஏற்படவில்லை. உங்கள் சந்தோஷத்தைக் குலைத்து, பயத்தை அதிகரிக்கும்படி செய்வதில் பிரம்மவித்யாவுக்கு விருப்பம் இல்லை. அவ்வளவு அவசியம் இல்லாத இந்த விஷயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து உங்களை மனதளவில் கஷ்டப்படுத்த அந்த கம்ப்யூட்டருக்குப் பிடிக்கவில்லை. சிறிய ராக்கெட்டிற்குள் நான்கு சுவர்களுக்குகிடையே எழுபத்தாறு வருடங்களைக் கழித்ததாக தெரிந்தால் நீங்கள் உடலளவை விட மனதளவில் மிகவும் சோர்ந்து விடுவீர்கள் என்று பயந்ததால், பிரம்மவித்யா இந்த விஷயத்தை சொல்லாமல் மறைத்துவிட்டது."

அந்த இடத்தில் வேதனையோடு கூடிய நிசப்தம் சூழ்ந்து கொண்டது.

நிகில் முகம் முற்றிலும் வாடிவிட்டது. அனுஹ்யாவுக்கு அண்ணன், அண்ணி, அவர்கள் குழந்தைகள் நினைவுக்கு வந்தார்கள். நிகிலையே பார்த்துக் கொண்டிருந்த வேகா அந்த நிசப்தத்தைச் சிதறிடித்தபடி "உங்கள் மகள் எப்படி இருந்தாள் என்று என்னால் காட்ட முடியும் என்று நினைக்கிறேன்" என்றான்.

அதைக் கேட்டுச் சட்டென்று நிமிர்ந்து "எப்படி?" என்று கேட்டான் நிகில் வியப்புடன்.

"டைம் மிஷின் மூலமாக! பரிசோதனை இன்னும் முடிய வில்லை. இருந்தாலும் இரு நூறு வருஷங்களுக்கு முன்பு வரை அட்ஜெஸ்ட்மெண்ட் செய்ய முடியும்."

"டைம் மிஷினா?"

"ஆமாம். கடந்த காலத்தைக் காட்டக் கூடியது. கடந்த காலத்திற்குப் போகக் கூடியது."

"நாங்கள் ஃபிக்ஷனில் படித்திருக்கிறோம்."

"ஃபிக்ஷனை உண்மையாக்கக் கூடிய அபூர்வமான சாஸ்திரம்தான் விஞ்ஞானம்" என்று சொல்லிக்கொண்டே அவன் ஜேபியிலிருந்து சிறிய டிரான்ஸிஸ்டரைப் போன்ற ஒன்றை வெளியே எடுத்தான். அதை மளமளவென்று அட்ஜெஸ்ட் செய்தான். திரையில் காட்சிகள் மாறிக் கொண்டே வந்து ஓரிடத்தில் நின்றன. நிகில் கண்கள் அகல விரிய பார்த்துக் கொண்டிருந்தான்.

சின்னத் திரையில் ஸ்ரீஜா தன் மகளுடன் தென்பட்டாள். மகளுக்கு உணவை ஊட்டிக் கொண்டிருந்தாள்.

"குழந்தை பிறந்த நாளை கிராண்டாக கொண்டாட லாம்னு இருக்கிறேன்" என்றாள் ஸ்ரீஜாவின் தாய்.

"வேண்டாம் அம்மா. தந்தையில்லாத குழந்தை, தன் சக அனாதைக் குழந்தைகளோடு சேர்ந்து பிறந்த நாளைக் கொண்டாடினால்தான் எனக்குச் சந்தோஷம்" என்றாள் ஸ்ரீஜா. காட்சி மறைந்துவிட்டது.

நிகில் முகத்தில் சந்தோஷமும், திருப்தியும் தென்பட்டன. கண்ணீரை மற்றவர்கள் பார்க்காத விதமாக முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

“நானும் ஒரு முறை பார்ககலாமா?” கேட்டான் வாயு புத்ரன்.

“யாரை?” கேட்டான் நிகில்.

“எனக்கு இந்தப் பெயரை வைத்து என் வளர்ச்சியைப் பார்க்காமலேயே போய்விட்ட என் கொள்ளுத் தாத்தாவைப் பார்க்கணும்” என்றான் வாயுபுத்ரன்.

வேகா அவனிடம் டைம் மிஷினைத் தாந்தான்.

வாயுபுத்ரன் 1989 என்று அழுத்தினான். திரையின் மீது “உதயம்” ஆபீசு தென்பட்டது. போர்ட் ஆஃப் டைரக்டர் களுக்கு நடுவில் ஒரு சிறுவன் உட்கார்ந்திருந்தான்.

“பூமி தன்னைத்தான் சுற்றி வர எவ்வளவு நேரமாகும்னு சொல்ல முடியுமா?” யாரோ கேட்டார்கள்.

“இருபத்து மூன்று மணி ஐம்பத்தாறு நிமிஷங்கள்.” சுமார் எட்டு வயது சிறுவன் ராம்மோகன் பதிலளித்தான்.

“பெரியவன் ஆனதும் என்னவாக ஆகப்போகிறாய்?”

“ஆஸ்ட்ரோநாட்.”

அதற்குப் பிறகு இறக்கும் தருவாயில் இருந்த ராம்மோகன் தென்பட்டார்.

“ஆஸ்ட்ரோநாட் ஆக்கணும் இவனை’’ என்றார் கையிலிருந்த குழந்தையைப் பார்த்து.

“முதலில் பெயரைச் சொல்லுங்கள்.”

அவர் கோமாவில் ஆழ்ந்து போய்க் கொண்டிருந்தது புரிந்தது.

“வாயுபுத்ரன்!”

சுஹ்ருத்பாவ் மேலே எழும்புவதற்குத் தயாராக இருந்தது. நால்வரும் அங்கே வந்து சேர்ந்தார்கள். பூலோகவாசிகளைக் கடைசி முறைாக பார்ப்பதற்காக வேகா கிரகவாசிகள் கும்பல் கும்பலாக அங்கே வந்து சேர்ந்திருந்தார்கள்.

"நீங்கள் எங்களுக்கு செய்த உதவியை எங்கள் பூலோக வாசிகள் எப்போதும் நினைவில் வைத்திருப்பார்கள்" என்றான் யஷ்வந்த்.

"நாங்கள் செய்தது எதுவும் இல்லை. ஆல்ஃபா கிரகவாசி களின் கண்ணோட்டத்தில் உங்களையும் ஜீவராசிகளாக ஏற்றுக் கொண்டார்கள். அது உங்களுடைய வெற்றி" என்றான் வேகா பி 7.

"நாம் போய் சேருவதற்குள் நூறு ஆண்டுகள் ஆகிவிடும். அப்பொழுதாவது மனிதன் தன்னுடைய தவறுகளைத் தெரிந்து கொள்வான் என்று நம்புவோம்" என்றான் நிகில்.

வேகா அவனிடம் வந்தான். "உங்கள் கிரகவாசிகளின் சார்பில் என்ன பரிசு வேண்டும் என்று கேட்டதற்கு, கொடுத்ததே போதும் வேறு எதுவும் வேண்டாம் என்று சொன்னாய் நினைவிருக்கிறதா?"

"ஆமாம்."

"உனக்கு ஒரு அபூர்வமான பரிசு தரப்போகிறோம் நாங்கள்."

"அது என்ன?"

"உன் மனைவியையும், மகளையும்."

நிகில் திக்பிரமை அடைந்து "எப்படி?" என்று கேட்டான்.

"ஒளிவேகத்திற்குக் கிட்டதட்ட மூன்று மடங்கு அதிக வேகத்துடன் உங்களை பூமிக்கு அனுப்புவதன் மூலமாக."

அவ்விடத்தில் ஊசி விழுந்தாலும் கேட்கும்படியான நிசப்தம்!

அந்த நால்வருமே விஞ்ஞானிகள். வேகா சொன்னது புரிந்தது. ஒளியின் வேகத்தைவிட அதிக வேகத்துடன் பிரயாணம் செய்வது என்றால்...

கடந்த காலத்திற்குப் பயணம் செய்வது...

Travelling into the fast...

"எங்கள் ஃப்ளோரா வேகா கிரகவாசிகளின் சார்பில் இது உங்களுக்குப் பரிசு. ஆனால் ஒரு விஷயம். அவ்வளவு வேகத்துடன் பயணம் செய்யும் உங்களுக்கு பூமியின் ஈர்ப்பு சக்தி வட்டத்திற்குள் நுழைவதற்குள் கூடியவரைக்கும் எடை யைக் குறைக்க வேண்டியிருக்கும். எடையைக் குறைத்து வேகத் தைக் கட்டுப்படுத்த முடிந்தால் க்ஷேமமாக இறங்கி விடுவீர்கள்.

"சரி. தாங்க்ஸ் அண்ட் குட் பை!"

கண்ணீர் ஆனந்தத்திற்கு அறிகுறி, நன்றிக்கு எடுத்துக் காட்டு.

சுஹ்ருத்பாவ் விண்வெளியில் எழும்பியது.

"வாயுபுத்ரா! நன்றியைவிட வேறு உயர்ந்த வார்த்தை இருந்தால் நன்றாக இருந்திருக்கும். உயிரையும் பொருட் படுத் தாமல் எங்கள் மூவரையும் காப்பாற்றியதோடு அல்லாமல் பூலோகவாசிகளும் அழியாமல் காப்பாற்றினாய். உனக்கு நன்றியை எப்படிச் சொல்வதென்று புரியவில்லை" என்றான் யஷ்வந்த்.

"முதலில் உனக்கு இந்த ஐடியா எப்படி வந்தது? எங்களிடம் பேச்சுவாக்கில் கூட சொல்லவே இல்லையே?" நிகில் கேட்டான்.

"இந்த நன்றியுரைகளும், புகழ்ச்சியும் யஷ்வந்திற்கும், பிரம்மவித்யாவுக்கு மட்டுமே கிடைக்கணும். நாம் முதலில் வேகா கிரகத்திலிருந்து ஆல்ஃபா கிரகத்திற்குப் பயணம் செய்த போது நம் நிலைமையைப் பற்றி பிரம்மவித்யாவுக்கு ஃபீட் செய்தேன். அவர்களின் சூழ்நிலையையும், பழக்க வழக்கங் களை யும், அவர்கள் எதற்கு ரியாக்ட் ஆவார்கள் போன்ற விவரங் களை எல்லாம் கேட்டுத் தெரிந்துகொண்டது. நாம் நீதி மன்றத்திலிருந்து வந்ததுமே கேட்ட போது விவரங்களை எல்லாம் தெரிவித்தது. நீங்கள் கவனித்தீர்களோ இல்லையோ தெரியாது. வேகா, ஆல்ஃபா கிரகங்களில் எங்குமே நமக்கு எந்த விதமான சத்தமும் கேட்கவே இல்லை. நாம் சத்தம் போட்டு பேசியதைக்கூட அவர்களால் பொறுத்துக் கொள்ள முடிய வில்லை. அவர்களின் நகரங்கள் எல்லாமே சவுண்ட் ப்ஃரூப் தான். அதனால் இந்த வழியை தேர்ந்தெடுத்தேன். அதில் யஷ் வந்தின் பரிசோதனை மிகவும் பயன்பட்டது."

"தாங்க்யூ பிரம்மவித்யா" என்ற அனூஹ்யா பிரம்மவித்யா வுக்கு அழுத்தமாக முத்தம் கொடுத்தாள். "இந்த முறை க்ளோபல் பரிசு உனக்குத்தான். நான் சிபாரிசு செய்கிறேன்."

"தாங்க்யூ" என்றது பிரம்மவித்யா.

நாட்கள் வேகமாகக் கழிந்தன. பத்தே நாட்களில் அவர் கள் வியாழனைக் கூடத் தாண்டிவிட்டார்கள். வேகா கொடுத்த சக்தி எதுவோ தெரியாது. ஆஸ்ட்ராயிட் பெல்ட் டைத் தாண்டிய போதும் எந்த பிரச்னையும் இருக்கவில்லை.

"நாம் வருகிற செய்தியைப் பூமிக்கு முன்கூட்டியே தெரியப் படுத்த வேண்டாமா?" கேட்டாள் அனூஹ்யா.

"இந்த வேகத்தில் அது முடியாது வேகத்தைக் கட்டுப் படுத்திய பிறகு சொல்லுவோம்" என்றான் யஷ்வந்த்.

"அப்படி என்றால் இன்னும் எவ்வளவு நாளாகும்?"

"அதிகமாகப் போனால் இன்னும் இரண்டே நாட்கள்."

அந்த இரண்டு நாட்களுக்குப் பிறகு வந்த சேர்ந்தது ஆபத்து. செவ்வாயைக் கூட தாண்டி விட்டார்கள். பூமி, சந்திரன், சூரியன் வரிசையாகத் தென்பட்டன.

"ஜென்மபூமிக்கு நெருக்கமாக வந்துவிட்டோம். எவ்வளவு சந்தோஷமாக இருக்குத் தெரியுமா? ஜென்மபூமி சுவர்க்கத் திற்கு சமம் என்று அதனால்தான் சொன்னார்கள் போலும். இனி பூமியுடன் தொடர்பு கொள்ளலாமா?"

"நாம் வேகத்தைக் குறைத்தால் தவிர பூமியின் எல்லைக் குள் நுழைய முடியாது. எந்தச் செய்தியையும் அனுப்ப முடியாது."

"பெல்ட்டுகளை மாட்டிக் கொள்ளுங்கள். நாம் ஜெட்டிசை னைத் தொடங்கணும்." கத்தினான் யஷ்வந்த்.

(கப்பல் மூழ்கும் போது பாரத்தைக் குறைப்பதை ஜெட்டிசன் என்பார்கள்.)

"சரி" என்று வாயுபுத்ரன் தன் நாற்காலியில் போய் உட்காருவதற்குள் இரண்டு முறை தடுக்கி விழுந்தான்.

யஷ்வந்தும், நிகிலும் பிசியாகி விட்டார்கள். திரையில் சோலார் விங்குகள் நழுவியதையும், பிறகு சோலார் மிஷின் ஸ்டோரேஜ் டாங்குகள் விழுந்ததும் தென்பட்டன. விண் வெளியில் பொருட்களை நழுவ விடும்போது அவற்றை முற்றிலுமாக க்ரஷ் செய்து விட வேண்டும் என்ற நிபந்தனையை அவர்களால் பின்பற்ற முடியவில்லை, அது சாத்தியமில்லை என்பதால்.

கம்ப்யூட்டர் திரையில் இன்னும் பாரம் அதகமாக இருப்பது போலவே காட்டியது.

"இனியும் என்ன செய்வது?" கேட்டான் வாயுபுத்ரன்.

"மேலே இருக்கும் லாபரேட்டரி அவசியம் இல்லையே?" பிரம்மவித்யா சொன்னது.

யஷ்வந்த் அவற்றை வாகனத்திலிருந்து பிரித்துவிட்டான். ஆனாலும் கம்ப்யூட்டர் வேகக் கட்டுப்பாடு தேவையில்லை என்ற அளவுக்கு மெதுவாகப் போகவில்லை என்று காட்டிக் கொண்டிருந்தது.

"பிரம்மவித்யா!" மறுபடியும் அழைத்தான் வாயுபுத்ரன்.

"உங்களுக்கு வேறு வேறு அறைகள் எதுக்கு? இங்கேயே கழிப்போம். இன்னும் நான்கு நாட்கள்தானே?"

யஷ்வந்தின் கைகள் மளமளவென்று இயங்கின. அவர்களுக்கு இத்தனை ஆண்டுகளாகப் பயன்பட்ட அறைகள் விண் வெளியில் சுற்றத் தொடங்கின.

"இன்னும் பாரத்தைக் குறைக்கணும்" என்றது பிரம்ம வித்யா.

"டயட்டிங் பண்ணு" என்றான் வாயுபுத்ரன் கோபமாக.

"அழகாக இருக்கு. என்மேல் ஏன் கோபப்படுகிறாய்? என்னை இவ்வளவு பாரமாக்கியது நீங்கதானே? சரி, ஆகாரம், ஆக்சிஜன் இரண்டையும் வைத்துக் கொண்டு மீதியை தள்ளி விடுங்கள்."

அதையும் செய்துவிட்டார்கள். வேகம் ஒளி வேகத்தில் பாதி வேகத்திற்கு வந்தது.

"இன்னும் குறைக்க வேண்டும்" என்றது பிரம்மவித்யா.

"இனனும் என்ன மிஞ்சியிருக்கிறது? நீயும் நானும்தான்." அலுத்துக் கொண்டான்.

"அதைத்தான் நானும் சொல்கிறேன். நீ ரொம்ப இலேசாக இருக்கிறாய். நான் மட்டும்தான் எஞ்சியிருக்கிறேன். என்னைத் தள்ளிவிடு." அமைதியான குரலில் சொன்னது பிரம்மவித்யா.

கொஞ்ச நேரம் பிரம்மவித்யா சொன்னது என்னவென்று யாருக்கும் புரியவில்லை. புரிந்ததுமே "நோ... நோ..." என்று கத்தி விட்டார்கள்.

"வாட் டு யூ மீன்?" வாயுபுத்ரன் தேறிக் கொண்டு கேட்டான்.

"ஐ மீன் வாட் ஐ செட். எஞ்சியிருக்கிற பாரமான ஒரே பொருள் நான் மட்டும்தான். இப்பொழுது நீங்கள் விட வேண்டியது என்னைத்தான்."

"ஜோக் அடிக்காதே. சரியாகச் சொல்லு."

"சரியாகத்தான் சொல்கிறேன். இன்னும் குறைந்தபட்சம் ஆயிரம் கிலோ பளுவை எடையை நீங்கள் குறைக்கணும். என் பாரம்தான் இப்பொழுது அதிகமாகிவிட்டது. வேறு வழியில்லை. என்னைத் தள்ளிவிடு. ஒரு கம்ப்யூட்டராக எல்லாக் கணக்கையும் போட்டுப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன்."

"பைத்தியம் போல் பேசாதே."

"நான் ஜோக் அடிக்கவில்லை வாயு. இருக்கிற விஷயத் தைத்தான் சொல்கிறேன். என்னைப் போன்ற இன்னொன்றை உருவாக்குவது கஷ்டம் இல்லை. இனி வேறு வழியில்லை. தாமதம் செய்யாதே. பூமியில் சூழ்நிலையில் நுழைவதற்கு இன்னும் கொஞ்ச நேரம்தான் பாக்கியிருக்கு."

எல்லோரின் முகமும் தொய்ந்துவிட்டன.

"இதெல்லாம் உண்மைதானா? பிரம்மவித்யாவைக் காப்பாற்றிக் கொள்ளும் உபாயமே கிடையாதா யஷ்வந்த்?" தீனமாகக் கேட்டாள் அனூஹ்யா.

"இல்லை அனூஹ்யா! நம் நால்வரையும் இந்த கண்ட்ரோல் ரூமையும் தவிர மீதி எல்லாவற்றையும் ஜெட்டிசன் செய்தாலொழிய பூமியை க்ஷேமமாக போய்ச் சேர முடியாது. வேகா நமக்கு ஒளிவேகச் சக்தியைத் தந்தபோதே சந்தேகப் பட்டேன், இப்படிப்பட்ட நிலைமை வரும் என்று." சொன்னான் யஷ்வந்த்.

எவ்வளவு வேதனைமயமான நிலைமை? சீக்கிரமாகத் திரும்பிப் போகணும் என்ற ஒரே தவிப்பால் இந்தப் பரிசுக்கு ஒப்புக் கொண்டார்கள். அதன் விளைவு இவ்வளவு கொடுமையாக இருக்கும் என்று தெரிந்தால் ஒப்புக் கொண்டிருப்பார்களா? யாருக்குத் தெரியும்? மனிதனின் சுயநலத்தைக் கணக்கிடும் இயந்திரம் எதுவும் இல்லை அல்லவா?

"எது வேண்டுமானாலும் நடக்கட்டும். கிரஷ் லாண்டிங் ஆகி செத்து போனாலும் பரவாயில்லை. ஆனால் உன்னை விடமாட்டேன்" என்றான் வாயுபுத்ரன். அவன் கண்களிலிருந்து அருவியாய் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. உயிருக்குயிராக பாவித்த பிரம்மவித்யாவைச் சூனியத்தில் தள்ளி விடுவது பெற்ற குழந்தையைக் கொல்வதற்கு சமம். அதை எல்லோரும் புரிந்து கொண்டிருந்தார்கள்.

"வாயு!" கூப்பிட்டது பிரம்மவித்யா. "இத்தனை நாளும் எந்த நிமிஷத்தில் உயிர் போகுமோ என்ற பயத்தோடுதான் வாழ்ந்து கொண்டிருந்தீங்க. அப்படி இருக்கும் போது, இப்பொழுது சென்டிமென்டுகளால் எல்லோருடைய வாழ்க்கையையும் நாசமாக்குகிறாயா?"

"உனக்கு எப்படிச் சொல்வேன் பிரம்மவித்யா? மனிதர்கள்

யாராலும் செய்ய முடியாத காரியங்களை எல்லாம் செய்கிறாய் என்றுதான் பிரம்மவித்யான்னு பெயரை வைத்தேன் உனக்கு. அன்று எங்களையும் எங்கள் பூமியையும் காப்பாற்ற உதவி செய்தாய். இப்பொழுது உன்னை என் கையாலேயே சூனியத் திற்கு பலி கொடுக்கச் சொல்கிறாயா?"

"நான் பிரம்மவித்யா என்றால் நீ பிரம்மா இல்லையா? என்னைப் போன்ற வித்யாக்கள் எத்தனையோ பேரைப் படைக்கிற சக்தி உன்னிடம் இருக்கிறது. அதனால் நீ பிழைக்க ணும். உன் பயணம் திக்விஜயமாக முடிந்தது என்று பூலோகத் தாருக்குக் காட்டணும். ஆவேசத்தை விட்டுவிட்டு விவேகமாக யோசித்துப் பார். என் பேச்சைக் கேளு. புன்னகையோடு என்னை அனுப்பி வை. உயிரையும்விட மேலாக நேசிக்கிற உன் கையால் நாசமாவதைவிட வேறென்ன வேண்டும் எனக்கு? சீக்கிரமாக ஆகட்டும். நேரம் அதிகம் இல்லை."

வாயுபுத்ரன் முகத்தை இரு கைகளாலும் பொத்திக் கொண்டான். அவனால் துக்கத்தைத் தாங்க முடியவில்லை. நிகில் மற்றும் அனுஹ்யாவின் நிலைமையும்கூட அதே போலவே இருந்தது.

"வேண்டாம். போனால் எல்லோருமாக கூண்டாடு போவோம். எங்களோடு கூட ஒரு மனிதனாகவே வாழ்ந்தாய் பிரம்மவித்யா. இப்பொழுது உன்னைப் பலி கொடுக்க எங்களால் முடியாது" என்றான் நிகில்.

"இந்தக் கப்பல் கேப்டன் யஷ்வந்த். நீ சொல்லு. உன் முடிவு என்ன?" கேட்டது பிரம்மவித்யா.

"என்னை சங்கடத்தில் ஆழ்த்தாதே ப்ளீஸ்..." யஷ்வந்த் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

"அப்படி என்றால் சரி. இன்னும் நான்கு நிமிடங்கள்

தான் பாக்கியிருக்கு. இந்தக் கப்பலின் கம்ப்யூட்டராக நானே முடிவை எடுத்துக் கொள்கிறேன். நானே போய் விடுகிறேன்."

"வேண்டாம் ப்ளீஸ்... வேண்டாம்."

"ஒரு அனாதைப் பிணமாக என்னைச் சூனியத்தில் தள்ளுவாயோ. சகல சடங்குகளுடன் காரியம்தான் செய் வாயோ. உன் இஷ்டம்."

"இன்னும் மூன்று நிமிஷங்கள்."

யஷ்வந்தும் நிகிலும் அங்கே இருக்க முடியாதவர்களாக அங்கிருந்து போய் விட்டார்கள்.

"நிசப்தம் என்னை பயமுறுத்துகிறது வாயு. ஏதாவது பேசு."

"வித்...யா!"

"ஏதாவது சொல்லு வாயு. வழியனுப்புதல் இவ்வளவு மௌனமாக இருக்கக்கூடாது."

"ஐ லவ் யூ வித்யா..."

"ஐ டு வாயு. நான் உண்மையில் மனிதப் பிறவியாக இருந் திருந்தால். ஆணாகப் பிறந்தாலும் சரி உன்னை இது போலவே நேசித்திருப்பேன். உன்னைப் போன்ற புத்திசாலிகள் சாதாரண மாகச் சிரித்துக் கொண்டும், ஆடிக்கொண்டும்... உன்னைப் போன்றவர்கள் நல்ல நண்பர்களாக இருப்பார்கள். கடவுள் மனிதர்களுக்குக் கண்களைத் தந்து நன்மையைச் செய்திருக் கிறார். கஷ்டங்களை வெளிப்படுத்துவதற்கு கண்ணீரை வெளி யேற்ற அவை ரொம்ப உபயோகமாக இருக்கின்றன. முதல் முறையாக நான் மனிதனாகப் பிறக்காததற்கு ரொம்பவும்

வருத்தப் படுகிறேன். என்ன இருந்தாலும் ஊமை உறவுதானே இது. குட் பை!"

பிரியமான ஒருவரின் சிதைக்கு நெருப்பை இடும்போது ஏற்படும் வேதனை அவனுக்குப் புரிந்தது. பிரம்மவித்யாவைத் தள்ளிக்கொண்டே போனான். பிணப்பெட்டியில் அதை பத்திரமாக வைத்துவிட்டு பட்டனை அழுத்தப் போனான்.

"கேன் ஐ கிஸ் யூ வித்யா?"

"அனூஹ்யா பொறாமைப் படுவாளோ என்னவோ."

"கடைசித் தருணத்தில்கூட இவ்வளவும் உற்சாகமாக எப்படிப் பேசுகிறாய் வித்யா?"

"மனிதனாக இல்லாததால், போய் வருகிறேன் வாயு... அனூஹ்யா குட் பை."

"குட்... பை." இருவரும் சொன்னார்கள்.

வாகனத்திலிருந்து வெளியேறிய பிரம்மவித்யா ஊடுருவிக் கொண்டு போயிற்று. வெளியே சூனியம்.

அது அவர்களின் மனதிலும் இருந்தது.

அவன் திரும்பி வந்த போது எல்லோர் கண்களிலும் கண்ணீர். யஷ்வந்த் துக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந் தான்.

"நாம் எல்லோரும் இன்றைக்கு இன்னும் உயிரோடு இருக்கிறோம் என்றால் அதற்குக் காரணம் பிரம்மவித்யா தான். உயிரைக் கொடுத்தவர்களின் உயிரை எடுத்துப் பெருமை நம்மையே சேரும். இந்த விஷயம் தெரிந்தால், ஆல்ஃபா கிரகவாசிகள் திரும்பவும் நம்மீது படையெடுத்து வருவார் களோ என்னவோ" என்றான் நிகில் வேதனை கலந்த சிரிப் புடன்.

அனூஹ்யா வாயுபுத்ரன் தோள்மீது கையை வைத்தாள் பரிவோடு.

"நான் நன்றாகத்தான் இருக்கிறேன் அனூஹ்யா. நம் மனதில் எந்த விதமான ஏமாற்றங்களையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று பிரம்மவித்யா கடைசியாக கேட்டுக் கொண்டது. மறந்துவிட்டாயா?"

"மறக்கவில்லை. சரி. அதோ பார். நம் வேகம் குறைந்து விட்டது. பூமியோடு தொடர்புகொள் யஷ்வந்த்." என்றாள் அனூஹ்யா.

யஷ்வந்த் ஏற்கனவே அந்தக் காரியத்தில் ஆழ்ந்திருந்தான்.

"ஹலோ... எர்த் ஹியர். யாரது?" என்று கேட்டுக் கொண்டிருந்தார்கள். வாயுபுத்ரன் மைக்கைக் கையில் எடுத்துக் கொண்டான்.

"ஆல்ஃபா கிரகவாசிகள். பூமியை சுற்றிப் பார்க்க வந்து கொண்டிருக்கிறோம். வரவேற்புக்கான ஏற்பாடுகளை செய்யுங் கள். போருக்குத் தயாராக இருங்கள்."

"உண்மையைச் சொல்லுங்கள். யாரது? சுஹ்ருத்பாவ் பயணிகள்தானே? யஷ்வந்த், வாயுபுத்ரன் தானே?" அந்தக் குரலில் சொல்ல முடியாத ஆச்சரியம்.

"ஆமாம். வெற்றியோடு திரும்பி வந்து கொண்டிருக் கிறோம். கொஞ்ச நேரத்தில் பூமி எல்லைக்குள் வந்து விடு வோம்."

"இவ்வளவு சீக்கிரத்தில் எப்படி வர முடிந்தது உங்களால்? போன காரியம் என்னவாச்சு?"

"சாதித்துவிட்டுத் திரும்பி வந்து கொண்டிருக்கிறோம்."

"புரியவில்லையே. இவ்வளவு சீக்கிரத்தில் எப்படி முடிந்தது

அது? பறக்கும் தட்டில் இருந்தவர்கள் உங்களுடன் தொடர்பு கொண்டார்களா? சமாதானத்திற்கு ஒப்புக் கொண்டார்களா?"

"இல்லை. நாங்கள் தொலைதூர நட்சத்திர எல்லை வரைக்கும் போய்விட்டுத் திரும்பி வந்து கொண்டிருக்கிறோம். வேகா கிரகத்தில் காலடி எடுத்து வைத்துவிட்டு திரும்பி வருகிறோம்."

"இவ்வளவு சீக்கிரமாக எப்படி வர முடிந்தது?"

"ஒளியைவிட வேகமாகக் கடந்த காலத்தில் பிரயாணம் செய்ததன் மூலமாக."

அந்தச் செய்தி மின்னல் வேகத்தில் பூமி முழுவதும் பரவி விட்டது. எல்லோர் வாயிலும் அதே செய்தி. அபூர்வமும், அசாத்தியமும் ஆன அந்தச் செய்தியை அன்றைய செய்தித் தாளில் வெளியிடுவதற்காக பத்திரிகையாளர்கள் பரபரப்புடன் செயல்பட்டார்கள். புறப்பட்டதிலிருந்து அந்த வினாடி வரையிலும் நிகழ்ந்த ஒவ்வொரு விஷயத்தையும் யஷ்வந்த் ட்ரான்ஸ்மீட்டர் மூலமாக சொல்லிக் கொண்டிருந்தான்.

சுஹ்ருத்பாவ் பூமியைச் சுற்றி இன்னும் ஒரு வட்டம் திரும்பிவிட்டு பூமிக்கு வந்து சேர்ந்தது. லட்சக் கணக்கான ஜனங்கள் கடற்கரையில் கூடிவிட்டார்கள். தம்மைக் காப்பாற்றிய அந்தக் குழுவைப் பார்த்துப் புகழ்ந்து நன்றியைத் தெரிவித்துக் கொள்வதற்காகக் கூட்டம் கூட்டமாக வந்து சேர்ந்தார்கள். ஆம், அது நிச்சயமாக சாதாரண வெற்றி யில்லை.

ஸ்ரீஹரிகோட்டாவுக்கு அருகில் கடலில் சுஹ்ருத்பாவ் சம்பந்தப்பட்ட காப்ஸ்யூலில் விண்வெளிப் பயணிகள் வந்து இறங்க ஏற்பாடு செய்தார்கள். இரண்டு ஸ்டீம் போட் நிறைய NSRIயைச் சேர்ந்த ஆபீசர்கள் அவர்களை வரவேற்கத் தயாராக இருந்தார்கள்.

குறிப்பிட்ட நேரத்தில் காப்ஸ்யூல் கடலில் இறங்கியது. உடனே அவர்களைப் படகில் ஏற்றினார்கள். எல்லோரும் பாராட்டுக்களைத் தெரிவித்து அவர்களைத் திணறடித்துக் கொண்டிருந்தார்கள் பூமாலைகளால் அவர்களின் கழுத்துக் கள் நிரம்பி வழிந்தன. நூற்று நாற்பது வருட (அவர்களைப் பொறுத்தவரையில்) பயணத்தின் தனிமைக்குப் பிறகு தம் மனிதர்களைப் பார்த்த சந்தோஷம் அந்த நால்வரிடம் தென் பட்டது. ஸ்டீம் போட் கரையில் நின்றது. எல்லோரும் இறங் கினார்கள்.

பூமியின் பிரதிநிதியாக ஒரு வயது சிறு குழந்தை ஒன்று கையில் பூச்செண்டுடன் தளிர் நடை போட்டுக் கொண்டே வந்து நிகிலுக்கு மலர்ச் செண்டைத் தந்தது. அன்போடு குழந்தையை எடுத்துக் கொண்டு. தன் கழுத்திலிருந்த மாலையை எடுத்து அதற்குப் போட்டான் அவன்.

"குழந்தாய்! உன் பிறந்த நாளுக்கு எத்தனை நல்ல பரிசு தந்திருக்கிறார் உங்க அப்பா."

நிகில் அந்தப் பக்கமாகப் பார்த்தான். ஸ்ரீஜா முறுவ லுடன் நின்று கொண்டிருந்தாள் அங்கே. அப்பொழுதுதான் புரிந்தது அந்தக் குழந்தை யாரென்று. கண்களில் நீர் வழிந்தது.

அவன் மனம் ஆனந்தத்தால் நிரம்பிவிட்டது. அன்போடு ஸ்ரீஜாவைத் தன்னோடு அணைத்துக் கொண்டான்.

"குழந்தைக்கு இன்னும் பெயரை வைக்கவில்லை. நீங்க வராவிட்டால் இன்றைக்கு பெயர் சூட்டலாம் என்று இருந் தோம். நீங்க வந்து விட்டீங்க. உங்கள் குழந்தைக்கு நீங்கள் தான் பெயர் வைக்கணும்."

நிகில் எதையும் யோசிக்கவிலலை. சட்டென்று சொன்னான். "பிரம்மவித்யா."

அனூஹ்யாவை அண்ணன், அண்ணி, அவர்கள் மகள் மூவரும் சூழ்ந்து கொண்டார்கள். எல்லோரின் கண்களிலும் ஆனந்தக் கண்ணீர். குசல பிரச்னைகள் முடிந்தன.

"என்னம்மா? யஷ்வந்தும், நீயும் மறுபடியும் ஒன்றாகி விட்டீர்களா?" கேட்டான் அண்ணன்.

"நாங்க என்றைக்குமே நண்பர்கள்தான் அண்ணா! இதில் எந்த சந்தேகமும் வைத்துக் கொள்ள வேண்டாம். விண் வெளியின் கோடி வரைக்கும் உயிரை உள்ளங்கையில் வைத்துக் கொண்டு போய்விட்டுத் திரும்பியிருக்கிறோம். கல்யாணம், குழந்தைகள், சொத்து சுகம் எல்லாம் ரொம்ப அற்பமாகத் தோன்றுகின்றன இப்பொழுது. என் பொறுப்பு என்னவென்று தெரிந்துவிட்டது. நாளையிலிருந்து திரும்பவும் NSRI யில் டியூட்டி தொடங்கிவிடும்" என்றாள் அனூஹ்யா திடமாக.

யஷ்வந்தை பத்திரிகையாளர்கள் கேள்விகளால் திணறடித்துக் கொண்டிருந்தார்கள். வாயுபுத்ரன் மட்டும் தொலைவில் நின்று கொண்டிருந்தான். எதிரே விரிந்து பரந்த கடல். அவன் இதயத்தில் மெல்லிய அலைகள்! கீழ்வானத்தி லிருந்து சூரியன் மெல்ல மேலே எழும்பிக் கொண்டிருந்தான். அண்டவெளியின் சூனியத்தில் சிறு மேகத் துணுக்கைப் போல் பிரம்மவித்யா அவனைப் பாராட்டுவதுபோல் குறிப்புகளை அனுப்பிக் கொண்டிருந்தது. மனதிற்கு மட்டுமே புரியக்கூடிய குறிப்புகள் அவை.

தம்மைவிட்டுப் பிரிந்து போய்விட்ட டாக்டர் பிலிப்ஸ் மேகத்திரைக்குப் பின்னாலிருந்து கையை அசைப்பதுபோல் தோன்றியது.

முகத்தில் ஃபிளாஷ் மின்னியதும் இவ்வுலகத்திற்குத் திரும்பினான். ஒரு பெண் பத்திரிகையாளர் எதிரே நின்று போட்டோ எடுத்துக் கொண்டிருந்தாள். அவனை நெருங் கினாள்.

“விண்வெளி எல்லை வரைக்கும் போய்விட்டு வந்திருக்கும் நீங்கள் இந்த நேரத்தில் மனித இனத்திற்காக என்ன செய்தியைச் சொல்ல விரும்புகிறீர்கள்?” என்று கேட்டாள்.

“காட்டுமிராண்டித்தனத்தை விடச்சொல்லி” நறுக்கென்று வந்த அவ்வார்த்தையைக் கேட்டு வியப்படைந்த அவள், அந்த வியப்பை தன்னுள் அடக்கிக் கொண்டு அங்கிருந்து நகர்ந்தாள். இருளைக் கிழித்துக் கொண்டு முறுவலுடன் சூரியன் மேலே எழும்பி வந்து கொண்டிருந்தான்.

—நிறைந்தது—

இருட்டில் சூரியன்

எண்டமூரி வீரேந்திரநாத்